பாலகுமாரன்

அந்த அரண்மனை வாசலில் அந்த தேசத்திற்கு அதிபதியான காதி என்கிற அரசன் தன் மந்திரிமார்களோடும், குருமார்களோடும் காத்திருந்தான். அவனுக்கு அருகே அவனது மனைவி கவலையோடும் பரபரப்போடும் நின்றிருந்தாள்.

உத்தமன்

தொலைவே வெகுதூரத்தில் செவ்விய புழுதி எழுவதை வீரர்கள் கண்டு எக்காளம் ஊதினார்கள். சிறு முரசுகளை முழங்கினார்கள். அந்த எக்காளமும், முரச சத்தமும் தொலைவிலே வந்து கொண்டிருந்த தேர்ப் பாகனுக்குக் கேட்டது. அவன் நான்கு குதிரைகள் பூட்டிய தேரை வெகு விரைவாக செலுத்தினான். அரசன் முன்னேறி நடக்க மந்திரிகளும் குருமார்களும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

பெண்கள், கை கால் கழுவ நீரும், குடிப்பதற்கு விதம் விதமான பானங்களும், உண்பதற்கு சுவையான பழங்களும் எடுத்து வேறு ஒரு பக்கம் நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

மூன்று காத தூரத்திற்கு அப்பால் வருகின்ற அந்த தேரில், அந்த அரசனுடைய மகள் சத்தியவதி அமர்ந்து கொண்டிருக்கிறாள். வெகு நாளைக்குப் பிறகு புருஷன் வீட்டிலிருந்து தாயின் வீட்டுக்கு முதன் முதலாக வந்து கொண்டிருக்கிறாள். திருமணம் ஆகி புருஷன் வீடு போனவள் இப்பொழுதுதான் தாயைப் பார்க்க வருகிறாள். வருகின்ற சத்தியவதி, நலமாகவும், திடமாகவும், மன சந்துஷ்டியோடும் இருக்கவேண்டும் என்று எல்லோரும் பிரார்த்தித்துக் கொண்டார்கள்.

க்ஷத்திரிய குலத்தில் பிறந்த சத்தியவதியை ஒரு அந்தணர் விரும்பிக் கேட்டதால் அவருக்கு திருமணம் செய்து கொடுத்தது. அந்த அந்தணரோடு கங்கைக் கரைக்கு காதி அனுப்பி வைத்தான். காதியினுடைய மனைவி சொல்லொண்ணா துயரத்தோடு மகளுக்கு விடை கொடுத்தாள்.

“ஒரு கங்கைக்கரையின் புல்வெளியில் சிறு பசுக்களோடும், மழை தாங்காத புல்வேய்ந்த குடிசைகளுக்கு நடுவேயும் நீ எப்படி வாழப் போகிறாய் என்று எனக்குப் புரியவில்லை. அரண்மனையில் இப்படிப்பட்ட கோட்டையில் பத்திரமாக வாழ்ந்து விட்டு, பல தாதிகள் விசிற உறங்கி விட்டு, உன்னால் அந்தப் புல்வெளியில் எப்படித் தூங்க முடியும் என்று தெரியவில்லை. அறுசுவை உணவுகள், சமைத்துக் கொடுக்க பலநூறு வேலைக்காரர்களும் இருக்க... நீயே சமைத்து உன் புருஷனுக்கும், அவன் சீடர்களுக்கும் போட்டு உண்ணுகின்ற பழக்கத்தை எப்படி கைக்கொள்ளப் போகிறாய். உன் வாழ்க்கை முற்றிலும் மாறி விட்டதே நீ எங்ஙனம் உயிர் வாழப் போகிறாய் என்று எனக்குத் தெரியவில்லை. உன்னை இந்தப் பக்குவத்திற்கு நான்

"வளர்க்கவே இல்லையே" என்றெல்லாம் புலம்பினாள்.

மந்திரிமார்கள் காதியின் மனைவியைத் தேற்றினார்கள்.

"பெண் என்பவள் எல்லாவிதமான சூழ்நிலைகளுக்கும் வளைந்து கொடுத்து போகத் தெரிந்தவள். பெண்ணினுடைய இயல்பு அப்படித்தான் இருக்கிறது. நீங்கள் உங்கள் மகளை கெட்டிக்காரியாக, சாமார்த்தியசாலியாக வளர்த்திருக்கிறீர்கள். அவளை மிக ஒரு நல்ல மனிதனுக்கு திருமணம் செய்து கொடுத்திருக்கிறீர்கள். பிரபஞ்சத்தின் சூட்சமம் தெரிந்த மிக கெட்டிக்காரனுக்கு சத்தியவதி மனைவியாகப் போயிருக்கிறாள். சத்தியவதியைத் தேடி வந்து, விரும்பி அவர் திருமணம் செய்து கொண்டிருக்கிறார். எனவே உங்கள் மகள் அந்த அந்தணரிடம் சிரமப்படுவாள் என்று தயவு செய்து நினைக்க வேண்டாம்.

அம்மா, சத்தியவதியை மிக சந்தோஷமாக ரிசீகர் வைத்திருப்பார். காரணமில்லாமல் சத்தியவதியை அவர் தேர்ந்தெடுக்கவில்லை. மிகச் சிறந்த ஒரு வம்சத்தை உருவாக்க வேண்டி, அவர் உங்கள் பெண்ணை மணந்து கொண்டு போயிருக்கிறார். உலகத்தில் ரிசீகருக்கு கிடைக்காத பெண்ணா. ஏன் உங்கள் சத்தியவதியை தேர்ந்தெடுத்தார். உங்களுக்குப் பிறந்தவள் தெய்வகன்னிகை. அழகு மட்டுமல்ல அறிவும் நிறைந்தவள். அங்கிருந்து மிக நல்லவித்து உருவாகும் என்று ரிசீகருக்குத் தெரிந்து அவளை ஸ்வீகரித்திருக்கிறார். சாதாரணமாகவா ஸ்வீகரித்தார்.

நீங்கள் ரிசீகரை சோதனைக்கு உள்ளாக்கி அல்லவா பெண் கொடுத்திருக்கிறீர்கள். வந்து கேட்டவுடன் சரி என்று சம்மதித்து விட்டீர்களா. இல்லையே. ஆயிரம் குதிரைகள் வேண்டும். அந்த குதிரைகளின் ஒரு பக்கக் காது கருப்பாக இருக்க வேண்டும். கால் நகங்கள் கருப்பாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரே மாதிரி அச்சாக உள்ள குதிரைகள் ஆயிரம் வேண்டும் என்று நீங்கள் கேட்கவில்லையா.

அதற்கு ரிசீகர் சம்மதித்து வருண ஜபம் செய்து வருண தேவனிடமிருந்து அம்மாதிரியான குதிரைகளைப் பெற்று உங்களிடம் கொண்டு வந்து கொடுக்கவில்லையா. அந்த குதிரைகளின் அழகில் இந்த மொத்தப் பட்டணமும் மயங்கியதே. அதுவரை மிகச் சாதாரணமான அந்தண ராக நினைத்திருந்த ரிசீகரை மன்னர் காதி எவ்வளவு மரியாதையாக நடத்தினார். ஏதேனும் தவறு செய்திருந்தால் மன்னித்து விடும்படி எத்தனை பணிவாகக் கெஞ்சினார்.

சத்தியவதியை எவ்வளவு சந்தோஷமாக திருமணம் செய்து கொடுத்தார்.

ஒரே மாதிரியான ஆயிரம் குதிரைகளை ஒரு புருஷன் சம்பாதிக்க முடியுமென்றால், அவனால் எதை வேண்டுமானாலும் சாதிக்க முடியுமென்று மன்னர் காதிக்குத் தெரிந்து விட்டது. வலிவுமிக்க, ஆற்றல் மிக்க ஒரு புருஷனுக்கு தன்னுடைய மகளைக் கொடுப்பதில் அந்தத் தகப்பனுக்கும் சந்தோஷம்.

இதோ உங்கள் கணவரைப் பாருங்கள். அவர் எத்தனை நம்பிக்கையோடு தன் மகளை எதிர் கொண்டிருக்கிறார். நீங்கள் மட்டும் ஏன் கவலைப்படுகிறீர்கள்" என்று பலவாறு அவளைத் தேற்றினார்கள்.

தன் மகளைப் பிரியும் போது பேசிய வசனங்களையெல்லாம் காதியின் மனைவி மறந்து விட்டு மகளுக்காக காத்திருந்தாள்.

நான்கு குதிரைகள் பூட்டிய தேர் வந்து நின்றது. திரைச்சேலை விலகியது. கீழிறங்க படிகள் கொண்டு வந்து முனிவரது சீடர்கள் தேருக்கு அருகே வைத்தார்கள்.

உள்ளிருந்து சத்தியவதி மெல்ல வெளியே வந்தாள். படியில் கால் வைத்தாள். தரையின் மீது பாதம் பதித்தாள். குனிந்து தன் தேசத்து மண்ணை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டாள்.

தாய்க்கும் தந்தைக்கும் அருகே வேகமாக நடந்து போனாள். அவர்களை விழுந்து நமஸ்கரித்தாள். எழுந்து நின்று குருமார்களை நமஸ்கரித்தாள். மறுபடியும் எழுந்து நின்று மந்திரிகளுக்கு வணக்கம் சொன்னாள். சுற்றி நின்ற தாதிகளையும், மக்களையும் பார்த்து கையசைத்தாள்.

மிகப் பெரிய ஆரவாரம் அங்கு எழுந்தது. அந்த ஆரவாரத்தினூடே நகர்ந்து போய் அம்மாவின் கைகளை சத்தியவதி பிடித்துக் கொண்டாள். அந்தக் கைகள் இளம் சூடாக இருந்தன. கண்களில் மிகப் பெரிய மயக்கம் இருந்தது. உதடுகள் கனிந்திருந்தன. கன்னத்தில் செழுமை ஏறியிருந்தது. உடம்பில் வனப்பு கூடியிருந்தது. கூந்தலில் நறுமண மலர்கள் சூடியிருந்தாள். உடம்பிலிருந்து தைல வாசனை அடித்தது. உள்ளங்கால்கள் அழுக்கில்லாமல் இருந்தன. உள்ளங்கைகள் மிருதுவாகவும், விரல் நகங்கள் அழுக்கின்றியும் இருந்தன. இடுப்பில் பருத்தி ஆடையும் மேலே பட்டு வஸ்திரமும் அணிந்து சத்தியவதி அம்மாவின் கைகளை கோர்த்துக் கொண்டு அரண்மனைக்குள் போனாள்.

நகைகள் மிகக் குறைவாக அணிந்திருந்தாலும் சத்தியவதியின் அழகு மிக விசாலமாக இருந்தது. அவள் நடப்பதும், திரும்பிப் பார்ப்பதும், மற்றவர்களைப் பார்த்துச் சிரிப்பதும், கையசைப்பதும், அவள் குதூகலத்தின் உச்சியில் இருக்கிறாள் என்பதை எல்லோருக்கும் காட்டின.

மன்னன் காதி சந்தோஷத்தோடு நீண்ட பெருமூச்சு விட்டான். குருமார்களைப் பார்த்து வணங்கினான். மந்திரிகளுக்கு அருகே போய் அவர்களைத் தழுவிக் கொண்டான்.

"நான் சந்தோஷமாக இருக்கிறேன். நமது மகளின் வருகை என்னை குதூகலப்படுத்தியிருக்கிறது. மகள் மிக சந்தோஷமாக இருக்கிறாள் என்பதை அவள் அசைவுகளிலிருந்தே தெரிந்து கொண்டேன். மகளின் வருகைக்காக நமது நகரத்திலுள்ள அத்தனை பேருக்கும் நல்லபடியாய் விருந்து கொடுங்கள். யார் எது கேட்டாலும் வாரி வழங்குங்கள். மகள் இங்கிருக்கிற நாட்கள் வரை மிகக் கொண்டாட்டமாகவே நடக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புது விசேஷம் பண்டிகை போல நடத்தப்பட வேண்டும். மகளினுடைய சந்தோஷம் மிக முக்கியம். என் மகளின் சந்தோஷத்தை நான் என் ஜனங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்" என்று சொன்னார்.

அந்த நகரத்திலுள்ள அத்தனை பேருக்கும் விருந்துக்கான ஏற்பாடுகள் வேகமாகத் தயாராயின. ஆட்டமும், பாட்டமும் விசேஷமாக நடந்தன. நகரத்தின் தெருக்கள் அழகு செய்யப்பட்டன. நகரத்தை சுற்றியுள்ள மக்களை சந்தோஷப்படுத்துவதற்காக குதிரைகளும், யானைகளும் ஊர்வலமாக வந்தன.

காதியின் மனைவியும் சத்தியவதியும் அரண்மனைக்குள் நுழைந்து கட்டிலில் அமர்ந்து கொண்டார்கள். சத்தியவதி களைப்போடு கட்டிலில் சாய்ந்து கொண்டாள். சத்தியவதியின் அம்மா சத்தியவதியின் முகத்தை வருடிக் கொடுத்தாள். கால்களை பிடித்து விட்டாள். தோள்களைத் தடவிக் கொடுத்தாள்.

"சந்தோஷமாக இருக்கிறாயா" என்று மெல்லிய குரலில் தாதிகளுக்குத் தெரியாமல் கேட்டாள். அதே விதமாய் சத்தியவதி அம்மாவிடம் பதில் சொன்னாள்.

"மிக மிக சந்தோஷமாக இருக்கின்றேன். நீ எது குறித்தெல்லாம் பயந்தாயோ அதெல்லாம் அங்கு நிகழவேயில்லை. இந்த அரண்மனையைவிட என் கணவரது ஆசிரமம் மிக வசதியாக இருக்கிறது. இப்பொழுது இந்த

அரண்மனை எனக்கு மிக அன்னியமாகத் தெரிகிறது. இங்கு சுற்றிலும் தாதிகள் இருப்பது சற்று தொந்தரவாகவே இருக்கிறது. இந்தக் கரையும் பஞ்சணையும் என்னோடு ஒட்டாத விஷயமாகப் போய் விட்டன. என் புருஷனின் இருப்பிடம் இதை விட சுந்தரமானது என்று தோன்றுகிறது."

"எதனால் அவ்விதம் சொல்கிறாய்." சத்தியவதியின் தாயான காதியின் மனைவி மிக நெருக்கமாய் மகளோடு அமர்ந்து கொண்டு அடிக்குரலில் கேட்டாள்.

"உயர்ந்த கோட்டைகளும் அகன்று விரிந்த அரண்மனையும் பத்திரமானது என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் அல்லவா. இல்லை. கங்கைக்கரை காடு இதை விட பத்திரமானது. எங்களுடைய கிராமத்தின் எல்லைகள் என் புருஷனால் மந்திரித்து கட்டப்பட்டவை. ஒரு விஷ ஐந்து கூட அந்த கிராமத்துக்குள் நுழைய முடியாது. பாம்புகள் எல்லையைத் தொட்டு மந்திர ஜபம் உணர்ந்து நகர்ந்து போய் விடுகின்றன.

விலங்குகள் எதுவும் அந்தக் கரைக்கு வருவதில்லை. அங்கங்கே சிறிய முள் செடிகளை வளர்த்து விலங்குகளை மறித்து விடுகிறார்கள். தேரும் மனிதர்களும் வருவதற்கு தனித்தனி பாதைகள் வைத்திருக்கிறார்கள். அந்தப் பாதைகளில் முள்வேலி போட்டு மறித்து விடுகிறார்கள். மற்றபடிக்கு ஒருவரோ அல்லது இருவரோ அந்தப் பாதையில் காவல் காக்கிறார்கள். விலங்குகள் எல்லாம் வெகு தூரத்திலேயே நடமாடுகின்றன.

அநேகமாய் சமைத்த உணவை நாங்கள் சாப்பிடுவதில்லை. காடுகளில் இருந்து என் கணவர் ரிசீகரின் சீடப் பிள்ளைகள் நல்ல பழங்களையும், காய்களையும் பறித்து வருகிறார்கள். அதில் சிறந்தவற்றை அவருக்கும் எனக்கும் தந்து விடுகிறார்கள். ரசம் மிகுந்த அந்தக் காய்களை முகர்ந்து பார்க்கும் பொழுதே உண்ட திருப்தி ஏற்பட்டு விடுகிறது. அதை நறுக்கி சாப்பிடுகிற பொழுது வயிறும், மனமும் குளுமையாகின்றன. மிகப் பெரிய ஆரோக்கியம் என் உடம்பில் ஏற்படுகிறது. சமைத்த உணவில் பல சிக்கல்கள் இருக்கின்றன. பசுமையான தாவர உணவு உடம்பிற்கு மிகுந்த சக்தியைக் கொடுக்கிறது. எனவே நான் அங்கு போன பிறகு சமைத்த உணவு சாப்பிடுவதையே விட்டு விட்டேன். எப்போதேனும் எவரேனும் விருந்தாளிகள் வந்தால் அவர்களுக்காக சிறிது உணவு சமைப்போம். அவர் சாப்பிடுவதற்காக நானும் சிறிதளவு சமைத்த உணவை எடுத்துக் கொள்வேன். மற்றபடிக்கு கங்கைக் கரையில் மூன்று வேளை குளியலும், ஆறு வேளை

உணவும், இரண்டு வேளை நல்ல தூக்கமுமாய் நான் மிக சந்தோஷமாக வாழ்ந்து வருகிறேன்."

"உணவு சரி. உன்னுடைய இருப்பிடம் எப்படி இருக்கிறது. அவைகள் மண் குடிசைகள்தானே."

"ஆமாம். மண்குடிசைகள்தான். குளிர்காலத்திற்கென்று குடிசைகளும், வேனிற்காலத்துக்கென்று குடிசைகளும் விதம் விதமாக கட்டியிருக்கிறார்கள். வேனிற் காலத்தில் கட்டப்பட்ட குடிசைகளுக்கு மேல் புல் வேய்ந்திருக்கும். குளிர் காலத்தில் தங்குவதற்குண்டான குடிசைகளின் மேலே மண் பூசி மூடப்பட்டிருக்கும். பூசிய குடிசைக்குள் உஷ்ணம் இருக்கும். புல்வேய்ந்த குடிசை கள் குளுமையாக இருக்கும். மண்வேய்ந்த குடிசைக்கு தென் கிழக்கு வாசலும், புல்வேய்ந்த குடிசைக்கு வடக்குப் பார்த்த வாசலும் வைத்திருக்கிறார்கள். குளிர் காலத்தில் தெற்கிலிருந்து காற்று வருகிறது. கோடை காலத்தில் வடக்கிலிருந்து காற்று வருகிறது. எனவே எந்த நேரமும் விழிப்பில்லாத அயர்ந்த ஆழ்ந்த நித்திரைக்கு உதவியாய் அந்த குடிசைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன."

"படுக்கைகள் இருக்கின்றனவா."

"புற்கள் பரப்பிய பஞ்சணைகள் மீது தோல் போட்டு தோல் மீது துணி போட்டு அந்தக் துணி மீது படுத்துக் கொள்கிறோம். புற்களை மாதத்திற்கு ஒருமுறை என் கணவருடைய சீடர்கள் மாற்றி விடுகிறார்கள். எனவே படுக்கை மிக சுகமாக இருக்கிறது."

"பகல் வேளையும் தூங்குகிறாயா."

"ஆமாம். பகல் வேளையில் தூங்குவதற்கென்று கயிறால் பின்னப்பட்ட நீண்ட ஊஞ்சல்களை மரங்களுக் கிடையே மாட்டி வைத்திருக்கிறார்கள். நல்ல காற்று வீச, அதில் படுத்துக் கொண்டால் ஒரு நாழிகை அசையாமல் நன்கு தூங்கலாம். தாயின் மடியில் சுருண்டு தூங்குவது போல அந்த இடம் அத்தனை சுகம்."

"பகலில் ஏன் தூங்குகிறாய் என்று உன் புருஷன் கடிந்து கொள்வதே இல்லையா."

"இல்லை. தூங்கு என்று சொல்கிறார். விடியற் காலையில் எழுந்து விடு என்று கட்டளை யிடுகிறார். முதலில் சிறிது சிரமமாக இருந்தது. பிறகு விடியற்காலை எழுவதே மிகச் சந்தோஷமாகப் பேசப் விட்டது."

"எழுந்து என்ன செய்வாய்."

"நானும், என் புருஷனும் எழுந்த பிறகு வீட்டு வாசலுக்கு வந்து வாய் கொப்பளித்து, முகம் கழுவி

ஈரத்துணியால் உடம்பு முழுவதும் பரஸ்பரம் துடைத்துக் கொண்டு அமர்ந்து, மெல்ல கடவுளைப் பற்றிய துதிகளைப் பாடத் துவங்குவோம். நாங்கள் பாடத் துவங்கியது கேட்டு விளக்குகளோடு மாணவர்கள் வந்து விடுவார்கள். எங்களுக்கு அருகே விளக்குகளை வைத்து விட்டு, எதிரே வந்து விழுந்து வணங்கி, அவர்களும் பாடத் துவங்கி விடுவார்கள். மெல்ல வெளிச்சம் வருகின்ற நேரத்தில் பாடல்களை நிறுத்தி விட்டு நாங்கள் ஆற்றங்கரையை நோக்கிப் போவோம். அப்படி ஆற்றங்கரையை நோக்கிப் போகிற பொழுது தத்துவார்த்தமான கேள்விகளை சீடர்கள் கேட்பார்கள். அந்தக் கேள்விகளுக்கு அப்போதோ அல்லது பிறகோ எனது கணவர் பதில் சொல்வார்.

ஆற்றங்கரைக்குப் போனபிறகு ஒரே ஆட்டம் பாட்டம்தான். சீடருடைய மனைவிமார்களும், குழந்தைகளும் எங்களைச் சுற்றிக் கொள்ளும். பெண்களும் ஆண்களுமாய் நீரில் இறங்கி சந்தோஷமாக குளித்துக் கொண்டிருப்போம். சீடருடைய மனைவிமார்கள் எனக்கு முதுகு தேய்த்து விடுவார்கள். கைகால்களைச் சுத்தம் செய்து விடுவார்கள். தலையை பிரித்து அலசி, நீர்ப்பிழிந்து விடுவார்கள். என் துணிகளைத் துவைத்து வைப்பார்கள் நாங்கள் மறுபடியும் பாட்டுப் பாடிக்கொண்டே எங்களுடைய ஆசிரமம் நோக்கி வருவோம். ஆசிரமத்தில் உணவு தயாராக இருக்கும். காலையில் நாங்கள் திட உணவு அருந்துவது இல்லை. நீர் ஆகாரமாக உள்ள உணவுகளையே அருந்துகிறோம்.

பழங்களை வேகவைத்த நீரோ, கீரைகளை வேக வைத்த நீரோ சிறிதளவு தானியங்கள் போட்டு கொதிக்க வைத்து, அளதக் கஞ்சியாக குடிப்போம். குடித்த பிறகு என்னுடைய கணவர் சீடர்களோடு போய் தனியே அமர்ந்து கொள்வார்.

பெண்டுகள் இங்கு வர நாங்கள் ஆசிரமங்களை சுத்தம் செய்யத் துவங்குவோம். செடி, கொடிகளை நீருற்றி உரமிட்டு வளர்ப்போம். பூக்கள் பறிப்போம். உச்சி வெய்யில் வரை அவர்கள் தனியே பேசிக் கொண்டிருப்பார்கள். பிறகு வந்ததும் நறுக்கிய பழங்களையும்,காய்களையும் நாங்கள் உணவாக சாப்பிடுவோம். பசி தீரும் வரை சாப்பிட்ட பிறகு படுத்துத் தூங்குவோம். சில இளைஞர்களைத் தவிர மற்ற எல்லோரும் பகற்பொழுதில் உறங்கப் போய் விடுவார்கள்."

"உன் கணவரும் உறங்குவரா."

"இல்லை. அவர் உறங்கமாட்டார். ஆனால்

அமைதியாக கண்மூடி திண்ணையில் அமர்ந்திருப்பார். ஆழ்ந்து தியானம் செய்து கொண்டிருப்பார். அப்படித் தியானம் செய்வது உறக்கத்தை விட மேலானது என்பது அவருடைய அபிப்ராயம். அவரைப் போலவே அவரது சீடர்களும் எங்கேனும் மரத்தடியில் அல்லது குடிசை வாசலில் மௌனமாய் எதுவும் பேசாது உடம்பை அதிகம் அசைக்காது கண் மூடி அமர்ந்திருப்பார்கள். வெயில் குறைந்ததும் மறுபடியும் நாங்கள் பாடத் துவங்குவோம். தீபங்களை ஏற்றி ஆசிரமங்களைச் சுற்றி வருவோம். அந்த இரவு நேரத்தில் பல அரசர்களின் கதையை பல மகரிஷிகளின் கதையை என் கணவர் மற்றவர்களுக்குச் சொல்ல, அந்தக் கதை பற்றிய விவாதங்களையும் அவர்கள் ஆரம்பிப்பார்கள். சந்திரன் உயர்ந்து மேலே வரும் நேரத்தில் நாங்கள் படுக்கப் போய் விடுவோம்."

"எறும்புகளும், கொசுக்களும் தொந்தரவு செய்யாதா."

"இல்லை. கொசுக்கள் அண்டாமல் இருக்கவும், எறும்புகள் உள்ளுக்குள் வராமல் இருக்கவும் சில மூலிகைகள் வளர்க்கிறார்கள். அந்த மூலிகைகள் குடிசையின் மேலே படர, கொசுக்கள் அருகே வருவதேயில்லை. நெருப்பில் சில மூலிகைகளை பறித்துப் போட, அதில் எழும் நறுமணப் புகையால் வேறு எந்தப் பூச்சிகளும் அருகே சுற்றுவதில்லை. எறும்புகளுக்கு தனியான ஒரு இடத்தில் உணவுகளை இட்டு விடுவதால் ஆசிரமங்களின் மற்ற பகுதியை நாடாமல், அந்த இடத்தில் அதிகம் உணவு கிடைக்கிறதே என்று அங்கேயே எறும்புகள் சாரை சாரையாக படையெடுத்து மிகப் பெரிதாக தங்களுடைய வீட்டைக் கட்டிக் கொண்டிருக்கும். ஆள் உயர புற்றில் வாழ்ந்து கொண்டிருக்கும். ஆசிரமத்தின் எந்தப் பகுதிகளுக்கும் எறும்புகள் வருவதில்லை. அந்த எறும்புகளுக்கு அவ்வப்போது என் கணவருடைய சீடர்கள் உணவு வைத்து விடுவார்கள். தேன் கலந்த மாவையோ, கரும்புச் சாறு கலந்த தினையையோ உணவாகப் போட்டு விடுவார்கள்."

"இன்னொரு கேள்வி" காதியின் மனைவி அருகில் நெருங்கி மகளைப் பார்த்துக் கேட்டாள். "உன் கணவர் உன்னிடம் கோபித்துக் கொள்வதே இல்லையா."

"இல்லை. ஒரு பொழுதும் கோபித்துக் கொள்வது இல்லை. நான் என்ன செய்ய வேண்டும் என்பதை மிகத் தெளிவாக காரண காரியங்களோடு சொல்லி விடுகிறார். அதை மீறி செய்வதற்கு மனம் ஒப்பவே இல்லை. நீ விடியலில் எப்பொழுது எழுந்திருப்பாய் என்று கேட்கும்

பொழுது. நான் சூரிய உதயம் ஆன பிறகுதான் எழுந்திருப்பேன் என்று பதில் சொன்னேன். இனி நீ அவ்விதம் செய்ய வேண்டாம். சூரிய உதயத்திற்கு ஒரு நாழிகை முன்பாக எழுந்து விடப் பழகு. எழுந்து சுவாசம் இழுத்து விடு. உனக்கு சுறுசுறுப்பு அதிகமாகி விடும். முதல் நாள் எழுந்திருப்பது சிரமமாக இருந்தாலும் பிறகு பழகி விடும் என்று சொல்லி முதல்நாள் என்னை மெல்ல அரவணைத்து எழுப்பி வாசலுக்கு கொண்டு வந்து சுவாசம் இழுத்து விடச் சொல்லி, கை கால்களை சில விதமாக அசைக்கச் சொல்லி குதிக்கச் சொல்லி கற்றுக் கொடுத்தார். அப்பொழுது உடம்பில் ஒரு புத்துணர்வு பாய்வதை உணர்ந்தேன். அதிகம் சிரிப்போடும் சந்தோஷத்தோடும் நான் ஆறு நோக்கிப் போனேன். ஆற்றில் குளிப்பது எப்படி என்பதையும் எந்த உணவு உண்பது என்பதையும் சொல்லிக் கொடுத்தார்."

"விசிறினால்தானே தூங்குவாய். விசிறல் நின்று விட்டால் கத்துவாயே. அங்கு யார் அப்படி ஆட்கள் விசிறுகிறார்களா."

"இல்லை. யாரும் விசிறுவது இல்லை. கங்கைக் கரையிலிருந்து வருகின்ற காற்று நீர்பட்டு சில்லென்று இருப்பதால் அது மிகக் குளுமையைத் தருகிறது. அதுவும் தவிர அங்கங்கு தட்டிகளைப் போட்டு திருத்தி காற்றை திசை திருப்பி விடுகிறார்கள். எங்கு காற்று அதிகமாக இருக்கிறதோ அங்கு கயிற்றுக் கட்டிலைப் போட்டு என்னைப் படுக்க வைத்து விடுகிறார். மிக ஆனந்தமாக காற்று வருடிக் கொடுக்க உடனே தூங்கிப் போகிறேன். யாரும் எவருக்கும் விசிற வேண்டிய அவசியமில்லாத ஆசிரமமாக அது இருக்கிறது."

"இப்படி நகைகளும், உடைகளுமாக வாழ்ந்து விட்டு அங்கு போய், சில ஆடைகளோடு வாழ்வது கடினமாக இல்லையா."

"மற்றவர் பொறாமைப் பட்டுத்தானே நகைகள் அணிந்து கொள்கிறோம். அங்கு நகைகள் அணிந்து கொண்டிருப்பவர்களைப் பார்த்தால் எதற்கு இதைச் சுமக்கிறாய் என்று சிரிக்கிறார்கள். நான் அங்கு நகைகள் அணிந்து கொண்டு போனதும் மற்றவர்கள் எல்லாம் பார்த்து மெல்லச் சிரித்து இவைகளெல்லாம் உடம்பைப் புண்ணாக்கி விடும். எதற்கு... வேண்டாம் என்று சொன்னார்கள். வெறும் மல்லிகைப் பூக்களை மாலையாகவும், ஜாதிப் பூக்களை தலையில் வைத்தும் அலங்காரம் செய்து கொள்கிறார்கள். அந்த அலங்காரம் எனக்கும் பிடித்து விட்டது. அப்பா, இத்தனை நாள் எதற்காக மாடு போல்

நகைகளை சுமந்து கொண்டிருந் தோம் என்று தோன்றுகிறது. மெல்லிய ஜாதிப்பூ வோடு தூங்குவது மிகச் சுகமாக இருக்கிறது."

"சரி, வசதிகளை விடு. உன் புருஷன் உன்னோடு எப்படி நடந்து கொள்கிறான். உன்னை எப்படிப் போற்றுகிறான். உன்னைக் கண்டால் என்ன செய்கிறான்." சாதியின் மனைவி சத்தியவதியின் தாய் சத்தியவதியை நோக்கி ஆவலாகக் கேட்டாள். அந்த ஆவலில் ஒரு குதூகலம் இருந்தது. உன் அந்தரங்கத்தைச் சொல் என்கிற தாபம் இருந்தது.

"கடவுளே, நான் கொடுத்து வைத்தவள். இதைப் பற்றிதான் வரும் பொழுது நான் யோசனை செய்து கொண்டு வந்தேன். உன்னை என் தந்தை எப்படி நடத்துகிறார் என்று எனக்குத் தெரியும்.

நான் பலமுறை கண்ணால் பார்த்திருக்கிறேன். உன்னை அவர் கோபிக்கும் பொழுதும் அதட்டும் பொழுதும் எனக்குக் கலவரமாக இருக்கும். என் கவலை நான் திருமணம் செய்து கொள்ளும்பொழுது இந்த பயம் அடிவயிற்றில் இருந்தது. இனி வாழ்க்கை எப்படி இருக்குமோ என்கிற கவலை இருந்தது. ஆனால் அங்கு போனவுடனேயே ரிஷிகளைப் பற்றி அங்குள்ளவர் கள் எனக்கு எடுத்துச் சொன்னார்கள்.

நெல்முனையளவும் கோபமில்லாதவர். மனிதருடைய குறைகளையும், குற்றங்களையும் மன்னிக்கத் தெரிந்தவர். இதமான பேச்சால் திருத்திக் கொள்ள வாய்ப்புக் கொடுப்பவர். திருத்திக் கொண்டு விட்டால் மனதாரப் பாராட்டுபவர். தனக்கு ஏற்றபடி நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கமாட்டார். நடந்தால் மிகவும் கொண்டாடுவார். சிறிய விஷயங்களுக்கெல்லாம் கூட எவராயினும் நன்றி சொல்வார். சிறிய விஷயங்களில் ஈடுபட்டு ஜொலித்தால் பல பேர் முன்னிலையில் அழைத்து பாராட்டி பலருக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்று வாழ்த்துவார் என்றெல்லாம் சொன்னார் கள். வாழ்க்கை முழுவதுமே 'மனித குலத்திற்காகவே அர்ப்பணித்தவர். மனித குலத்தின் வளர்ச்சிக்காக வாழ்க்கையை அர்ப்பணித்து விட்டு இப்பொழுது சுற்றியுள்ள மனித குலத்தை இழித்து என்ன பயன். கோபித்து என்ன லாபம். எனவே என்னைச் சுற்றியுள்ள மனிதர்களை பிரியத்தோடு பார்ப்பதும் அவர்கள் முன்னேறுவதற்கு உதவுவதும்தான் என் முதல் வேலை. இந்த வேலையை நான் செவ்வனே செய்கிறபொழுது மனித

குலத்தின் மலர்ச்சிக்கு மேலும் உதவுபவனாக இருக்கிறேன். நான் கோபித்துக் கொண்டால், நான் கத்தினால், நான் சண்டையிட்டால், நான் ஆத்திரமடைந்தால் என்னால் பலபேர் ஆத்திரமடைந்து, பல பேர் கோபமடைந்து, அதனால் அந்த கோபமும், ஆத்திரமும் பல பேருக்குப் பரவி மனித குலம் இழி நிலைக்குத் தள்ளப்படுகிறது. எனவே நான் நல்லவனாக இருப்பதற்கு முயற்சி செய்வதே மனித குலத்திற்கு நான் செய்கிற முதல் தொண்டு' என்று சொல்வாராம்.

உட்கார்ந்து அவர்கள் சொன்னதைக் கேட்டதும் என்னால் நம்பவே முடியவில்லை. இப்படியெல்லாம் மனிதர்கள் இருப்பார்களா என்று நான் திகைத்துப் போனேன். அம்மா, நீ அப்பாவிற்கு பயந்து ஒடுங்குவதையும், அவரைச் சுற்றிச் சுற்றி வந்து நடுங்கிய வண்ணம் சீராட்டுவதையும் நான் கவனித்திருக்கிறேன். உன்னை ஒரு அரசி என்று நடத்தாமல் பல சமயங்கள் வெறும் தாதியாக, தாசியாக அப்பா நடத்துவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உன் கண் முன்னாலேயே மற்ற பெண்களோடு சுகித்திருப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். ஒரு அரசருக்கு ஒரு பெண் போதாது. பல பெண்கள் வேண்டும் என்று அவர் சொல்லவும் நீ ஆமாம், ஆமாம் என்று அவருக்கு ஆதரவாக பேசுவதையும் நான் காதாரக் கேட்டிருக்கிறேன்.

நல்லவேளை என் வாழ்க்கை அப்படி அல்ல. அவர் என்னைத் தவிர வேறு பெண்ணை நினைக்கவே இல்லை. நினைக்க வேண்டிய அவசியமே எனக்கு ஏற்படவில்லை என்று அவர் அடிக்கடி சொல்கிறார். நான் அவ்விதம் வேறு பெண்களிடம் மனம் பறிகொடுத்து விடலாகாது என்பதற்காகத்தான் அழகான உன்னை, அறிவான உன்னை, அன்பான உன்னை தேர்ந்தெடுத்தேன். நீ இவ்வளவு அறிவும், அழகுமாக இருக்கிறபொழுது இன்னொரு பெண் எனக்கெதற்கு. அதில் எனக்கு என்ன கிடைத்து விடப் போகிறது. நீ என் மீது காதல் கொள்ளும் வண்ணம் நடந்து கொண்டால் அதை விட நிறைவு என் வாழ்க்கையில் வேறு என்ன ஏற்படும் என்று சொல்வார். நான் நெகிழ்ந்து போனேன் அம்மா. அவர் காட்டுகிற அன்பை என்னால் தாங்கவே முடியவில்லை. பல சமயம் தனியே உட்கார்ந்து கடவுளுக்கு நன்றி சொல்லி அழுதிருக்கிறேன். என் கணவரின் கருணையை நினைத்து விம்மியிருக்கிறேன். அவர் குரல் தொலைவில் கேட்டால் போதும். ஓடிப்போய் அவருக்கருகே நின்று கொள்வேன். அவர் என்னை

எதிர்பார்க்கிறார் என்பதை அவர் பார்வையிலிருந்து தெரிந்து கொள்வேன். உடனடியாக அவருக்கு உதவி செய்வேன். அவருக்கு உதவி செய்வதற்காகவே பிறந்திருக்கிறேன் என்று ஒரு எண்ணம் எனக்குள் தோன்றி விட்டது. அவர் மிகப் பெரிய திரு காரியம் செய்து கொண்டிருக்கிறார்.

உலகத்தின் நன்மைக்காக தன்னுடைய ஒவ்வொரு நிமிடத்தையும் செலவழித்துக் கொண்டிருக்கிறார். அதில் ஏற்படும் சுக துக்கங்களைப் பற்றி அக்கறை இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறார். ஆனால் நான் அப்படி நடந்து கொள்ள முடியுமா. அவருக்கு சுகங்கள் கொடுப்பது தானே என் வேலை. அவரை சௌக்கியமாக பார்த்துக் கொள்வது தானே என் கடமை. எனவே அவருக்கு என்ன தேவை என்பதைப் பார்ப்பதை நான் என்னுடைய வாழ்க்கையாகக் கொண்டு விட்டேன். என் கணவர் மனித குலத்தை நேசிக்க, நான் என் கணவரை நேசித்தேன். வாழ்க்கை மிக ரம்மியமாகப் போகிறதம்மா.

ஒருவர் எப்படி வாழவேண்டும் என்பது இப்பொழுது தான் தெரிந்தது. நல்லவனாகவும், வல்லவனாகவும் ஒரு ஆண் இருந்து விட்டால் அதை விட பெரிய நிம்மதி ஒரு பெண்ணுக்கு எதுவுமில்லை. ஆனால் ஆண்களில் பல பேர்கள் நல்லவரும் இல்லை. வல்லவரும் இல்லை. இதுதான் பிரச்சினை.

இதைப் பற்றி நாங்கள் விவாதித்திருக்கிறோம் அம்மா. மனித குலத்தில் வேர் ஆண்கள் என்று வைத்துக் கொண்டால் அதன் கிளைகளையும், இலைகளையும், பூக்களையும் பெண்கள் என்று சொல்லலாம். வேர் வாடினால் மரம்வாடிப் போகும். மரம் வாடாமல் இருக்க வேர் ஆரோக்கியமாக இருக்கவேண்டும். வேருக்கு இயற்கை அளிக்கின்ற நீர் மட்டுமில்லாமல் பசுமையை உறிஞ்சி அனுப்பவேண்டும். வேர் நீர் உறிஞ்சி மேலே அனுப்ப வேண்டும். வெளிச்சத்திலிருந்து புரதமும், மண்ணிலிருந்து நீரும் கலக்கிற பொழுது நிறைய மலர்கள் உண்டாகின்றன. மலர்ச்சியாக உலகத்தில் தெரிகின்ற பெண்ணுக்கு அடிவேர் ஆண்தான். அந்த அடி வேர் உற்சாகமாக இருக்க வேண்டுமென்றால் பசுமையான செடி மிக முக்கியம். மலர்கள் மிக முக்கியம். இதுதான் மனித வாழ்க்கை என்று அவர் அடிக்கடி சொல்வார் அம்மா.

எனக்குப் பசிக்கிறது. ஏதேனும் உணவு தரமாட்டாயா" மகள் சத்தியவதி கேட்க, தாய் எழுந்து கை தட்டினாள். தாதிகளை அருகே வரவழைத்தாள்.

"இரு. நானே எடுத்து வருகிறேன்" என்று மகளுக்கு சீராடல் செய்ய நகர்ந்து போனாள்.

சத்தியவதி நிம்மதியோடு பஞ்சணையில் படுத்து கண்கள் மூடிக் கொள்ள தாய் உணவு வகைகள் எடுக்கப் போனாள்.

சத்தியவதியின் தாயின் மனம் முழுவதும் ஏக்கம் பரவியிருந்தது. இன்று காலை கூட வேறு ஏதோ ஒரு பெண்ணோடு கட்டிப்புரண்டு சிரித்த வண்ணம் புருஷன் இருக்க அருகே உட்கார்ந்து விசிறுகின்ற அபாக்கியமான ஒரு நிலைமை ஏற்பட்டது. இது பலமுறை செய்திருப்பினும் இன்று செய்யும்போது மனம் வலித்தது. மகள் வீட்டிற்கு திருமணமாகி திரும்பி வருகிறாள் என்ற நேரத்தில் மரியாதையாக இல்லாமல் இன்று காலையிலும் மகளை விட வயதில் சிறியவளான ஒரு பெண்ணோடு கூடிக்களிக்க இந்த மனிதனால் எப்படி முடிகிறது. இவளைப் பார்க்கும் பொழுது மகள் நினைப்பு வரவில்லையா என்று உள்ளுக்குள் ஒரு கேள்வி எழுந்தது. போதுமே என்று சொன்னபோது அரசன் காதி முறைத்துப் பார்த்தான். உங்கள் மகள் சத்தியவதியை விட இவள் சின்னவள் என்று வேண்டுமென்றே சொன்ன போது அவன் எழுந்து வந்து பளீரென்று அறைந்தான்.

"எனக்கு இருப்பது ஒரேயொரு மகள். அந்த மகளை நான் மகனாக நினைக்கிறேன். ஊரிலுள்ள எல்லோரையும் மகளாக நினைக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. என்னைப் பார்த்ததும் உனக்கு பொறாமை ஏற்படுகிறது. உனக்கும் இளம் பையன்களோடு சல்லாபிக்க வேண்டும் என்று ஆவல் ஏற்படுகிறது அல்லவா. நான் சின்னப் பெண்களோடு சுகிக்கிறேன் என்பதால் நீயும் இளம் வாலிபர்களை பார்க்க ஆரம்பித்து விட்டாய் அல்லவா" என்று கேட்க, அவள் பதறினாள்.

"எழுந்து வெளியே போ" என்று கட்டளையிட வெளியே வந்து உட்கார்ந்து சிறிது நேரம் அழுதாள்.

தோழிகள் வற்புறுத்தினதால் குளித்து உடையுடுத்தி விட்டு வாசலுக்கு வந்து விட்டாள். வாசலில் ஒன்றுமே நடக்காதது போல் எல்லோருடனும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள். அவளோடும் சிரித்துப் பேசினாள். இந்த நாடகம்தான் அவளை அதிகம் வெறுப்படைய வைத்தது. மனைவியிடம் கூட உண்மையாக இல்லாத புருஷன் எப்படி புருஷனாக முடியும். இவனால் யாருக்கு உபயோகம் என்று நினைத்தாள்.

மகள் தூங்கத் துவங்கி விட்டாள் என்று தாதிகள் ஓடி

வந்து சொன்னதும் அவளும் ஓடிப்போய் மகளைப் பார்த்தாள். உணவு எடுக்கும் முன்பு பயணக் களைப்பினால் சத்தியவதி அயர்ந்து தூங்குவது தெரிந்தது. தாதிகளிடம் விசிறி வாங்கி அவள் விசிறத் துவங்கினாள்.

நான் எப்படி சௌகரியமாக வாழ்கிறோம். எத்தனை சந்தோஷமாக இருக்கிறோம் என்று தன் தாயிடம் சொல்ல வேண்டுமென்று பத்து நாட்களுக்கு முன்பு சத்தியவதிக்கு மனம் பரபரத்தது. தன்னுடைய பெருமையை வெளியே சொல்லிக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் அதிகரித்தது. புருஷனிடம் உத்தரவு கிடைத்த போது அதிகம் பேச வேண்டாம் என்று அவர் கட்டளையிட்டார். ஆனால் இங்கு வந்து அதிகம் பேசியாயிற்று. புருஷன் கட்டளை மறந்து போயிற்று. இனிமேலாவது அதிகம் பேசாமல் இருக்க வேண்டும் என்று தூக்கத்திற்கு நடுவே சத்தியவதி நினைத்துக் கொண்டாள். தூங்கியும், தூங்காமலுமாய் ஒரு நிலையில் இருந்தாள். ஆசிரமத்தில் ஆழ்ந்து தூங்குவது போல இந்த அரண்மனையில் தூங்க முடிவதில்லை. இந்த அரண்மனை ஒரு உறுத்தலாகவே இருந்தது. இந்த அரண்மனையின் சூழல் சூடும், எரிச்சலுமாய் இருந்தது.

இத்தனை நல்ல புருஷனா. இத்தனை சுகமான வாழ்க்கையா. எனக்கு ஏன் இவை கிடைக்கவில்லை. நான் பாபியா. உனக்கு ஏன் இவை கிடைத்தது. யார் செய்த புண்ணியம். முற்பிறவியில் செய்த புண்ணியமா. அல்லது நான் செய்த புண்ணியத்தை வாரிக்கொண்டு இங்கு வந்துவிட்டாயா என்று சத்தியவதியின் தாய் யோசனை செய்தாள்.

“நீ சொல்வதெல்லாம் சரிதான் ஆனால் ஏதேனும் விசேஷம் உண்டா. நீ ஒன்றும் சொல்லவில்லையே. உன் உடம்பைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே. இங்கு வாழ்ந்த பொழுது உன் உடம்பிலிருந்த கன்னித் தன்மை இப்போது இல்லை. புருஷனோடு கூடி சுகித்திருக்கிறாய் என்பதை உன்னுடைய பருத்த மார்பகங்களும், இடுப்பும் தெரிவிக்கின்றன. உன் உதடு கனிந்திருக்கிறது. உன் கண்களில் ஒரு கிறக்கம் இருக்கிறது. இதுவரை சுருண்டு படுத்துப் பழக்கப்பட்ட நீ இப்பொழுது சற்று கால் அகட்டி மல்லாக்க தூங்குகிறாய். கூடலில் களைத்துப் போன பெண்தான் இப்படி உறங்குவாள். ஆனால் வெறும் கூடல் மட்டும் அனுபவித்தால் போதுமா. உனக்கு இன்னும் குழந்தை பாக்கியம் வரவில்லையே. ரிசீகர் அதற்கு தகுதியானவர் தானா. இதைச் சோதித்துப் பார்த்தாயா. இது பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே. அங்குள்ளோர் சொல்லித்

தரவில்லையா. எந்த விசேஷமும் இல்லாமல் எதற்கு வீடு வந்திருக்கிறாய். உன் புருஷனைப் பற்றி அலட்டிக் கொள்ளவா. இதெல்லாம் ஆரம்ப காலத்து சந்தோஷங்கள்.

உன் இளமை உன்னிடம் இருக்கும் வரை உன்னுடைய அவசியம் உன் புருஷனுக்கு இருக்கும் வரை இந்தக் கொஞ்சலும், உயர் மரியாதையும் அபிஷேகங்களும் இருக்கும். உபயோகமில்லை என்று தெரிந்ததும் உன்னால் ஈடுகொடுக்க முடியவில்லை என்று புரிந்ததும் உன்னை விட இளமையான ஒரு பெண்ணை அவர் தேட ஆரம்பித்து விடுவார். உன்னை ஒதுக்கி விடுவார். உன்னை ஒதுக்குவது புரியாமல் நீ சீறினால் பதிலுக்கு வெகுவேகமாய் சீறுவார். பளீரென்று அடிப்பார். உன்னைப் போல எத்தனைப் பேரை நான் பார்த்திருக்கிறேன். லேசான பொறாமையுடன் தூங்குகின்ற மகளைத் தாய் பார்த்தாள்.

மகளுக்கு அமைந்தது போல தனக்கு நல்ல புருஷன் அமையவில்லையே என்ற வருத்தம் அவள் மனதில் அதிகம் பொங்கியது.

இவளுக்கு குழந்தை பிறந்தால், ரிசீகர் என்ற உத்தமமான, மனிதனோடு கூடி குழந்தை பிறந்தால், அந்தக் குழந்தை ரிசீகரை விட இன்னும் உத்தமமாக இருப்பான் அல்லவா. மிகப் பெரிய ஞானவானாக இருப்பான் அல்லவா. இப்பொழுது இளமையில் கணவனால் சந்தோஷம் அடைகிற இந்தப் பெண் சத்தியவதி மத்திய வயதில் தன் மகனால் பெருமையடையப் போகிறாள். வாழ்க்கை முழுவதும் நல்ல புருஷனாலும், கெட்டிக்கார மகனாலும் இந்தப் பெண் சந்தோஷமடைவாள். எனக்கு நல்ல புருஷனும் கிடைக்கவில்லை. உத்தமமான மகனும் பிறக்கவில்லை.

அரசனோடு கூடிய தாதிகளும், தாசிகளும் குழந்தைகள் பெற்று விட்டார்கள். எனக்கு மட்டும் இன்னும் புத்திர பாக்கியம் ஏற்படவில்லை. தன்னை நினைத்தும், தன் மகளை நினைத்தும் சத்தியவதியின் தாய் அவளுக்கு அருகே அமர்ந்து கொண்டு அழுதாள்.

எழுந்து போய் முகம் துடைத்துக் கொண்டாள். மகள் எப்பொழுது எழுவாள். அவளிடம் மேலும் சில விவரங்கள் கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

மகள் எழுந்ததும் அருகேபோய் அமர்ந்து கொண்டாள். அவளுக்கு உணவு கொடுக்க ஆரம்பித்தாள்.

“ஆமாம், இத்தனை கொண்டாடுகிற புருஷன் உன்னை மட்டும் அனுப்பி விட்டு தான் இன்னும் இங்கு வராமல் இருக்கிறாரே ஏன். எங்கள் வீட்டிற்கு வர உன்

புருஷனுக்கு விருப்பமில்லையா. உன் தந்தையைப் பார்க்க ஆசையில்லையா. உன் தந்தையைப் பார்க்க வேண்டும் என்பது ஒரு மரியாதையில்லையா. எதற்கு மரியாதை இல்லாமல் உன்னை மட்டும் அனுப்பி இருக்கிறார்."

"நான் அவரோடுதான் வர வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால் என் புருஷன் நல்லவர் மிக மிக நல்லவர் நீ என்னோடு உன் தாய் வீட்டிற்குப் போனால் அங்கு போயும் நீ என்னைத்தான் கவனித்துக் கொண்டிருப்பாய். என் முகத்தைத்தான் பார்த்துக் கொண்டிருப்பாய். எனக்கு என்ன கிடைத்தது. என்ன கிடைக்கவில்லை என்று பதறிக் கொண்டிருப்பாய். எனவே என்னை முற்றிலும் மறந்துவிட்டு நீ உன் தாய் வீட்டிற்குப் போய் சில காலம் உன்னை மட்டுமே நினைத்துக் கொண்டு சௌக்கியமாக இரு. பிறகு நான் வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

இன்றிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பிறகு நல்ல பௌர்ணமி நேரம் என் புருஷன் இந்தக் கோட்டைக்கு வருவார். அவரை வரவேற்கின்ற ஏற்பாடுகள் மிகப் பிரமாதமாக இருக்க வேண்டும் என்று தந்தையிடம் சொல்லி விடு உனக்கு சொல்ல பயமாக இருந்தால் நான் சொல்லிக் கொள்கிறேன். அவருக்கும், அவருடைய சீடர்களுக்கும் தனி அரண்மனை ஒழித்துத் தர வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட வேலைக்காரர்கள் தான் அங்கு நியமிக்கப்பட வேண்டும். இவைகளை எல்லாம் நான் இப்பொழுதே செய்யத் துவங்கப் போகிறேன்" பாதி உணவில் மகள் எழுந்திருந்தாள். தாய்க்கு இன்னும் ஆத்திரம் அதிகமாகியது.

"முடிந்து விட்டுப் போடி" என்று கத்தினாள்.

"தேவையில்லை" மகள் ஒதுக்கி விட்டு வேகமாக நடந்தாள்.

தாய் பல்கடித்தாள்.

தந்தையும் மகளும் எதிர் எதிரே உட்கார்ந்து கொண்டார்கள்.

"உன் புருஷனால் மனித குலத்திற்கு மிக நன்மையென்று அடிக்கடி சொல்கிறாயே, என்ன விதமான நன்மை. அதை எப்படி செய்கிறார் என்று சொன்னால் நானும் அப்படிச் செய்ய முயற்சிப்பேனல்லவா" அரசன் தந்திரத்தோடு பேசினான்.

பலபேரோடு பேசிப் பேசி பழக்கப்பட்டவர். மகளிடம் எப்படி செய்திகளைக் கறக்க வேண்டுமென்று தெரிந்தவர். அதே விதமாய் குரலையும், சைகைகளையும்

மாற்றிக் கொண்டு பிரியமாக பேசினார்.

தன் தகப்பன் தன் புருஷனுக்குத் தரும் மரியாதையைப் பார்த்து சத்தியமுதி சந்தோஷமானாள்.

"மிக நல்ல கேள்வி கேட்டாய் அப்பா. இப்படியெல்லாம் கேட்க அம்மாவுக்குத் தெரியவேயில்லை. என் கணவர் என்னை தினமும் அழைத்துக் கொண்டு கங்கா நதி தீரம் போய் கங்கையில் குளித்து விட்டு. கங்கையின் கரைக்குப் போய் உட்கார்ந்து கொண்டு கங்கை நதிக்கு பூஜை செய்வார். என்னை அருகில் தர்ப்பை பிடித்து நிற்கச் சொல்வார். அப்படி கங்கை நதிக்கு பூஜை செய்கிறபொழுது, கடைசியில் அந்த பிரசாதம் எடுத்து நீட்டுகிறபொழுது கங்கை வந்து வாங்கிக் கொள்வாள்.

"என்னது. கங்கை வந்து வாங்கிக் கொள்வாளா எப்படி."

"ஆமாம். அறுபது நொடிகள் என் கணவர் பிரசாதம் நீட்டிக் கொண்டிருக்க, கங்கை ஆறு வளைந்து என் புருஷனுடைய காலடிக்கு வந்து பொங்கி அவர் கையில் நீட்டுகின்ற பிரசாதத்தை கரைத்து விட்டு ஓடும். என் புருஷன் ஒரு நூலிழை கூட நகரமாட்டார். ஆனால் கங்கை சில அடிகள் நகர்ந்து மேலேறி பிரசாதத்தை கரைத்துக் கொண்டு ஓடும். இது கங்கை வாங்கிக் கொள்வது போல்தானே.

"அம்மா, கங்கை போன்ற நதிகள் பொங்கும். அடங்கும். இதைப் போய் பெரிதாகச் சொல்கிறாயே."

"ஆமாம் அப்பா. நானும் இப்படித்தான் அவரிடம் கேட்டேன். கங்கை ஜீவநதி இதில் தண்ணீர் பெருக்கு அதிகமாவதும், குறைவதும் அடிக்கடி நடக்கும். நீங்கள் கை நீட்டுகிறபொழுது கங்கை வருகிறாள் என்பதை விட கங்கை பொங்குகிறபொழுது நீங்கள் கை நீட்டுகிறீர்கள் என்று சொன்னால் உங்களுக்கு கோபம் வருமோ என்று கேட்டேன். என் புருஷன் என்னை கோபிக்கவில்லை. சரி. நான் விலகிப் போய் பிரசாதம் தருகிறேன் என்று கங்கை இருக்கின்ற இடத்திலிருந்து கிட்டத்தட்ட நூறு அடிகள் நடந்து போய் அங்கு மனை போட்டு உட்கார்ந்து என்னோடு பூஜை செய்து, என் மனைவி, நீ என்னிடம் பிரசாதம் வாங்கிக் கொள்வது உண்மையா என்று கேட்கிறாள். அவளுக்கு உணர்த்த வேண்டும் என்று சொல்லி பூஜையை ஆரம்பித்து பிரசாதம் நீட்டினார்.

கடல் அலைபோல மிகப் பெரிய அலை ஒன்று சடேரென்று கரையில் அடித்து ஓடி வந்தது. என்னுடைய

புருஷன் கழுத்தளவுக்கு கங்கை பாய்ந்து வந்தது. நான் என் புருஷனை அடித்துக் கொண்டு போய் விடுமோ என்று கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அலறினேன். அதே அறுபது நொடிகளில் பிரவாகம் கரைந்து விட்டதப்பா. அதன் பிறகு நான் கங்கையிடம் மன்னிப்புக் கேட்டேன். பலமுறை அவளிடம் வணங்கி நான் செய்தது பிசகு. என்னை மன்னித்து விடு என்று சொன்னேன்.

இன்னும் நடு ஆற்றுக்கு சென்று பேசு. அப்பொழுது அவள் உன் மீது கோபமாக இருக்கிறாளா இல்லையா என்று தெரிந்து விடும் என்று என் புருஷன் சொன்னார்.

நான் எவர் துணையுமில்லாமல் விறுவிறுவென்று நடு ஆற்றுக்குப் போனேன். கங்கையிலிருந்து ஒரு சுழி கிளம்பி வந்து என்னைச் சுழற்றி கரைப்பக்கம் ஏற்றியது. அவள் கோபிக்கவில்லை. உன்னை மன்னித்து விட்டாள் என்று என் கணவர் சொன்னார். கங்கையின் தொடல் ஒரு பெண்ணின் தொடல் போல இருப்பதை நான் உணர்ந்தேனப்பா.

கங்கை வெறும் நதியல்ல. அது ஒரு ஜீவ சொரூபம். உயிருள்ள ஒரு தத்துவம். நடந்து போகின்ற மகா சக்தி." கிளர்ச்சியோடு மகள் வர்ணிக்க தந்தை கை கூப்பினார்.

"ரிசீகரால மனித குலத்துக்கு நன்மை என்பது எப்படி. அதை கொஞ்சம் தயவு செய்து சொல்."

"இது பற்றிய ஆழ்ந்த அறிவு எனக்கில்லை. ஆனாலும் என் புருஷன் என்னிடம் இதை எப்படி விளக்கினாரோ அதே விதமாக உங்களிடம் விளக்க நான் முயற்சி செய்கிறேன்.

இயற்கையை இடையறாது வழிபட்டு, இயற்கையை குளிர்வித்தால், இயற்கையை சந்தோஷப்படுத்தினால் இயற்கை தன் செல்வங்களை அதிகமாகப் பெருக்கி, அந்த இயற்கை பெருக்கிய செல்வங்களின் மூலம் நல்ல வீரிய வித்துக்கள் உண்டாகி, அந்த வீரிய வித்துக்கள் மூலம் நல்ல குழந்தைகள் பிறப்பார்கள் என்று சொல்கிறார்கள்.

அதற்காக இடையறாது அந்த வனப்பிரதேசத்தில் ஜபதபங்கள் செய்கிறார்கள். கூட்டாக ஒரு நூறு பேர் அமர்ந்து ஒருவித ஜபத்தை மூன்று நாழிகைகள் சொல்கிறார்கள். அந்த இடத்தின் தன்மையே மாறுகிறது. அந்த ஜபத்தின் தன்மை உலகம் முழுவதும் பரவுகிறது. நீர் வழியாக பல இடங்களுக்குப் போகிறது. காற்றின் வழியாக பல மரங்களை, தாவரங்களை, மிருகங்களைத் தழுவுகிறது.

அந்தத் தாவரங்கள் செழிப்பாகின்றன. அவைகளுக்குள் இந்த ஒலிகளின் தன்மைகள் போய்

உட்கார்ந்து விடுகின்றன. அந்த தாவரங்களை உண்ணுகின்ற மிருகங்கள் அந்த தன்மைகளைப் பெறுகின்றன. அந்த ஆசிரமத்துக்கருகே உயரமான அதே சமயம் மிக சாதுவான யானைகளை நான் பார்த்திருக்கிறேன். இவர் அழைத்தால் அந்த யானைகள் அருகே வந்து நிற்கின்றன. மிக வேகமாகப் போகின்ற மான்கள் இவரிடம் வந்து கொஞ்சுகின்றன. இவையெல்லாம் நம்முடைய ஆசிரமத்தில் தோன்றிய ஒலியால் பிறந்தவை என்று அவர் காண்பித்துக் கொடுப்பார்.

இவ்விதமே பறவைகளும், பூச்சிகளும், புழுக்களும் ஆசிரமத்தைச் சுற்றி ஆசிரமத்தின் ஒலியை உண்டு வாழ்கின்றன. இதே விதமாக நல்ல மனிதர்கள் தோன்றுவதற்கும் நான் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். இவைகளை உற்பத்தி செய்வது போல நான் நல்ல மனிதர்களையும் உற்பத்தி செய்வேன் என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட விஷயங்களை உலகம் முழுதும் பரப்ப வேண்டும். இப்படிப்பட்ட முயற்சிகள் உலகம் முழுவதும் நடத்தப்பட வேண்டும் என்று சீடர்களுக்குச் சொல்லி, சீடர்களை தயார்செய்து கங்கை நதிக் கரையோரம் பல ஆசிரமங்கள் அமைக்கச் செய்து அவர்களில் பல பேருக்கு இந்த விஷயங்களைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

அவருக்கு இருக்கின்ற பல சீடர்கள் கங்கையில் ஆசிரமம் அமைத்து பல்வேறு சீடர்களை உருவாக்கி மிகப் பெரிய குழுவாகப் பரவிக் கொண்டிருக்கிறார்கள்.

என் கணவர் கண்டுபிடித்த மந்திரத்தை, அந்த தந்திர வித்தையை மற்றவர்களுக்கு அதாவது தகுதியானவர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கிறார்."

"அம்மா, எனக்கொரு கேள்வி இங்கே இருக்கிறது" அரசன் மகளிடம் என்றுமில்லாத பணிவோடு பேசினான்.

அவளைத் தன் மகள் என்பதை மறந்து விட்டு ரிசீகர் என்கிற முனிவரின் மனைவியாக கருதத் துவங்கினான். அவளை நோக்கி கைகூப்பி பேசத் துவங்கினான்.

"இயற்கை தனது வேலையை நன்றாகச் செய்து கொண்டிருக்கிறது. நல்லவர்களையும், கெட்டவர்களையும் சமதையாக உருவாக்கிக் கொண்டிருக்கிறது. மானையும், புலியையும், புலியைக் கொல்லும் வேடனையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இப்படி இருக்க, நடுவே

ரிச்சு முனிவர் போய் இந்த இயற்கையை மாற்றி வைக்கவேண்டிய அவசியம் என்ன. எதற்கு நல்லவர்களை அதிகம் உற்பத்தி செய்ய வேண்டும். நல்லவர்கள் அதிகம் உற்பத்தியானால் அது நல்லதுதானா. இதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது.

"அப்பா, இந்த கேள்வியை ஆசிரமத்திலுள்ள ஒரு மாணவன் கேட்டான். நாங்கள் எல்லோரும் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தோம். மிக கவனமாக என் கணவர் அவனுக்கு பதில் சொன்னார்.

இயற்கை என்பது தவறே செய்யாத ஒரு விஷயமல்ல. அதுவும் பிறழும். இயற்கையின் பிறழ்வினால் பல விஷயங்கள் இங்கு நடந்திருக்கின்றன. வேகமான புயலும், அதிகமான வெள்ளமும், மழையற்றுப் போவதும் இயற்கையின் சீற்றத்தால் ஏற்படுபவை. இது கெட்ட மனிதர்களின் கோபத்தால் நடக்கின்றன. இந்தக் கெட்ட மனிதர்கள் அதிகம் பல்கிப்பெருகி இயற்கையை சருக்க செய்து தவிக்க வைக்கிற பொழுது, இயற்கையை சமனப்படுத்தி இயற்கையை சந்தோஷப்படுத்தி அதை நல்ல திசைக்கு அழைத்துப் போக வேண்டிய ஒரு பொறுப்பு முனிவர்களிடம் இருக்கின்றது. எனவே நல்லவர்களை நேரடியாக முனிவர்கள் உருவாக்குவதில்லையாம். நல்லவர்களை உற்பத்தி செய்கின்ற தாவரங்களை அதிகரிக்கச் செய்து விடுவார்களாம். தாவரங்கள் நல்லபடி உற்பத்தியானால் அங்கிருந்து நல்ல மனிதர்கள் தோன்றுவார்கள் என்று முனிவர் சொன்னார்.

இயற்கையை, இயற்கையை ஒட்டியவாறே மாற்றியமைப்பதுதான் நல்லதே தவிர இயற்கையை அடக்கிப் பிடிப்பது நல்லது அல்ல என்று சொல்கிறார். இயற்கையோடு எதிர்த்து விளையாடுவது தவறு என்று சொல்கிறார். இயற்கையை எதிர்த்து விளையாடிய ஒரு முட்டாளின் கதையை எங்களுக்குச் சொன்னாரப்பா."

"அப்படியா, யார் அந்த முட்டாள்."

"கார்த்த வீர்ய அர்ச்சுனன்" மகள் சொல்ல தந்தை காதி திடுக்கிட்டு எழுந்தார்.

"எவ்வளவு பெரிய வீரர். எப்பேர்ப்பட்ட மன்னன். அவனை முட்டாள் என்றா உன் புருஷன் சொன்னார்."

"ஆமாம் அப்பா. மிகப் பெரிய தவறு கார்த்த வீர்ய அர்ச்சுனன் செய்தான். அதற்குண்டான பலனை அவன் அனுபவிக்கப் போகிறான் என்று கடுமையாக எச்சரித்தார்.

"கார்த்த வீர்ய அர்ச்சுனன் செய்த தவறென்ன."

"கார்த்த வீர்ய அர்ச்சுனனுக்கு பல மனைவிகளாம். அவர்களோடு சந்தோஷமாக நர்மதை நதிக்கரையில் ஆடிக் கொண்டிருந்தானாம். நதியின் போக்குக்கு முதுகு காட்டிக் கொண்டு உட்கார்ந்து கொள்வானாம். மனைவிகளைத் தூக்கி நதியில் எறிவானாம். மனைவிகள் பயந்து அலறுவார்களாம். அதைக் கண்டு சிரிப்பானாம். அடித்துக் கொண்டு போகிற மனைவிகள் தளராதிருக்க வேண்டுமென்பதற்காக தன்னுடைய வலிமை மிக்க கைகளால் நதியின் போக்கை திசைமாற்றி விடுவானாம். அப்பொழுது முழங்கால் அளவு நதியே நர்மதைப் பக்கம் போக ஆரம்பிக்குமாம். அவனுடைய மனைவிமார்கள் மறுபடியும் வேகமாக ஓடி வந்து அவனை சந்தோஷமாகவும், பயத்தோடும் தழுவிக் கொள்வார்களாம். இதில் அவன் பெரு மகிழ்ச்சி அடைவானாம்.

தன் மனைவிகள் பயப்படுவதற்காகவும், அவர்கள் சந்தோஷமடைவதற்காகவும் நதியின் போக்கை இந்த முட்டாள் மாற்றினான்.

கரையில் மணலில் சிவலிங்கம் அமைத்து கண்மூடி, சிவநாமம் சொல்லி இராவணேஸ்வரன் என்ற அரக்கன் பூஜை செய்து வந்தான். இவன் நதியின் போக்கை மாற்றியதால் நதி உயர்ந்து மேடான இடத்தில் பாய்ந்து லிங்கத்தை அடித்துக் கொண்டு போய் விட்டது.

இராவணன் கண் திறந்த போது லிங்கமில்லை. இராவணன் கார்த்த வீர்ய அர்ச்சுனனை போருக்கு அழைக்க இருவரும் சண்டை போட்டார்கள். மனைவிகள் எதிரே மறுபடியும் தன்னை நிரூபிக்க கார்த்த வீர்ய அர்ச்சுனனுக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

வம்பு சண்டைக்கு வந்த இராவணனை நையப் புடைத்து கூண்டில் அடைத்து தன் அரண்மனையில் வைத்து விட்டான். அந்த கூண்டுக்குள்ளும் கயிறு கட்டி தொங்க விட்டான். இராவணன் ஒரு சிலந்தியைப் போல காட்சியளித்ததாக அங்குள்ளவர்கள் சொன்னார்களாம்.

இராவணனுடைய குரு கெஞ்சிக் கேட்டுக் கொண்ட பிறகு கார்த்த வீர்ய அர்ச்சுனன் இராவணனை விடுதலை செய்து வெளியே துரத்தி அனுப்பி விட்டானாம்.

ஜெயித்து விட்டான். ஆனால் சிவ பூஜை பாழாயிற்றே. அதனால் பூத கணங்கள் கோபமடைந்ததாம். சிவகணங்கள் கார்த்த வீர்ய அர்ச்சுனனுடைய மந்திரிமார்களுக்குள்ளும், மனைவி மார்களுக்குள்ளும், மக்களுக்குள்ளும் புகுந்து கொண்டனவாம்.

நேரம் வருகிறபொழுது தங்கள் சொரூபத்தைக் காட்டி காத்த வீரிய அர்ச்சுனனுக்கு தவறு உபதேசித்து, திருப்பிக் கவிழ்ப்பதற்கு நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றனவாம். பல சக்திகள் இருந்தும், மிருக வலிமை இருந்தும் அவனைச் சுற்றி அவன் செய்த பாவத்தினால் ஒரு தவறான கூட்டத்தை உருவாக்கிக் கொண்டு விட்டான் என்று என் கணவர் சொல்லுவது வழக்கம்."

காதி அரசன் திகைத்துப் போனான்.

2

அன்றைக்கும் அரசன் காதியின் கட்டிலில் மூன்று இளம் பெண்கள் மிகக் குறைவான உடைகளோடு அரசனைக் கட்டித் தழுவியபடி இருந்தார்கள். கால் பக்கமும், முதுகுப் பக்கமும், நெஞ்சுப் பக்கமும் ஆளுக்கொரு பெண்ணாக ஒட்டிக் கொண்டிருந்தார்கள்.

சத்தியவதியின் தாய் உள்ளுக்குள்ளே நுழைகிறபொழுது ஒரு பணிப்பெண் அருகே வந்து "நான் வேண்டுமானாலும் அரசனிடம் உங்கள் வருகையைச் சொல்லி விட்டு வரட்டுமா. அதுவரை இங்கு உட்கார்ந்திருக்கிறீர்களா" என்று கேட்டாள்.

தன் அந்தப்புரத்தில் தான் நுழைவதற்கே அனுமதி வாங்க வேண்டியிருக்கிறதே என்கிற நிலைமை அவளைக் கோதிக்க வைத்தது. தேவையில்லை என்று ஒரு வார்த்தை சொல்லி விட்டு கட்டிலுக்குப் போய் புருஷன் எதிரே அமர்ந்து கொண்டாள்.

அந்தப் பெண்கள் பிரியாமல் அரசனைத் தழுவியபடியே இருந்தார்கள். கைதட்டி நகர்ந்து போங்கள் என்று கட்டளையிட்டாள். அவர்கள் வேகமாக நகர்ந்தார்கள்.

"எதற்கு அவர்களை நகரச் சொல்கிறாய். உனக்குத் தேவையானது என்ன. ஏதோ பேச வந்திருக்கிறாய். பேசு. இவர்களைப் போகச் சொல்ல வேண்டிய அவசியமென்ன. ஏய்... இன்னும் இறுக்கத் தழுவிக் கொள்ளுங்கள்" அரசன் கட்டளையிட்டான். அவர்கள் சிரித்தார்கள். அரசனை இறுக்கத் தழுவிக் கொண்டு முத்தமழை பெய்தார்கள்.

காதியின் மனைவியும், சத்தியவதியின் தாயுமான அந்தப் பெண்மணி நெஞ்சில் பலமாய் அடிபட்டாள். கண்களை மூடிக் கொண்டாள். வேதனையில் மனசு தவித்தது.

"என்ன பேசவந்தாய் சொல்" சிறிது கூட கவலை

யின்றி அரசன் காதி தன் பட்டமகிஷியைப் பார்த்துக் கேட்டான்.

"நமது மாப்பிள்ளையும், நமது மகளின் கணவருமான ரிசீகர் நமது மாளிகைக்கு வந்தால் அவரை சில காலம் நம் மாளிகையில் தங்க வைக்க வேண்டும். அப்படித் தங்கும் வண்ணம் நீங்கள் அவர்களைக் கேட்க வேண்டும்" என்று புருஷனிடம் வேண்டிக் கொண்டாள்.

"ஏன் எதற்காக ரிசீகர் தங்க வேண்டுமென்று விரும்புகின்றாய். திடீரென்று மாப்பிள்ளையின் மீது என்ன காதல்" அரசன் கேட்க மற்றப் பெண்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"ரிசீகர் மிகப் பெரிய முனிவர். வைத்திய சாஸ்திரத்தில் கைதேர்ந்தவர்."

"நல்லது. எதற்கு தங்கவேண்டும் என்பதற்கு இன்னும் சரியான காரணம் சொல்லவில்லையே."

"நான் கருத்தரிக்கவில்லை. என் உடம்பில் ஏதேனும் பிரச்சினை இருக்கலாம். ரிசீகரிடம் சொல்லி நமக்கு நல்ல குழந்தைகள் பெற வேண்டும் என்று நீங்கள் வேண்டிக் கொள்ள வேண்டும். நான் மட்டுமே வேண்டினால் போதாது. நீங்களும் அவரிடம் பணிந்து மரியாதையாய் பேசினால்தான் இந்த வரத்தை அவரால் தர முடியும். அவர் வரும்பொழுது இதுபோன்ற ஆட்டங்களை நீங்கள் தயவு செய்து குறைத்துக் கொள்ள வேண்டும்" பட்டமகிஷி அந்தப் பெண்களை சுட்டிக் காட்டினாள்.

"இதற்கும், அதற்கும் என்ன சம்மந்தம். இதோ இந்தப் பெண்ணுடைய அக்காள் கூட போன வருடம் என்னோடு ஆட்டம் போட்டாள். கர்ப்பமானாள். குழந்தை பெற்றாள். இப்பொழுது தங்கை ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிறாள். இவளும் கர்ப்பமாகப் போகிறாள். நீ ஏன் இது பற்றியெல்லாம் கவலைப்படுகிறாய். உன்னுடைய உடம்பில் கரு உருவாவதற்கு என்ன உண்டோ அதைச் செய் போதும். மற்ற விஷயங்களில் தலையிடாதே. மற்றவர்களைப் பார்த்து எப்பொழுது பொறாமைப் படுகிறாயோ, அப்பொழுது உடம்பு வெப்பம் அதிகமாகி விடும். எப்பொழுது உடம்பு வெப்பம் அதிகமாகிறதோ அப்பொழுது உன்னுடைய கருவுக்குள் அணுக்கள் போவது மட்டுப்படுத்தப்படும். அணுக்கள் நகர்ந்தாலும் உடற்சூடு தாங்காமல் இறந்து போகும். எனவே குளுமையாக இருக்க வேண்டுமென்றால் இங்கு வராதே. இங்கு வந்தால் நீ வெப்பம் மிகுந்தவளாய் மாறி விடுகிறாய்" என்று சொல்லிச் சிரித்தான். மற்ற பெண்களும்

சிரித்தார்கள். அவள் எழுந்து வெளியே போனாள்.

நெஞ்சு படபடத்தது. கண்களில் இருந்து கண்ணீர் கொட்டியது. உடம்பு ஆடியது. உதடு துடித்தது. எந்த ஜென்மத்தில் என்ன பாவம் செய்தேனோ இந்த ஜென்மத்தில் இப்படி ஒரு மோசமான புருஷனிடம் மிக மோசமான நிலையில் நான் வாழ்க்கைப்பட்டிருக்கிறேன்.

நல்ல புருஷன் வேண்டுமென்று ஒரு பெண் நினைப்பது தவறா. ஏன் எனக்குக் கிடைக்கவில்லை. என் மீது அன்பும், அக்கறையும் கொண்டிருந்தால் என் வயிறும் மலர்ந்திருக்காதா. வெறும் போகத்திற்கான பொருளாய் என்னை நடத்துகிற பொழுது என் மனசு திறக்காமல், மனசு திறக்காததால், வயிறும் திறக்காமல் நான் வெறுந் நிலமாக இருக்கிறேனே. கடவுளே. கடவுளே என்னை நீ சமாதானப்படுத்தக்கூடாதா.

அவள் போய் பூஜை அறையில் விழுந்தாள். அங்குள்ள அக்கினியைச் சுற்றி வலம் வந்து வழிபட்டாள். அணையாத அந்த அக்கினி நடனமாடியது. அவள் மனமும் அந்த அக்கினியைப் போலவே தவித்தது. ஆனால் நெருப்பை பார்க்கப், பார்க்க மனம் அமைதியாயிற்று.

நெருப்பை வழிபட்ட பிறகு நகர்ந்து குளக்கரைக்குப் போனாள். அங்கு போய் அமர்ந்து கொண்டாள்.

அந்த குளத்திலுள்ள தேவதைகளையும் வழிபடத் துவங்கினாள். அவள் வழிபாடு தொலை தூரத்தில் இருக்கின்ற ரிசீகருக்கு எட்டியது.

அவருக்கு நன் மனைவி இருக்கின்ற ஊருக்குப் போக வேண்டும் என்று தோன்றியது. அவர் அர்த்தத்தோடு சீடர்களைப் பார்த்தார்.

"சிறியதாய் ஒரு பயணம் மேற்கொள்வோமா" என்று கேட்டார்.

"போகலாம் ஐயா. குரு பத்தினி அவர்களைப் பார்த்து நாளாயிற்று. அவர்களைப் போய் சந்தித்து விட்டு வருவோம்" என்று சொன்னார்கள்.

அந்த சீடர்களில் முக்கியமானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு மற்றவர்களுக்கு ஆசிரமப் பணிகளைக் கொடுத்து விட்டு அவர் மெல்ல காதியின் நகரம் நோக்கி நடக்கத் துவங்கினார்.

இரவு காதியின் நகரத்தில் மழை பெய்து அந்த நகரத்தை குளுமைப்படுத்தியது. காற்று திசைமாறி வீசி நகரை சுத்தப்படுத்தியது. யானை பிளிறியது. வெள்ளை

மயில்கள் வந்து கோட்டை மேலே அமர்ந்தன. நகரை சுற்றிச்சுற்றிப் பறந்தன. குயில்கள் கூவின. காட்டுவெளியில் சுற்றிக் கொண்டிருந்த மான்கள் நகரத்துக்குள் நுழைந்து ஒவ்வொரு வீட்டு வாசலாய் முகர்ந்து பார்த்தன. மக்கள் அவைகளை விநோதமாகப் பார்த்து தானியங்கள் கொடுத்தார்கள்.

யானைகள் பிளிறின. குதிரைகள் முன்னங்கால்களை மாற்றித் தவித்து ஓடுவதற்கு தயாராக இருந்தன. பசுக்கள் அதிகம் பாலைச் சொரிந்தன.

விடியலில் நல்ல குளிர் எடுத்தது. குளிர் தாங்காமல் கணவன்மார்கள் மனைவிக்கு அருகே போய் ஒட்டிக் கொண்டார்கள். ஒட்டிக் கொண்ட கணவர்களை மனைவிகள் தடவிக் கொடுத்தார்கள். புருஷனும் மனைவியும் பேசிக் கொண்டு குழந்தைகளுக்கு அதிகம் குளிருமே என்று சொன்னார்கள். தங்கள் போர்வையை குழந்தைகள் மீது போர்த்தினார்கள். வயதானவர்களுக்கு கம்பளியைக் கொடுத்தார்கள். அங்கே எல்லோர் வீட்டிலும் ஒரு அன்புப் பிரவாகம் பொங்கி வழியலாயிற்று.

பசுக்கள் மனமுவந்து கொடுத்த பாலை குடித்த குழந்தைகள் ஆரோக்கியமாக ஆடினார்கள். கெட்டிக்காரத்தனமாகப் பேசினார்கள். உரத்த குரலில் பாடினார்கள். அதைப் பார்த்து பெற்றோர்கள் சந்தோஷப்பட்டார்கள்.

செடிகள் பெரிய பூக்களைப் பூத்தன. பெண்கள் அவற்றைப் பறித்து வைத்துக் கொண்டு விதம் விதமான அலங்காரங்களில் ஈடுபட்டார்கள். அந்த அலங்காரங்களைப் பார்த்து ஆண்கள் வியந்தார்கள். பெண்களுக்கெதிரே அமைதியான சாகசங்களைச் செய்ய முற்பட்டார்கள். அந்த சாகசங்களை கிழவர்கள் பார்த்து கைதட்டினார்கள். கிழவர்களுடைய உற்சாகம் பார்த்து படை வீரர்கள் சந்தோஷமானார்கள். காவலைத் தளர்த்தி கிழவர்களை வரவும் போகவும் அனுமதித்தார்கள். மற்ற வியாபாரிகளை அதிகம் அதட்டாமல் அன்போடும், சகோதரப் பாசத்தோடும் நடந்து கொண்டார்கள்.

பகல்நேர வெய்யிலும் அதிகமின்றி மெல்ல கூதற்காற்று அடித்ததால் அரசன் ஒரு தனிப்படை ஏற்படுத்தி அங்கங்கே குளிருக்காக கணப்புகள் போடச் சொன்னான். அரசாங்கம் போட்ட கணப்புகளில் ஜனங்கள் உட்கார்ந்து கொண்டு அரசனையும், இறைவனையும் வாழ்த்திப் பாடினார்கள்.

ரிசீகர் வரும் செய்தி அரசன் காதிக்கு முன்கூட்டியே

சொல்லப்பட்டது. அரசன் காதி உத்தரவிடும் முன்பே மக்கள் ரிசீகரின் வருகைக்காக நகரத்தைச் சுத்தம் செய்தார்கள். தோரணங்கள் கட்டினார்கள். வரவேற்பதற்கு வாசலில் கோலங்கள் இட்டார்கள்.

மக்களாகவே நகரத்தை அலங்கரிக்க முன் வந்தது பார்த்து அரசன் காதி லேசாகப் பொறாமைப்பட்டான். ஆயினும் தன்னுடைய கட்டளையால்தான் இவை நடைபெறுகின்றன என்று சொல்வதற்கு விரும்பினான். தன்னுடைய அதிகாரிகளைக் கூப்பிட்டு அங்கங்கே பந்தல் நிறுவும்படி செய்தான். மக்களுக்கு புதிய துணிகள் கொடுக்க ஏற்பாடு செய்தான். நிறைய எக்காளங்களையும் முரசுகளையும் அரண்மனை வாசலில் நிற்க வைத்தான். நடனப் பெண்களை முன்னிறுத்தினான். ரிசீகர் கோட்டையை நெருங்குகிறவரை நடனமாடுங்கள் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

பெண்கள் நடனமாடுவதை மக்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ரிசீகர் வந்து சேரும் வரை எக்காளங்கள் முழங்க வேண்டும் என்ற உத்தரவும் இருந்தது.

ரிசீகர் தன்னுடைய மாணவர்கள் அறுபது பேரோடும் எந்த தனித்த தோற்றமுமின்றி கும்பலோடு கும்பலாய் நடந்து வந்தார். ஏழுநாள் நடை பயணத்தில் அவர்கள் குருவோடு மிகவும் ஸ்நேகமாகி உரிமையுள்ள நட்பு அதிகரித்து அவர் தோள் மீது கைப்போட்டுக் கொண்டு வரும் வகையில் நெருங்கி விட்டார்கள்.

வெறும் எந்த சம்பிரதாயங்களும் இன்றி அவர்களை சந்தோஷப்படுத்த அவர்களுக்கு இணையாக ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும் வந்த கும்பலில் ரிசீகர் எங்கிருக்கிறார் என்று அரண்மனையில் உள்ளவர்களுக்கு கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு அந்தணர் கூட்டம் மட்டுமே வந்து நிற்கிறது என்று தெரிந்ததே தவிர அதில் குரு யார், தலைவர் யார், யார் ரிசீகர் என்று எவருக்கும் தெரியவில்லை.

எனவே இந்த அந்தணக் கூட்டத்தின் வருகைக்காக எக்காளம் முழங்குவதா வேண்டாமா. எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். நடனம் ஆடுவதா கூடாதா பெண்கள் திகைத்துப் போயிருந்தார்கள். இவர்களைப் பார்த்து ஜெய விஜயீபவ என்று கூவுவதா, இல்லை வெறுமனே கரம் கூப்புவதா என்று மக்கள் மௌனித்திருந்தார்கள்.

அந்த அந்தணர் கூட்டம் உள்ளே நுழைந்தது.

மக்கள் எந்த வரவேற்புமின்றி அந்தக் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். உள்ளுக்குள் நுழைந்த அந்தணர் கூட்டம் மக்களின் திகைப்பை புன்முறுவலோடு ஏற்றுக் கொண்டது.

படியின் உச்சியில் நின்றிருந்த சத்தியவதி ஓடிப்போய் தன் புருஷனைப் பார்த்து அவர் காலில் விழுந்து நமஸ்கரித்தாள். அவர்கள் சகலரும் மங்களம் உண்டாகட்டும் என்கிற மந்திரத்தை சொல்லத் துவங்கினார்கள்.

"இந்த நாடு செழிக்கட்டும். இந்த மன்னன் நன்கு வாழட்டும். இங்குள்ள மக்கள் சமாதானமாக இருக்கட்டும். இங்குள்ள மரங்கள் அதிகம் பூக்களையும், கனிகளையும் தரட்டும். இங்குள்ள பறவைகள் கானம் இசைக்கட்டும். இங்குள்ள மீன்கள் துள்ளி விளையாடட்டும். இங்கு காற்றும், நீரும் சுத்தமாக இருக்கட்டும். கதிரவன் தன் வேலையை செய்யட்டும்" என்றெல்லாம் அவர்கள் ஆசீர்வாதம் செய்ய, மக்கள் எக்காளமிட படை வீரர்கள் விழித்துக் கொண்டு தங்கள் வேலைகளை செய்தார்கள்.

கோஷம் வானைப் பிளந்தது. வாத்தியங்கள் அதிரடியாய் முழங்கின. அந்தணர்கள் தங்களுக்குள் சிரித்துக் கொண்டார்கள்.

அரசன் காதி. ஒரு சிறு தங்க நகை கூட இல்லாமல் வெறுமே துளசி மாலையுடன் சீடர்களோடு சீடராக எந்தவித முக்கியத்துவமும் இல்லாமல் நடந்து வருகின்ற தன்னுடைய மாப்பிள்ளையைப் பார்த்து கரம் கூப்பினான். வியந்தான். காலில் விழுந்து வணங்குவதா அல்லது கை கூப்பி நிற்பதா என்று தடுமாறினான்.

நிற்பது உங்கள் மாப்பிள்ளை மட்டுமல்ல" ரிசீகர் என்ற முனிவர். எனவே நீங்கள் காலில் விழுந்து வணங்க வேண்டியதே முறை என்று மந்திரிகள் சொல்ல, அரசன் காலில் விழுந்து வணங்கினான். ஏனோ மனது வலித்தது.

சத்தியவதி புருஷனை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குள் போனாள். தனியறையில் அழைத்துப்போய் தன் புருஷனை ஆரத் தழுவிக் கொண்டாள். அவரும் பிரியத்தோடு மனைவியை அணைத்துக் கொண்டார்.

"உங்களிடம் ஒரு விண்ணப்பத்தை வைக்கப் போகிறேன்."

"என்ன அது" கனிவோடு ரிசீகர் கேட்டார்.

"என் தாயார் பிள்ளைப்பேறு இல்லாமல் தவிக்கிறாள்."

"இல்லையே, உன்னைப் பெற்றிருக்கிறாரே" ரிசீகர் பதில் சொன்னார்.

"நான் சொல்வது மகன் வேண்டுமென்று ஆசைப்படுகிறார். அவருக்கு மறுபடியும் கரு உருவாகவேயில்லை. எனக்குப் பிறந்தது பெண் என்பதால் நான் இன்னும் என்னை மலடாகவே கருதுகிறேன். என் மனதுக்குள் மலர்ச்சி ஏற்படவேயில்லை. எனவே எனக்கு மகன் பிறக்கும் வண்ணம் என் உடல் நிலையை தயார் செய்ய வேண்டும் என்று என்னிடம் வேண்டிக் கொண்டாள். நான் உங்களிடம் அதை சொல்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன். அது தவிர இன்னொரு விண்ணப்பமும் இருக்கிறது."

"என்ன, சொல் சத்தியவதி" என்று மறுபடியும் கனிவோடு ரிசீகர் கேட்டார்.

"இங்கு வந்து 'அம்மா' என்கின்ற ஏக்கத்தைப் பார்த்து விட்டு எனக்கும் நினைவுக்கு வந்து விட்டது. நமக்கும் குழந்தைகள் இல்லையே. நானும் ஒரு குழந்தைக்கு தாயாக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். உங்கள் குழந்தையை வயிற்றில் சுமக்க வேண்டும் என்று விரும்புகின்றேன். எனவே எனக்கு குழந்தை பாக்கியத்தை தந்தருள வேண்டும்" என்று கைகூப்பி வேண்டினாள்.

"நல்லது முறையாகக் கேட்கிறபொழுது முறையாக செய்கிறேன்" என்று அவளை தடவிக் கொடுத்து விட்டு மாலை நேர பூஜைக்கு வெளியேறினார்.

சீடர்களும் குருவும் அரண்மனைத் தோட்டத்தில் அமர்ந்து மாலைநேர ஜபதபங்களை செய்து முடித்தார்கள்.

ரிசீகர் இரண்டு சிறிய மண்சட்டிகளில் நர்மதை ஜலத்தை விட்டு அதில் மூலிகைகளைப் போட்டு கொதிக்க வைத்து துணியால் மூடி அந்தத் துணியின் மீது தர்பைகளை கோபுரம் போல் எழுப்பினார். இரண்டு கும்பங்கள் போல தர்பைக்கட்டுக்கள் அந்த மண்பாத்திரத்தை மூடிக் கொண்டன.

இரண்டையும் எதிரெதிர் திக்கில் வைத்து தன்னுடன் வந்த மாணவர்களை இரண்டாகப் பிரித்தார். இருவருக்கும் வெவ்வேறு விதமான மந்திரங்களை உபதேசித்தார். இடைவிடாது இந்த மண்பாத்திரத்தைச் சுற்றி அமர்ந்து ஆறாறு பேராக இந்த மந்திரங்களை முறை வைத்து சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். தர்பைகளில் இந்த மந்திரங்கள் பட்டு இந்தத் துணியில் விழுந்து அதிலிருந்து உள்ளுக்குள் இருக்கின்ற மூலிகை ரசத்தில் இந்த ஒலிகள் இறங்கும். அப்பொழுது இந்த மூலிகை ரசம் மாற்றப்படும்.

சொல்லுகின்ற மந்திரங்களின் தன்மைக்கு ஏற்ப இந்த மூலிகை ரசத்திற்குள் சில வித்தியாசங்கள் ஏற்படும்.

இந்த மூலிகை ரசத்தில் ஒன்றை அரசன் காதியின் மனைவியும், என் மாமியாருமான பெண்மணிக்குத் தரப்போகிறேன். இன்னொன்றை என் மனைவி சத்தியவதிக்குக் கொடுக்கப் போகின்றேன். அவர்களுக்கு குழந்தை பிறக்கும் வண்ணம் இந்த மந்திரங்கள் உதவும். எனவே கவனத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று சொல்ல சீடர்கள் கை கூப்பினார்கள்.

குருவின் சொல்லை ஏற்று பணிவாக சுற்றி உட்கார்ந்து மந்திரம் சொல்லத் துவங்கினார்கள்.

மறுநாள் காலை அரசவைக்கு அழைத்து ரிசீகருக்கு தகுந்த மரியாதைகள் செய்து அமர வைத்து அவருக்கு நிலையான ஆசனம் போட்டு அமர்ந்து, அரசன் தன் மனைவியோடு எழுந்து நின்று தன் வேண்டுகோளைச் சொன்னான்.

"தனக்கு பிள்ளைவரம் வேண்டும்" என்று கேட்டான்.

நிச்சயம் உதவுவதாக ரிசீகர் கை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

அரசன் திரும்பி மனைவியைப் பார்த்தான். மனைவி சந்தோஷமானாள். தன் மகளின் கணவனை நமஸ்கரித்து விட்டு அந்தப்புரம் திரும்பினாள்.

என்ன சாத்வீகம், என்ன அமைதி, என்ன கம்பீரம், என்ன கனிவு, எவ்வளவு களை அந்த முகத்தில் என்று வியந்தாள். மாப்பிள்ளையையே மனதில் நினைத்துக் கொண்டிருந்தாள்.

சத்தியவதிக்கு பெருமை தாங்கவில்லை. முன்னும் பின்னும் அலைந்து புருஷனுக்கு உதவிகள் செய்தாள். அவளைச் சீராட்டினான். அவர் கூட்டி வந்த அந்தண இளைஞர்களுக்கு வேண்டிய உதவிகளை அதிகாரிகள் வைத்து செய்யச் சொன்னான். அவர்களின் தேவை மிகக் குறைவாகவே இருந்தன. ஆனாலும் அவற்றைச் செய்வதற்கு ஆட்கள் எப்பொழுதும் தயாராக இருந்தார்கள்.

இடைவிடாத மந்திர ஜபத்தால் அந்த நந்தவனம் பொலிவாயிற்று. இரண்டு மண்பாண்டங்களிலும் உள்ள அமிர்த சக்திகள் வலுவேறின.

காலையில் தர்ப்பைக் கட்டுகளிலிருந்து அந்த மண்பாண்டங்களை பிரித்து எடுத்து துணியை நீக்கி

முகர்ந்து பார்த்து விட்டு மிகுந்த சந்தோஷத்துடன் அவைகளை பூஜையறையில் கொண்டு போய் ரிசீகர் வைக்கச் சொன்னார்.

"இதோ இந்த வெள்ளை நூல் கட்டியிருப்பது உனக்கு இந்த சிகப்பு நூல் படர்ந்திருப்பது உன் தாய்க்கு இவை இரண்டும் உங்களால் அருந்தப்பட வேண்டும். வெகு நிச்சயமாய் உத்தமமான குழந்தைகள் பிறக்கும். நீ புறப்படத்தயாராக இரு. இன்று பிற்பகலில் நாம் நமது ஆசிரமத்திற்கு கிளம்புகிறோம்" என்று சொன்னார்.

அமிர்தம் தயாரான செய்தி தாய்க்கு சொல்லப்பட்டது.

"நல்லது நான் போய் குளித்து விட்டு வருகிறேன்" என்று அவசரமாக ஓடிப்போய் தாய் நீராடி விட்டு வந்தாள். மகள் அங்கேயே இருப்பதைப் பார்த்தாள்.

"நீ நீராடவில்லையா" என்று கேட்டாள்.

"இங்கு யாரேனும் காவல் இருக்க வேண்டும். இதை எவரேனும் கவிழ்த்து விட்டால் என்ன செய்வது. அதனால் நான் இங்கு காவல் இருந்தேன் நான் போய் நீராடி விட்டு வருகிறேன். பிறகு இருவரும் சேர்ந்து அவரவர்களுக்குண்டான அமிர்தத்தை அருந்தலாம்" என்று சொன்னாள்.

வெளியேறினாள். அரண்மனைக் குளத்தில் போய் நீராடத் துவங்கினாள்.

தலையை உயர்த்திக் கொண்டே இரண்டு பாத்திரங்களையும் பார்த்த சத்தியவதியின் தாய்க்கு திடீரென்று ஒரு எண்ணம் உதித்தது.

என்ன இருந்தாலும் ரிசீகருக்கு மனைவியின் மீது பிரியம் அதிகம் இருக்குமல்லவா. தன் மனைவிக்கு கொடுக்க வேண்டிய அமிர்தத்தை இன்னும் உயர்த்தியாக கொடுக்க வேண்டும் என்று இருக்கலாம் அல்லவா. நான் மாமியார்தானே. ஒரு தேசத்தின் அரசிதானே. என் மகள் சொன்னதால்தானே எனக்கு இந்த உதவி. எனவே என்னுடையது ஒரு மாற்று குறைவாக இருக்குமல்லவா, எனவே நான் மகளுக்குக் கொடுக்க வேண்டியதை அருந்தி விட்டு எனக்குக் கொடுக்க வேண்டியதை மகளுக்குக் கொடுத்தால் என்ன என்று யோசித்தாள்.

சட்டென்று வெள்ளை நூல் போட்டிருந்த, மகள் குடிக்க வேண்டிய அமிர்தத்தை மெல்ல வாய் வைத்து தான் பருகினாள். மிச்சம் மீதி இல்லாமல் குடித்து விட்டு பாத்திரத்தை கீழே வைத்தாள். மகள் வந்ததும் தான் அவளுக்கு வைத்ததை குடித்ததைச் சொன்னாள்.

மகள் சிரித்தாள்.

"இது விதி நான் என்ன செய்ய. ஆனாலும் நடந்ததை புருஷனிடம் சொல்லப் போகிறேன்" என்று சொல்ல, "இதைக் குடித்து விட்டுச் சொல்லக்கூடாதா" என்று தாய் கட்டளையிட்டாள்.

"இல்லை. சொல்லி விட்டு வந்து குடிக்கிறேன்."

"இல்லை. முகூர்த்த நேரம் தவறிப் போய் விடுமே. நீ தொலைவில் உள்ள நதிக்கரைக்குப் போய் அங்கே உன் புருஷனைப் பார்த்து இதைச் சொல்லிவிட்டு வருவதற்குள் நேரமாகி விடுமே. எனவே இதைக் குடித்து விடு" என்று அவசரப்படுத்தினாள்.

மகள் மெல்ல தாய்க்கு வைத்திருந்த அமிர்த கலசத்தை கையில் ஏந்திக் குடித்தாள். புருஷனிடம் போனாள் நடந்ததைச் சொன்னாள்.

ரிசீகர் வருத்தத்தோடு சிரித்தார்.

"இது தவறான புத்தி. கேவலமான நடத்தை. அந்தணனுக்குண்டான ஒரு குணத்தை வெள்ளை நூல் கட்டிய கலசத்திலும். க்ஷத்திரியனுக்குண்டான குணத்தை சிகப்பு நூல் கட்டிய கலசத்திலும் நான் ஏற்றி வைத்தேன். உன் தாய்க்கு க்ஷத்திரிய குணமுள்ள ஒரு குழந்தை பிறக்க வேண்டுமென்று விரும்பி அதை அவ்விதம் உற்பத்தி செய்தேன். உனக்கு அந்தணர் குணமுள்ள குழந்தை பிறக்க வேண்டுமென்று மந்திரங்கள் ஜபிக்கச் சொன்னேன். இப்பொழுது மாற்றி உண்டு விட்டீர்கள். இது இறைவனுடைய விருப்பம். ஆனாலும் எனக்கு உன் தாயின் செய்கை கோபமாக இருக்கிறது.

நமக்கு க்ஷத்திரிய குணமுள்ள கோபமான, ஆத்திரமான ஒரு அந்தணன் பிறப்பான். உன் தாய்க்கு பிராமண குணத்தோடு ஒரு அரசன் பிறப்பான். இது தேவையற்ற கலப்பு. அநாவசியமான செயல். உன் தாயின் கெட்ட புத்தியால் இது நிகழ்ந்து விட்டது. சரி. வேறு வழியில்லை. அனுபவித்துத் தீருவோம்" என்று சொல்ல, சத்தியவதி அவர் காலில் விழுந்து வணங்கினாள்.

"எனக்கு கோபமுள்ள, ஆத்திரமுள்ள மகன் வேண்டாம். நான் அப்படிப்பட்டவனுக்கு தாயாகி ஊர் தூற்றும்படி நடப்பதற்கு விருப்பமில்லை. எனக்கு ஒரு நல்ல மகன் நீங்கள் கொடுக்க வேண்டும். எனக்குப் பிறக்கப் போகும் பேரன் வேண்டுமென்றால் கோபமுள்ளவனாக இருக்கட்டும். ஆனால் ஒரு நல்ல மகன் வெகு நிச்சயமாக வேண்டும். நல்ல புருஷனை அடைந்து சந்தோஷமாக இருக்கின்ற நான் நல்ல

மகனையும் அடைய வேண்டும் தயவு செய்து என்னைக் கை விட்டு விடாதீர்கள். நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை என் தாய் செய்த குற்றத்திற்காக என்னைத் தண்டித்து விடாதீர்கள். நான் என் நெறியில் இருந்து சிறிதளவும் பிறழவில்லை. எனவே எனக்கு மோசமான பிள்ளையைக் கொடுத்து விடாதீர்கள்" என்று கதறினாள்.

ரிசீகர் மனமிரங்கினார்.

"மகளோ, பேரனோ எனக்கு எந்த வித்தியாசமும் இல்லை. ஆனாலும் ஒரு தாயின் அலறல் எனக்குப் புரிகிறது. நல்ல கணவனை அடைந்தவள் நல்ல மகனையும் தர வேண்டும் என்று ஆசைப்படுவது நியாயம். உனக்கு மிக நல்ல ஒரு மகன் பிறப்பான். அந்த மகனுக்குப் பிறக்கின்ற கடைசி மகன் போர்க்குணம் உள்ளவனாக இருப்பான். அந்தணனாக இருந்தாலும் ஒரு க்ஷத்திரியன் போல ஆவேசமாகப் போரிடுவான். உன் தாய்க்கு க்ஷத்திரிய அம்சங்களோடு பிறந்த ஒரு மகன் அந்தணர் குணத்தோடு வைராக்கியத்தோடு வாழ்ந்து காட்டுவான். கடவுள் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டார்" என்று சொன்னார்.

மறுபடி இந்த அரண்மனைக்கு நீயும், நானும் வரப்போவதில்லை. எனவே வா. போகலாம். என்று சொல்லி அரசனிடமும், அரசியிடமும் விடைபெறாமல் வெளியேறினார்.

அந்த தேசம் களையிழந்தது.

அந்த அரசிக்கு விஸ்வாமித்திரர் என்கிற ஒரு மகன் பிறந்தார். கௌசிகர் என்கிற பெயரோடு பிறந்த அவர் தன்னுடைய நாற்பதாவது வயதில் அந்தணர் குணத்தோடு வைராக்கியம் அதிகரிக்கும் குணத்தோடு, தவம் செய்யும் குணத்தோடு, தவம் செய்து சகல சித்திகளையும் அடையும் வெறியோடு வாழ்ந்தார்.

சத்தியவதிக்கு ஜமதக்கினி என்கிற மென்மையான, இனிமையான, ஞானம் மிக்க மகன் பிறந்தார். அந்த ஜமதக்கினியின் நாலாவது மகனாக கோபம் மிக்க, ரௌத்திரம் மிக்க, ஆற்றல் மிக்க, ஆவேசம் மிக்க ஒரு மகன் பிறந்தார்.

அவருக்குப் பெயர் பரசுராமர்.

3

காட்டுக்கு அருகே இருந்த அந்த பரந்த புல்வெளியில் ஒரு குடுமி நாரையும், கொண்டை மயிலும் மெல்ல நடந்து தத்தைகளையும், மரவட்டைகளையும், மண்

புழுக்களையும் கொத்தித் தின்று கொண்டிருந்தன. இயற்கையை உன்னிப்பாக கவனித்து வளர்ந்து வந்த அந்தப் பறவைகள், மனிதர்களையும் கவனமாய் பார்த்து வந்தன.

"இனி என்ன ஆகும்" கவலையோடு மயில் குடுமி நாரையைப் பார்த்துக் கேட்டது.

குடுமி நாரை நீளமான மூக்கை அகலமாக விரித்து க்வாக் என்று சிரித்தது.

"ஏன் சிரிக்கிறீர்கள்."

"ஒரு பெண்மணி தன் மகளுக்காக வைத்திருந்த அமிர்த கலசத்தை தான் அருந்தியும், தான் அருந்த வேண்டிய அமிர்த கலசத்தை தன் மகளுக்குக் கொடுத்தும் முடித்து விட்டாள்.

இது பெரிய தவறு. உலகத்தை கலக்கப்போகிற தவறு. இந்த பாரத கண்டத்தை அதிரடிக்கப் போகிற தவறு."

"இது ஏன் நடந்தது. இனி என்ன நடக்கும். இரண்டும் உங்களால் சொல்ல முடியுமா" என்று ஆவலோடு மயில் கேட்டது.

"யோசித்துப் பார்த்தால் அந்தப் பெண்மணி மீது ஒரு தவறும் இல்லை. தனக்கு புருஷன் ஆதரவாக இல்லை. எனவே ஒரு மகன் தனக்கு ஆதரவாக இருக்கட்டுமே என்று அவள் நினைத்திருக்கிறாள். மாப்பிள்ளையிடம் வரம் கேட்டிருக்கிறாள் ஆனால் அந்த மருமகன் தன் மகளுக்கும் சேர்த்து ஒரு அமிர்த கலசம் தயார் செய்வதைக் கண்டு அதிசயித்திருக்கிறாள். மகளுக்கு ஒன்று. தனக்கு ஒன்று என்று இரண்டு கலசங்கள் இருப்பதைப் பார்த்து தன் மகளுக்கு தன் மாப்பிள்ளை தயார் செய்திருப்பது மிக உயர்ந்ததாகத்தானே இருக்கும் எனவே உயர்ந்ததான பொருளை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டிருக்கிறாள்.

உத்தமமான கணவன் கிடைக்கவில்லை. உயர்வான பிள்ளை கிடைக்கட்டுமே என்று ஏங்கியிருக்கிறாள். எந்தக் குலத்தில் எந்த தேசத்தில் பெண்கள் அடிமைப்பட்டுக் கிடக்கிறார்களோ, அவலப்பட்டுக் கிடக்கிறார்களோ அந்த இடத்தில் பெண்கள் அன்புக்கு ஏங்கும் தன்மை அதிகமாகி விடுகிறது. பெண்கள் அன்புக்கு ஏங்கி அழுகிறபொழுது இயற்கையில் மாற்றம் ஏற்படுகிறது.

எந்த குலத்தில், எந்த தேசத்தில் பெண்கள், இம்சிக்கப்படுகிறார்களோ அந்த குலத்திலிருந்தே மனிதர்களை, அரக்கர்களை அழிக்கின்ற மிகப் பெரிய

ஆண் தோன்றி விடுகிறான். பெண்களை பாதுகாக்காத சமூகம் அழிக்கப்படும் என்பது காலாகாலமாக இருந்து வந்த நியதி.

இது க்ஷத்திரியர்கள் பெண்களை இம்சிக்கின்ற காலம். தன்னுடைய வலிவால், படை பலத்தால், வெற்றிகளால் மமதை கொண்டு, அந்த வெற்றியின் மமதையை தன்னுடைய, தனக்கு அருகே இருக்கின்ற பெண்களிடம் காட்டுகின்ற போக்கு க்ஷத்திரியர்களுக்கு வந்து விட்டது. அவர்களுடைய காலம் முடிந்து விட்டது. இனி அழிவு ஆரம்பிக்க வேண்டியதுதான் பாக்கி."

"இந்த அழிவு ஏற்படாமல் தடுக்க முடியாதா."

"முடியாது. வளர்ந்தது எதுவும் அழியும். இதுவும் இயற்கை நியதி.

மிகப் பெரிய அளவில் ஒரு மதம், ஒரு கலாச்சாரம், ஒரு தேசம், வலிவாக வளர்கின்றதென்றால் அது அழிவை நோக்கி போய்க்கொண்டிருக்கின்றது என்று அர்த்தம். ஒருவருக்கு வயதாகிக் கொண்டிருந்தால் மரணம் நெருங்குகிறது என்பது எவ்வளவு இயல்போ அதே போல, ஒரு மதம் மிகக் கனமாக, பரவலாக, அதிக மக்கள் தொகை கொண்டதாக வளர்ந்தால் அதற்கு அழிவு நிச்சயம். இது இயற்கை. இந்த சுழற்சியிலிருந்து எதுவும் தப்பித்துக் கொண்டதில்லை. என்றென்றும் தப்பித்துக் கொண்டதில்லை. இதை ஒரு உதாரணத்துடன் சொல்கிறேன்" குடுமி நாரை நடை போட்டது.

"அதோ அந்த வனம் பாருங்கள். நீங்களும், நானும் மேலே பறக்க முடியுமே தவிர அந்த வனத்தின் தரையில் இறங்க முடியுமா. அத்தனை அடர்த்தியாக வனம் வளர்ந்திருக்கிறது. அந்த வனத்தை ஊடறுத்து எவருமே போக முடியவில்லை. விஷப்பாம்புகளும், பூச்சிகளும், மிருகங்களும் அதில் மிகச் சௌகரியமாக வசிக்கின்றன. அங்கிருந்து கிராமங்களுக்கு வந்து மக்களுக்குத் தொந்திரவு கொடுக்கின்றன."

"ஏன், கிராமங்களுக்கு அவை வர வேண்டும்."

"அங்கு, அந்த இடத்தில் ஜனத்தொகை பல்கிப் பெருகிப் போனதால் வேறு வழியில்லாமல் அவைகள் உணவுக்காகவும், வேறு உபத்திரவங்களுக்காகவும், காடு விட்டு வெளியே வர வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. அப்படி வெளியே வரும்பொழுது அங்குள்ள அந்நியர்களிடம் சிக்கிக் கொண்டு அடிபடுகிறது. அப்படி அந்நியர்களிடம் அடிபட்டதால் கோபமடைந்த அதன் உறவுகள் அந்நியர்கள் மீது படையெடுக்கின்றன.

அந்நியர்கள் படையெடுத்து வருவது தெரிந்த பிறகு அந்த அந்நியக்கூட்டம் அந்தப் பாம்புகளை நிறுத்த ஏற்பாடு செய்கிறது. பாம்புக்கு மனிதர்கள் அந்நியமானவர்கள் அல்லவா. இந்த மனிதர்கள் இந்தப் பாம்புக் கூட்டங்களை தடுத்த நிறுத்த ஆயத்தமாகி விட்டார்கள்.

காட்டை வெட்டி மானாது என்று சொல்லி எரித்து விடப்போகிறார்கள். நெருப்பால் சூழப்பட்ட காடு எரிந்து சாம்பலாகும். எரிந்து சாம்பலான இடம் திடலாகும். திடலானது வயலாகும். வயலானது கிராமமாகும். கிராமமானது நகரமாகும். நகரமானது மிகப் பெரிய கோட்டைக் கட்டிடங்களுடன் அரச வீற்றிருக்கின்ற மிகப் பெரிய அரண்மனையாகும். இங்கு காடு இருந்தது என்று சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள்.

மிகப் பெரிய வயல்வெளியும், கிராமங்களும் தோன்றியதால் ஜனக்கூட்டம் அதிகமாகும். ஒரு ஆண் பல பெண்களை மணந்து கொள்வான். பல பிள்ளைகள் பெறுவான். கூட்டங்கள் பெருகும். மக்கள் அதிகரிப்பார்கள். இது என்னுடைய கிராமம், என்னுடைய நகரம், என்று பிரித்துக் கொள்வார்கள். எதிரெதிராக முறைத்துக் கொண்டு நிற்பார்கள். சண்டை போடுவார்கள். இன்னும் அதிகம் குழந்தைகள் தேவை என்று இடைவிடாது பிள்ளை பெறுவார்கள். ஜனக் கூட்டத்தை அதிகப்படுத்துவார்கள். அளவாக பிள்ளைகள் பெற்று வாழ வேண்டும் என்ற விஷயத்தை அறிவீனம் என்று சொல்வார்கள். ஜனத் தொகை அதிகரிப்பார்கள். அதிகரித்து வம்புச் சண்டைக்கு போவார்கள். வம்புச் சண்டைக்கு போய் அடிபடுவார்கள். அழிவார்கள். ஒரு இனமே முற்றிலுமாய் அழியும். இதற்குக் காரணம் காடு அழித்தது.

மனிதர்கள் அழிய மறுபடியும் அந்த இடம் புல் பூண்டுகள் முளைத்துக் காடாகும். செடிகள் மரங்களாகும். மரங்கள் பெரிய விருட்சங்களாகும். மறுபடியும் ஒரு அடர்த்தியான காடு ஒரு நூற்றாண்டில் உருவாகி விடும். மறுபடியும் அங்கு விஷ ஜந்துக்கள் குடியேறும்.

இது இடையறாத சுழற்சி. இதுதான் உலகம். இம்மாதிரி பல முறைகள், பல நூறு முறைகள் நடந்தேறி விட்டன. நமக்குத்தான் கணக்கு தெரியவில்லை. இதை உற்றுப் பார்க்கத் தெரியவில்லை. நேற்று, இன்று, நாளை என்று மிகச் சிறிய வட்டத்தில் நாம் உழன்று கொண்டிருக்கிறோம். நம் வாழ்நாளை வைத்து இந்த உலகத்தின் அசைவுகளை கணக்கிட்டுக்

கொண்டிருக்கிறோம்.

இயற்கையின் அசைவு மிக மிக நிதானமானது. நம்முடைய அசைவுகளோடு அதை ஒப்பிட்டு பார்க்கலாகாது. இயற்கை எப்படி அசைகிறது என்பதை உற்றுப் பார்க்க, ஒருவர் உள்ளுக்குள் மிக நிதானமாக வேண்டும்" என்று நாரை சொல்லியது.

மயில் எனக்குப் புரிகிறது என்று தலையசைத்தது.

"க்ஷத்திரியர்கள் அழிவுக்கும் இந்தக் காட்டின் அழிவுக்கும் என்ன சம்பந்தம்" மயில் நாரையைப் பார்த்து வியப்போடு கேட்டது. "நீங்கள் சொன்னது வெவ்வேறு விஷயங்கள் போல் இருக்கிறதே" என்று அதிசயத்தோடு அகவியது.

"பலமுறை இந்தக் காட்டிற்கு மேலே பறந்திருக்கிறீர்களே. காட்டிற்கு நடுவே இருக்கிற புல்திட்டில் யார் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா."

"தெரியும். வசிஷ்டர் இருக்கிறார். தனது ஆசிரமத்தில் சீடர்களோடு இடையறாது ஜபம் செய்து கொண்டிருக்கிறார். அந்த இடம் குளுமையானதாகவும், அதிர்வுகள் நிரம்பியதாகவும் இருக்கிறது."

"ஆமாம். அந்த இடம் நோக்கி வடக்குப் பக்கத்தில் வாழ்கின்ற கார்த்த வீர்ய அர்ச்சுனன் என்கிற அரசன் வரப் போகிறான். அவனுடைய மாகிஷ்மதி நகரத்தில் படை வீரர்கள் அதிகம் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். குடித்து கும்மாளமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் படை வீரர்களை பயன்படுத்துவதற்காகவே அவன் காடு நோக்கிப்போகப் போகிறான்.

எப்பொழுது வாலிபர்களும், வீரர்களும் பெருத்துப் போய் ஒரு கூட்டத்தில் அலைகிறார்களோ அங்கு யுத்தம் வெகு நிச்சயம்.

அதோ தொலைவில் மெல்லிய தூசி கிளம்புகிறது. அவன் படைகள் காடுநோக்கி நகரத் துவங்கி விட்டது.

"வசிஷ்டரை கொல்லுவதா அவன் வேலை."

"இல்லை. வசிஷ்டர் அங்கு இருக்கிறார் என்றே அவனுக்குத் தெரியாது. படைகளை பயன்படுத்த வேண்டும் என்ற கட்டாயத்திற்கு அவன் ஆளாகி வேறு வழியில்லாமல் அடர்ந்த காடுகள் நோக்கிப் படைகளை நடத்துகிறான். காடுகளுக்கு ஊடறுத்து போகும்படி படைகளை கட்டளையிட்டுப் போகிறான்.

ஆனால் இந்தக் காடுகள் மிக வலுவானவை. அடர்த்தியாக வளர்ந்தவை. நெருக்கமான மரங்களைக் கொண்டவை. வெகு காலம் மழையிலும், வெய்யிலிலும் ஊறி ஊறி கடினமாய் திருகலானவை. மிகப் பெரிதாய் அகன்று, வளர்ந்து கிளைத்தலில் சிலிர்ப்பவை. இந்தக் காட்டின் கர்வத்தை அடக்க மனிதர்கள் வந்து விட்டார்கள். மனிதர்களின் கர்வம் வேறு விதமாக அடக்கப்படும்."

"ஏதேனும் ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா. படையெடுப்பதற்கு. படை வீரர்களை நகர்த்துவதற்கு."

"ஆமாம் இருக்கிறது. காடுகள் ஊடே இருக்கிற விஷப்பூச்சிகளும், விலங்குகளும் கிராமத்து மக்களையும் பயிர்களையும் நாசம் செய்கிறது என்கிற ஒரே ஒரு கோரிக்கையை வைத்து அவன் பெரும்படை நகர்ந்து கொண்டிருக்கிறது. காட்டிலுள்ள விலங்குகளை வேட்டையாட உள்ளே நுழைய முயற்சிக்கப் போகிறது. காட்டின் ஒரு சிறிய பகுதி கூட. அதனால் கைப்பற்ற முடியாது. எனவே."

"எனவே.." மயில் ஆவலோடு கேட்டது.

"காட்டிற்கு தீ வைக்கப் போகிறார்கள். காடு பற்றி எரியப் போகிறது."

"ஐயோ... அப்பொழுது வசிஷ்டர் ஆசிரமம் என்ன ஆகும்."

"அங்கு தான் விதி தன் வேலையைத் துவங்கும்" நாரை சட்டென்று பறந்து மேலே போயிற்று.

மயில் பறந்து போகின்ற நாரையையே வியப்போடு பார்த்தது. காடு இருந்த திசைக்கு எதிர்த்திசையில் போய் அமர்ந்து கொண்டது.

4

கார்த்த வீர்ய அர்ச்சுனனுக்கு அவனுடைய படைவீரர்கள் வேடிக்கைக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

உரித்த தேங்காய்களை தரையில் பரப்பி அதன் மீது பலகை போட்டு ஒருவன் நடந்து போனான். அந்த வீரன் நடந்து போக கீழே உள்ள அத்தனை தேங்காய்களும் அவன் கனம் தாங்காமல் உடைந்து சிதறின. ஒரு வீரன் இரும்பை வளைத்தான். இன்னொரு வீரன் முஷ்டிகளால் பாறையை உடைத்தான். இன்னொரு வீரன் உயர்ந்து வளர்ந்த மரத்தை ஓங்கி உதைத்து சாய்த்தான். இன்னொரு வீரன் அவன் மீது அம்பெய்யச் சொல்லி அவைகள் வருகிறபொழுது தன்னுடைய கைகளால்

அம்புகளைப் பிடித்து நிறுத்தினான்.

கார்த்த வீர்ய அர்ச்சுனனுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. மிகுந்த குதூகலத்தோடு அந்த வீரர்கள் எதிர்பார்த்ததை விட அதிகமான மரியாதையும் சன்மானமும் அந்த வீரர்களுக்குத் தந்தான். வெறுமே சன்மானம் கொடுத்ததோடு இல்லாமல் அவர்களைத் தழுவிக் கொண்டு "எனக்கு இது போதாது. இன்னும் தீரமான காரியங்களை நீங்கள் செய்ய வேண்டும். அதை நான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன்" என்று சொன்னான்.

மன்னர் தரையிறங்கி தழுவிக் கொண்டதும் அந்த வீரர்கள் தலைகால் புரியாமல் அந்த அன்பில் தவித்துப் போனார்கள். இன்னும் அதிக வித்தைகள் செய்ய உறுதி எடுத்துக் கொண்டார்கள்.

காரணமின்றி அந்த வீரர்களை அந்த அரசன் பாராட்டவில்லை. அந்த வீரர்கள் கூட்டத்தில் ஒருவன் கூட அரசனுடைய மகனில்லை. அவனுடைய மகன்களெல்லாம் அந்தப்புரத்தில் பெண்களோடு சல்லாபித்துக் கிடந்தார்கள்.

கார்த்த வீர்ய அர்ச்சுனன் தன் மகன்களைப் பற்றிக் கவலைப்பட்டான்.

கார்த்த வீர்ய அர்ச்சுனனுக்கு பல மனைவிகளும் காமக்கிழத்திகளும் இருந்தார்கள். அவர்களுக்கு குழந்தைகள் பிறந்தன. ஆனால் ஒரு மகன் கூட அரசாளும் லட்சணத்தோடு பிறக்கவில்லை. கார்த்த வீர்ய அர்ச்சுனனுக்கு இது கவலை அளித்தது.

நல்ல வீரர்களுக்கு நடுவே தன் குழந்தைகளை வளரவிட்டால் அவர்கள் சிறந்த அரசராவார்கள். ஓரளவிற்காவது உயர்வார்கள் என்று நினைத்து அவன் வீரர்களை உற்சாகப்படுத்தினான். மகன்களை அவர்களுக்கு நடுவே பழகவிட்டான். ஆனால் மகன்கள் பெண் மோகம் கொண்டவர்களாக இருந்தார்களே தவிர சாதனை செய்பவர்களாக மாறவில்லை.

அரண்மனைக்குள்ளே அடைந்து கிடந்தால் இப்படித்தான் இருக்கும் என நினைத்து மகன்களோடு குதிரை ஏறி காடுநோக்கி கார்த்த வீர்ய அர்ச்சுனன் நகர்ந்தான். தான் பின்புறமாக நின்று கொண்டு காடுகளை ஊடறுத்து போகும்படி மகன்களுக்கு கட்டளையிட்டான்.

வலுவில்லாத அந்தப் பையன்கள் காடுகளைத் தாண்ட முடியாமல் தடுமாறினார்கள்.

"காட்டை அழித்து நாடாக்க வேண்டும். அவ்வளவு தானே. நெருப்பு வைத்தால் போயிற்று."

வலுவேயில்லாமல் மெலிந்திருந்த ஒரு பையன் எண்ணெய் தோய்த்த கந்தைத் துணியை அம்புகளில் மாட்டிக் காடுகளுக்குள் வெகு தூரம் இடையறாது செலுத்திக் கொண்டிருந்தான்.

காற்று திசை மாற, காடு பற்றிக் கொண்டது. தகதகவென்று எரிந்தது.

தொலைவேயிருந்த கார்த்த வீர்ய அர்ச்சுனன் திடுக்கிட்டான். அவன் வருவதற்குள் காடு அணைக்க முடியாதபடி பெரும் தீயில் மாட்டிக் கொண்டு விட்டது. அந்தத் தீ மெல்ல மெல்லப் பரவி வசிஷ்டர் இருந்த ஆசிரமத்திற்குப் போயிற்று.

புகையாலும், வெப்பத்தாலும் சீடர்கள் துடித்தார்கள்.

ஜபம் செய்து கொண்டிருந்த வசிஷ்டர் எழுந்து நின்றார். வருணனை நோக்கி மழை வேண்டினார். பலத்த மழை பெய்ய காட்டினுடைய அழிவு தடுக்கப்பட்டது. ஆனாலும் காடு குறிப்பிடத்தக்க அளவு அழிந்திருந்தது.

"உலகத்தின் நன்மைக்காக மிக உன்னதமான ஒரு ஜபம் செய்து கொண்டிருந்த எங்களைக் கலைத்து, எங்கள் அமைதியை நாசமாக்கி காட்டிற்கு நீ வைத்தாய் அல்லவா. நீ வைத்ததை தடுக்க முடியாது என்று எங்கோ சோம்பிக் கிடந்தாய் அல்லவா. கார்த்த வீர்ய அர்ச்சுனா, உன்னை அழிப்பதற்கு வலுமிக்க பலம் பொருந்திய ஒரு அந்தணன் வருவான்.

க்ஷத்திரியனை எதிர்த்து எதுவும் செய்ய முடியாது என நினைத்திருந்தாய். க்ஷத்திரியர்கள் தான் உலகத்தின் வலு என்று கருதியிருக்கிறாய். உன் மகன்களை நல்ல க்ஷத்திரியர்களாக்க காட்டை பலி கொடுத்திருக்கிறாய். இது முட்டாள் தனம். விவேகமற்ற செயல். இதற்கு உண்டான தண்டனையை நிச்சயம் நீ அடையத்தான் வேண்டும்.

அந்தணர்கள் அமைதியை நீ கெடுத்ததால் உன்னைத் தண்டிக்க மிக உக்கிரமான ஒரு அந்தணன் வருவான். அவனால் நீ அடித்துப்புடைக்கப் படுவாய். உன் குலம் நாசமாகும்" என்று சாபமிட்டார்.

வனத்தின் வேறு பகுதிக்கு நகர்ந்து போனார்.

கார்த்த வீர்ய அர்ச்சுனன் திகைத்துப் போன தன் மகன்களைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தான்.

"இந்த மாதிரி அந்தணக் கூச்சல்களுக்கெல்லாம் பயந்து விடாதீர்கள். ஒரு வீரனை எந்தக் கூச்சலும் எந்தப் பேச்சும் எதுவும் செய்து விட முடியாது. உங்கள் வீரத்தை வளர்த்துக் கொள்வதிலேயே குறியாக இருங்கள்.

உத்தமமான வீரர்களாக மாறுவதற்கு ஒழுக்கம் மிக முக்கியம். அவர்களுடைய திமிர் அந்த ஒழுக்கம். அந்த ஒழுக்கத்தை நாம் கையாண்டால், நாம் ஜெயிப்பது உறுதி. நம்முடைய வீரமும், அவர்களுடைய ஒழுக்கமும் ஒன்று சேர்ந்தால் நம்மை யாரும் எதுவும் செய்து விட முடியாது. நாம் ஒழுக்கமற்றவர்களாக இருப்பதால்தான் பயந்து போகிறோம். பலவீனர்களாக இருக்கிறோம். எனவே என் மக்களே ஒழுக்கத்தோடும், கடும் உழைப்போடும் வாழ பழகிக் கொள்ளுங்கள்" என்று சொல்ல அவன் மக்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் அவ்விதமே வாழத் துவங்கினார்கள்.

அவன் மகன்கள் ஒழுக்கத்தையும், தவ வலிமையையும் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காக கார்த்த வீர்ய அர்ச்சுனனும் அவ்விதமே வாழத் துவங்கினான்.

கடுமையான நோன்புகள் இருக்கத் துவங்கினான். இடையறாது பிராணாயாமமும் தியானமும் செய்யத் துவங்கினான்.

க்ஷத்திரியர்களுடைய வீரமும், அந்தணனுடைய ஒழுக்கமும் அந்த அரண்மனையை சில காலம் நிறைத்தன.

அரசர் கார்த்த வீர்ய அர்ச்சுனன் கடைபிடித்தது டயோகம். பிராணனை அடக்க மனம் அடங்கும். மனம் டங்க செயல்கள் அடங்கும். செயல்கள் ஒரு- [illegible]ணத்திற்கு வர சுற்றுப்புற உறவு முறைகளில் தெளிவு ஏற்படும். இந்தத் தெளிவினால் வாழ்க்கையில் ஒரு நிம்மதி கிடைக்கும். ஆனால் நிரந்தரம் அல்ல. இது ஞானமல்ல. பயிற்சியினால் மனதை வளைப்பது. பிராணனை அவிழ்த்து விட்டு விட, பிராணாயாமத்தை நிறுத்திவிட மறுபடியும் மனம் ஓடத் துவங்கி விடும். நாலாபுறமும் சிதறத் துவங்கி விடும். பிறகு பழைய வாழ்க்கையே வாழ வேண்டியதுதான்.

தன்னை அறிதல் என்பதுதான் உயர்ந்த ஞானம். தன்னை அறிதல் என்பது பயிற்சியில் வெறும் முயற்சியில் ஏற்பட்டு விடாது. அது கருணையைக் கொண்டு கருணையை ஊற வைத்தல். நம் முயற்சிகள் அனைத்தையும் விட்டு விட்டு இறையருளுக்காக வெறுமே காத்திருத்தல். அப்பொழுது நிகழும் மாற்றம்தான் மகத்தானது. அந்த மாற்றத்தைத்தான் முனிவர்களும், ரிஷிகளும் பெற்றிருந்தார்கள்.

தான் எதுவுமே இல்லை என்ற நினைப்பில் மல்லாந்து கிடக்க அதன் மூலம் அருள் பெற்றார்கள். அந்த

அமைதியில் தெளிவடைந்தார்கள்.

இந்திரிய ஒழுக்கமும், ஆசார வகைகளும், பூஜை புனஸ்காரங்களும் மூச்சுப் பயிற்சிகளும் மிகுந்த ஹடயோகம் வாழ்வை வலுவாக்குகிறதேயன்றி, வாழும் வகையை எளிதாக்குகிறதேயன்றி ஞானத்தைக் கொடுத்து விடுவதில்லை.

கார்த்தவீர்ய அர்ச்சுனன் தபஸ்விகளைப் பார்த்து பொறாமைப்பட்டான். ரிஷிகளையும், முனிவர்களையும் பார்த்து அதிசயித்துப் போனான். எப்படி இவர்களுக்கு மட்டும் இப்படி ஒரு முகப் பொலிவு எவ்விதம் ஏற்பட்டது என்று கேட்டுக் கொண்டான். மந்திரிகளோடு விவாதித்தான். குருமார்களோடு கலந்து பேசினான்.

"அரசன்தானே உயர்வு, அரசன் தானே மக்களின் உச்சகட்டம். அவனுக்கு மீறி ஏதேனும் உண்டா" என்று கேள்வி கேட்க, "தபஸ்விகளும், முனிவர்களும், அரசனைவிட உயர்ந்தவர்கள். அரசர் அவர்களை பணிந்துதான் ஆக வேண்டும்" என்று சொன்னார்கள்.

"தபஸ்விகளுக்கும், முனிவர்களுக்கும் மேலே யார் இருக்கிறார்கள்" என்று சொல்ல "அந்தர்யாமியான கடவுள் இருக்கிறார். எங்கும் நிறைந்த இறை வடிவம் இருக்கிறது" என்று சொன்னார்கள்.

"அந்த இறைவடிவமாக நான் மாற முடியாது. ஆனால் அந்தணராக, தபஸ்விகளாக, முனிவர்களாக நான் மாற முடியும் அல்லவா. என் தவ வலிமையை பெருக்கினால் என் காலில் முனிவர்களும், ரிஷிகளும் வணங்கலாம் அல்லவா. எல்லோரும் வணங்கத்தக்க இடத்தில் நான் இருப்பேனே தவிர, இன்னொருவரை வணங்குகின்ற இடத்தில் நான் இருக்க மாட்டேன். காலில் விழுந்து வணங்குவது எனக்கு விருப்பமில்லாத விஷயம். என் காலில் மற்றவர் வந்து விழலாம். அது மிகுந்த சந்தோஷம்" என்று கொக்கரித்தான்.

பெண்ணிடத்தும், பொன்னிடத்தும், மண்ணிடத்தும் எதிர்பார்க்கின்ற வெற்றியை கடவுள் என்கிற விஷயத்தில் மனிதன் எதிர்பார்க்கிறபொழுது மிகப் பெரிய தோல்வியை அடைகிறான். தானாகக் கனிய வேண்டிய ஒரு ருசியை, விஷயத்தை தடி கொண்டு கனிய வைக்கும் முயற்சியாய் அவன் ஈடுபட பழம் அழுகிப்போகிறது. மனம் அசந்துபோகிறது. உயர்ந்தவர்களைக் கண்டு கோபமும், பொறாமையும் ஏற்படுகின்றன. எல்லா இடத்திலும் சாதித்த வெறி இங்கு சாதிக்க முடியவில்லையே என்கிற துக்கம் பன்மடங்கு பெருகி அது பொறாமையும், பொறாமையால்

கோபத்தையும் கவிழ்த்து விடுகின்றன.

"நமது தேசத்திற்கு அருகே நல்ல பண்பாளர்கள் யாராவது இருக்கிறார்களா. ரிஷிகள், தபஸ்விகள் எவரேனும் உண்டா" அவன் மக்களைப் பார்த்துக் கேட்டான்.

மந்திரிகள் பொய் சொன்னாலும் சொல்வார்கள் குருமார்கள் மறைத்தாலும் மறைப்பார்கள் மக்களுக்கருகே நின்று பேச மக்களிடம் நிறைய தகவல்கள் கிடைக்கும். மன்னனிடம் பேசுகின்ற ஆசையில் மக்கள் சகல விஷயங்களையும் ஒளிவு மறைவின்றி பேசுவார்கள். எனவே குருமார்களையும், மறைத்துச் சொல்லும் மந்திரிகளையும் உதறிவிட்டு அவன் மக்களுக்கு நடுவே உட்கார்ந்து கொண்டான். மன்னன் சமதையாக உட்கார்ந்து முகம் பார்த்து கேள்வி கேட்பதால் மக்கள் பரவசமானார்கள்.

"ஐயா, ஜமதக்னி முனிவர் என்கிறவர் நமது தேசத்து எல்லையில் உள்ள காட்டிற்கு நடுவே இருக்கிறார். அவ்வப்போது அவரது சீடர்கள் கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் தானியங்களைச் சேகரிக்க வந்து போகிறார்கள். சீடர்களே மிகுந்த பொலிவோடும், அமைதியோடும், ஞானத்தோடும் இருக்கிறார்கள்.

போனமுறை என் குழந்தைக்கு சுகவீனம் ஏற்பட்டது. இறந்து போய் விடுவான் என்று வைத்தியர் சொன்னார். நான் என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டிற்கு வெளியே வந்து வானத்தை நோக்கி கைவிரித்து அழுதேன். எனக்கிருக்கிற ஒரேயொரு பிள்ளையையும் வாரிக்கொண்டு போய் விடாதே என்று கதறினேன். தெரு முனையில் நின்றிருந்த ஒரு இளைஞன் அருகே வந்து என்ன, என்ன துக்கம் என்று பரிவோடு கேட்டான். நான் விஷயம் சொன்னேன்.

நான் ஜமதக்னியின் சீடன். அங்கு அவருக்கு சமையல் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறேன். இங்கு தானியங்கள் வாங்க வந்திருக்கிறேன். நான் உங்கள் குழந்தையைப் பார்க்கலாமா என்று சொல்லி வீட்டிற்குள் நுழைந்து குழந்தையை எடுத்து மடியில் போட்டுக் கொண்டு நெஞ்சோடு அணைத்து ஏதோ மந்திரங்கள் முணுமுணுத்தான்.

கடும் ஜுரத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த குழந்தை மெல்லமெல்ல கண் விழித்தது. ஜுரம் முற்றிலும் குணமாயிற்று. அவன் குழந்தையை படுக்கையில் கிடத்தி விட்டு இரண்டு மூன்று நாளில் குழந்தை எழுந்து

விளையாடுவான் என்று சொல்லி விட்டு தானியங்கள் வாங்காமல் மெல்ல நகர்ந்தான். ஐயா, தானியங்கள் வாங்காமல் போகிறீர்களே என்று சொல்லும்போது இன்னும் மூன்று நாட்கள் கழித்து மறுபடியும் வருகிறேன் என்று சொன்னான்.

காட்டின் எல்லையில் அந்த இளைஞன் கடும் ஜுரத்தால் சுருண்டு கிடந்தான். நாங்கள் உதவி செய்ய வந்தபோது மறுத்து விட்டான். கிராமத்து வைத்தியர் உதவி செய்ய முன் வந்தபோதும் அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏன், என்று கேட்டபோது அந்த இளைஞன் தெளிவாக பதில் சொன்னான்.

குழந்தைக்கு இருந்த விஷ ஜுரத்தை மந்திரம் சொல்லி நான் மனதார ஏற்றுக் கொண்டேன். அந்த ஜுரம் என்னுள் சில நாள் தங்கித்தான் ஆக வேண்டும். அது வளர்ந்துதான் ஆக வேண்டும். அது வளர்வதற்காக என் உடம்பை தத்தம் செய்திருக்கிறேன். இப்பொழுது வேண்டாம் என்று விரட்டியடித்தால் எப்படி முடியும். தானாக விரும்பி ஏற்றுக் கொண்டதை தானாகப் போகும்வரை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று பதில் சொன்னான்.

அந்தக் குழந்தை இந்த ஜுரத்தைத் தாங்காது. இது கடுமையாக இருக்கிறது. எனக்கு நல்ல மனப் பயிற்சியும் உடற்பயிற்சியும் இருப்பதால் நான் இந்த விஷ ஜுரத்தை தாங்குவேன் எனவே அனைவரும் மௌனமாக கலைந்து போங்கள் என்று சொல்லி குத்திட்டு உட்கார்ந்திருந்தான்.

பார்க்க மிகப் பரிதாபமாக இருந்தது. பொலிவெல்லாம் அழிந்து, ஒளியெல்லாம் குன்றி சுருண்டு ஒரு பிராணியைப் போல் தூங்கினான். உணவே எடுத்துக் கொள்ளாமல் இருந்தான். ஆனால் நான்காம் நாள் சரியாகி விட்டான்.

எங்கள் வீட்டு வாசலுக்கு வந்து ஏதேனும் கஞ்சி கொடுங்கள் என்று கேட்டான். நாங்கள் உடனடியாக தயார் செய்து கொடுத்தோம். கஞ்சி குடித்த சில நேரத்தில் அவன் பொலிவு அதிகம் கூடியது. வீட்டுக் கிணற்றடியில் நீர் இறைத்துக் கொடுக்க உடம்பு தேய்த்து குளித்தான். இன்னும் பொலிவு கூடியது. பிறகு உட்கார்ந்து ஜபதபங்கள் செய்து அரிசி மாவால் செய்யப்பட்ட பண்டங்களை உண்ண அவன் மறுபடியும் பழைய பொலிவுக்கு வந்து விட்டான்.

எப்படி, எப்படி இது நடக்கிறது என்று நாங்கள் ஆவலோடு கேட்டோம்.

எனக்கு எதுவும் தெரியாது. நான் என் குருநாதரின் பெயரைச் சொல்லி அவரை வேண்டி இந்த வில் ஞானத்தை எடுத்துக் கொண்டேன். வில்லை இழுத்தபோதும் நான் என் குருநாதரின் பெயரைத்தான் சொன்னேன். இது அவருடைய மகிமை. ஜமதக்னி முனிவருடைய ஆசி. மற்றபடி வேறெதுவும் நான் அறியாதவன் என்று சொன்னான்.

"நீங்கள் எவராவது ஜமதக்னி முனிவரைப் பார்த்திருக்கிறீர்களா" என்று கூர்மையுடன் கார்த்த வீர்ய அர்ச்சுனன் கேட்க, வேடுவர்கள் முன் வந்தார்கள்.

"எங்களுக்கு வாழ்க்கையே காட்டில்தான். ஜமதக்னி முனிவர் வாழ்கின்ற இடத்திற்கு மிக அருகிலேயே நாங்களும் வாழ்கிறோம். தொலைவிலிருந்து தினசரி பார்ப்போம். சில சமயம் அவர் அழைக்க அருகே போய் நின்று அவரிடம் பேசுவதும் உண்டு."

"எப்பொழுது பேசினீர்கள்."

"போன பௌர்ணமிக்கு அவர் வெளியில் வந்து உட்கார்ந்து கொண்டிருந்தார். எங்களை அழைத்துப் பேசினார்."

"என்ன கேட்டார். நீங்கள் என்ன சொல்வீர்கள்" அரசன் ஆவலோடு அவர்கள் பக்கம் திரும்பிக் கேட்டான்.

ஜனங்கள் மௌனமாய் அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"காட்டினுடைய வளம் பற்றிக் கேட்டார். என்னென்ன மிருகங்கள் இருக்கிறது என்று கேட்டார். எந்த வேட்டையாடுகிறீர்கள் என்று கேட்டார். எதை வேட்டையாடி என்ன உபயோகம் என்று விசாரித்தார்.

நாங்கள் மான்களை தோல்களுக்காகவும், யானைகளை தந்தங்களுக்காகவும், சிங்கங்களை பற்களுக்காகவும், பிடரிக்காகவும் கொல்லுவதைச் சொன்னோம்.

குறைவாகச் செய்யுங்கள். அதிகமாகச் செய்து மிருகங்களின் எண்ணிக்கையைக் குறைத்து விட வேண்டாம். கொல்வதையும் விரைவாகச் செய்யுங்கள். வலியில் தயவு செய்து துடிக்க விடாதீர்கள் என்றெல்லாம் உபதேசித்தார். என்ன ஆயுதங்கள் வைத்திருக்கிறீர்கள் என்று விசாரித்தார்.

நாங்கள் ஆயுதங்களைப் பரப்பினோம். அந்த ஆயுதங்களின் உபயோகங்களை அவர் கேட்டறிந்தார். அதை எப்படிப் பிரயோகம் செய்வீர்கள் என்றும் எங்களை

விளக்கச் சொன்னார். அவர் எதிரே அவர் சொன்ன இலக்குகளை நாங்கள் அம்பால் தாக்கிக் காண்பித்தோம். ஈட்டி எறிந்து காட்டினோம். ஒரு குழந்தையைப்போல குதூகலப்பட்டார். பிறகு என்ன உணவு எடுத்துக் கொள்கிறீர்கள் என்று கேட்டார்.

எங்கள் உணவு வகைகளைச் சொன்னோம். அதற்குப் பிறகு எங்கு தங்குகிறீர்கள் என்று கேட்டார். நாங்கள் தங்குமிடங்கள் எப்படி இருக்கும் என்று விவரித்தோம். எங்களைப் பற்றி கருணையோடு முழு விவரமும் அறிந்து எங்கள் உணவு முறைகளில் மாறுதல் சொன்னார். எங்கள் தங்குமிடங்களில் எப்படி அக்னியை பாதுகாக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார்.

நாங்கள் அக்னியை காட்டுக்குள்ளே குடிசைக்குள் அடுப்பு விறகுகள் போட்டு எந்நேரமும் வைத்திருப்போம். முறைமாற்றி காவல் இருப்போம். மழை பெய்தாலும் அது தீ அழிந்து விடாதபடி காப்பாற்றுவோம் என்று சொன்னோம்.

நடுக்காட்டில் அவ்விதம் அக்னியை திறந்தவெளியில் வைக்க வேண்டாம் என்றும் ஒருவேளை அவ்வாறு ஒருவேளை காடு முழுவதும் பற்றிக் கொள்ளும் என்றும் சொல்லி, நல்ல மரக் கட்டைகளைக் கொடுத்தார். எப்படிக் கனலை என்றும் சொன்னார். வெறும் கைகளால் கனைந்தால் வேகம் வராது. மண் கலத்தில் சூடு ஏறாது எனப்படும் கயிறு கட்டி கனலைத் சொல்லிக் கொடுத்தார். மூன்று இரும்புகளில் சருகுகள் பற்றிக் கொள்கின்றன. இப்படி எளிதில் பற்றிக் கொள்கிற குளிகைகளை, கொழுந்து விட்டு எரியும் கொடிகளை எங்களுக்குக் காட்டிக் கொடுத்தார்.

நெடுந்தூரம் போவதற்கு குதிரைகளை பயன்படுத்தச் சொன்னார். எங்களுக்கு குள்ளமான குதிரைகளை கொடுத்தார். அவைகளுக்கு லகான் போடுவது பற்றியும் சேணம் அமைப்பது பற்றியும் அவருடைய சீடர்கள் சொல்லிக் கொடுத்தார்கள். எப்படி ஏறி ஓட்டுவது என்று சொன்னார்கள். நாங்கள் பயிற்சி செய்வதை அவர் அருகே இருந்து வேடிக்கைப் பார்த்தார். எங்களுக்கு அற்புதமான உணவு வழங்கினார்."

"உணவா, நடுக்காட்டிலா."

"ஆமாம். அறுசுவை உணவு. ஆறேழு பதார்த்தங்கள். அரிசி உணவு. கோதுமை உணவு. பருப்பு வகைகளுமாய் நிறைய பரிமாறினார்கள்."

"எத்தனை பேர் போயிருந்தீர்கள்."

"நாங்கள் மூன்றூறு பேர் போயிருந்தோம்."

"மூன்றூறு பேருக்கும் உணவா. நடுக்காட்டில் எப்படி முடிந்தது."

"அவரிடம் ஏதோ சக்தி இருக்கிறது. மூன்றூறு பேருக்கு உணவு வைக்கும் அளவுக்கு அங்கு குடிசைகளும் இல்லை. பாத்திரம், பண்டங்களும் இல்லை. இலைகள் பரப்பப்பட்டன. பிறகு, அதில் ஒரு பாத்திரத்தில் வெஞ்சனம் வைக்கிறார்கள். மறுபடியும் அதே பாத்திரத்தில் வேறு வெஞ்சனம் கொண்டு வருகிறார்கள். இன்னொரு பாத்திரம், மூன்று நான்கு பாத்திரங்களில் பரிமாறுகிறார்கள். அந்த மூன்று நான்கு பாத்திரங்களிலும் வெஞ்சனங்கள் நிரம்பி வழிகின்றன. எத்தனை போட்டாலும் குறைவதில்லை. மூன்றூறு பேர்களும் மிக ருசியான உணவை மனதாரச் சாப்பிட்டோம்.

குழந்தைகளுக்கு பால் கொடுக்கப்பட்டது. கர்ப்பிணிப் பெண்களுக்கு தேன் தரப்பட்டது. வயதானவர்களுக்கு மருந்து கலந்த உணவுகள் தரப்பட்டன. எங்களில் பலரும் திடமாகி விட்டார்கள். கண் பார்வை தெரியாமல் இருந்த ஒரு கிழவருக்கு அவர் குறிப்பிட்ட உணவு தரச்சொல்ல உடனே கண் பார்வை கிடைத்தது. பதிலுக்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டோம். அவர் எதுவும் ஏற்கவில்லை.

எவரோடும் சண்டையில்லாத அமைதியான வாழ்க்கை வாழுங்கள். யாரையும் துன்புறுத்தாத ஒரு நெறிமுறையைக் கடைபிடியுங்கள். நீங்கள் வேடர் குலமென்றாலும். வேட்டையாடுவதுதான் வாழ்க்கையென்றாலும் அதிகம் இம்சைப் படுத்தாது மிக விரைவாகக் கொல்லவும், பயனுள்ள மிருகங்களை மட்டுமே இம்சிப்பதையும் கடைபிடிக்குமாறு கேட்டுக் கொண்டார். தேவைக்கு அதிகமாய் ஒரு சிறு உயிரைக் கூட பதிக்க வேண்டாம் என்று உத்தரவிட்டார். நாங்கள் கடைபிடிப்பதாக சத்தியம் செய்திருக்கிறோம்."

"எத்தனை சீடர்கள் இருப்பார்கள்."

"நூற்றுக்கும் மேற்பட்ட சீடர்கள் இருப்பார்கள். ஆனால் எந்த ஆரவாரமும் இருக்காது. மிக மிக அமைதியாக ஆசிரமம் இருக்கும். இடையறாது ஹோமங்கள் நடந்து கொண்டிருக்கும். யாகத் தீ எரிந்த வண்ணமே இருக்கும். சீடர்கள் பலர் ஜபங்கள் செய்து கொண்டிருப்பார்கள். சிலர் ஆசிரமத்தை சுத்தம் செய்து கொண்டிருப்பார்கள். பசுக்களையும், கன்றுகளையும் பராமரித்துக் கொண்டிருப்பார்கள்."

"அந்த நூறு பேர்களுக்கும் உணவு."

"அந்த பாத்திரங்களில்தான் எடுக்கிறார்கள். அந்த பாத்திரங்களில் எப்பொழுதுமே உணவு வகைகள் இருக்கின்றன. ஏதோ மகிமையுள்ள பாத்திரமாக அவை இருக்கும் என்று நினைக்கிறோம்." வேடுவத் தலைவர் சொல்ல அரசன் திரும்பி மந்திரிகளைப் பார்த்தான். மந்திரிகள் மௌனமாக இருந்தார்கள்.

"ஏதேனும் அமுத சுரபியை ஜமதக்கினி முனிவர் வைத்திருக்கிறாரா" என்று மந்திரிகளைப் பார்த்துக் கேட்டான்.

மந்திரிகள் வேடுவர்களுக்கு விடை கொடுத்தனுப்பினார்கள். சிறு பரிசுகள் கொடுத்து அவர்களை நன்றிப்போகச் சொன்னார்கள்.

அரசனைப்பார்த்து "பாத்திரங்கள் எதுமில்லை. ஆனால் அவரிடம் காமதேனு என்கிற பசு இருக்கிறது. நந்தினி என்று அதற்கொரு கன்று இருக்கிறது. அந்தப் பசுவும், கன்றும் ஆசிரமத்தை சௌக்கியமாக கவனித்துக் கொள்கின்றன. அவைகள் எதுவும் தரக்கூடிய வல்லமை பெற்றவை. ஆசிரமத்திற்கு வேண்டிய தர்ப்பைப் புல்லிலிருந்து பால் முதற்கொண்டு, பல்வேறு உணவு வகைகளை அது பரிமாறக்கூடிய சக்தி பெற்றது."

"அதென்ன மந்திரப் பசுவா."

"ஆமாம். அது தேவலோகத்து விஷயம். எல்லாம் எதுவும், எப்போதும் தரக்கூடிய அட்சய பாத்திரம். ஜமதக்கினி முனிவரிடம் ஆசைப்பட்டு அந்தப் பசு வந்திருக்கிறது என்று சொல்வார்கள். தன்னுடைய வலுவை பெருக்கிக் கொள்ள ஜமதக்கினி முனிவரை நாடியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்."

"இதை ஏன் நீங்கள் எனக்குச் சொல்லவில்லை" அரசன் சீறினான்.

"அது நமக்குத் தேவையில்லை என்பதால் நான் சொல்லவில்லை" என்று ஒரு மந்திரி பதில் சொல்ல "அது எனக்குத் தேவையில்லை என்று எப்படி நினைக்கலாம்" பதிலுக்கு அரசன் உரக்கக் கத்தினான்.

"நமக்கு உழவர்கள் இருக்கிறார்கள். தானியங்கள் கொண்டு வந்து தருகிறார்கள். நல்ல கருமார்கள் இருக்கிறார்கள். அவர்கள் துருத்திக் கொண்டு ஊதுகின்ற அடுப்பை அமைத்துத் தருகிறார்கள். நல்ல தச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மேசையும், நாற்காலியும் ஏற்பாடு செய்து சாப்பிடுவதற்குண்டான மனைப்

பலகையை அமைத்துத் தருகிறார்கள். நம்மிடம் நல்ல சமையல் கலைஞர்கள் இருக்கிறார்கள். வாங்கிய தானியத்தை பக்குவப்படுத்தி சமைத்து பரிமாறுகிறார்கள். நல்ல குயவர்கள் இருக்கிறார்கள். மண்கலன்களை கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இப்படி நம்மைச் சுற்றி நிறைய பேர் இருப்பதால் ஒரு அட்சய பாத்திரம் நமக்கு தேவைப்படவில்லை. ஒரு அட்சய பாத்திரம் நம்மிடம் வந்து விட்டால் பல பேருக்கு வேலை கிடைக்காது. சௌகரியமாக இருக்கும்படியாக இருக்கும். எந்த வேலையுமில்லாமல் வெறுமே திரியும்படியாக இருக்கும். இவர்களையெல்லாம் அரண்மனையை நம்பி, அரசனை நம்பி, அரச குடும்பத்தாரை நம்பி இருக்கிறார்கள். இவர்களுக்கு பிழைப்பு வேண்டுமல்லவா" என்று மந்திரி சொல்ல அரசன் எழுந்து நின்றான்.

"முட்டாள் தனமாகப் பேசுகிறீர்கள். வயது முதிர்ந்து விட்டதே தவிர பேச்சிலே தெளிவில்லை. அறிவில்லை. நான் சொல்வதைக் கேளுங்கள்.

இப்படி ஒரு பசு நம்மிடமே கிடைத்து விட்டால் இங்கு குயவரும், கருமாரும், தச்சரும் எதற்கு வேலை செய்ய வேண்டும். அவர்களுக்கென்று கொடுப்பதற்கு பசு இருக்கிறது அல்லவா. எனக்கும், அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சேர்ந்து அந்தப் பசு இடையறாது உண்ண உணவு கொடுத்துக் கொண்டிருக்குமல்லவா. அப்படிப்பட்ட பசு நம்மிடம் இருப்பது நல்லதல்லவா. நூறு பேர் கொண்ட ஒரு காட்டில் வெறும் யாகத்தி உணவு உண்கிற சில அந்தணருக்கு நடுவே அந்தப் பசு இருப்பதால் என்ன லாபம். ஆயிரக்கணக்கான மக்கள் இருக்கும் போது அவர்களுக்கு உதவி செய்யத்தானே இந்தப் பசு அவசியம். ஒரு நகரம் முழுவதும் சோறிடுவதற்கு தயாராக ஒரு பசு இருக்கிறபொழுது அதை ஒரு சிறு பகுதிக்கு மட்டும் உபயோகப்படுத்துவது என்பது முட்டாள்தனமான செய்கை அல்லவா. சுயநலம் அல்லவா.

நான் இப்பொழுதே காட்டிற்குக் கிளம்புகிறேன். ஜமதக்கினி முனிவரை பார்க்க விரும்புகின்றேன். ஜமதக்கினி முனிவருக்கு வேண்டும் என்ற பொருட்கள் எடுத்துக் கொண்டு நாம் காடு நோக்கிப் போகிறோம்."

"எதற்கு மன்னா".

"எனக்கு அந்தப்பசு வேண்டும். காமதேனு வேண்டும்."

"மன்னா இந்த ஆசை தவறானது."

"ஏன்."

"ஒரு முனிவரின் சொத்தை நீங்கள் பறிக்கலாகாது."

"ஒரு விஷயம் நல்ல விஷயம் அந்த தேசத்தில் மன்னனுக்கு சொந்தமானதாகத்தான் இருக்க வேண்டுமே தவிர அந்த தேசத்து முனிவர்களுக்கு இருப்பது சரியல்ல. உலகத்தில் உன்னதமான விஷயங்கள் ஆட்சியாளர்களிடம் தான் இருக்க வேண்டுமே. சாதாரண முனிவரிடம் போய் சிக்கி விடக்கூடாது. பூமிக்கு கீழே உள்ளதும் பூமிக்கு மேல் உள்ளதும் பூமியின் மீது பறக்கக்கூடியதும் அரசனுக்குச் சொந்தம். என் தேசத்திற்கு உட்பட்ட எந்த ஒரு பொருளையும் நான் எடுத்துக் கொள்ளலாம். நான் வேண்டாம் என்று சொன்னால்தான் மற்றவர்கள் உபயோகிக்கலாம். எனவே அந்தக் காமதேனு என் சொத்து. எனக்கு வேண்டுமென்ற பொருள் என்னிடம் இருந்தால்தான் அதற்கும் மதிப்பு எனக்கும் மதிப்பு.

ஆயிரம் பேருக்கு உடனடியாக சோறிட என்னால் முடியாது. ஒரு முனிவரால் முடிகிறதென்றால் நான் அரசனாக இருந்து என்ன புண்ணியம். ஒரு அரசனை விட வலிமை மிக்கவர் அந்தத் தேசத்தில் முனிவர்தான் என்றால் என்னிடம் ஜனங்கள் எப்படி பயப்படுவார்கள். அரசனிடம் ஜனங்கள் பயப்படவில்லை. அந்த தேசத்து முனிவரிடம்தான் ஜனங்கள் பயப்படுகிறார்கள். அதனால்தான் கவரப்படுகிறார்கள் என்றால் இங்கு ஆட்சி இரண்டு படுகிறது அல்லவா. இரண்டுபட்ட ஆட்சி ஒரு தேசத்திலே இருந்தால் அது நல்லதா.

ஒன்று நான் இருக்க வேண்டும் அல்லது ஜமதக்கினி முனிவர் ஆட்சி செய்ய வேண்டும். இது என் ஆட்சியா இல்லை ஜமதக்கினி முனிவரின் ஆட்சியா என்பதை நான் தீர்மானம் செய்ய வேண்டும். எனவே இதை தீர்மானிப்பதற்குத்தான் நான் காட்டிற்குப் போகிறேன். காட்டிற்குப் போய் அவரைப் பணிந்து வணங்கி உங்களிடம் இருக்கின்ற காமதேனுவை எனக்குக் கொடுத்து விடுங்கள் என்று கேட்கப் போகிறேன்."

"கொடுத்தால் நல்லது கொடுக்காது போனால்."

"அவர் அழிவை அவர் சம்பாதித்துக் கொள்வார்."

"மன்னா, ஒரு முனிவர் அழிவை ஒரு மன்னரால் ஒருக்காலும் ஏற்படுத்த முடியாது. ஆனால் உங்கள் அழிவை ஒரு முனிவரால் ஏற்படுத்த முடியும்." மந்திரி வேகமாகப் பேச மன்னன் அவருக்கருகே போனான்.

"இதைத்தான் என்னால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை மகாமந்திரி. ஒரு தேசத்தில் உயர் நிலையில் இருப்பவன் நானா ஒரு முனிவரா. இங்கு முனிவர்தான்

உயர் நிலை என்றால் நான் இங்கு இருக்கவே விரும்பவில்லை. மரணமடையவே பிரியப்படுகின்றேன். என்னை மீறி என் தலைக்கு மேலும் எவரேனும் இருக்க முடித்தால் அது எங்கும் நிறைந்திருக்கிற பூரண இறையருள் மட்டுமே. அதையும் வெல்ல வேண்டுமென்று தான் எனக்கு ஆசை இருக்கிறதே தவிர அடங்கியிருக்கும் ஆசை எனக்கு வரவில்லை."

"நீங்கள் தவறு செய்கிறீர்கள் மன்னா."

"மறாம்... என்னிடம் என்ன குறை மகாமந்திரி. என்னால் முடியாத விஷயம் எது. என்னால் மூச்சு விடுதலை நிறுத்த முடியும். ரத்த ஓட்டத்தை அசையாது வைத்திருக்க முடியும். என்னால் உடலை பிரேதம் போல மாற்ற முடியும். மறுபடியும் உயிர் கொடுக்க முடியும். என்னால் பறக்க முடியும். என்னால் நெருப்பை பொறுத்துக் கொள்ள முடியும். காற்றை திசை மாற்ற முடியும். பிரகங்களுக்குண்டான வலிமை என்னிடம் இருக்கிறது.

எந்த விதத்தில் நான் முனிவரை விட குறைவானவன் தயவு செய்து எனக்கு விளக்கிச் சொல்லுங்கள்" என்று சொல்ல மகாமந்திரி மௌனமாக இருந்தார்.

"ஏன் பேசாமல் இருக்கிறீர்கள் என்னை விட அவர் உயர்வு என்பதை எப்படி" என்று எனக்கு நீங்கள் சொல்லியே ஆக வேண்டும்."

"மன்னரே, நீங்கள் தவத்தினால், கடும் பயிற்சியினால் சிலவகை வெற்றிகளை அடைந்திருக்கிறீர்கள். ஆனால் இறையருள் ஒன்றே பூரணமானது. பூரணமானதை நீங்கள் பெற்றாலொழிய உங்களுக்கு எது குறித்தும் மனநிறைவு ஏற்படாது.

பொருட்களின் மீது நாட்டமுள்ள நீங்கள் பூரணம் என்ற விஷயத்தை அடைய மாட்டீர்கள். பூரணம் என்கிற விஷயம் அடைந்துவிட்டால் பொருட்களின் மீது உங்களுக்கு நாட்டம் ஏற்படாது.

ஜமதக்கினி முனிவர் காமதேனு வேண்டுமென்று கேட்கவில்லை. அவரிடம் காமதேனு வந்து உட்கார்ந்திருக்கிறாள். நீங்கள் காமதேனு வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். கவர வேண்டும் என்று திட்டமிடுகிறீர்கள். உங்களுக்கு காமதேனு ஒருக்காலும் கிடைக்கமாட்டாள்.

அரசே, இந்த உலகத்தின் நியதி ஆசைப்படுபவர்களுக்கு ஆசைப்பட்ட விஷயம் கிடைப்பதே இல்லை. கிடைத்தாலும் அனுபவிக்க

முடியவில்லை. வெறும் ஆசைப்பட்டவரோடேயே அவர்களுடைய ஆயுள் முடிந்து விடுகிறது. ஆசையை அறுத்தால் ஒழிய அனுபவங்கள் சிறப்பதில்லை.

ஆசையை அறுப்பது என்பது பயிற்சியால் ஏற்படுவதல்ல. ஆசையை அறுப்பது என்பது கடும் யம நியமத்தால் ஏற்படுவதல்ல. கடும் யம, நியமத்தால் ஏற்படுபவை, மறுபடியும் கெட்டுப்போக வாய்ப்புண்டு. இறையருளால் ஏற்படுகின்ற மன அமைதி எதையும் எதிர்பார்ப்பதில்லை. அது ஒரு பூரணத்தில் மூழ்கி விடுகிறது. மிகப் பெரிய அமைதியில் ஆழ்ந்து விடுகிறது. பிறகு அதற்கு வேண்டுவன, வேண்டாதவை இல்லை. ஆசை என்கிற விஷயத்தை முற்றிலும் உதற இறையருள் தேவைப்படுகிறது. இறையருள் உள்ளே நுழைந்து விட்டால் ஆசை முற்றிலும் அகன்று விடுகின்றது. எனவே மன்னனே, உங்களுடைய முயற்சிகள் எல்லாவற்றையும் உதறிவிட்டு உங்கள் ஆத்திரங்கள் எல்லாவற்றையும் அகற்றிவிட்டு, உங்கள் ஆசைகள் எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டு இறையருளுக்காக காத்திருங்கள்.

உங்கள் வீட்டை ஒழுங்குபடுத்தி, அதிலுள்ள எல்லா இடங்களையும் சுத்தப்படுத்தி கோலமிட்டு, நீர் தெளித்து விளக்கேற்றி அமைதியாகக் காத்திருங்கள். எல்லா ஜன்னல்களையும் திறந்து வையுங்கள். வாசற் கதவைத் திறந்து வையுங்கள். தென்றல் உள்ளே வந்தாலும் வரலாம். வராது போனாலும் போகலாம்.

இறையருளும் தென்றல் போன்றதே. எப்போது வரும் என்று சொல்வதற்கில்லை. வர காத்திருத்தலே வாழ்க்கை.

எல்லாக் காலத்திலும் மனிதர்கள் புத்திசாலியாகவும், பணக்காரனாகவும், பெரிய போர் வீரனாகவும் அதிகாரம் செலுத்தும் அரசனாகவும் மாறுவதற்கு விருப்பப்படுவது போலவே முனிவர் ஆவதற்கும் விருப்பப்பட்டார்கள். மாறமுடியாததால் முனிவரைப் போல் வேடமிட்டுக் கொண்டார்கள். புத்திசாலியாய் வேடமிட்டால் மூன்று நிமிடத்தில் வாய் திறந்து பேச, புத்திசாலித்தனம் தெரிந்து போய்விடும். அரசனாக வேடமிட்டால் அடுத்த வினாடியே சுற்றியுள்ளோர்களால் இது வெறும் வேடம். அரசன் இல்லை என்பதைத் தெரிந்து எள்ளி நகையாடப்படும். போர் வீரனாக வேஷமிடப்பட்டால் அந்தப் போர் வீரனை ஒரு வாள் உருவலில் கண்டுபிடித்து விடுவார்கள். பணக்கார வேடமும் இப்படியே எளிதாகக் கண்டுபிடித்து, விட

முடியும். ஆனால் முனிவராக வேடமிட்டால் அதைக் கண்டுபிடிக்கத் தாமதமாகும். காவி உடையும், கமண்டலமும், தண்டமும், நீள தாடியும், தலை முடியும், மிருதுவான பேச்சும் கொண்டு ஒருவர் ஒரு முனிவரைப் போல நடந்து விடலாம். ஒருநாள் முழுவதும் நடித்து விடலாம். அட்டகாசமாய் நடிப்பதுதான் கஷ்டம். எளிமையாய் நடிப்பது எளிது.

எனவே, உண்மையைவிட பொய்மை எளிதாக இருப்பதால், எளிமையாக மாத் தோன்ற முடிவதால் நிறைய பேர் முனிவராவதற்கு முயற்சிப்பதை விட முனிவராக நடிப்பதை விரும்பினார்கள். வேடமிட்டார்கள். இயல்பாக வராத எளிமையை நாடகமாக்கினார்கள்.

அரசன் தபஸ்வி ஆச்ரமத்தில் செய்கிறான். அரசு ஆடம்பரம் பார்க்கிறான். அரசனுக்கு கூடவே நம்பிக்கை அதிகமாக இருந்து பலி கொடுக்கிறான் என்று மக்களுக்குத் தெரிந்தால் அதே வழியை வேகமாய் பின்பற்ற தலைப்பட்டு விடுவார்கள். அந்த வழியில் பணிசெய்து பின்பற்றுகிறேன் என்று காட்டுவதற்காக பொய்யாக வேஷம் போடவும் தயங்க மாட்டார்கள்.

கார்த்த வீர்ய அர்ச்சுனன் தேவையற்று தபஸ்வியாய் இருக்க ஆசைப்பட்ட அவன் தேசத்து மக்களும் நிறைய சிரிப்பாக்கினார்கள். அபத்தமாய் கடைபிடித்தார்கள். எளிமையாய் இருப்பதற்கு முயற்சி செய்து முடியாமல் மாற்றுப் போய் வேடமிட்டார்கள். ஆனால் அரசன் கடிக்காரன். முயற்சியில் வல்லவன். திறமை உடையவன். அதனால் மிகுந்த வலிவோடு ஹடயோகத்தைப் பயின்று உடம்பும், முகமும் பூரிக்க தன்னைத் தானே நிலைக் கண்ணாடியில் பார்த்துப் பரவசப்பட்டுக் கொண்டான்.

ஜமதக்னி முனிவரைப் போய் பார்த்து வந்தால் என்ன என்று யோசித்தான். அவனுக்கு ஒப்பிட்டுப் பார்க்கும் ஆசை வந்தது. ஹடயோகத்தின் உச்சியைத் தொட்டிருக்கிறோமே. ஆயிரம் கைகள் உள்ளவன் என்ற பெயரை வாங்கியிருக்கிறோமே. ஒரே நேரத்தில் ஆயிரம் விஷயங்களில் ஈடுபடுகின்ற திறமையை பெற்றிருக்கிறோமே. நம்மை விட எப்படி ஜமதக்னி முனிவர் உயர்ந்தவர் ஆவார். என்னை விட பொலிவு அவருக்கு எப்படி கிடைக்கும்.

கண்கள் பெரிதாய், நெற்றி மேடிட்டதாய், மூக்கு கூர்மையாய், காது மடல்கள் பெரிதாய், உதடுகள் கனிந்ததாய், தோலில் வழவழப்பு ஏறி, கன்னங்களில்

செழுமை மிகுந்து அழகாக காட்சி அளிக்கின்ற நம்மை விடவா ஜமதக்னி முனிவர் பொலிவுடன் இருப்பார். நாட்டிலுள்ள ஆண்களும், பெண்களும் நம்மைப் பார்த்து மயங்குகிறார்களே. கண் சொருகி இருக்கிறார்களே. எப்படி ஒரு அழகு. இத்தனை அழகு எங்கிருந்து வந்தது என்றெல்லாம் குருமார்கள் கேட்கிறார்களே. இதே போல் ஜமதக்னி முனிவர் கேட்க மாட்டாரா. நான் அழகா, ஜமதக்னி முனிவர் அழகா. நான் உயர்ந்தவரா, ஜமதக்னி முனிவர் உயர்ந்தவரா. நான் தபஸ்வியா, ஜமதக்னி முனிவர் தபஸ்வியா. நான் அவரை வணங்க வேண்டுமா. அவர் என்னை வணங்குவாரா.

அரசன் கார்த்த வீர்ய அர்ச்சுனன் கட்டளையிட அவன் மனைவியரும், மகன்களும், மந்திரிமார்களும், குருமார்களும், படைகளும், மக்களும் சூழ மிகப் பெரிய ஒரு கூட்டம் ஒன்று காட்டை ஊடறுத்து ஜமதக்னி முனிவர் ஆசிரமம் நோக்கிப் போனது. கூட்டமாய் வருகின்ற மனிதர்களைப் பார்த்து காட்டிலுள்ள பறவைகளும், மிருகங்களும் அலறி அடித்துக் கொண்டு ஓடின. காட்டின் அமைதி முற்றிலும் கெட்டுப் போயிற்று.

ஜமதக்னி முனிவர் குடிலை விட்டு வெளியே வந்து அரசன் வரும் திக்கை நோக்கி கவலையோடு பார்த்தார். அரசனை வரவேற்க சித்தமானார். எது நடந்தாலும் சரி, அது இறைவனின் விருப்பம் என்று மௌனமாக தன் மனோநிலையை மாற்றிக் கொண்டார். அரசனுக்காக காத்திருந்தார்.

அரசன் ஆசிரமத்திற்குள் நுழைந்தான். உள்ளே நுழைந்ததும் ஏற்படுகின்ற மெல்லிய சிலிர்ப்பைக் கண்டு அதிசயித்தான். ஆசிரமம் சுத்தமாக இருந்தது. அதுவரை ஆரவாரமாக வந்த ஆட்களெல்லாம் உள்ளே நுழைந்ததும் அமைதியாகி விட்டதைக் கண்டான். எதனால் இது என்று அதிசயித்தான். கூர்ந்து முனிவரை உற்று நோக்கினான். முனிவர் கருணை பொங்கும் கண்களால் அவனைக் கவனித்தார்.

"வருக. நலமே வருக. நல்லது விளைவிக்க வருக."

என்று கை கூப்பி வரவேற்றார்.

அந்தப் பணிவு அவனை ஆட்டங்காணச் செய்தது. கண்களில் பொங்கிய கருணை அவனுக்கு வியப்பைக் கொடுத்தது. இத்தனை குடி படைகளோடு வருகிறோமே. என்ன செய்வது என்கிற பயமேயில்லையா. எப்படி உபசரிப்பது என்ற கவலையில்லையா. ஏன் வந்திருக்கிறான் என்ற கேள்வி இல்லையா. எல்லாம்

ஒதுக்கி விட்டு வெகு காலம் பிரிந்த நண்பனை வரவேற்பது போல இரண்டு கைகள் நீட்டி வரவேற்கிறாரே. விரல்களைப் பிடித்து கண்களில் ஒற்றிக் கொள்கிறாரே. என்ன அருமை இது. இவரிடம் இருக்கின்ற இந்த வெகுளித்தனம்தான் இவரின் பலமா. இந்த வெகுளித்தனம்தான் என்னிடம் இல்லையா. இந்த வெகுளித்தனம் வர என்ன ஹடயோகம் செய்ய வேண்டும் என்று யோசித்தான்.

"நீங்கள் வயதிலே பெரியவர். அறிவிலே பெரியவர். ஞானி. உங்களைச் சந்திக்கும் போது ஏதேனும் கையுறைகள் எடுத்துக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் அவ்விதம் நான் வரவில்லை. மலர்களும், பூக்களும் கொண்டு வந்து உங்களை உபசரிப்பதுதான் முறை. ஆனால் நெடுந்தூரத்திலிருந்து வருவதால் இவைகளை எடுத்து வர முடியவில்லை. உங்களுக்கென்று துணிகளை கொண்டு வர நான் ஏற்பாடு செய்தேன். வழியிலே குளிர் அதிகமாக இருந்து குதிரைகள் நடுங்கியதால் அந்தத் துணிகளை குதிரைகளுக்குப் போர்த்தி விட்டேன். இப்பொழுது எந்தக் கையுறையும் இல்லாமல் உங்கள் முன்னே வந்து நிற்கிறேன்" என்று கார்த்த வீர்ய அர்ச்சுனன் சொன்னான்.

"அன்பான வார்த்தைகளை விட மிகப் பெரிய கையுறைகள் எதுவும் இருக்க முடியுமா. நீ ஏதேனும் கொண்டு வந்து கொடுத்து மகிழ்ச்சியாக என்னோடு பேசாது போனால் நீ கொண்டு வந்து கொடுத்தமைக்கு அர்த்தமிருக்குமா. இப்பொழுது எதுவும் இல்லாமல் இந்த அன்பான வார்த்தைகளைச் சொல்கிறாய். இதை விட மிகச் சந்தோஷம் எனக்கு எதைத் தர முடியும். எனவே ஒருவரை பார்க்க வருகிறபொழுது அவர் கொண்டு வருகின்ற கையுறைகளை விட அவருடைய மனம் எந்த நிலையில் இருக்கிறது. அவர் சொற்கள் என்ன விஷயத்தைச் சொல்லுகின்றன என்பதே முக்கியம். அன்பும், பண்பும் மிகுந்த அரசனான நீ இதமான வார்த்தைகளை என்னிடம் சொன்னாய். இந்த வார்த்தைகள் எனக்கு சந்தோஷமாக இருக்கின்றன. என் மீது நீ கொண்ட அக்கறையை உறுதிப்படுத்துகின்றன. இந்த அக்கறை எனக்குப் போதும். இதை விட மிகப் பெரிய கையுறை வேறு எதுவும் இல்லை" என்று ஜமதக்கினி முனிவர் சந்தோஷமாகச் சொன்னார்.

உன்னிடமிருந்து நான் வேறு எதுவும் எதிர்பார்க்கவில்லை என்கிற நிறைவு அவர் பேச்சில் தெரிந்தது. ஒரு அரசன் பார்க்க வந்த போது ஒரு நெல்மணி

கூட இல்லாமல் அவரை வந்து வணங்கியிருக்கிறான் என்ற வருத்தமே இல்லாமல் காட்டிலே வசிக்கின்ற எனக்கு நாட்டிலே வசிக்கின்ற நீ ஏதேனும் கொண்டு வரக்கூடாதா ... ஆதலகம் இல்லாமல் மரச்சாமான்களாவது எடுத்து வந்திருக்கலாமே என்கிற எண்ணமில்லாமல். இங்கு எல்லாமும் இருக்கிறது எந்தக் கவலையும் இல்லை என்கிற வகையிலே, அவனை வரவேற்றது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அதே சமயம் உங்களுக்கு நான் வேறு ஒரு தொந்தரவும் தரப்போகிறேன்."

"என்ன, உன்னால் எனக்கு எப்படித் தொந்தரவு வரும்." கார்த்த வீர்ய அர்ச்சுனன் பேசியதற்கு ஜமதக்கினி முனிவர் மிகப்பிரியத்தோடு பேசினார்.

"என்னுடைய படை வீரர்கள் கடந்த மூன்று நாட்களாக சரியாக உணவு இல்லாமல் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருக்கின்ற உணவை சிறிதளவு, கொடுத்து குதிரைக்கு கொடுக்கின்ற உணவை பாதியாக்கி அதை படை வீரர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். எனவே நல்ல விருந்து அவர்களுக்கு உண்ணும் வண்ணம் ஏற்பாடு செய்ய வேண்டும். ஆசிரமத்தில் ஏதேனும் சேமித்து வைத்திருந்தால் அவைகளை உடனடியாக என்னுடைய வீரர்களுக்கு உபயோகப்படுத்த வேண்டும். இல்லையெனில் என் வீரர்கள் சோர்ந்து போவார்கள்."

"சோர்ந்து போவதா. என் ஆசிரமத்திற்கு வந்தா. அப்படி ஒரு விஷயம் நடக்கவே நடக்காது. வந்த அனைவருக்கும் உடனடியாய் நல்லதொரு பழரசம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் கவலையை விடுங்கள். நீங்கள் போய் அமர்ந்து கொள்ளுங்கள்" என்று சொல்லி சீடர்களைப் பார்க்க சீடர்கள் அரசனை வேறொரு குடிசைக்கு அழைத்துப் போனார்கள்.

ஜமதக்கினி முனிவர் காமதேனு இருக்கின்ற இடத்திற்குப் போனார்.

"லட்சக்கணக்கான படை வீரர்கள் வந்திருக்கிறார்கள். அம்மா காமதேனு உன்னுடைய மகிமையினால் அவர்களுக்கு பழரசம் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குண்டான பாத்திரங்களும், அகப்பைகளும் நீதான் தர வேண்டும்" என்று கை கூப்பி வேண்டினார்.

காமதேனு ஒரு சிறிய குடிசையில் சுவரோடு ஒன்றி பயத்தோடு நின்று கொண்டிருந்தது.

"என்ன பயம். மனிதர்கள் உள்ளே வருவதுகண்டு பதட்டமாகி விட்டாயா. திடீரென்று ஒரு அரசன் வந்து நின்றதும் உனக்கு பயம் ஏற்பட்டு விட்டதா. அரசன் கார்த்த வீர்ய அர்ச்சுனன் தபஸ்வி. நல்லவர். அந்த விருந்தினருக்கு ஏற்ற வகையில் உணவு தயாரிக்க உன்னைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று கை கூப்பினார்.

காமதேனு என்கிற அந்த வள்ளல் பசு பேச ஆரம்பித்தது.

"சகுனங்கள் நன்றாக இல்லை ஜமதக்கினி முனிவரே. என் மனம் அடிக்கடி நடுங்குகிறது. இப்படி திடுக்கிடல் எனக்கு ஏற்பட்டதே இல்லை. ஏதோ கெட்டது நடக்கப் போகிறது என்கிற ஒரு வேதனை என்னுள் பொங்கி வருகிறது. அந்த அரசனின் உடம்பில் இருந்து வெளியே வருகின்ற அதிர்வுகள் அவன் கோபமும், ஆத்திரமும், பொறாமையும் கொண்டவனாக இருக்கிறான், சூழ்ச்சியோடு பேசுகிறான் என்பதைச் சொல்லுகின்றன. நீங்கள் அதை அறிந்தும் அறியாத வண்ணமாக அவனுக்கு இதமாகவும் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்" காமதேனு குரலில் கவலை தெரிந்தது.

"அவன் நிறம் மாறி இங்கு வந்திருப்பதையும் நீல நிறத்தோடு அவன் உட்கார்ந்திருப்பதையும் நானும் கவனித்தேன். ஆனால் அவன் மன அதிர்வுகளை என்னுடைய மன அதிர்வுகளால் மாற்றி விட முடியும். கோபமாகவும், பொறாமையாகவும், ஆத்திரமாகவும் வருபவரை இதமாகப் பேசினால் அவருடைய அந்தக் குணங்கள் வெகுவாகக் குறைந்து முற்றிலும் நம்முடைய குணங்களுக்கு மாறி விடலாம். எனவேதான் மிக சந்தோஷமாக, பிரியமாக, சத்தியமாக அவனை வரவேற்றேன். அந்த சத்தியம் அவனை இதமாக்கியிருக்கிறது. யோசிக்க வைத்திருக்கிறது."

"திட்டத்தோடு ஒரு படையெடுப்பு போல அவன் இங்கு வந்திருக்கிறான். வேண்டுமென்றே எல்லோருக்கும் உணவு வேண்டுமென்று கேட்கிறான்."

"எனக்கு அது புரிகிறது. ஆனாலும் என்னுடைய தர்மத்தை நான் விடுவதற்கில்லை. அவன் மனதை என்னால் மாற்ற முடியும் என்று நம்புகின்றேன். எனவே எது பற்றியும் கவலைப்படாது அரசனுடைய படை வீரர்களுக்கு மீண்டும் வலிவு தரும் உற்சாகமான பானத்தை, பழரசத்தை உடனே தருவாயாக. அதற்குண்டான உபகரணங்களையும் நீயேதான் வழங்க வேண்டும். இது என் அன்பான வேண்டுகோள்."

காமதேனுவை சுற்றிப் பணிந்து வணங்கி விட்டு நகர்ந்தார்.

காமதேனு விநாடிப் பொழுதில் பழரசமும், பாத்திரங்களும் அந்த ஆசிரமத்து சமையல் அறையில் இருப்பதற்கு ஏற்பாடு செய்தாள்.

காமதேனு அங்கு வந்த காலத்திலிருந்து உணவுக்குப் பஞ்சமில்லை. கேட்ட உணவெல்லாம் கிடைத்துக் கொண்டிருந்தது. அந்த சமயம் காமதேனுவை விதம் விதமாக கேட்பதற்கும் ஆசிரமத்து சீடர்கள் அனுமதிக்கப்படவில்லை. சில சமயம் காமதேனுவின் திறனைக் காட்டுவதற்காக, சீடர்களை வியப்பில் ஆழ்த்துவதற்காக காமதேனுவே மனமுவந்து ருசியான பண்டங்களை அவர்கள் முன்னே தோற்றுவிப்பாள். அப்பொழுது அவர்கள் குதூகலித்து காமதேனுவை கொண்டாடுவார்கள். ஆனால் இன்று லட்சம் வீரர்களுக்கு பழரசம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பது பார்த்து சீடர்கள் வியந்தார்கள். காமதேனுவை நோக்கிக் கை கூப்பினார்கள். "அம்மா எவ்வளவு பெரிய கொடையாளி நீ" என்று கொண்டாடினார்கள்.

காமதேனு சோகமான புன்னகையோடு அவர்கள் பாராட்டை ஏற்றுக் கொண்டாள்.

பழரசம் வழங்கப்பட்டது. வீரர்கள் ஆவலாகப் பழரசம் குடித்தார்கள். இன்னும் சில கோப்பைகள் வேண்டுமென்று கேட்டார்கள். மறுபடி, மறுபடி வாங்கி உதடு வழிய நெஞ்செல்லாம் வழிய குடித்தார்கள். உற்சாகமானார்கள். முனிவர்களையும், சீடர்களையும் விழுந்து வணங்கினார்கள். கிடைத்த இடத்தில் அயர்ந்து தூங்கினார்கள்.

அரசன் திகைத்தான். அவனும் பழரசம் அருந்தினான். கவலையானான்.

இத்தனை பேருக்கு இவ்வளவு ருசியுள்ள உணவு கொடுக்க முடியும் என்கிற நம்பிக்கைதான் ஜமதக்கினி முனிவருக்கு கண்ணில் கருணையை, பேச்சில் அன்பை கொடுத்திருக்கிறது. இத்தனை பேரை ஏன் அழைத்து வந்தாய் என்று சீற வேண்டிய ஒரு முனிவர் இன்னும் ஒரு லட்சம் பேர் வந்தாலும் அவருக்கு நான் உணவு தருவேன் என்ற நம்பிக்கைதான் அவருக்கு இதமான வாசகங்களையும், அன்பையும் கொடுத்திருக்கிறது. அன்பு கருணையெல்லாம் பொருளாதார விஷயங்கள். பொருளாதாரம் நன்றாக இருந்தால்தான் இவைகளெல்லாம் உள்ளிருந்து வெளியே ஏற்படும். சிக்கல் மிகுந்த வாழ்க்கையில் என்ன செய்வோம் என்று திசை தெரியாமல்

தவிக்கிறபொழுது அன்போ, கருணையோ ஏற்படாது.

செல்வமே சந்தோஷத்தின் அடிப்படை. சந்தோஷம் இருந்தால்தான் கல்வி கற்க முடியும். கல்வியில் பெறும் உயர்வுதான் தலைவனாக்கும். உடல் வலிவும், புத்திவலிவும் ஒரு மனிதனின் உயர்வுக்குக் காரணம். எல்லாவற்றிற்கும் அடிப்படை செல்வநிலை.

இந்த ஜமதக்கினி மிகப் பெரிய செல்வந்தனாக இருக்கிறான். வாழ்க்கை பற்றிய எந்தக் கவலையும் இல்லாதவனாக இருக்கிறான். இப்பொழுது புரிந்து விட்டது. வாழ்க்கை பற்றிய தினசரி கவலைகள் இல்லாததனால்தான் இவன் முகம் இத்தனை அமைதி மிளிர இருக்கிறது. இவன் முகத்தில் இத்தனை ஒளி வீசுகிறது. இவன் கண்கள் இத்தனை கருணையோடு சொக்கலாக இருக்கின்றன. இவன் உதடுகள் கனிந்து, இவன் மேனி எழில் பளபளப்பாக இருக்கிறது. நல்ல உணவு, நிம்மதியான தூக்கம், இதமான மனைவி, சுகமான ஏவல் பெண்டிர் என்று இவன் அரச போகத்தோடு இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஆனால் இவன் செல்வத்தின் அடிப்படை என்ன என்பது புரியவில்லை. மெல்ல, மெல்ல அதுபற்றி விசாரிக்க வேண்டும். இவன் பொக்கிஷ அறை எது. எங்கிருந்து இப்படி உணவுகள் தயார் செய்ய முடிகிறது. வேறு எந்த கட்டத்தினர் எங்கே இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். மிகப் பெரிய பட்டாளம் ஒன்றை எங்கோ இந்த காட்டுக்குள் மறைத்து வைத்திருக்க வேண்டும் என்று நினைத்தான். எப்பொழுது உணவு போடப்படும் என்று அடுத்த கட்டத்திற்குத் தாவினான். 'விரைவில், விரைவில்' ஜமதக்கினியின் மாணவர்கள் பதில் சொன்னார்கள்.

உணவு வெகு வேகமாகக் கொண்டு வந்து இறக்கப்பட்டது. எல்லோருக்கும் வட்டில்கள் தரப்பட்டன. எல்லா வட்டில்களிலும் ஆவி பொங்கும் சுவையான உணவு இருந்தது. வீரர்கள் வியப்பானார்கள்.

உணவு எடுத்து வரும் போது ஜமதக்கினி முனிவர்களின் மாணவர்கள் உணவுகளை மறைத்து, ஒரு ஒழுக்கத்திற்கு வந்தால்தான் உணவு தரப்படும் என்று உரக்கக் கட்டளையிட்டார்கள். உடனே அவர்கள் கட்டளைக்குக் கீழ்பணிந்து கார்த்த வீர்ய அர்ச்சுனனின் வீரர்கள் வரிசையாக இருந்தனர். நாலா பக்கமும் அவர்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டன. அந்த லட்சம் பேருக்கும் கால் நாழிகையில் உணவு கொடுக்கப்பட்டு விட்டது. அத்தனை பேரும் உணவு உண்டு கொண்டிருந்தார்கள். எந்தக் கூச்சலும் இல்லாமல், எந்தக்

கூக்குரலும் இல்லாமல், ஆவேசமும் இல்லாமல் சாத்வீகமான அந்த உணவை வேகமாக விழுங்கிக் கொண்டிருந்தார்கள். கை கழுவினார்கள். தட்டுகளை கழுவி வைத்தார்கள். ஜமதக்கினி முனிவரின் மாணவர்களுக்கு எதிரே போய் கை கூப்பி நன்றி சொன்னார்கள்.

மிகச் சுவையாக இருந்தது இதுவரை இப்படி ஒரு சாப்பாடு சாப்பிட்டதே இல்லை. இது மனதிற்கு நிம்மதியைத் தருகிறது என்றெல்லாம் பேசினார்கள். நாங்கள் ஏதேனும் உழைக்க வேண்டுமா. இப்படி உணவு கொடுத்திருக்கிறீர்களே. பதிலுக்கு ஏதாவது செய்ய வேண்டுமா என்றும் கூட சிலர் கேட்டார்கள்.

எதுவும் தேவையில்லை. நன்கு ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். தேவையெனில் எங்கள் குருநாதர் உங்களிடம் கேட்பார் என்று மாணவர்கள் இதமாக பதில் சொன்னார்கள்

அரசன் சகலமும் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனான். தன்னுடைய கட்டளை தவிர வேறு ஒன்றுக்கும் அசையாத இந்தக் காவலர்கள், இந்த வீரர்கள் கைகூப்பி பேசுவதும், உதவி என்ன செய்ய வேண்டும் என்று கேட்பதும், ஒரு ஒழுங்குக்கு கட்டுப்படுவதும் ஆச்சரியமாக இருந்தன.

சிறிது ஓய்வுக்குப் பிறகு மெல்ல வீரர்கள் எழுந்தார்கள். ஆற்றங்கரைக்கு அருகே உள்ள மறை விடங்களுக்குப் போய் உடம்பை லேசாக்கிக் கொண்டார்கள். வந்து ஆற்றில் குளித்தார்கள். மெல்ல நகர்ந்து மிக அமைதியாய் ஆசிரமத்திற்கு வந்து அமர்ந்து கொண்டார்கள். சற்று நெருக்கமாக அமர்ந்த வீரர்களுக்கு நடுவே ஜமதக்கினி முனிவரின் சீடர்கள் போய் பாடல்கள் பாட ஆரம்பித்தார்கள். சுலோகங்கள் சொல்ல ஆரம்பித்தார்கள். அதற்கு பொருள் சொன்னார்கள். கேள்விகளுக்கு பதில் சொன்னார்கள். இரவு பந்தங்கள் ஏற்றும் வரை இந்த பேச்சு நடந்தது. ...

பாடல்கள் வாத்தியக் கருவிகளுடன் முழங்கப்பட்டன. லட்சம் வீரர்களும் மிக அமைதியாக காட்டினுடைய நிசப்தத்துடன் ஒன்றிப் போய் சீடர்களுடைய பாட்டை ஆவலாகக் கேட்டார்கள். எல்லோருக்கும் சொம்பு நிறைய பசும்பால் தரப்பட்டது. வீரர்கள் மறுபடியும் தூங்க கார்த்த வீர்ய அர்ச்சுனன் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தான். மெல்ல ஆசிரமத்தை இருளில் சுற்றி வந்தான். ஒரு தலைமை

மாணவனை அருகே அழைத்தான்.

"எவ்விதம் இம்மாதிரியான அறுசுவை உணவுகளை ஜமதக்கினி முனிவர் அளிக்கிறார்" என்று கேட்டான்.

"காமதேனு என்ற ஒரு பசு வள்ளல் தன்மையோடு இங்கு இருக்கிறது. அதனால்தான் எங்களால் அறுசுவை உணவு தர முடிகிறது. நாங்களும் தினசரி காமதேனுவிடமிருந்தே உணவு எடுத்துக் கொள்கிறோம்."

"அப்படியா. காமதேனு எங்கிருக்கிறது."

"அதைப் பார்க்க வேண்டுமென்றால் ஜமதக்கினி முனிவருடைய அனுமதி வேண்டும்."

"தேவையில்லை. நான் இங்கு விருந்தினர். இங்கு நான் என்ன பார்க்க விரும்புகின்றேனோ அத்தனையும் பார்க்க எனக்கு உரிமை உண்டு. நான் அரசன். இந்த வனம் என்னுடைய ஆளுமைக்கு உட்பட்டது. எனவே இங்கிருக்கிற பொருள் எதுவும் மறைவாக எனக்கு தெரியாமல் இருக்கலாகாது. அரசன் என்கிற முறையிலே கட்டளையிடுகிறேன். காமதேனுவை எனக்குக் காட்டு" என்று மிரட்டினான்.

தலைமைச் சீடன் அழைத்துப் போய் கொட்டகையின் கதவைத் திறந்து காமதேனுவைக் காட்டினான். காமதேனு சுவர் ஓரம் அமைதியாக நின்று கொண்டிருந்தது.

"மிகச் சிறிய பசுவாக இருக்கிறதே. இந்தப் பசுவில் இருந்தா உணவுகள் வருகின்றன."

"ஆமாம்."

கொட்டகைக்குள் காலடி எடுத்து வைக்கும் போது காமதேனு பலமாகச் சீறியது. உஷ்ணமான ஒரு காற்று முகத்தில் அடிக்க அரசன் பின் வாங்கினான். கண்கள் எரிந்தன. மூக்கு ரோமங்கள் பொசுங்கின. காதுக்குள் கும்மென்று ஒரு பலத்த சத்தம் பரவியது. நெஞ்சில் யாரோ தாக்கியது போல உணர்வு ஏற்பட்டது.

"என்ன இது. ஒரு சிறு மூச்சு இத்தனை வேகமாக இருக்கிறது."

"ஆமாம். காமதேனு உணவு தயாரிக்க மட்டும் அல்ல. அவளால் படை வீசர்களையும் தயாரிக்க முடியும். சக்தியைத் தயாரிக்க முடியும். மிக உன்னதமான சக்தியை, பெரிய சக்தியை வெளியே விட முடியும். காமதேனு என்பவள் சக்தியின் சொரூபம். சக்தியின் விதம் விதமான வடிவங்களை அவள் உடனடியாக தயாரித்துக் கொடுப்பதில் வல்லவள். அவளின் பெரு மூச்சு இந்த

உலகத்தையே எரித்து விடும் வல்லமை உடையது. உங்களின் வருகை காமதேனுவுக்குப் பிடிக்கவில்லை. ஒரு வேளை ஜமதக்கினி முனிவரின் அனுமதியின்றி நான் உங்களை அழைத்து வந்தது அவளுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். எனவே தயவு செய்து பின்னடைந்து விடுங்கள்" அவன் கை கூப்பி வேண்டிக் கொண்டான். அரசன் பின்னடைந்தான். மெல்ல காட்டின் வேறு பகுதிக்கு அவனோடு நடக்கத் துவங்கினான்.

"இந்தக் காமதேனு எங்கிருந்தது."

"இது தேவலோகத்துப் பிரஜை."

"இங்கு ஏன் வந்தது."

"தெரியவில்லை. பூலோகத்தில் அமைதியாக சிறிது காலம் இருக்க வேண்டும் என்று எண்ணமிட்டு எது அமைதியான இடம் என்று தீர்மானித்து ஜமதக்கினி முனிவரின் ஆசிரமம்தான் சரியானது என்று பலர் சொல்ல இங்கு வந்து காமதேனு குடியேறினாள். குடியேறிய நாளிலிருந்து தினசரி ஹோமமும், யாகமும் நடைபெற்று வருகின்றன. சகல திரவியங்களும் காமதேனுவிலிருந்தே நாங்கள் எடுத்துக் கொள்கிறோம்."

"எதற்காக ஹோமங்கள் செய்கிறீர்கள்."

"உலகத்தின் நன்மை பொருட்டு. நல்லபடி மழை பெய்ய வேண்டும் என்றும், இயற்கை உபாதைகள் இருக்கக்கூடாது என்றும், நோய்கள் பரவக்கூடாது என்றும், கடல் பொங்கக்கூடாது என்றும், மக்கள் திடமாகவும், சந்தோஷமாகவும் வாழ வேண்டும் என்றும், உயிர்கள் திருப்தியாக இருக்க வேண்டும் என்றும் ஹோமங்கள் செய்யப்படுகின்றன."

"உதாரணமாக என்ன ஹோமம் நடைபெறுகிறது என்று சொல்."

"சக்தியை வாலை என்ற திரிபுரசுந்தரியாக ஆவாஹனம் செய்து அவளை சந்தோஷப்படுத்துகின்ற அவள் பெயரை உச்சரிக்கும் விதமாய் அவள் பீஜாட்சர மந்திரத்தை அதிர்வோடு சொல்லுகின்ற விதமாய் ஒவ்வொரு மாணவனும் ஒரு லட்சம் ஆவர்த்தி வெறுமே செய்யாமல் அக்னியில் செய்கிறார்கள். இங்கு உள்ள நூறு மாணவர்கள் லட்சம் முறை அக்னியில் வாலை என்கிற திரிபுரசுந்தரி, பாலா திரிபுரசுந்தரி மந்திரத்தை சொல்வதினால் உலகத்திலுள்ள எல்லார் முகமும் பளபளப்பாகவும், வசீகரமாகவும் மாறுகின்றன. தாவரங்கள் செழித்தோங்கி வளருகின்றன. தாவரங்கள் செழித்தோங்கி

வளர்வதால் மக்களும், பிராணிகளும் மிக நல்ல முறையில் வளர்கின்றன. தாவர சுபிட்சம்தான் உலக சுபிட்சம். தாவர சுபிட்சம் மிகச் சரியான நேரத்தில் பெய்யும் மழையால் ஏற்படுகிறது. இயற்கையை கட்டுப்படுத்த பாவா [illegible] மந்திரத்தால் முடியும். இயற்கையை அமைதிப்படுத்த அந்த மந்திரம் உதவி செய்யும்."

"பிறகு" கார்த்த வீர்ய அர்ச்சுனன் கேட்டான்.

"உலகத்திலுடைய அசைவு, பருவநிலைகளின் அமைதி, பிரபஞ்சத்தால் நவ கோள்களால் ஏற்படுவது. எனவே கோள்களை சந்தோஷப்படுத்த பஞ்சகி என்கிற மந்திரத்தை நாங்கள் லட்சம் ஆவர்த்தி செய்கிறோம். இங்குள்ள நூறு மாணவர்கள் லட்சம் ஆவர்த்தி பஞ்சகி செய்கிறார்கள். அதுவும் அக்னியில் நெய் வார்த்து செய்கிறார்கள். உதடு அசைத்து நூறு முறை சொல்வதும் ஒருமுறை நெய் வார்ப்பதும் ஒன்றே. எனவே ஒரு கோடி முறை ஒரு மாணவனால் இங்கு அந்த மந்திரம் உச்சரிக்கப்படுகின்ற பலத்தைப் பெறுகின்றது. அதே போல நூறு மாணவர்கள் செய்வதால் நூறு கோடி முறை இந்த மந்திரங்கள் இங்கு உச்சரிக்கப்படுகின்றன. இதுவே வேலையாய், இது மட்டுமே வேலையாய் உலக நன்மைக்காக நாங்கள் இங்கே செய்து கொண்டிருக்கிறோம். எங்கள் வாழ்க்கையில் வேறு எதுவும் எங்களுக்கு லட்சியம் இல்லை. இடையறாது, இடையறாது இப்படி அக்னியில் நெய் வார்த்து மந்திரங்கள் செய்வது மட்டுமே எங்கள் வாழ்க்கை."

"நீங்கள் இல்லறத்தவர்களா?"

"ஆமாம். இல்லறமல்லது நல்லறமன்று. எங்கள் இல்லத்தரசிகளுக்கும் இந்த மந்திர ஜபமே மிக முக்கியமானது என்று சொல்லித் தரப்பட்டிருக்கிறது. இதற்காகவே நாங்கள் பிறந்திருக்கிறோம் என்று உணர்த்தப்பட்டிருக்கிறது. இந்த மந்திர ஜபங்கள் நாங்கள் செய்ய எங்களுக்கு உதவியாய் அமைவதுதான் அவர்கள் வேலை. விடிகாலையில் எழுந்தால் உச்சி வேளை வரை எல்லோருக்கும் இங்கு வேலைகள் இருக்கும். எல்லோரும் அவரவர் வேலைகளில் அமைதியாக ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். உச்சி வேளையில் சிறிதளவு உணவு உண்டுவிட்டு ஓய்வெடுத்துக் கொள்வோம். சூரியன் அஸ்தமிப்பதற்கு இரண்டு நாழிகைக்கு முன்னால் எழுந்து இரவு நேர பூஜைகளுக்கு தயார் செய்து கொள்வோம். பேசுவதும், பாடுவதும், சொற்பொழிவுகள் நிகழ்த்துவதும் அந்தி சாயும்போது ஏற்படும். நன்கு இருட்டியபிறகு

நாங்கள் உறங்கப் போய் விடுவோம்."

"உலக நன்மைக்காக பூஜை செய்கிறேன் என்று சொன்னீர்கள். உங்களுக்கு ஏதும் நன்மை இல்லையா?"

அந்த மாணவன் பளிச்சென்று வாய் விட்டுச் சிரித்தான். அவன் சிரிப்பு அரசனுக்கு கோபத்தைக் கொடுத்தது.

"உலக நன்மைக்காக பூஜை செய்கிற பொழுது உலகத்தில் இருக்கிற எனக்கு நன்மை ஏற்படாமல் வேறு யாருக்கு ஏற்படும். இதில் நான் என்கிற எண்ணமே இல்லை. உலகத்திற்கு பூஜை செய்கிற போழுது நான் என்கிற விஷயம் அடக்கமாகிறது. எல்லோருக்கும் பெய்யும் மழை எனக்கும் பெய்கிறது. எல்லோருக்கும் காயும் வெய்யில் எனக்கும் காய்கிறது. எல்லோருக்கும் கனியும் கனி எனக்கும் உண்ணக் கிடைக்கிறது. எனவே நானும் உண்டு மற்றவரும் உண்டு மிகச் சந்தோஷமான ஒரு நிலையில் இருக்கிறோம். எனவே எனக்கு என்ன கிடைத்தது என்கிற ஒரு பேச்சே எனக்குள் எழவில்லை. எல்லோருக்கும் கிடைத்தது என்கிறதுதான் இங்கே முக்கியம்."

"இப்படி எல்லோருக்கும் கொடுப்பது உனக்கு ஒரு கர்வத்தைத் தரவில்லையா?"

"நானா கொடுக்கிறேன். அல்லது நான் சம்பாதித்த சொத்தை வழங்குகிறேனா. அல்லது என் மூதாதையர் சொத்தை தருமமாக்குகிறேனா? நான் வரும் போது என்ன கொண்டு வந்தேன். போகும் போது என்ன எடுத்துப் போகிறேன். இங்கிருப்பதை எடுத்து அங்கு வழங்குவதற்கும் அங்கிருப்பதை எடுத்து இங்கே வழங்குவதற்கும் முயற்சி செய்கிறேன். அவ்வளவே. அமர்ந்து யோசித்தால் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் வியப்பாக இருக்கும். வாழ்க்கையை வியப்பதால் எனக்கு கர்வம் வரவேயில்லை. கர்விகளுக்கு வாழ்க்கையை பார்க்க முடியாது. கர்வம் கண்களை மறைக்கும். வியப்பு எழாது. நான் அந்த வகையில்லை." மாணவன் முகமெல்லாம் சிரிப்போடு சொன்னான்.

கார்த்த வீர்ய அர்ச்சுனன் சரக்கென்று அந்த மாணவனை விட்டு அகன்றான்.

"இவ்வளவு தூரம் காட்டிற்கு என்னைத் தேடி வர வேண்டிய காரணம் ஏதாவது இருக்கிறதா கார்த்த வீர்ய அர்ச்சுனா. மனதில் ஏதேனும் கவலையா. உன் கண்கள் கருவளையத்தோடு இருக்கின்றன. உன் உதடுகளில் மெல்லிய துடிப்பு இருக்கிறது. உன் கை நுனிகளை உன் கட்டை விரல் நீவிக் கொண்டே இருக்கிறது. உன் கழுத்தில்

ஒரு நிலையாமை தெரிகிறது. உன் புருவங்கள் சுருங்கி விரிகின்றன. நீண்ட மூச்சு, பதினாறு மாத்திரை கொண்ட மூச்சு விடுகிறாய். இது சோகத்தைச் சொல்லும் குறி. என்ன சோகம் என்ன துக்கம் என்று சொல்வாயானால் நான் உனக்கு உதவி செய்ய முடியும் என்று நினைக்கிறேன். நாடாளும் மன்னன் ஒரு பொழுதும் துக்கத்திலோ கவலையிலோ, தனிமையிலோ இருக்கக்கூடாது. அவனுக்கு பல பெண்களுடைய ஸ்நேகம் இருக்கலாம் என்று அனுமதித்ததே அவன் தனிமையில் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான். மன்னன் போன்றவர்கள் தனிமையில் இருந்தால் அவர்கள் சிந்தனை பல்வேறு திக்கில் பரவும். இவ்வளவு உயரம் வந்து விட்டோமே இனி இதற்கு மேலும் உயர்வு உண்டா என்ற கேள்வி எழும். இந்தக் கேள்வி சில சமயம் போதும் என்ற நிறைவைக் கொடுத்து விடும். திடுமென்று ஒரு மன்னனுக்கு போதுமென்ற நிறைவு வந்து விட்டால் அந்த அரச பதவியை உதறி அவன் வேறு பக்கம் நகர்ந்து விடுவான்.

இது நல்லதல்ல. திடீரென்ற அரசனுடைய விலகல் குடி மக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தும். கலவரங்கள் நிகழலாம். பல உயிர்கள் பலியாகலாம். எனவே அரசன் எப்பொழுதும் யதார்த்தமாக, நிதர்சனமாக நிகழ்காலத்தோடு ஒட்டி இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவனுக்கு ஆடல், பாடல், சங்கீதம், பொது மகளிர் நட்பு, பல மனைவிகள் கூட்டு என்று அவனை இறுக்கப் பிடித்து வைத்திருக்கிறது. பூமியோடு சம்பந்தமுள்ளவர் அரசன் என்பதால் பூமியிலுள்ள எல்லா நல்ல விஷயங்களையும் அரசனுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது. பூமியின் முக்கியமான விஷயம் நல்ல உணவு, சுவையான மது, அழகான பெண்டிர், வாலிபமான வீரர்கள், திமிரான குதிரைகள், அடக்க முடியாத யானைகள். இவைகளால் அரசன் மிகவும் சந்தோஷமடைகிறான்.

பிற சிந்தனையில்லாமல் தத்துவரீதியான கவலையில்லாமல் அவன் மக்களுக்காக மக்களோடு வாழ்கிறான். ஆனால் உன்னைப் பார்த்தால் அவ்விதமாகத் தெரியவில்லை அர்ச்சுனா. நீ தத்துவ பரிசோதனைகள் செய்து கொண்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறாய் என்று தோன்றுகிறது. உனக்கெதற்கு அவை. ஏன் வாட்டமாக இருக்கிறாய். உன்னை உண்மையில் அடித்துத் தின்னும் கவலை என்ன. என்னிடம் சொல். நான் தீர்த்து வைக்கிறேன்" ஜமதக்கினி முனிவர் பேச அர்ச்சுனன்

அவரை உற்றுப் பார்த்தான். சிரித்தான். மௌனமாக இருந்தான்.

"என்னால் உன் கவலைகளை தீர்த்து வைக்க முடியாது என நினைக்கிறாயா. பேசு அர்ச்சுனா." ஜமதக்கினி முனிவர் வற்புறுத்தினார்.

"என் கவலை நீங்கள்தான்."

"என்ன, நானா."

"என்னை விட என் தேசத்தில் மிகவும் கொண்டாடப்படுகிறவர் நீங்கள்தான். இது எனக்குப் பிடிக்கவில்லை. இதற்காக உங்கள் மீது கோபமோ, வருத்தமோ இல்லை. உங்களை விட ஜனங்கள் என்னைக் கொண்டாட நான் என்ன செய்ய வேண்டும். இதுதான் என் கவலை."

ஜமதக்கினி முனிவர் வாய்விட்டு, கை கொட்டி ஒரு குழந்தைப் போல் சிரித்தார்.

"இது என்ன மதியீனம். உனக்கேன் இப்படி ஒரு யோசனை வந்தது. என்னை ஜனங்கள் உன்னை விட அதிகமாகக் கொண்டாடுகிறார்களா கொண்டாடி விட்டுப் போகட்டுமே. இதைப் பற்றி ஏன் கவலைப்படுகிறாய். அப்படி ஜனங்கள் என்னைக் கொண்டாடினால் அதற்கு யார் காரணம். நீதான் அர்ச்சுனா. அமைதியான காலங்களில் சாதுக்களையும், ரிஷிகளையும், ஞானிகளையும், புலவர்களையும், கவிஞர்களையும், நடிகர்களையும், நடிகைகளையும், ஆடல் மகளிரையும், ஜனங்கள் கொண்டாடுவார்கள். பாடகர்களுக்குப் பின்னே அலைவார்கள். கதை கேட்க குழுமுவார்கள். ஆனால் போர்க் காலங்களில் இவர்கள் அத்தனை பேரையும் ஒரே வினாடியில் உதறி விட்டு அரசன் பின்னேயும், வீரர்கள் பின்னேயும், யானைகளின் பின்னேயும், குதிரைகளின் பின்னேயும் ஜனங்கள் திசை திரும்பி விடுவார்கள். உன் தேசத்தில் நான் கொண்டாடப்படுகிறேன் என்றால் நீ ஆட்சியை செவ்வனே செய்து கொண்டிருக்கிறாய் என்று அர்த்தம். உன் ஆட்சியில் எதிரியைப் பற்றிய பயமோ, விலங்குகள் பற்றிய கவலையோ, விஷப் பூச்சிகள் பற்றிய தொந்திரவோ ஜனங்களுக்கு இல்லை என்று அர்த்தம். ஜனங்கள் நன்கு உண்டு ஆனந்தமாக குடித்தனம் நடத்தி அடுத்தபடி என்ன செய்வது என்கிறபோது என்னைப் போன்றவர்களுக்கு அருகே வந்து நின்று கை கட்டி வணங்குகிறார்கள். பேசுகிறார்கள் என்று அர்த்தம்.

தத்துவ சிந்தனை எப்பொழுது உண்டாகும். பசி தீர்ப்பதால் தானே. உன் தேசம் பசியை தீர்க்கிறது என்று

அர்த்தம். கார்த்த வீர்ய அர்ச்சுனா, என்னை ஜனங்கள் கொண்டாடுகிறார்கள் என்றால் அதற்கு உன்னுடைய திறமையான ஆட்சி காரணம்.

கார்த்த வீர்ய அர்ச்சுனா, எல்லா காலங்களிலும் எல்லா தேசங்களிலும் ஜனங்களிடம் ஒரு மந்தைத்தனம் உண்டு. இந்த மந்தைத்தனம் ஒவ்வொரு நேரத்திற்கு ஒவ்வொரு இடமாக நகர்ந்து கொண்டிருக்கும். ஆட்டமக்களோடு சில காலம் ஜனங்கள் அலைவார்கள். பாடுபவர்களை திடீரென்று கொண்டாடுவார்கள். ஆட்டலையும், பாடலையும் விட்டு விட்டு ஞானிகள் பின்னே ஓடுவார்கள். ஞானிகள் இல்லையென்றால் பண்டிதர்களிடம் போய் பவ்யமாகப் பாடம் கேட்பார்கள். இவரைப்போல் உண்டா என்று சொல்வார்கள். ஜனங்களுக்கு எதையும் முழுமையாக கற்கின்ற நாட்டம் இல்லை. தங்களுடைய கடுமையான வேலை நேரம் போக மற்ற நேரத்தை எப்படி உபயோகப்படுத்துவது என்று தெரியாமல் சிதறலாய், வேடிக்கை பார்ப்பதாய், வாய் பிளந்து நிற்பதாய் ஜனங்கள் இருப்பது பழக்கம். அப்படி இருக்கின்ற விஷயம் அலுப்படைய வேறு விஷயத்திற்கு அவர்கள் மாறுவார்கள். ஜனங்கள் பின்னால் அலைவதை ஒருக் காலும் முக்கியமாகக் கொள்ளாதே. எப்போது ஜனங்கள் இடம் மாறுவார்கள் என்று யாருக்குமே தெரியாது. அதுவே அடுத்த தேசத்திலிருந்து ஒரு மன்னன் படையெடுத்து வருகிறான் என்றால் ஜனங்கள் என்னிடமா அடைக்கலம் கேட்பார்கள். உன்னிடம்தானே வந்து கேட்பார்கள். எனவே நீ பேசுகிற விஷயம் சிறிதும் பிரயோஜனமற்றது என்பதை உணர்ந்து கொண்டு உன் கவலையை உதறி விடு. பாலிலிருந்து கடையப்பட்ட வெண்ணெய், மருந்திலிருந்து வடிகட்டி எடுக்கப்பட்ட பஸ்பம், கரும்பினுடைய சாறிலிருந்து எடுக்கப்பட்ட கற்கண்டு போன்று நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திலே உச்சியில் இருக்கிறோம். நான் தத்துவரீதியாக சிந்தித்து என்னைக் கடைந்து ஒரு உச்சிக்கு வந்திருக்கிறேன். நீ லௌகீகமான வாழ்க்கையில் ஈடுபட்டு உன்னைக் கடைந்து ஒரு உச்சிக்கு வந்திருக்கிறாய். இதே போல கவிஞர்கள், பண்டிதர்கள் மொழியின் அனுபவத்தைக் கடைந்து ஒரு உச்சியைத் தொட்டிருக்கிறார்கள்.

நண்பனே, நாம் சாதாரண மக்கள் அல்ல. எனவே நமக்கு திடீரென்று இந்த மாதிரி கவலைகள் ஏற்படும். பிறர் பேச்சை கேட்காமல் நம்மை நாமே ஆராய்கின்ற

மனமுடையவர்கள் என்பதால் நமக்கு கவலைகள் சகஜம்தான். எனினும் அரசனாக உன்னை சரியான பாதையில் செலுத்த வேண்டியது என் கடமை என்பதால் உனக்கு இந்த புத்திமதி சொன்னேன். இன்னும் ஆழ்ந்து யோசித்து இந்தக் கவலையை உன்னிலிருந்து எடுத்து வீசி விடு" என்று பிரியமுடன் பேசினார்.

"ஜமதக்கினி முனிவரே, நீங்கள் பேசுவதை கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. மிக கருணையோடும், காதலோடும் என்னைப் பற்றிய அக்கறையோடும் பேசுவது எனக்குப் புதிதல்ல. இதற்கு முன்பும் கேட்டிருக்கிறேன். அரசனால்தான் நாடு அமைதியாக இருக்கிறது. நாடு அமைதியாக இருப்பதால்தான் ஞானியை நாட்டுமக்கள் தொழுகிறார்கள் என்பது நல்ல கூற்றாக இருந்தாலும் நீங்கள் அரசரை விட மேம்பட்டவர் என்பதில் எந்த விதத்திலும் ஐயமில்லை. நான் வந்தவுடன் உங்களை விழுந்து வணங்கினேன். நீங்கள் ஆசீர்வதித்தீர்கள். என்னிடம் வந்தாலும் நான் உங்களை விழுந்து வணங்குகிறேன். நீங்கள் ஆசீர்வதிப்பீர்கள். நீங்கள் எப்போது என் காலில் வந்து விழுந்து வணங்குவீர்கள். அப்படி விழுந்து வணங்குவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்" நேரடியாய் முகம் சுருக்கி கார்த்த வீர்ய அர்ச்சுனன் கேட்க, ஜமதக்கினி முனிவர் திகைத்தார். தலை குனிந்து யோசித்தார்.

"கார்த்த வீர்ய அர்ச்சுனா, என்ன ஆகி விட்டது உனக்கு. காலில் விழுகிறது என்கிற ஒரு சடங்கை, ஒரு சைகையை, செயலை ஏன் இவ்வளவு முக்கியமாக எடுத்துக் கொள்கிறாய். ஒருவருக்கு என் மீது அன்பு. அவருடைய குழந்தையை நான் நோயிலிருந்து காப்பாற்றினேன். உடனே அவர் ஓடி வந்து தன் மனைவியோடு என்னைப்பார்த்ததும் காலில் விழுந்து வணங்கினார். வேறு என்ன செய்வது என்று அவருக்குத் தெரியவில்லை. என்னை எப்படிப் பாராட்டுவது என்று புரியவில்லை. அவருக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை. வார்த்தைகள் அவரை வழி நடத்த முடியாததால் வார்த்தைகளையும் விட அதிகமான ஒரு சைகையை, ஒரு குறிப்பை எனக்கு காட்ட விரும்பினார். நான் இவ்வளவு நேசிக்கிறேன் உங்களை என்று சொல்ல விரும்பினார். உங்களால் நான் சந்தோஷமானேன். என் குடும்பம் பிழைத்தது என்று ஆனந்தத்தை வெளிக்காட்ட விரும்பினார். அந்த வெளிக்காட்டலின் ஒரு செயல் காலில்

விழுவது. அது உயர்வு, தாழ்வைக் குறிப்பதே அல்ல. காலில் விழுந்தவன் தாழ்ந்தவன். விழுந்தவனை ஆசீர்வாதம் செய்தவன் உயர்ந்தவன் என்று நினைத்துக் கொண்டால் இது நிர்மூடம்.

அவன் என்னிடம் காட்டிய அன்புக்கு நான் என்ன செய்வது என்று யோசிக்கிறபொழுது, அவனை ஆரத் தழுவிக் கொள்வதுதான் நல்ல அன்பு என்று தோன்றுகிறது. காலில் விழுந்தவனை மெல்ல வாரி எடுத்து என் உடம்பிலுள்ள அந்தனை சக்தியையும், அவனுள் செலுத்தி இன்னும் ஆரோக்கியமாக, இன்னும் ஆனந்தமாக இரு. உன் ஆனந்தம் என்னை ஆனந்தப்படுத்துகிறது. என் ஆனந்தம் உன்னை ஆனந்தப்படுத்தட்டும் என்று நான் அவனை அணைத்துக் கொள்கிறேன். இது ஒரு செய்கை ஒரு குறியீடு.

ஐயனே, நீ காலில் விழுவது அவசியமே இல்லை என்று தடுப்பதாகவும் இது இருக்கிறது. அவர் காலில் விழ நானும் காலில் விழுந்தால் நன்றி என்ற விஷயத்தை எப்படி வெளிப்படுத்துவது. நன்றிக்கு நன்றியா சொல்வது. நன்றியெல்லாம் சொல்ல வேண்டாம் என்று சொல்வதல்லவா நல்ல விஷயம். நன்றிக்கு நன்றி, நன்றிக்கு நன்றி என்று போய்க் கொண்டே இருக்குமே, அது முடிவுறாத முட்டாள்தனமாகப் போகுமே. எனவே விழுந்தவனை வாரித் தழுவிக் கொள்கிறபொழுது எதற்கய்யா இது என்கிற பாசம்தான் வெளிப்படுகிறது. கார்த்த வீர்யஅர்ச்சுனா, சைகையை, செயலைப் பிடித்துக் கொண்டா தொங்குகிறாய்?"

"இல்லை. நான் காலில் விழுவதை மட்டுமே சொல்லவில்லை. காலில் விழும் அளவுக்கு உயர்ந்து நிற்கிறீர்களே. எல்லாமும் பெற்றிருக்கிறீர்களே. அந்தத் தன்மையைப் பார்த்து வியக்கிறேன். உங்கள் காலில் விழ வேண்டும் என்று என் உள் மனம் சொல்கிறது. வந்தேன் விழுந்தேன். உங்களுக்கு என்னைப் பார்த்தால் அப்படித் தோன்றாதா. ஏன் தோன்றவில்லை என்கிற கேள்விதான் என்னைக் குடைந்து கொண்டிருக்கிறது. நான் சொல்வது உங்களுக்கு ஏன் புரியவில்லை. ஜமதக்கினி முனிவரே புரிந்தும் புரியாதது போல் நடக்கிறீர். சைகையை நான் முக்கியமாக நினைத்துக் கொள்ளவில்லை. அந்த சைகைக்கு உண்டான தகுதியை நீங்கள் வெகு நிச்சயமாக அடைந்திருக்கிறீர்கள். உங்களைப் பார்த்த போது பரவசமாகிறார்கள் மக்கள். காவலர்கள் காலில் விழுகிறார்கள். நானும் விழுந்தேன். என்னுடைய

பிள்ளைகள் வணங்கினார்கள். என் தாதிகள் வணங்கினார்கள். ஜமதக்கினி முனிவரே, என்னைப் பார்த்ததும் வணங்க வேண்டுமென்று உமக்குத் தோன்றியதா. வாரி எடுத்து இப்படிக் காலில் விழாதே என்று சொல்ல வேண்டுமென்றாவது தோன்றியிருக்கலாம். நான் நுழைந்ததும் மெய் சிலிர்த்து கண்ணில் நீர் வர கைகூப்பி ஐயா என் இல்லம் தேடி வந்தீர்களா, வாருங்கள் என்று என் காலில், ஜமதக்கினி முனிவரே, நீர் ஏன் விழவில்லை. அப்படி விழும் தகுதி எனக்கு ஏன் வரவில்லை.

இது என் கேள்வி. நெருப்பாக என்னைத் தகித்துக் கொண்டிருக்கிற கேள்வி. அப்படி ஒரு தகுதி இந்தப் புவியில் உண்டென்றால் அதை அடைவதுதான் என் லட்சியமே தவிர அதை அலட்சியப்படுத்துவதல்ல. நான் மற்றவர் காலில் விழ மாட்டேன் என்று சொல்லவில்லை. விழுகின்ற தகுதி எவருக்குண்டோ அவர் காலில் விழுந்துதான் ஆக வேண்டும். ஆனால் ஒருவர் காலில் விழும் அளவுக்கு ஒருவர் உயர்ந்து நிற்கிறாரே அவரை விட உயரமாக நான் நிற்க வேண்டும்.

"கார்த்த வீர்ய அர்ச்சுனா, காயத்தின உச்சம் என்பதற்கு பொருளாக வந்து நிற்கிறாய். உயரமாக வேண்டும் உயரமாக வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறாய். இது ஏதோ முயற்சியால் அடையப் பெறுவது என்று நினைத்துக்கொண்டிருக்கிறாய். மிக உயரமாக நிற்க வேண்டுமென்றால் மிகத் தாழ்ந்து இருக்க வேண்டும் என்ற ஒரு சூட்சும கணக்கு உனக்கு உறைக்காமல் போய் விட்டது வருத்தம்தான்" ஜமதக்கினி முனிவர் அடிக்குரலில் பேசினார்.

"நீ கொண்டிருக்கிற எல்லா கர்வங்களையும், நீ கொண்டிருக்கிற எல்லா ஆசைகளையும், நீ கொண்டிருக்கிற எல்லா பிடிப்புகளையும் உதறி எழுந்து நின்றால் உயரமாகி விடுவாய். இவைகளை வைத்திருக்க, வைத்திருக்க கனமையால் குறுகிப் போய்த்தான் நிற்பாய்.

கார்த்த வீர்ய அர்ச்சுனா பொறாமை என்பது இயலாமையின் வெளிப்பாடு. இயலாமை என்பது திடசித்தம் இல்லாத நிலை. திடசித்தம் இல்லாத நிலை என்பது வைராக்கியம் அற்ற தன்மை. வைராக்கியம் ஏன் இல்லை என்று யோசித்தால் மனவலுவும், உடல் வலுவும் குன்றியிருத்தல். ஏன் மனவலுவும், உடல் வலுவும் குன்றியிருக்கிறது என்றால் அப்பியாசங்கள் போதாமை. ஏன் அப்பியாசங்கள் போதாமை என்று யோசித்தால்

உன்னைத் தடுக்கி விழ வைக்க, அப்பியாசத்திலிருந்து திசைமாற்ற பல விஷயங்கள் இருக்கின்றன. ஏகாக்கிரகம் இல்லை.

கார்த்த வீர்ய அர்ச்சுனா, ரிஷிகளும், முனிவர்களும் காட்டில் ஏன் வாழ்கிறார்கள் தெரியுமா. ஏகாக்கிரகம் கருதியே. காட்டில் கண்களை கவர்ந்து இழுக்கின்ற, செவிகளை கவர்ந்து இழுக்கின்ற விஷயங்கள் எதுவுமில்லை. வெறும் பச்சை மணம். சில மிருகங்கள் இவைகள் மட்டுமே இருக்கின்றன. சுற்றி வேலியிட்டு, திறந்த வெளியில் குடிசைகள் போட்டு அமர்ந்து விட்டால் வேறு எவருடைய பேச்சுக் குரலும் இல்லாமல், வேறு எவருடைய சிந்தனையும் இல்லாமல் ஒரே புள்ளியில் நகர்ந்து விடலாம்.

ஒரு நகரத்திலேயிருந்து கொண்டு, ஞானியைப் போல உயர வேண்டும் என்றால் அது எங்ஙனம். ரிஷியைப் போல வாழ வேண்டுமென்றால் அது எப்படி முடியும். தவம் செய்ய நகரம் சிறந்த இடம் இல்லை. கோட்டையில் தவம் செய்ய இயலாது. ஹடயோகம் மட்டுமே செய்து பழக்கப்பட்ட நீ, தவம் என்கிற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாமல் முழங்குகிறாய். ஹடயோகம் என்பது பயிற்சி. பயிற்சியால் பிராணனை வசப்படுத்தல். பிராணன் வசப்பட்டால் மூச்சு சரியாக பாய்கிறது. மூச்சு சரியாகப் பாய்ந்தால் எண்ணங்கள் ஒரு முனைப்பில் வந்து நிற்கின்றன. எண்ணங்கள் ஒரு முனைப்பில் வந்து நிற்கிறபொழுது உன்னால் வருவாக, திறமையாக, வேகமாக செயல்கள் ஆற்ற முடிகிறது. ஆனால் எல்லாவற்றையும் உதறிவிட்டு வெறுமே நிற்க ஹடயோகம் ஒரு போதும் சொல்லித் தராது. இதற்கு இறையருள் வேண்டும். இறையருள் வேண்டுமென்றால் ஒருவன் சும்மாயிருத்தல் வேண்டும். உன்னால் ஹடயோகம் தான் செய்ய முடியுமே தவிர சும்மா இருத்தல் இயலாது. ஹடயோகம் செய்பவன் ஒருபொழுதும் சும்மா இருக்க மாட்டான். அடுத்தபடி, அடுத்தபடி, அடுத்தபடி என்று நகர்ந்து கொண்டிருப்பான். எல்லையில்லாது ஆசைப்பட்டுக் கொண்டிருப்பான். உனக்கு ஏன் இது புரியவில்லை. உன்னால் உதற முடியாது. உதற முடியாததால் உயரவும் முடியாது."

"இல்லை. நீங்கள் என்னைக் குழப்புகிறீர்கள்."

ஜமதக்கினி முனிவரின் பேச்சுக்கு கார்த்த வீர்ய அர்ச்சுனன் எழுந்து நின்று பதில் சொன்னான். ஜமதக்கினி முனிவர் உட்கார்ந்த இடத்திலிருந்தே அவனை உற்றுப்

பார்த்தார்.

"உங்களிடம் ஒரு முக்கியமான பொருள், உங்கள் தகுதிக்கு மிட அதிகமான ஒரு பொருள் சிக்கி விட்டது. அதனால்தான் இத்தனை செழிப்பாகப் பேசுகிறீர்கள். ஒரு நகரத்திலே உள்ளே நுழைந்தவர் அத்தனை பேருக்கும் அறுசுவை உணவு இட்டால் அவன் நிச்சயம் வணங்கி விழத்தான் செய்வான். நடுகாட்டிலே அறுசுவை உணவிட்டால் அவன் நடு நடுங்கி உங்கள் பாதங்களை பற்றிக் கொள்வான். நீங்கள் கெட்டிக்காரத்தனமாக உங்கள் குடியிருப்பை நடுகாட்டில் வைத்து அந்த காட்டிற்கு ஓரமாக பாதையும் அமைத்து வருவோர், போவோருக்கு உணவிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இந்த உணவிடுதலால் உயர்ந்து நிற்கிறீர்கள். உணவே கிடைக்காத இடத்தில் உணவு கொடுப்பதால் உங்களை உளமாறப் போற்றி உங்கள் காலைப் பற்றிக் கொள்கிறார்கள். ஆனால் அந்த உணவு இடுவதற்கு பின்புறமாக உங்களிடம் இருப்பது என்ன செல்வமா, வயல்வெளியா, படைகளா, குடி மக்களா, வியாபாரிகளா. காமதேனு. காமதேனு என்கிற வள்ளல் பசுவைக் கையில் வைத்துக் கொண்டு நீங்கள் உயர்ந்து நிற்கிறீர்கள்.

அந்தக் காமதேனு என்னிடம் வந்து விட்டால் நானும் உயர்ந்து நிற்பேன். என் நகரத்திலே அத்தனை பேருக்கும் இலவசமாக உணவிடுவேன். என் நகரத்திலே வருகின்ற அத்தனை ஜனங்களுக்கும் அறுசுவை உணவு காலையும் மாலையும் போடுவேன். உணவு உண்டு விட்டு மக்கள் என்னை வாழ்த்துவார்கள். வந்த ஞானிகளும், ரிஷிகளும், முனிவர்களும் அவர்களுக்கேற்ற உணவை உண்டு விட்டு என் மீது பூச்சொரிந்து விட்டுப் போவார்கள். என் பாதங்களில் பணிவார்கள்.

ஆடல் மகளிருக்குண்டான உணவு, ஆட்டக்காரர்களுக்குண்டான உணவு, போர் வீரர்களுக்குண்டான உணவு, யானைப் பாகனுக்குண்டான உணவு, குதிரைகளுக்கும், யானைகளுக்கும், மற்ற விலங்குகளுக்கும் உண்டான உணவு, விதம் விதமான உணவு அந்த காமதேனு கொடுக்க, உண்ட அத்தனை பேரும் என் காலில் விழுந்து வணங்கத்தான் வேண்டுமல்லவா.

எனவே உங்களுடைய உயர்வின் ரகசியம் என்ன என்று நான் புரிந்து கொண்டேன். நானும் உயர ஆசைப்பட்டேன். நான் உயர்வதற்காக தயவு செய்து அந்த காமதேனுவை என்னிடம் கொடுத்து விடுங்கள். இந்த பூமியில், என் தேசத்தில் இருக்கிற நல்ல விஷயங்கள்

அனைத்தும் எனக்குச் சொந்தமானவை."

"கார்த்த வீர்ய அர்ச்சுனா, தவறு செய்கிறாய். உலகத்திலுள்ள நல்ல விஷயங்கள் அரசனுக்கு சொந்தமானவை அல்ல. அவை எல்லோருக்கும் சொந்தமானவை. உலகத்தின் மீது சந்திரனின் கிரணங்கள் வழிகின்றன. அதையெல்லாம் வாரி உன் பொக்கிஷ அறையில் பூட்டிக் கொள்வாயா. உலகம் முழுவதும் அமிர்தமயமான தென்றல் காற்று பயணம் செய்கிறது. அவைகளை எங்கேனும் வலை வீசிப் பிடிப்பாயா. ஆற்றில் நீர் குமிழ்கள் வைரக்கற்களென மிதந்து போகின்றன. அவைகளை என்னுடையது என்று எண்ணி எடுத்துக் கொள்வாயா.

இந்த மிகப் பெரிய பூமிக்கோளத்தில் பரத கண்டத்தில் ஒரு மூலையில் ஒரு சிறிய தேசத்தின் தலைவன் நீ. இவ்வாறே இதனாலேயே பூமி முழுவதும் உன் காலின் கீழ் இருப்பதாக நினைத்துக் கொள்ளாதே. இப்படி ஒவ்வொரு தேசத்து அரசரும் நினைத்துக் கொண்டால் இந்த உலகம் தாங்காது. உயர உயர அடக்கம் தேவை. வளர வளர அறிவு தேவை. விவேகம்தான் வேகத்தினுடைய சூட்சமம். இது தவிர இன்னொன்று சொல்கிறேன் கேள். இந்த காமதேனுவை நான் எடுத்து வரவில்லை. இந்த காமதேனுவின் மீது எனக்கு எந்த உரிமையும் இல்லை. என்னுடையது என்று இருந்தால் அல்லவா. இந்தா உன்னுடையது என்று கொடுப்பதற்கு, அல்லது தரமாட்டேன். இது எப்பொழுதும் என்னுடையது என்று சொல்வதற்கு. காமதேனுவை நான் அழைக்கவே இல்லை. என்னுடைய காரியங்கள் சிறப்பாக நடைபெற வேண்டும். என் பூஜைகள் சிறப்பாக நடைபெற வேண்டும். இந்த ஆசிரமத்தின் நோக்கம் நன்கு நிறைவேற்றப்பட வேண்டும் என்று காமதேனுவே தானாக வந்து இங்கு அமர்ந்திருக்கிறாள்.

வருவதும், போவதும் அவள் விருப்பம். நீ அழைத்து காமதேனு உன் பின்னே நடந்து வந்தாள் என்றால் எனக்கு அதைத் தடுப்பதற்கு, மறுப்பதற்கு எந்த எண்ணமும் இல்லை. எனவே இதைக் கொடு என்று கேட்பதற்கு பதிலாய், காமதேனுவிடம் போய் இறைஞ்சி, என் தேசத்திற்கு வா என்று கேட்டால் அது பலனுள்ளதாக இருக்கும்" என்று ஜமதக்கினி முனிவர் சொன்னார்.

கார்த்த வீர்ய அர்ச்சுனன் ஆசிரமத்தை உதைத்து எழுந்தான். அவரைப் பார்த்துச் சிரித்தான். நடந்து வேகமாக காமதேனுவின் கொட்டிலுக்குப் போனான்.

ஒரு பசுவிடம் போய் என் தேசத்திற்கு வா என்று இந்த அரசனாவது கேட்பதா. கயிறு வீசி கொம்புகளில் இறுக்கி, இழுத்துக் கொண்டு போனால் பசு வர மாட்டேன் என்று சொல்லுமா. மீறி முரண்டு பண்ணினால் வாளைப் பிடித்து முறுக்கி முதுகில் அறைந்து வழி நடத்திச் செல்லத் தெரியாதா. வெறும் கைகளால் யானைகளை அறைந்து கொன்றவன் இந்த கார்த்த வீர்ய அர்ச்சுனன். இவன் பிடிக்கு ஒரு பசு தாங்குமா. அதற்குப் போய் இறைஞ்ச வேண்டுமா. அவன் கொட்டிலுக்குப் போய் காமதேனுவின் கொம்புகளைப் பிடித்தான்.

காமதேனு அவனை உதறித் தள்ளியது. கார்த்த வீர்ய அர்ச்சுனன் ஒரு ஓரம் போய் விழுந்தான்.

அரசன் பசுவால் உதைக்கப்பட்டது கண்டு வீரர்கள் துள்ளி எழுந்தார்கள். காமதேனுவை சுற்றி வளைத்துக் கொண்டார்கள். ஈட்டிகளையும் அம்புகளையும் அதன் மீது வைத்து குறி பார்த்தார்கள். இடையறாது பல்வேறு முனிக்கயிறுகளை அதன் மீது வீசினார்கள். முன் கால்களையும், பின் கால்களையும் இறுக்கக் கட்டினார்கள். கழுத்தில் சுருக்கிட்டார்கள். வயிற்றில் சுருக்கிட்டார்கள். காமதேனு திகைத்துப் போய் அசையாது நின்றது.

ஒரு மூச்சில் சகலமும் உதறிவிட முடியும். மூச்சுக் காற்றிலிருந்து பல வீரர்களை உற்பத்தி செய்து இந்த அரசரை அழித்து விட முடியும். ஆனால் ஜமதக்கினி முனிவருடைய இந்த ஆசிரமம் சின்னாபின்னப்பட்டுப் போகும். அமைதி குலைந்துபோகும். முட்டாள் தனமாக இந்த அரசன் இங்கு போர் ஆரம்பிக்கிறான். நானும் முரண்டு செய்தால் போர் இங்கே பெரிதாகும். எனவே நான் முரண்டு செய்யாமல் இவன் பின்னே போவது நல்லது. என்னுடைய வள்ளல் தன்மையை இவன் தவறாகப் புரிந்து கொண்டு விட்டான். நான் விரும்பி தந்தாலொழிய இங்கு எதுவும் தரப்படமாட்டாது என்பது அவனுக்குப் புரியவில்லை. இந்த முனிவரின் நல்ல காரியங்கள் நிறைவேறுவதற்காக வந்தேனே தவிர ஒரு அரசன் கொட்டகையில் அடிமையாக இருப்பதற்கு அல்ல என்பது அவனுக்குப் புரியவில்லை. நல்லது நான் வருத்தத்தோடே இவனிடம் கைதாகி இவன் பின்னே போகிறேன். ஜமதக்கினி முனிவர் என்ன செய்கிறார் என்று பார்ப்போம். இதில் யார் இதைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள் என்று கவனிப்போம் காமதேனு மிருதுவாக தலை குனிந்து நின்றது.

அரசன் காமதேனுவை இழுத்துக் கொண்டு

போனான். அவன் சேனையும் பின்னால் போயிற்று.

ஜமதக்கினி முனிவர் கண்களில் நீர் வழிய இறைவனை நினைத்து கை கூப்பினார்.

நான் இப்போது என்ன செய்ய வேண்டும் என்று சொல். எதற்காக இந்த நாடகம் இங்கே நடக்கிறது என்று எனக்கு அறிவித்து விடு என்று இறைஞ்சினார்.

இந்த நேரத்தில் எனக்கு யார் துணை. யார் காப்பாற்றுவார்கள் என்று வேதனைப்பட்டார். என்னிலும் வலுவான என் தேசத்து அரசன் கோபப்பட்டு என்னுடைய சொத்தை அபகரிக்கிற பொழுது நான் யாரிடம் போய் இதுபற்றி முறையிடுவது. தெய்வத்தைத் தவிர நான் வேறு யாரிடம் போய் கேட்பது. தெய்வமே எனக்குத் துணையிரு. எனக்கு புத்தி சொல் என்று கரம் கூப்பினார்.

அவருக்கு அவர் மகன் பரசுராமன் ஞாபகம் வந்தது.

5

வனாந்தரங்களில் சஞ்சரித்துக் கொண்டிருந்த பரசுராமருக்கு தந்தையின் துக்கம் மனசில் தைத்தது. தந்தை அழைக்கிறார் என்று உத்வேகம் ஏற்பட்டது. தந்தைக்கு ஏதோ ஆபத்து என்கிற ஒரு எண்ணம் பரபரத்தது. உடனடியாக அவர் தந்தை இருந்த திசை நோக்கி நடக்கத் துவங்கினார். அப்படி நடக்கிறபொழுது அந்த நடையில் வேகம் அதிகரித்தது. தான் போவது சரியான திசை நோக்கித்தான் என்கிற எண்ணம் ஏற்பட்டது. நின்று வேறு திசைக்குத் திரும்ப மனம் சங்கடப்பட்டது. மனம் அவ்விதம் போகாதே என்று ஆணையிட்டது. அந்த திக்கில் அல்ல என்று அறிவுறுத்தியது. மறுபடியும் தந்தை இருந்த திசை நோக்கிப் போக, மனம் துரிதமாய் அவரை நோக்கிப் போகும்படி கட்டளையிட்டது. தந்தைதான் அழைக்கிறார் என்று பரசுராமர் தெளிவானார். இன்னும் வேகமாக தந்தையை நோக்கி நடக்கத் துவங்கினார்.

பரசுராமன் எந்தத் திசையில் இருக்கிறான். ஜமதக்கினி முனிவர் கண்மூடி தியானம் செய்தார். பரசுராமன் இருக்கும் இடம் அவருக்குத் தெரிந்தது.

பரசுராமரை உடனே அழைத்து வரச் சொல்லி சீடர்களுக்குக் கட்டளையிட்டார். சீடர்கள் பரசுராமரை நோக்கி ஓடத் துவங்கினார்கள்.

பரசுராமனும் அந்த சீடர்களும் வனத்தில் நடுப்பகுதியில் சந்தித்தார்கள். சீடர்கள் பரசுராமரை சுற்றி வந்து நமஸ்கரிக்க, பரசுராமர் சீடர்களை ஆசீர்வதித்தார்.

"நல்லது. என்ன நடந்தது" என்று பரசுராமர் கேட்க நடந்தவற்றை சீடர்கள் விவரித்தார்கள்.

"தந்தை உங்களை உடனே வரச் சொன்னார்" என்று ஜமதக்கினியின் விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

"என்னுடைய மற்ற சகோதரர்கள் அப்பாவுக்குத் துணையாக இல்லையா. காமதேனுவை அரசன் கவர்ந்து போகாத வண்ணம் தடுக்கவில்லையா."

"இல்லை. அப்பா மௌனமாக இருந்து விட்டார். உங்கள் சகோதரர்களுக்கு எந்த கட்டளையும் தராமல் சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டார். உங்கள் சகோதரர்களும் தானாக எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அப்பா என்ன கட்டளையிடுவார் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். அதற்குள் அரசன் தன் படைகளோடும், காமதேனுவோடும் வெகுதூரம் போய் விட்டான்."

"நல்லது. நான் அந்த அரசன் எங்கிருக்கிறானோ அங்கு போய் அவனிடமிருந்து அந்தக் காமதேனுவை பறித்து வருகிறேன்."

"ஐயா, ஜமதக்கினி முனிவர் உங்களை ஆசிரமத்திற்கு வரச் சொன்னாரே தவிர அரசனிடம் போய் நிற்கச் சொல்லவில்லை. எனவே தயவு செய்து ஜமதக்கினி முனிவரின் கட்டளை ஏற்று ஆசிரமத்திற்கு வந்து விடுங்கள்."

"இல்லை. என்ன நடந்தது என்று தெரிந்தபிறகு இதுதான் நடந்தது என்று எனக்குப் புரிந்த பிறகு நான் ஆசிரமத்திற்கு வந்து அதற்குப் பிறகு அரசனிடம்போவதில் என்ன பயன். நான் அரசனுடைய தலைநகரை நோக்கித்தான் போகப் போகிறேன்" என்று பரசுராமன் திசை திரும்பினார்.

"நாங்கள் என்ன செய்ய வேண்டும்."

"வாருங்கள், என்னோடு வாருங்கள். என் கூடவே வந்து நான் என்ன செய்கிறேன் என்று பார்த்து என் தந்தையிடம் தெரிவியுங்கள்" என்று சீடர்களை அழைத்துக் கொண்டு பரசுராமர் திசை திரும்பினார்.

சீடர்கள் சந்தோஷமாக அவருக்குப் பின்னே வந்தார்கள்.

"நீங்கள் எங்கு போயிருந்தீர்கள் பரசுராமரே" என்று பணிவாகக் கேட்டார்கள்.

"நான் ஆயுதங்கள் தயார் செய்வதற்காக போயிருந்தேன். வெறும் புற்களிலிருந்தும், மூங்கில்களிலிருந்தும் விதம் விதமான ஆயுதங்கள் தயார்

செய்து. அவைகளை நான் நினைத்த மாத்திரத்தில் என் கைக்கு சேரும்படியான நிலையிலே வைத்திருக்கிறேன்."

"எவ்விதமான ஆயுதங்கள்."

"நினைத்தால் நெருப்பாகப் பொழியவும், நினைத்தால் மழையாகப் பொழியவும், காற்றடிக்கவும், பூமி நடுங்கவும் பலவேறு ஆயுதங்கள் ஏற்படுத்தியிருக்கிறேன். இது நான் உருவாக்கிய வில். இதில் சரம் தொடுத்து மந்திரம் சொல்லி விட்டால் வெகு தூரம். வெகு தூரம் நெருப்பை அள்ளி வீசிக் கொண்டு போகும். மாட மாளிகைகளைத் தூள் தூளாக்கும். மலைகளை உடைத்தெறியும். காற்று முழுவதும் வெப்பமாகும். நீர் நிலைகள் வற்றிப் போகின்ற உஷ்ணத்தை இதிலிருந்து வெளிப்படுத்த முடியும்."

"ஒரு அந்தணனுக்கு இப்பேர்ப்பட்ட ஒரு பயங்கரமான ஆயுதம் தேவைதானா."

"சில சமயம் தேவைதான். இப்பொழுது காமதேனுவை தன்னுடையது என்று ஒரு அரசன் வாரிக் கொண்டு போயிருக்கிறானே. அதை எந்த அந்தணரும் தடுக்க முடியவில்லையே. எவராலும் அதை மறுத்துப் பேச முடியவில்லையே. வலிமையாக இருப்பதே மிக முக்கியமாகப் போய் விட்டதே. வலிமையாக இருப்பதே உயர்வாகப் போய் விட்டதே. வலிமைக்கு முன்னால் ஞானம், பக்தி, ஒழுக்கம் எல்லாம் தலை வணங்கி நிற்க வேண்டியிருக்கிறதே. யார் அடித்து நொறுக்க முடியுமோ அவனே உயர்ந்தவன் என்ற நிலை வந்து விட்டதே. அடித்து நொறுக்குகிறவனுக்கு வேறு என்ன புத்தி சொன்னால் அமைதியாவான். ஆயுதம் ஏந்தி கொக்கரிக்கிறவனை அன்பு சொன்னால் வசப்படுவானா. வேகம் நிரம்பிய வார்த்தைகளை வீசுகிறவன் எதைச் சொல்லி சமாதானமாவான். அடிக்கு அடிதான் சரியான விஷயம். மற்றவரை வலிக்கப் பண்ணுகிறவனை மடக்கி வலிக்கச் செய்தால்தான், வலியின் வேதனையை தெரிவித்தால்தான் அதனுடைய வேகம் புரியும்.

அரசன் இந்த தேசத்தின் முதல்வன் அல்ல. ஒரு தேசத்தின் சுபிட்சத்தை விரும்பும் ஞானிதான் முதலாகாவதாக நிற்கக் கூடியவர். எவன் ஒரு தேசத்தின் சுபிட்சத்தை விரும்புகிறானோ அவனேதான் உயர்வானவன். அரசனை விட ஞானி உயர்ந்தி என்பதை நாம் நிரூபித்துத்தான் ஆக வேண்டும்."

"எப்படி நிரூபிப்பது."

"அரசனுக்கு எந்த மொழி தெரியுமோ அந்த மொழியில் நிரூபிக்க வேண்டும்."

"அரசனுக்கு [illegible] மொழி என்ன."

"அடியும், [illegible] வில்லும், வாளும், கம்பும், வேலும். எனவே [illegible]ர்த்த வீர்ய அர்ச்சுனனை அவனுக்குத் தெ[illegible]யில், அவனுக்குத் தெரிந்த வகையில் சந்தி[illegible]றேன்."

"ஜமதக்கினி[illegible]டம் ஒரு அனுமதி கேட்காமல் போகிறீரே."

"அப்பாவிடம் கேட்டால் நிச்சயம் வேண்டாம் என்று சொல்வார். காமதேனுவை விட்டுக் கொடுத்துவிடு என்று சொல்வார். காமதேனுவை விட்டுக் கொடுத்து விட்டால், ஆசிரமத்தின் பல்வேறு நியமங்கள் தடைபட்டுப் போகும். குறைபட்டுப் போகும். காமதேனு இருந்தது. ஆசிரமத்தை செவ்வையாக சுபிட்சமாக வைத்திருந்தது. ஒரு அரசருக்கு இந்த காமதேனு தேவையே இல்லை. லட்சக்கணக்கான மக்களை தன்னிடத்தே கொண்டிருக்கிற ஒரு அரசன் அந்த மக்களை உழைக்கச் சொல்லி, அதனால் ஏற்படுகின்ற பொருளாதார நிலையை வளர்த்துக் கொள்ள வேண்டுமேயொழிய இலவசமாகக் கிடைக்கிற இந்த உணவுகளை அவன் வைத்துக் கொள்ளலாகாது.

உடல் உழைப்பிற்கும் பதிலாய் மனதை ஒருமுகப்படுத்தி இடையறாது பிரபஞ்ச சக்திகளோடு தொடர்பு கொண்டு இந்த உலகத்தின் சூட்சும விஷயங்களை சரியானபடி நிலை நிறுத்துகின்ற முனிவர்களுக்குத்தான் இந்த காமதேனு தேவை. பாலும், நெய்யும், பருப்பும், அரிசியும், கோதுமையும் இவர்களால் உற்பத்தி செய்ய முடியாது. அந்த விஷயங்கள் இவர்களுக்கு வந்து கிடைக்குமென்றால் இவர்கள் தங்களுடைய முழு பலத்தையும் சிந்தனையையும் பிரபஞ்ச சக்திகளிடையே செலுத்தி இந்த உலகத்தை நல்லபடி நகர்த்திக் கொண்டு போவார்கள்.

இது தெரியாமல் அந்தணனுக்கு எதற்கு காமதேனு. அரசனுக்குத் தேவையென்று பறித்துப் போயிருக்கிறான் அந்த முட்டாள். அவனுக்கு பாடம் கற்பிப்பது நம்முடைய முதல் வேலை."

அவர்கள் பேசிக் கொண்டே கார்த்த வீர்ய அர்ச்சுனனின் தலைநகரை அடைந்தார்கள்.

இடுப்பில் இருந்த சங்கெடுத்து மிகப் பலமாக போர் முழக்கம் செய்ய கார்த்த வீர்ய அர்ச்சுனனின் கோட்டைக் கதவுகள் மூடிக் கொண்டன. படைவீரர்கள் தயாரானார்கள்.

கார்த்த வீர்ய அர்ச்சுனன் உப்பரிகையின்

மேலிருந்து பரசுராமரைப் பார்த்தான். திகைத்துப் போனான்.

ஒல்லியான உருவம், உயரம், நீண்ட கால்கள், நீண்ட கைகள், முடிந்து வைத்த சடாமுடி, கூரிய மூக்கு, சுருளான தாடி, பரந்த மார்பு, சிறுத்த இடை, உருண்டையான பிருஷ்டம், இறுகக் கட்டிய வேட்டி, அதற்குமேல் புலித்தோல், கையில் தனுசு, முதுகில் அம்பறாத் தூணி, காலில் மெல்லிய மரச் செருப்பு. அதைப் பிணைத்துள்ள காட்டுக் கொடிகள், இடுப்பில் தர்ப்பைக் கயிறு, அம்பறாத் தூணிகளில் சில அம்புகளே இருந்தன.

எந்தப் படையுமின்றி எவர் துணையுமின்றி தனி ஒருவனாய் பரசுராமர் நிற்கிற கோலம் கண்டு கார்த்த வீர்ய அர்ச்சுனன் கலங்கிவிட்டான்.

என்ன நம்பிக்கையில் என் பெரும் படைகளை, என் பலத்தை இவன் எதிர்த்து நிற்கிறான். இவனிடம் அதீதமாய் இருப்பது என்ன என்று மறுபடியும் கூர்ந்து நோக்கினான். உடம்பின் வடிவழகு தாண்டி அவனிடத்தே மிகப் பெரிய ஒளி இருந்ததை கண்டுபிடித்தான். ஜெயிப்போம் என்ற அசாத்திய நம்பிக்கை கண்களில், உதடுகளின் இறுக்கத்தில் தெரிந்தது. நெற்றியின் கோடுகளில் படிப்பு தெரிந்தது. படிப்பு மட்டும் போதுமா என்று உற்றுப் பார்த்த போது விரல்களின் இறுக்கத்தில் உறுதி தெரிந்தது. கால் அகட்டி நின்றதில் கம்பீரம் தெரிந்தது. இத்தனை படைகளை என்னால் திட்டவட்டமாக எதிர்க்க முடியும். உன்னைக் கதற அடிக்க முடியும் என்ற நினைப்பிலேயே பரசுராமன் நிற்கிறான் என்று கார்த்த வீர்ய அர்ச்சுனனுக்கு புரிந்துபோயிற்று. இன்னும் உற்றுப் பார்க்க அந்த அம்பறாத் தூணிக்குள் கோடாரியை வைத்திருப்பது தெரிந்தது. அந்தக் கோடாரியின் பளபளப்பை கவனிக்கிறபொழுது, உறுதியை பார்க்கிறபொழுது இந்தக் கோட்டை முழுவதும் அந்த ஒற்றைக் கோடாரி தகர்த்து விடும் என்று புரிந்தது.

பரசுராமன் வாசலுக்கு வந்து சங்கு முழங்கி விட்டதால் இனி வேறு வழியில்லை. சமாதானத்திற்கு இடமில்லை, காமதேனுவை தானமாகக் கேட்டிருந்தால் கொடுத்திருக்கலாம். ஆனால் வருபவன் தானம் கேட்க வரவில்லை. அடித்து எடுத்துப் போவேன் என்கிற உறுதியோடு நிற்கிறான். இனி யுத்தத்தைத் தவிர வேறு வழியில்லை. கார்த்த வீர்ய அர்ச்சுனன் தன் படைகளை அனுப்பினான்.

படைகள் வெளியே வந்து வரிசையாக நின்று ஒரே

நேரத்தில் பரசுராமன் மீது ஆயுதங்களை பிரயோகம் செய்தன. பரசுராமர் வினாடி நேரத்தில் கோடாரியை அம்பறாத் தூணியிலிருந்து எடுத்து தன் மீது வருகின்ற ஆயுதங்களை ஒரே வீச்சில் துடைத்தார். வில்லை வளைத்து நாணேற்றி அம்பு தொடுத்து மந்திரம் ஜபித்து படை மீது ஏவ கடும் உஷ்ணம் அங்கு பரவியது. அலை அலையாய் உஷ்ணம் எழுந்தது. சூழ்நிலை முழுவதும் தகிக்க ஆரம்பித்தது. மரங்கள் பட்டுப் போய் விழுந்தன. புற்கள் பற்றி எரிந்தன. வெப்பம் தாங்காது வீரர்கள் சுருண்டு விழுந்தார்கள் மற்றவர்கள் கோட்டையை நோக்கி ஓடி வந்தார்கள். கோட்டையின் முகப்பை இன்னொரு அம்பால் அவர் உடைக்க கோட்டைக்குள் அவர்களால் நுழைய முடியவில்லை. மறுபடியும் திரும்பி பரசுராமரைப் பார்க்க அந்த நெருப்பு அலை அவர்களைக் கபளீகரம் செய்தது. கால் நாழிகைக்கும் குறைவான யுத்தத்தில் கார்த்த வீர்ய அர்ச்சுனனின் படைகள் அழிந்தன.

கார்த்த வீர்ய அர்ச்சுனன் திகைப்போடு நின்று கொண்டிருந்தான்.

யுத்தம் செய்வது என்பது க்ஷத்திரியர்களின் பிறப்புரிமை. இங்கேயும் வந்து விட்டீர்களா. அங்கேயும் நீங்கள்தான் முதன்மை ஸ்தானமா. அந்தணர்தான் இங்கு எல்லாமுமா. அவருக்கப்பால்தான் மற்றவரா. என்ன அயோக்கியத்தனம் இது. உன்னை அழிக்காமல் விட மாட்டேன் என்று ஆவேசம் கொண்டான். வாள் உருவினான். யுத்த களத்தில் இறங்கினான்.

தன்னுடைய ஆயிரம் சிந்தனைகளால் ஆயிரம் விதமான ஆயுதங்களை உருவாக்கி வெகு வேகமாக ஆயிரம் கார்த்த வீர்ய அர்ச்சுனனாக தன்னை மாற்றிக் கொண்டு பரசுராமரைக் கடுமையாகத் தாக்கினான்.

பரசுராமர் இம்முறை காற்று அஸ்திரத்தை பிரயோகம் செய்தார். கண்மண் தெரியாமல் தூசி கிளம்பியது. காற்று நாலாபக்கமும் விசிறி அடித்தது. எங்கு குறி வைத்து அம்பு தொடுத்தாலும் அம்பு வெகு வேகமாக காற்றில் திசை தப்பி விலகிப் போனது. அஸ்திரத்தை தடுக்க காற்று சட்டென்று இடைவெளி விட்டது.

நகர முடியாமல், அஸ்திரம் தடுக்கி விழுந்தது. சூலாயுதங்கள் பிரயோகம் பண்ண அலைகள் வெகு வேகமாக மேலே எழுப்பப்பட்டு கடலுக்குள் தள்ளப்பட்டன. புயலால் தாக்குப்பிடிக்க முடியாமல் அலைகளின் வேகத்தில் பரசுராமர் அந்தப் புயலுக்கு நடுவே கடலுள் நீந்தும் திமிங்கலம் போல நடந்து வந்தார்.

கார்த்த வீர்ய அர்ச்சுனனின் மணி முடியைத் தட்டினார். தலைமுடியைப் பிடித்தார். உலுக்கினார். எங்கே காமதேனு என்று கேட்டார். கார்த்த வீர்ய அர்ச்சுனன் வாய் திறக்கும் முன்பு எட்டி வயிற்றில் உதைத்தார். கீழே தள்ளினார். நெஞ்சில் கால் வைத்து மிதித்தார். சுள்ளென்று வில்லின் நுனியால் முகத்தில் பலமாக அடித்தார். தோளில் அடித்து ஒடித்தார். ஒரு கண்ணை குத்தி வெளியே எறிந்தார். மறுபடியும் எழுந்து நிற்க வைத்து சுளீர், சுளீர் என்று வில்லால் அடித்தார்.

கார்த்த வீர்ய அர்ச்சுனன் வேறு வழியின்றி காமதேனு இருக்குமிடத்தை கை காட்டினான்.

காமதேனு கயிறு அறுத்துக் கொண்டு பரசுராமரை நோக்கி ஓடி வந்தது.

கார்த்த வீர்ய அர்ச்சுனன் தன் கைகளால் பரசுராமரை பிடித்துக் கொள்ள, உலுக்கி அவனை ஓரம் போட்டார். மறுபடியும் அவன் கை நீட்ட வாள் உருவி அந்த கைகளை வெட்டினார். மிகக் கோபமாக கத்தியை அவன் நெஞ்சிலே சொருகினார். மிகுந்த பலவானும் போக புருஷனுமான கார்த்த வீர்ய அர்ச்சுனன் மரணமடைந்தான்.

காமதேனு பரசுராமர் பின்பு அமைதியாக நடந்து போயிற்று.

பரசுராமர் ஜமதக்னி முனிவரின் ஆசிரமத்திற்குப் போய் அவர் காலில் விழுந்து நமஸ்கரித்தார்.

"இது தவறு பரசுராமா. உன்னை யார் போய், யுத்தம் செய்யச் சொன்னார்கள். எவரின் உத்தரவினால் நீ இந்தக் காரியத்தைச் செய்தாய். நீயே முடிவு செய்து நீயே காமதேனுவை கார்த்த வீர்ய அர்ச்சுனனிடமிருந்து உன் வலிவு காட்டி பறித்து வந்தாய் என்றால் நீயே வைத்துக் கொள். எனக்குத் தேவையில்லை. நம் ஆசிரமம் காமதேனுவை நம்பியில்லை. காமதேனு வருவதற்கு முன்பும் இந்த ஆசிரமம் இருந்தது. காமதேனுவின் வருகையால் செழிப்படைந்தது உண்மையெனினும், காமதேனு இல்லையெனினும் இந்த ஆசிரமம் நாசமடையாது. ஒரு வள்ளல் பசுவுக்காக நீ யுத்தம் செய்ததும், அந்த வள்ளல் பசு எனக்கு வேண்டும் என்று இங்கு நீ கூட்டிக் கொண்டு வந்ததும் எனக்கு விருப்பமில்லாத செய்கைகள்.

பொருள்மீது ஆசை வைப்பவர் க்ஷத்திரியர். வைசியர். நமக்கு, அந்தணரான நமக்கு அவ்வித ஆசை இருக்கலாகாது. காமதேனு இருந்தாலும், இல்லாவிட்டாலும்

நம் குலம் அழிந்து விடுமா. ஏன் நம்மை விட நம்மைச் சுற்றியுள்ள பொருட்கள் மிக முக்கியமென்று நினைக்கிறாய். நீ ஏன் உன்னை முன்னிலைப் படுத்தத் துடிக்கிறாய். கார்த்த வீர்ய அர்ச்சுனனை அடித்து வீழ்த்தி விட்டதால் உனக்கு கர்வம் வந்து விடும். நானே அரசனாகத் தகுதியுடையவன் என்ற திமிர் வந்து விடும்.

உன் பலம் என்னவென்று எனக்குத் தெரியும் பரசுராமா. ஆனால் உன்னை பலவானாக யார் முன்பு காட்டத் துடிக்கிறாய். என் முன்பா. தேவையே இல்லை. என்னிலிருந்து கிளம்பிய சக்திதான் நீ. என்னுடைய பலம்தான் நீ. உன்னை நான் நன்கு அறிவேன். எனவே எனக்கு உன்னை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. கார்த்த வீர்ய அர்ச்சுனனை விட நான் வலிமை மிக்கவன் என்று கார்த்த வீர்ய அர்ச்சுனனுக்கு சொல்ல விரும்பினாயா. என்ன பயன். இதனால் நிகழ்ந்து என்ன. மரணமடைந்த கார்த்த வீர்ய அர்ச்சுனன் புரிந்து கொண்டு மரணமடைந்தானா. புரியாமல் மரணமடைந்தானா என்று யாருக்குத் தெரியும்.

கார்த்த வீர்ய அர்ச்சுனனின் குடிமக்களை காப்பாற்றுவதற்காக நீ போனாயா. இல்லை. கார்த்த வீர்ய அர்ச்சுனன் என்கிற கொடுமை போய், அவன் மகன்கள் என்கிற இன்னொரு கொடுமை அந்த மக்களுக்கு வரும். அதுவே நிஜம். கார்த்த வீர்ய அர்ச்சுனனாவது தெரிந்த பிசாசு. இப்பொழுது தெரியாத பூதங்கள் அந்த மண்ணிலே ஆட்சி செலுத்துகின்றன. மக்கள் இன்னும் அதிகமான அவஸ்தைகளுக்குள்ளாகப் போகிறார்கள்.

அடுத்த தேசத்திலுள்ள அரசர்களுக்கு கார்த்த வீர்ய அர்ச்சுனன் அழிந்தான் என்கிற நிம்மதியை கொடுத்து விட்டாயா. அதுவும் இல்லை. இப்பொழுது அவர்கள் அந்தணரைக் கண்டு பயந்து கொண்டிருக்கிறார்கள்.

யாரோ ஒரு அந்தணன் கையில் கோடாரியுடன், சிவதனுசுவும் ஏந்தி கார்த்த வீர்ய அர்ச்சுனனைக் கதற அடித்தானாமே. சொல்லி, சொல்லி பாணங்கள் எய்தானாமே. நகரத்தைத் தரை மட்டமாக்கினானாமே. நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று அமைதியாய் ஹோமம் செய்து கொண்டிருக்கின்ற அந்தணர்களை வம்புக்கு இழுக்கிறார்கள். ஹோமத்தை கலைக்கிறார்கள். ஏதேனும் அழிவுக்கான விஷயமாக இருக்குமா என்று பூஜை நடக்கும் இடத்தை புரட்டிப் போட்டுப் பார்க்கிறார்கள். இனிமேல் பூஜை செய்ய வேண்டும் என்றால் ஏன், எதற்கு என்று அரசாங்கத்திடம்

உத்தரவு வாங்கிக் கொண்டுதான் அந்தணர்கள் பூஜை செய்ய வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது.

இன்னொரு நேரத்தில் இதைவிட மோசமான ஒரு நிலைமை, சமஸ்கிருதத்தில் பேசவோ, படிக்கவோ, எழுதவோ கூடாது. ஏனெனில் அஸ்திரப் பிரயோகங்களும், யுத்த முறைகளும் அங்குதான் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. எனவே அந்த மொழியை உடனடியாக நம்முடைய தேசத்திலிருந்து ரத்து செய்து விட்டு, அந்த மொழி பேசுகிறவர்களை வெளியேற்றி விட்டு, அந்த மொழி பேசகூடாது என்று கட்டளை பிறப்பித்து விட்டு பிராகிருத மொழியையே தேசத்தின் மொழியாக அறிவிக்கப்பட்டு விட்டது. மொழியைத் தடை செய்தால், அறிவை தடை செய்து விடலாம் என்று நினைக்கிறார்கள். மொழியை அழித்தால் ஒரு கலாசாரத்தை முடித்து விடலாம் என்று நினைக்கிறார்கள்.

பரசுராமா, உன்னால் பரத கண்டத்தில் மிகப் பெரிய குழப்பம்தான் ஏற்பட்டதே தவிர எந்த நன்மையும் விளையவில்லை. காமதேனு ஒரு வேளை சொந்தமென்று கொண்டாடினால் நானதான் கொண்டாடலாம். எனக்காக நீ ஏன் போருக்குப் போனாய். அவமானம் என்று நீ ஏன் கருதினாய் ஒரு அரசன் இது உன்னிடம் இருத்தலாகாது, என்னிடம் தான் இருக்க வேண்டும் என்று இழுத்துக் கொண்டு போனபோது, நான் நினைத்திருந்தால் தடுத்திருக்க மாட்டேனா. நான் நினைத்து தடுத்திருப்பது இருக்கட்டும். காமதேனு நினைத்திருந்தால் தடுத்திருக்க முடியாதா. காமதேனுவை விடவா நீ கெட்டிக்காரன் என்னை விடவா நீ சிறந்த அறிவாளி. அறிவிருக்கும் இடத்தில் அனுபவமில்லை. யோசிப்பு இல்லை. தெளிவு இல்லை.

பரசுராமா நீ இடையறாது கோபத்திலே இருக்கிறாய், இது நல்லதல்ல. உணர்ச்சிப் பிரவாகமாக இருக்கிறாய். இது உத்தமம் அல்ல. அன்பனே, உன் திறமை முழுவதும் நன்கு உபயோகப்பட வேண்டுமென்றால் நீ அமைதியாக இருத்தல் முக்கியம். ஆத்திரப்படுபவன் திறமை இருந்தாலும் அசிங்கப்படுவான்.

ஆளுமை செய்ய ஆசைப்படுபவர்கள் அத்தனை பேருமே ஆத்திரப்படுவார்கள். ஏனெனில் எல்லாவற்றையும் ஆளுமை செய்து விட முடியாது என்று அவர்களுக்குத் தெரிந்திருப்பதால் அவர்கள் ஆத்திரம் வகைதொகையின்றி நாலா பக்கமும் பாயும்.

ஏழை எளிய மக்களை ஏமாற்றி விடலாம். வீரர்களை வளைத்துப் போட்டு விடலாம். கவிஞர்களை, புலவர்களை தனக்கெதிரே உட்கார்த்து பாடும்படி செய்து விடலாம். அழகான மங்கையர்களை ஆடும்படி, புதிய அனுபவங்கள் தருமாறு வற்புறுத்தலாம். ஆனால் மரண பயத்தை வெல்ல முடியுமா. அனுபவங்கள் சேரச் சேர மரண பயம் அதிகமாகும். ஆஹா, இன்னும் எத்தனை பெண்கள் இருக்கிறார்கள் கூடுவதற்கு. இதற்குள் நான் இறந்து விட்டால் ஆஹா, இன்னும் எத்தனை செல்வங்கள் இருக்கிறது அனுபவிப்பதற்கு. அதற்குள் நான் மரிபோய் விட்டால், இன்னும் எத்தனை தேசம் இருக்கிறது நான் பார்ப்பதற்கு. அதற்குள் என் வாழ்க்கை முடிந்து விட்டால் என்கிற பயம் ஏற்பட்டு, அனுபவிக்கும் பொழுது அனுபவம் அழிந்து போய் அனுபவம் அல்லாத ஒரு அனுபவத்தை அடைகின்ற அபத்தம் ஏற்பட்டு விடும். மரணத்திற்கு முன்பே பலமுறை இறந்துபோவது என்பது இதுதான். ஒவ்வொரு க்ஷத்திரியனும் இந்த பேரவஸ்தைக்கு உள்ளாகிறான். அதனாலேயே அதிகம் ஆத்திரப்படுகிறான்."

நீண்ட ஜமதக்கினி முனிவரின் உரையைக் கண்மூடி கேட்டபடி, பரசுராமர் நின்றிருந்தார். அவருக்கு தான் செய்த தவறு புரிந்தது. மௌனமாய் தலை குனிந்திருந்தவர் வில்லை முதுகில் சார்த்திக் கொண்டு தகப்பன் காலில் நெடுஞ்சாணகிடையாக விழுந்து "நான் செய்த தவறு எனக்குப் புரிகிறது. இனி என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்." என்று கேட்டார்.

"எழுந்திரு பரசுராமா. நீ மிகவும் இனிமையானவன், உண்மையானவன். சத்திய சந்தன். நான் வருத்தப்பட்டேன் என்று சொன்னவுடன் உனக்கு உடம்பு துடித்து விட்டது. என் தந்தையை அவமானப்படுத்தினாயா, நான் விட மாட்டேன் என்று என் மீது உள்ள ஆசையினால் என் மீது உள்ள பாசத்தினால் கோபமுடைந்து விட்டாய். பரசுராமா, நல்ல அந்தணன் தாய் மீதும், தந்தை மீதும் கூட இறுக்கமான பாசத்தை ஏற்படுத்திக் கொள்ள மாட்டான்.

தனியனாய் இருப்பதுதான் அத்வைதியாக இருப்பதினுடைய அற்புதமான நிலை. தனியாக இருப்பதுதான் உண்மையாக இருப்பது. உண்மைக்கு மாறாக இருக்கிறபொழுதுதான் எவரையேனும் சார்ந்திருக்க வேண்டுமென்ற மயக்கம் மாயை ஏற்பட்டு விடுகிறது. உடம்பைப் பற்றிய சிந்தனை இருக்கும் பொழுதுதான் நான், நீ என்கிற பேதம் ஏற்படுகிறது. நான்.

நீ என்கிற பேதம் ஏற்படுகிற பொழுதுதான் எதிரி என்பதும், நண்பன் என்பதும், தாய் என்பதும், தகப்பன் என்பதும் மனைவி என்பதும், குழந்தை என்பதும் ஏற்படுகின்றது.

எல்லாம் ஒன்று என்று இருப்பவன் எவனோடும் ஒட்டமாட்டான். எல்லாம் ஒரே விஷயத்தின் பல சிதறல்கள் என்று புரிந்தவன் தனியாக இருப்பதற்கு அஞ்ச மாட்டான். ஓட்டேது உறவேது என்கிறபோதுதான் மற்றவர் பற்றிய எந்த சிந்தனையுமில்லாமல் அது நான்தானே என்கிற எண்ணத்தோடு மௌனமாய் அமர்ந்திருத்தல் முடியும்.

பரசுராமா, மிகப் பெரிய ஒரு விஷயத்தை நான் உனக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறேன். தொடர்ந்து தொடர்ந்து இதை சிந்தனை செய். ஒரு யுத்தம் முடிந்து அந்தப் படபடப்பு அடங்காமல், அந்த கோபம் குறையாமல், அந்த ரௌத்திரம் தணியாமல், வெற்றியின் எக்களிப்பு நகராமல், வெறும் போர் வீரனாய் அலைந்து கொண்டிருக்கிறாய்.

பரசுராமா, உண்மையான வீரன் என்பவன் தன்னை ஜெயித்தவன். மற்றவரை ஜெயிப்பது என்பது காலத்தின் கோலம். நீ எவரையேனும் ஜெயித்தால் உன்னை இன்னொருவன் ஜெயிப்பான். ஆக, இங்கு வெற்றி தோல்விகள் மாறி மாறி ஏற்படும். தன்னை ஜெயித்தவனை எவனும் ஜெயிக்க முடியாது. அவனுக்கு போரும் தேவையில்லை. தன்னை ஜெயித்தவனைக் கண்டு உலகம் மௌனமாக அடங்கும். தன்னை ஜெயித்தவன் மற்றவருக்கு இதம் சொல்வதற்காகவே பிறந்தவன். வழிகாட்டுவதற்காகவே வாழ்பவன். அவனால் போரிட முடியாது. அவன் போர் வேறு விதம். தன்னை அறிதலை பரப்புவதுதான் அவன் உண்மையான போர். தன்னை அறிந்தவர்களை உற்பத்தி செய்வதுதான் அவன் உண்மையான தொழில். உலகம் தன்னை அறிந்தவர்களை அதிகம் கொண்டிருந்தால் மௌனமாக இருக்கும். தன்னை அறியாதவர்களால் தான் உலகம் இவ்வளவு அல்லல் படுகிறது.

இளைஞனே, பந்த பாசம் அறுத்தல் என்பது பந்த பாசத்தை அடக்கிக் கொள்வதல்ல. எவர் மீதும் பிரியமில்லாமல் சீறுவது அல்ல. வெறும் முரட்டு பிடிவாதமல்ல. மௌனமாக இருத்தல்தான் பந்த பாசம் அற்ற இருத்தல். கோபமற்று இருத்தல் தான் தன்னை அறிதல். பரசுராமா, காமம்போன்றே கோபமும் மிகக் கொடுமையான வியாதி. காமத்தில் சிக்கிக் கொண்டவன் எப்படி கருத்தழிந்து போகிறானோ அதே போல

கோபத்தில் சிக்கிக் கொண்டவனும் உருத் தெரியாமல் போகிறான்.

உலகம் மாயை என்று தெரிந்தவர்களுக்கு, இந்தத் தோற்றமெல்லாம் தவறு என்று புரிந்தவனுக்கு யார் மீது கோபம் ஏற்பட முடியும் பரசுராமா. இதோ ஒரு மரம் தெரிகிறது. இந்த மரம் சக்தியின் கூட்டு. இந்த மரத்தை நீ பார்க்கும் வண்ணமாகவே உணர்ந்து உனக்கு உபயோகப்படும் வண்ணமாகவே அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறாய். பரசுராமா, மரம் உன்னை எப்படி பார்க்கிறது என்று தெரியுமா. மரத்தின் முழுமையை உன்னால் பார்க்க முடியவில்லையே. அதன் வேர்களை நீ அறிவாயா. நீ அறிந்ததை மட்டும் வைத்துக் கொண்டு இதன் உபயோகத்தை மட்டும் வைத்துக் கொண்டு இதை உணருகிறாயே தவிர உண்மையில் ஒரு மரத்தை ஒரு மரமாக என்றேனும் நீ பார்த்திருக்கிறாயா. மனதில் கோணாறு உள்ளவர்கள் எதையும் ஜெயித்ததாக ஆக மாட்டார்கள். உனக்கருகில் இருக்கின்ற எப்போதும் இருக்கின்ற ஒரு மரம் பற்றியே உனக்கு எதுவும் தெரியவில்லையே. மண்ணுக்குள் இருக்கின்ற எத்தனையோ ஜீவராசிகளை, கடலுக்குள் இருக்கின்ற ஆயிரமாயிரம் மீன்களை நீ எங்ஙனம் அறிவாய். தன்னை அறிந்தவன் தான் எல்லாவற்றையும் அறிய முடியும். ஏனென்றால் தன்னை அறிந்தவன்தான் உயிரினத்தின் எல்லாவற்றிலும் தன்னைக் காண்கின்றான். தானே அந்த உயிரினமாக மாறுகின்றான்.

தன்னை அறிதல் என்பது தன் உடம்பு பற்றிய சிந்தனை அல்ல. தன் உடம்பு மீறிய சிந்தனை. தன் உடம்பல்ல என்று தெரிந்தவனால்தான் வாழ்க்கையை நன்கு புரிந்து கொள்ள முடியும். ஏனெனில் நான் என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற மனதை வளர்த்துக் கொள்பவனாகத்தான் அவன் இருப்பான். உன் மனம் என்பது நீ அல்ல பரசுராமா" ஜமதக்கினி முனிவர் பேசப்பேச பரசுராமர் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

"சரி நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள் தந்தையே. நீங்கள் சொல்லுகின்ற பிரபஞ்ச ரகசியம், வாழ்க்கையின் உண்மை எனக்குப் புரிகிறது.

நான் என்பது என் உடம்பல்ல. நான் என்பது என் மனமல்ல. நான் என்பது பிரபஞ்ச சக்தி. அந்த சக்தி ஒரு வடிவமெடுத்து பரசுராமராய், ஜமதக்கினி முனிவராய் நின்று தனக்குத்தானே பேசிக் கொண்டிருக்கிறது. இவைகள் இப்போது வார்த்தைகளாகப் புரிகின்றன. என்ன

ஜீவராசிகளும் நான்தான். எல்லாமும் நான்தான் என்னுடைய சக்தி பல ரூபமாக, பல வடிவங்களாக இங்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. மரம் அழிய, நான் அழிய, நானும் அந்த மரமும் ஒன்றாகி விடுகின்றோம். மரம் ஒரு உரு எடுக்க என் சக்தி என்பது நானாக உருக்கொள்ள நானும் மரமும் வெவ்வேறாக தோற்றமளிக்கிறோம். உடம்பு எடுத்ததால் இந்தப் பிரிவினை வந்து விட்டது. உடம்பை நான் என்று கொள்கிற போது பிரிவினையும் இருக்கும். உடம்பை இயக்குகின்ற உணர்வு உடம்பை இயக்குகின்ற சக்தி எதுவென்று பார்க்கிற பொழுது அதே சக்தியே மரத்திலும், விலங்கிலும், பறவையிலும், புழு பூச்சியிலும், உங்களிலும் உலகத்தின் எல்லா பொருள்களிலும் இருப்பதை நான் உணர்கின்றேன் இவை வார்த்தையாக நீங்கள் எனக்கு விளக்கி விட்டீர்கள் இது அனுபவமாக நான் என்ன செய்ய வேண்டும் தந்தையே" என்று கைகூப்பி கேட்க ஜமதக்கினி முனிவர் மெல்லச் சிரித்தார்.

"க்ஷேத்திராடனம் போய் வா பரசுராமா. பல ஊர்களுக்கு தனிமையில் நடந்துபோ. க்ஷேத்திரம் என்பது ஊர் அல்ல. எந்த இடத்தில் உன் மனம் அமைதியாகிறதோ அதுவே க்ஷேத்திரம். எந்த இடத்தில் உனக்கு நிம்மதி கிடைக்கிறதோ அதுவே கோயில். பரசுராமா, கோயில் என்கிற இடத்தில் நம்முடைய முன்னோர்கள் அடக்கமாகியிருக்கிறார்கள். அதனால் அங்கு போகும் போது நிம்மதி கிடைக்கிறது. ஆனால் பல முன்னோர்கள் கோயில்களற்ற இடத்திலும் அடக்கமாகியிருக்கக் கூடும். எனவே வனாந்தரங்களில் எங்கேனும் போகும் போது உனக்கு அமைதி ஏற்பட்டால் அங்கு நின்று அந்த அமைதியை அனுபவித்து வா. இப்படி அமைதியை அனுபவிப்பதற்குப் பெயர்தான் க்ஷேத்திராடனம். ஆரவாரப்படுவதல்ல. ஆரவாரங்கள் மேலும் அமைதியின்மையைக் கொடுத்து வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகளைச் சிதைத்து விடும். உன் மனம் அமைதி அடைய அமைதியான இடங்களுக்கு இடையறாது பிரயாணம் செய். ஒரு அமைதியிலிருந்து இன்னொரு அமைதிக்கு நகர்ந்து போ. எவ்வளவு தூரம் அந்த அமைதி தங்குகிறது என்று உற்றுப்பார். உன்னை உற்றுப் பார்த்தல் எங்கு நன்கு பலப்படுகிறதோ அந்த இடம் சீரிய க்ஷேத்திரம் என்பதை புரிந்துக் கொள். அந்த இடத்திலே அதிகம் தங்கியிருந்து உன் அமைதியை இன்னும் கெட்டிப்படுத்திக் கொண்டு வா. க்ஷேத்திராடனம் என்பது

தனித்து செய்யக்கூடியது. எல்லா இடத்திற்கும் போய் யாசகம் வாங்கி கிடைத்த போது உண்டு. கிடைக்காத போது பட்டினி இருந்து இறைவனையே இடையறாது நினைத்துக் கொண்டிரு. உனக்கு உண்மை புரியும்" என்று சொன்னார்.

"நான் சொன்ன வார்த்தைகள் உனக்கு அனுபவமாகும்" என்று ஆசீர்வதித்தார்.

பரசுராமர் தந்தையை வலம் வந்து விழுந்து வணங்கி க்ஷேத்திராடனம் புறப்பட்டார்.

6

தந்தை சொல்லிக் கொடுத்தார் முதல் குருவாக நின்று வாழ்க்கையின் ஆரம்பப் பகுதிக்கு அழைத்துப் போய் எழுத்துக்களும், எண்களும், இலக்கணங்களும் கற்று மொழி வளம் ஏற்படுத்தி மொழி வளத்தால் தத்துவ சிந்தனைகள் ஊட்டி ஆசிரமத்தில் மிகச் சிறந்த மாணவனாக அவரை உருவாக்கி சகல வித்தைகளும் கற்பித்து, அஸ்திரங்களை எப்படி உருவாக்குவது என்பதையும் விரிவாக்கி அவன் தன்னை அறியும் மகத்தான பாடம் படிக்க தனியே அனுப்பினார்.

குரு என்பவர் வழிகாட்டி என்றால் ஒரு மனிதனுக்கு முதல் வழிகாட்டி தந்தையே. நல்ல வழிகாட்டியாக ஒரு தந்தை அமைந்து விட்டால் அதை விட மிகப் பெரிய பேறு ஒரு மனிதனுக்கு இருக்க முடியாது. எவருக்கு புண்ணியம், பூர்வ புண்ணியம் அதிகம் இருக்கிறதோ, எவர் முற்பிறவியில் நல்ல மகனாக தொண்டாற்றி வந்தாரோ எவருக்கு தாய், தந்தையரை போற்றுகின்ற குணம் இருந்து வந்ததோ மறுபிறவியில் அவருக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாக தந்தையும், தாயும் அமைவார்கள். தாயும், தந்தையும் மிகச் சிறப்பாக அமையப் பெற்று விட்டால் வாழ்க்கையின் எல்லா பகுதிகளையும் மிக செம்மையாக, திறமையாக பிரச்சினைகளை எதிர்கொள்ள ஒருவனுக்குத் தெரிந்து விடும்.

குழந்தைப் பருவம் முதல் இளமைப் பருவம் வரை தாயால் போஷிக்கப்பட்டு, இளம் பிராயத்திலிருந்து வாலிபப் பருவம் வரை தந்தையால் வளர்க்கப்பட்ட மகன் மிகவும் கொடுத்து வைத்தவன். அறிவும், ஞானமும், அமைதியும், பண்பும் கொண்ட பெற்றோர்கள் இருப்பின் இந்த குணங்கள் அவனுக்கு இயல்பிலேயே இருப்பதுமின்றி இயல்பிலேயே இருக்கின்ற அந்தக் குணங்கள் போற்றத்தக்க வகையில் வளர்ந்தும் விடுகின்றன.

தவறான தந்தையைக் கொண்டவன், தவறான தாயைக் கொண்டவன் வாழ்க்கையில் பிரச்சினையை அதிகம் சந்திக்கிறான். அதிகம் குழம்பிப் போகிறான். அதிகம் தவறுகள் செய்கிறான். அவனுக்கு தாயும், தந்தையும் அவன் தவறுகளே ஆகி விடுகின்றன. தவறுகளிலிருந்து கற்பவனால் தவறுகளே தாயும், தந்தையுமாகி அவனைப் போற்றி வளர்கின்றன. அந்த தவறுகளிலிருந்து அவன் கற்கவில்லையென்றால் அவனுக்கு கதி மோட்சமே இல்லை.

தவறு செய்யாமல் மெல்ல மெல்ல தன்னைப் பெற்றெடுத்த தாயிடமிருந்தும் தந்தையிடமிருந்தும் தெளிவான பரசுராமர் வடக்கே இமயமலையை நோக்கி நடந்து போய் அங்கு சஞ்சாரம் செய்து கொண்டிருந்த அழகும் இளமையும் மிக்க ஒரு துறவியை சந்தித்தார்.

பார்த்த மாத்திரத்தில் மனம் ஒருமைப்பட்டது. அவரையே பார்த்துக் கொண்டிருக்கும் ஆவல் ஏற்பட்டது. அந்தத் துறவி ஒரு மலையுச்சியில் நின்று உலகத்தை மௌனமாக பார்த்துக் கொண்டிருக்க சற்றுத் தொலைவிலிருந்து பரசுராமர் அந்தத் துறவியை பார்த்துக் கொண்டிருந்தார். இடுப்பில் கௌபீனம், அதைச் சுற்றிக் கட்டப்பட்ட புலித்தோல் ஆடை. சடை முடி, கையில் திரிசூலம், இன்னொரு கையில் கமண்டலம், சுற்றி நான்கு நாய்கள், கூர்மையான மூக்கு, கனிந்த உதடுகள், உறுதியான முகவாய், நல்ல உயரம், நீண்ட பாதங்கள், நீண்ட கைவிரல்கள், அகன்ற மார்பு, உட்குழிந்த வயிறு, மலர்ந்த கண்கள், மேடான நெற்றி, விரிந்த காதுகள், உடம்பு முழுவதும் ஒரு வெண்கலக் கட்டை போல் ஒரு பளபளப்பு பரவியிருந்தது. பரசுராமர் உற்றுப் பார்த்ததைப் பார்த்து மெல்ல அந்தத் துறவி திரும்பி சிரித்தார். பரசுராமர் அருகே போய் கை கூப்பினார். பரசுராமரை நோக்கி அந்தத் துறவி இரண்டு அடி எடுத்து வைக்க அவருக்கு முன்னால் நாய்கள் ஓடி வர நாய்களுக்கும், அந்தத் துறவிக்கும் சேர்த்து பரசுராமர் நீண்ட நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து வணங்கினார்.

"நல்லது, எழுந்திரப்பா. உன் பெயர் என்ன" என்று துறவி கேட்க, பரசுராமர் தன் பெயரையும், தன் தந்தையின் பெயரையும் தான் ஜனித்த கோத்திரத்தின் பெயரையும் தன்னுடைய வேலையையும் சொன்னார். துறவி சந்தோஷமானார்.

"நான் யார் என்று பதிலுக்கு உனக்குச் சொல்ல வேண்டுமா" என்று பரசுராமரை துறவி புன்சிரிப்போடு

...க. பரசுராமர் தேவையில்லை என்று சொன்னார்.

"ஏனப்பா தேவையில்லை என்று சொல்கிறாய்."

"நீங்கள் மிகுந்த உயர்ந்த நிலையிலே இருக்கிறீர்கள். ...கட்டமான ஆனந்தத்தில் உங்கள் முகம் ...சர்வகாலமும் திளைத்துக் கொண்டிருக்கிறது. ...விகளுக்கெல்லாம் மிகப் பெரிய துறவியாக ...கிகளுக்கெல்லாம் மிகப் பெரிய யோகியாக நீங்கள் ...க்கிறீர்கள் என்பதை உங்கள் ஒவ்வொரு அசைவும் ...டுகிறது. என் தகப்பனாரைத்தான் நான் மிக அழகான ...மனிதர் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். என் ...ப்பனார் ஜமதக்கினி முனிவரைவிட மிக அழகான ஒரு ...திதரை. ஒரு தேஜஸ்வியை இப்பொழுது ...த்திருக்கிறேன். நீங்கள் யார் என்று எனக்குச் சொல்ல ...ண்டிய அவசியமில்லை. உங்களை குரு என்று ...த்தக்கணமே நான் மனதில் வரித்துக் கொள்கிறேன்.

எந்த இடத்தில் நீ அமைதி உணர்கிறாயோ எந்த ...டத்தில் பரிபூரணமாக உன் மனம் உனக்குள் ...ங்குகிறதோ, அந்த இடம் அற்புதமானது என்று என் ...ப்பனார் சொல்லியிருக்கிறார். உங்களைப் பார்த்ததும் ...ங்களைப் பார்ப்பதைத் தவிர வேறு எந்த சிந்தனையும் ...னக்குள் ஓடவில்லை. உங்கள் மீது என் மனம் ...ாத்தமும் கவிழ்ந்து என்னுடைய எல்லா செயல்களும் ...ன்று போய், நான் பார்ப்பதும் மறந்து போய் வெறுமனே ...ந்த நினைப்பும் இன்றி உங்களைப் பார்த்துக் ...காண்டிருந்தேன். நான் என்பதை காணாமல் அடித்தேன். ...ப்போர்பட்ட அனுபவத்தை நான் அடைந்ததில்லை. ...லைகள் வாக்கியங்களாக, சொற்றொடர்களாக எனக்குச் ...சால்லித் தரப்பட்டன. ஆனால் முதன்முதலில் தான் ...ற்றுப் போவதை, நான் இல்லாதிருப்பதை, இருந்தும் ...றந்து போவதை நான் உணர்ந்தேன்.

எனவே எனக்கு நீங்களே குரு. நீங்கள் யார் என்று ...ங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டிய ...வசியமில்லை. குரு என்று தெரிந்த பிறகு குரு என்ன ...யர் சொன்னாலும் குருதான். எந்த கோத்திரத்தில் ...றந்தாலும் குருதான். எப்படிப்பட்ட ரூபமாக இருந்தாலும் ...ருதான். என்னவித வாழ்க்கை வாழ்ந்தாலும் அவர் ...ருதான். உங்களைப் பற்றிய மற்ற எந்த விஷயங்களும் ...னக்குத் தேவையில்லை. நீங்கள் குரு என்கிற இடத்திலே ...னக்கு இருக்கிறீர்கள். என்னை சீடன் என்று ...ங்கீகரித்தால் போதுமானது" என்று கை கூப்பினார். ...ரசுராமரின் பணிவு அந்தத் துறவிக்கு சந்தோஷம்

கொடுத்தது.

"அப்படியே ஆகட்டும்" என்று கைகூ மறுபடியும் பரசுராமர் விழுந்து வணங்கினார். கு ஸ்லோகத்தை சொல்லத் துவங்கினார்.

"தண்ணீரில் இருக்கின்ற பீடையை மைக்ருச்சியினால் அகற்றுவது போல என் அகங்கார எனகிற அசிங்கத்தை தன் சொற்றொடர்களா நீக்குகின்றவரே உன்னதமான குரு. அந்தக் குருவை நான் நமஸ்கரிக்கிறேன்" என்று வந்தனம் சொன்னார்.

அந்த குரு சந்தோஷமானார்.

"பரசுராமா, ஏதோ வேண்டி என்னிடம் வந்திருக்கிறாய். என்னை துதிக்கிறாய். உனக்கு என்ன வேண்டும் என்று கேள்" என்று துறவி சொல்ல பரசுராம "அதையும் நீங்களே தீர்மானம் செய்யுங்கள் நான் எது கற்க உரித்தானவன். எது கற்றால் என் வாழ்க்கை சரியாகும் என்பதையும் நீங்களே முடிவு செய்து விடுங்கள். உங்கள் எதிரில் நான் எந்த செயலும் அற்றவனாக, செய்பவனே இல்லாத தன்மையுடையவனாக இருக்கவே விரும்புகின்றேன்" என்று சொல்ல, அந்தத் துறவி மெல்லிதாய் மந்திர உபதேசங்கள் சொல்லத் துவங்கினார்.

"அத்வைதம் என்கிற நிலையே மிக உயர்ந்தது. இரண்டுமல்லாத என்கிற நிலையே மனிதன் கடைசியாய் அடைய வேண்டியது. இந்த இரண்டுமல்லாமல் கடவுள் என்கிற விஷயத்தோடும் பிரபஞ்ச சக்தியோடும் பரமாத்மா என்று அழைக்கப்படுகின்ற அந்தப் பேரொளியோடு கலப்பதற்குத்தான் பல்வேறு விதமான பிறவிகளை மனிதன் எடுத்து அதை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறான். பிறவி என்கிற பெருங்கடலை மறுபடி, மறுபடி நீந்தி எப்போது கரையடைவோம் என்று அலுத்துப் போய் இருக்கிறான். நல்ல குருவை அடைந்தவர்களும், அன்பானவர்களும், உண்மையானவர்களும் மிக எளிதில் நீந்தி கரையை அடைந்து அந்தப் பேரொளியில் கரைந்து விடுகிறார்கள்.

இப்படி பேரொளியில் கரைந்து விடுவதற்கு த்வைதம் என்கிற ஒரு வழி இருக்கிறது. அது இரண்டானது என்று சொல்கிறது. இரண்டு அல்லாதது என்கிற இடத்திற்கு இரண்டாக இருந்தால்தானே போக முடியும் என்று முடிவு செய்து... நான் வேறு. பரமாத்மா வேறு. பரமாத்மா உயர்வானது. நான் என்கிற ஜீவாத்மா அதற்கு கீழானது. ஜீவாத்மா இடையறாது பரமாத்மாவை நினைத்துக் கொண்டு அதற்கு அருகே போய் வசிக்கலாமே தவிர,

த்தல் இயலாது என்று தீர்மானம் செய்து, அந்தக் கலத்தல் என்கிற விஷயத்திற்கு முன்பு பணிவு என்கிற ஷயத்தை எடுக்க கொள்கிறது. சரணாகதி என்கிற ஷயத்தை ஏற்கிறது. எதை நோக்கி சரணாகதி றைவனை நோக்கி சரணாகதி.

இறைவன் எப்படி இருப்பான். ஒரு அர்ச்சாரூபம் ணம் செய்யப்படுகிறது. நான்கு கைகளோடு, சங்கு க்ரதாரியாக சிரிப்போடு இடுப்பிலே அழகிய பட்டு ட்டியோடு, தோளிலே துண்டோடு, நவரத்ன ணகளோடு, நீண்ட சிகையோடு, அழகிய லையோடு, தாமரை மலரோடு, மென்மையானவனாய், மையானவனாய். அதே சமயம் தவறு செய்தால் டிக்கக்கூடிய தண்டம் உடையவனாய் இருப்பான் று கற்பிதம் செய்து அந்த கற்பிதத்திற்குள் தன்னை ந்து தான் காணாது போய் முழுவதும், முழுவதும் அந்தக் கற்பனைக்குள் வசப்பட்டு பணிவாகி, ன்மையாகி, மரணத் தருவாயில் இரண்டாக இருந்த அந்த ஜீவாத்மா மறுபடியும் பரமேஸ்வரனை நோக்கி வாகக் கீழேபோய் பிறவிப் பேற்றை அறுத்து வரோடு கலந்து விடுகிறது.

அத்வைதம் என்பது ஒரு நிலை. த்வைதம் என்பது ரு வழி. இதே போல இன்னொரு வழியும் இருக்கிறது. சுராமா. அதற்கு சாக்தம் என்று பெயர்.

சக்திதான் உலகத்தின் அசைவு. சக்திதான் ரபஞ்சத்தின் சூட்சமம். சக்தியின் பல்வேறு வங்கள்தான் பூமி. இதர கிரகங்கள். அதற்கு நடுவே ருக்கின்ற இடைவெளியும் சக்தி நிரம்பியது. எங்கும் சக்தி ம்பியிருக்க அந்த சக்தியின் ரூபமாய் நீயும் நானும் ருக்க இந்த மலையும், புல்லும் இருக்க, அந்தப் புழுவும், சியும் இருக்க, இந்த வனவிலங்குகளும், பறவைகளும், ற்றும், அக்னியும், வானமும் இருக்க நாம் அதை நோக்கி தை திருப்புவது நல்லது.

எப்படி திருப்புவது என்ற ஒரு கேள்வி வரும். சக்தி ன்பதற்கு என்ன ஒரு வடிவம் கொடுப்பது என்று ஒரு ரச்சினை வரும்.

வைணவர்கள் அர்ச்சா ரூபமாக, சங்கு க்ரதாரியாக, இடுப்பில் கை வைத்து குழல் ஊதுபவனாக, னைவியை அணைத்துக் கொண்டிருப்பவனாக, ளித்திருப்பவனாக வர்ணனை செய்தது போல சாக்தம் ய்யவில்லை. மாறாய் அது சக்தி என்பது ஒலி ரூபம் ன்று கண்டுபிடித்து விட்டது. எங்கெல்லாம்

சக்தியிருக்கிறதோ, அங்கெல்லாம் ஒலி இருக்கிறது. அந்த ஒலி ரூபத்தை உள்ளுக்குள் தேக்கி வைத்து வெளியே இருக்கின்ற அந்த ஒலி என்ன சப்தமாக உள்ளுக்குள் இருக்கிறது என்று பார்க்க, வெளியே இருக்கிற ஒலிதான் உள்ளேயும் இருக்கிறது என்பதை நம்முடைய முன்னோர்கள் கண்டுபிடித்து அந்த ஒலியை ஒரு வாக்கியத்தில் வைத்தார்கள். அந்த வாக்கியங்களுக்கு மந்திரங்கள் என்று பெயர்.

பிரபஞ்சத்தில் க்லீம் என்ற சக்தி இருக்கிறது. ஹ்ரீம் என்ற சப்தம் இருக்கிறது. ஹூம் என்ற சப்தம் இருக்கிறது. சௌ(ஹ)! என்ற சப்தம் இருக்கிறது. அந்த சக்தியே உடம்பிலும் இருக்கிறது. ஹிருதயத்தின் துடிப்பு சௌஹ் என்பதாகவே இருக்கிறது. நரம்பின் துடிப்பு க்லீம் என்பதாய் இருக்கிறது. கண்களின் அசைவு ஹ்ரீம் என்று வருகிறது. இதுபோல உடம்பில் ஒவ்வொரு அசைவும் ஒவ்வொரு சப்தத்தை ஏற்படுத்துகின்றன. நம்முடைய புறக்காதுகளுக்கு தெரியவில்லையே தவிர சப்தம் அசைவை ஏற்படுத்துகிறது. அசைவால் சப்தம் ஏற்படுகிறது என்பதை பெரியோர்கள் கண்டுபிடித்து, கண்டுபிடித்த சப்தத்தை மந்திரமாக்கினார்கள்.

நானும் சில மந்திரங்களை உன் மூலமாக இந்த பூமிக்குத் தர விரும்புகின்றேன். என்னிடம் கற்றுக்கொள். நீ கற்றதை யாருக்குச் சொன்னால் அவர்கள் நல்லபடி பேணி வளர்ப்பார்களோ அவர்களிடம் சொல். இந்த பரதகண்டத்தில் எந்த பகுதியில் உத்தம்மானவர்கள் இருக்கிறார்களோ, நல்ல குடும்பங்கள் இருக்கின்றனவோ, அங்கே இந்த மந்திரத்தை ஆரம்பித்து வை என்று கட்டளையிட, அந்தத் துறவியிடம் பரசுராமர் பல வருடங்கள் கூடவேயிருந்து மந்திரங்களை கற்றுக் கொண்டார். மந்திரங்களுக்கு நிகரான சப்தங்களின் ரேகைகளான யந்திரங்களை வரையவும், அவற்றை பூஜிக்கின்ற வழிகளையும், மனதை ஒருமுகப்படுத்துகின்ற தன்மையையும் கற்றார்.

யந்திர பூஜையினாலும், மந்திர சப்தத்தாலும் மனம் முற்றிலும் அடங்கிப் போய் தன்னுள் ஆழ்ந்து மூழ்கி இருக்கின்ற நிலைமை ஏற்படுகிறது. தான் என்கின்ற இடம் மட்டுமே கொண்டு அமைதியாய் வாழ்கிறது. தான் என்கிற அமைப்பும் அழிய அது இறை சக்தியோடு கலக்கிறது. தான் என்பது அழிய நான் இறை என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இதைத் தெரிந்து கொள்ளத்தான் சாக்த உபதேசம் உதவி செய்கிறது. சாக்த உபதேசமான

திரங்களும், யந்திரங்களும் உங்கள் உதவிக்கு கின்றன என்று சொல்ல, பரசுராமர் அவற்றை மனனம் து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மந்திரங்களாக ரித்து, உச்சரித்து தன்னை மெருகேற்றி வந்தார்.

மாடு கன்று போடவும், பயிர் செழித்து வளரவும், யாபாரம் நன்கு பெருகவும், தேசத்திற்கு பகைவர்கள் ால் இருப்பதற்கும், கணவன் மனைவி அன்பு மிகுந்து ணப்படவும், ஆண் குழந்தை பிறக்கவும், பெண் ந்தை பிறக்கவும், முகம் பொலிவாக மாறவும், தேகம் று வளரவும், சுவாசம் நன்கு இயங்கவும், செல்வம் திகம் பெருகவும், மழை பெய்யவும், வெயிலில் காயவும் ந்திரங்கள் இருக்கின்றனவே இவைகள் மிக கியமானவையா என்று பரசுராமர் கேட்க, ஆமாம் இக ழ்க்கையில் எவனொருவன் பூரணத்தை டைகிறானோ அவனுக்கு ஆத்மஞானம் ஏற்படும். முழுவதும் தனக்கு வேண்டிய விஷயங்களை எளிதாக அவன் கைக்கொள்ள முடியுமெனில் அதை க்கொண்ட பிறகு அவன் தன் மனதை தனக்குள் ருப்பி விடுகிறான். நல்ல குழந்தைகள் பெற்ற தகப்பன் மதியாவதைப் போல, நல்ல உணவை சாப்பிட்டவன் யர்ந்து இருப்பதைப் போல, காதலோடு தன் னைவியை நன்கு புணர்ந்தவன் மற்ற பெண்கள் மீது னம் செலுத்தாததைப் போல, சிதறாததைப் போல இந்த ளகீக விஷயங்களில் மந்திரங்கள் பிரயோகம் செய்து றைவாகி, நிறைவிற்குப் பின் ஏற்படும் அமைதியை னுபவித்து, அந்த அமைதியின் மூலம் ஆத்மதரிசனம் ற்று, அந்த ஆத்மதரிசனம் பெறுவதற்கு அப்பால் றையோடு கலக்கின்ற தகுதியையும் அடைகிறான்.

எனவே இக, பர என்று இரண்டு வாழ்க்கைக்கும் மான விஷயமாக இந்த சாக்த உபதேசத்தை நான் ற்றியிருக்கிறேன். எல்லாவற்றையும் துறந்துவிட்டுப் ாவதென்பது எல்லோருக்கும் எளிதல்ல. துறந்து ட்டுப்போய் துறந்ததைப் பற்றி ஏக்கம் வளர்த்துக் ண்டு துவண்டு விழுவதைவிட, பொய்யான துறவியாக ருப்பதை விட, மறு ஜென்மத்தில் எதை விட்டு ட்டோமோ அதை முழுவதுமாய் ஒன்றுக்குப்பத்தாய் றுங்க முற்படுவது போல அவலத்தை ஏற்படாமல் இந்த கத்தின் அனுபவங்களை உணர்ந்து அனுபவித்து திலும் இறைமையைக் கண்டு சந்தோஷித்து பிறகு மைதியாக வேண்டும் என்பதே என் விருப்பம் னாலேயே லௌகீகமான, உலகாயதமான இந்த

விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து மந்திரங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

வயலில் பூச்சி விழுந்தால் வாழ்க்கை அபத்தமாகத்தானே போகும். உணவுக்கு மக்கள் எங்கே போவார்கள்.” பல வருடங்கள் அந்தத் துறவியிடம் பாடம் கேட்டு பரசுராமர் தன்னை திடப்படுத்திக் கொண்டார்.

“போதும் பரசுராமா. வேண்டிய அளவு உனக்கு நான் கற்றுக் கொடுத்து விட்டேன். உன் தகப்பனாருக்கு அன்பைச் சொல். ஏதேனும் கேட்க வேண்டியது இருந்தால் ஒரு கேள்வியில் கேட்டு விட்டு நீ போகலாம். நாம் பிரியும் வேளை வந்து விட்டது” என்று சொல்ல பரசுராமர் குருவை வலம் வந்து நமஸ்கரித்து “நான் யாரிடமிருந்து இந்த வித்தையை கற்றுக் கொண்டேன் என்று உலகம் கேட்கும். அதற்கு பதில் சொல்லியாக வேண்டும். எனவே நீங்கள் யார் என்று எனக்கு சொல்ல வேண்டும்” என்று கேட்க, இப்பொழுது தான் சிவரூபம் என்பதும் தன்னுடைய இப்போதைய வடிவிற்குப் பெயர் தத்தாத்ரேயர் என்பதும் தன்னைச் சுற்றி இருக்கிற நான்கு நாய்களும் நான்கு வேதங்கள் என்பதும் காட்ட, பரசுராமர் என்கிற விஷ்ணு அம்சம் நெகிழ்ந்து சிவனைச் சுற்றி வந்து வணங்கி வாயாறப் புகழ்ந்தது.

பரசுராமர் குருவைப் பிரிய வணங்கியபொழுது தத்தாத்ரேயர் பரசுராமரை அணைத்துக் கொண்டு ஆசீர்வதித்தார்.

“படிப்பு என்பது அனுபவத்தின் பாற்பட்டு விளங்க வேண்டும். எந்த நேரத்திலும் உன் படிப்பு உனக்கு உதவி செய்ய வேண்டும். உன்னுடைய முடிவுகளை உன் படிப்பு உறுதிப்படுத்த வேண்டும். எனவே நீ எதைச் செய்தாலும் ஒரு ஞானியைப் போல் செய் என்று ஆசீர்வதித்தார். உலகம் பிரம்மமயம் என்பதைப் புரிந்து கொண்டு செய்” என்று சொல்லிக் கொடுத்தார்.

பரசுராமர் குருவிடம் விடைபெற்றுக் கொண்டு தன் தந்தையின் ஆசிரமம் நோக்கி நடந்தார்.

7

முனிவருக்கு வாழ்க்கைப் படுதல் போல் ஒரு சுகம் உலகத்தில் எதுவுமில்லை. அரசன் என்பவன் பயங்கரமானவன். எப்பொழுதும் ஆயுதங்களோடு இருப்பவன். அலட்டலாக இருப்பவன். அகங்காரமாக இருப்பவன்.

வைசியன் என்பவன் எப்பொழுதும் வியாபாரச் சிந்தனையாக இருப்பவன். வீட்டில் உள்ளோரை விட தன்

பாரமும், பொருளும் முக்கியம் என்று நினைப்பவன்.

புலவர்கள் மமதை கொண்டவர்கள். தன்னை லும் தன் மொழி பெரிது என்று நினைப்பவர்கள். தன் ழிக்கு இழுக்கு என்றால் குடும்பத்தையும் பலி டுக்கத் தயாராக இருப்பவர்கள். எல்லா கலைஞர்களும் களை விட தங்கள் கலை பெரிது என்று எண்ணி ம்பத்தை, மிக முக்கியமாக மனைவியை மூன்றாம் சமாக நடத்துவார்கள். ஆனால் முனிவர்கள் படியல்ல. உலகம் முழுவதும் அன்பால் வணைத்துக் கொண்டு போகிறவர்கள். அவர்களுக்கு ாமங்கள் முக்கியமென்று மனைவியில்லாத மமோ, யாகமோ நிறைவு பெறாது என்றும் தெரிந்து வர்களை அழைத்து அவர்கள் இருக்கின்ற பொழுது ாமம் செய்பவர்கள்.

காடா, காட்டிலா வாழ்க்கை நடத்த வேண்டும். ட்டிலுள்ள புல்வெளியில் குடிசை போட்டுக் கொண்டு ங்கேயா தங்க வேண்டும். மழைக்கு குடிசை தாங்குமா. ற்றில் பிய்த்துக் கொள்ளாமல் இருக்குமா. விலங்குகள் ந்து சுற்றிக் கொண்டால் குடிசையில் ஒளிந்து ள்ளலாமா. யானைகள் மிதித்தால் குடிசையிலிருந்து ப்படி வெளியேறுவது. கோட்டையும், அகழியுமாய் ாழ்ந்து விட்டு எப்படி குடிசைக்குள் குடித்தனம் செய்வது. மணமான நேரத்தில் ரேணுகா கவலைப்பட்டாள்.

ஆனால், ஒரு அற்புதமான கணவன் ணையிருப்பின் உலகத்தில் எதுபற்றியும் ஒரு மனைவி ம் கொள்ள வேண்டியதில்லை என்பதை வெகு சீக்கிரம் ந்து கொண்டாள்.

வனவிலங்குகள் ஆசிரமத்தை சுற்றி வந்தன. னால் ஒரு விலங்கு கூட அத்துமீறவில்லை. ஒரு சிறிய ச்சி கூட உள்ளே நுழையவில்லை. ஓலைக் குடிசைதான். மலே புற்கள் வேய்ந்த கூரைதான். ஆனால் வெய்யிலுக்கு குளுமையாக இருந்தது. பனிக்காற்று ண்டலே இல்லை. மழை [illegible]ள்ளுக்குள் ஒரு துளி கூட ழவேயில்லை. இப்படிப் பாய்கள் தயார் செய்து அந்த ற்பது பாய்களை ஒன்றின் மேல் ஒன்றாகப் போட்டு டுக்கி, நாற்பது அடுக்கு கூரையாக அது இருந்தது.

ஒன்றரை முழ மண் சுவர் தாண்டி குளிர், வெய்யில் துவும் நுழையவில்லை. வாசலும், சாளரமும் தெற்கு ார்த்து வைத்திருந்தன. எனவே இதமான காற்று அழகாக ள்ளே வந்தது. கதவு திறக்கின்ற விதத்தில் காற்று உள்ளே

நுழையும் என்ற வசதி வைக்கப்பட்டிருந்தது.

பெண்களுக்கான இடம் வேறு இடத்தில் இருந்தது. சுற்றி எல்லா இடங்களிலும் நந்தவனம் அமைக்கப்பட்டிருந்தன. மயில்களின் ஆட்டமும், குயில்களின் பாட்டும், புறாக்களின் வட்டமடித்தலும், கிளிகளின் பேச்சும், மைனாக்களின் அழைப்பும் மனதை கொள்ளை கொண்டன. சற்று நேரம் வெட்ட வெளியில் உட்கார்ந்து ஜபம் செய்தால் போதும். ஆறேழு மான்கள் அருகே வந்து உட்கார்ந்து விடும். பறவைகள் அருகே சிறகடித்திருக்கும். ஜபம் செய்துகண் விழித்த பிறகு சுற்றி பறவைகளையும், மான்களையும், கன்றுக் குட்டிகளையும் பார்ப்பது மிகச் சந்தோஷமான விஷயம். நேரே பசுக் கொட்டிலுக்குப் போய் ஒவ்வொரு பசுவாக தடவி விட்டு வந்தால் பசுக்கள் கழுத்தால் உடம்பை அணைத்துக் கொண்டு நாக்கால் குதிகாலை நக்கும். மிகப் பெரிய சந்தோஷத்தை ஏற்படுத்தும்.

வேலை செய்ய மாணவர்கள் இருந்தார்கள். உதவி செய்ய பெண்கள் இருந்தார்கள்.

பெரிய வளாந்தரம். நடுவே புல்வெளி. கறவை மாடுகள். கிழங்குத் தோட்டங்கள். கோதுமை வயல்கள். பழ மரங்கள். கீரை வகைகள். காய்கறிகள். மலர்ச்செடிகள் என்று அற்புதமான ஒரு தோட்டத்தில் அவள் குடியிருந்தாள்.

இதைத்தாண்டி அவசியமானவை நகரத்திலிருந்து வரும். துணியும், அணிகலனும், பாத்திரங்களும் தோல் கருவிகளும், மர ஆசனங்களும் வணிகர்களோ, சிற்றரசர்களோ, தனவந்தர்களோ, கொடுத்தனுப்புவார்கள். மிகப் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். வாழ்க்கை மிக மிக ரம்மியமாக இருந்தது.

காலை எழுந்து கை, கால்களை அலம்பிக் கொண்டு ஜபம் செய்ய உட்கார்ந்து, சூரியன் உதித்ததும் தோழிகளோடு மெல்ல நடந்து பேசிக் கொண்டு போய் ஆற்றில் இறங்கி முங்கிக் குளித்து பிறகு அங்கிருந்து தோட்டங்களுக்குப் போய் மலர்கள் பறித்து, காய்கறிகளை சமையலுக்கு அனுப்பி, பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து, ஹோமங்கள் ஆரம்பித்ததும் அதில் பங்கு கொண்டு, சூரியன் பளிச்சென்று வெளிச்சமாய் இருக்கும் போது ஹோமங்கள் முடிய மாணவர்களுக்கும், கணவருக்கும், மற்றவருக்கும் உணவுகள் பரிமாறி தானும் உண்டு மறுபடியும் நாம ஜபத்தில் மூழ்கி பிறகு மதிய

உணவு எடுத்துக் கொண்டு சிறிது நேரம் கண்ணயர்ந்து மாலை மறுபடியும் ஹோமம் நடக்க, பிறகு பாடல்களும், ஆடல்களும் நடக்க இரவு கதைகள், விவாதங்கள் நடக்க, வானத்தில் நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்ற வரை பேசிக் கொண்டிருந்து விட்டு பிறகு படுக்கைக்குப் போய் தனியே அமர்ந்து பாட்டுப் பாடி இறைவன் நாமம் சொல்லி மெல்லத் தூங்கிப் போய் மறுபடியும் விடியலில் எழும் ஒரு சந்தோஷமான வாழ்க்கை.

புருஷன் கம்பீரம் என்றால், பிள்ளைதான் சந்தோஷம். புருஷன் ஒரு பாதுகாப்பு என்றால் பிள்ளை அதை விடவும் பலமான ஒரு பாதுகாப்பு. தனக்கு ஒரு சிறிய இடைஞ்சல் என்றால் புருஷன் கோபமடைவார். பிள்ளையோ துடித்துப் போவான்.

யார் என் மனைவியை இம்சிப்பது என்று புருஷன் கோபத்தோடு கேட்பார். பிள்ளை எழுந்து நின்று இம்சித்தவரை அடித்து நொறுக்கி விடுவான். பிறகுதான் பேச்சே துவங்கும்.

கருவை சுமக்கும் போதே தெரிந்து விட்டது. பரசுராமன் சாதாரணமான ஆன்மா இல்லையென்று. பெற்று இறக்கும்போது புரிந்து விட்டது இது பூமியை ஆளப் போகிறது என்று. நெஞ்சில் சுமக்கும் போதும், முதுகில் தூக்கிக் கொண்டு ஆற்றங்கரைக்கு போகும் போதும், குளிப்பாட்டும் பொழுதும், குழைத்து சோறு வாயில் ஊட்டும் பொழுதும் அவனைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கும்.

"நீ பெரியவனான பிறகு என்னை கவனித்துக் கொள்வாயா. என் அருகே உட்கார்ந்து என்னைப் போற்றி பாதுகாப்பாயா. என்னை பிரியத்துடன் நடத்துவாயா. இது என் தாய் என்று பலருக்கும் சந்தோஷமாக அறிமுகப்படுத்துவாயா" என்று கேள்வி வரும்.

அவன் வளர்ந்து பாட சாலைக்குள் நுழைந்த முதல் நாள் வேறு உலகத்திற்கு அவன் தன்னிலிருந்து பிரிகிறான் என்ற துக்கம் ஏற்பட்டது. இனி இவனுக்கு படிப்புதான் முக்கியமான விஷயம். பிறகு தான் தாய். பிறகுதான் தந்தை. இவன் தன்னுடைய படிப்பை தான் சகலமுமாக கொள்ளப் போகிறான் என்று தெரிந்து விட்டது.

வீட்டிலிருந்து வெளியே எதிரே இருக்கின்ற பர்ணசாலையில் நுழையும் முன்பு பரசுராமன் திரும்பிப் பார்த்தான். சிரித்தான். போய் வருகிறேன் என்று கை கூப்பினான். உள்ளே போனான்.

மூன்று நாட்கள் வீட்டின் பக்கம் வரவேயில்லை. இவன் வாசலில் காத்திருந்ததுதான் மிச்சம். சிறிது நேரம் உட்கார்ந்து விட்டு பல பிள்ளைகள் அம்மாவை நோக்கி ஓடி வந்து விடும். ஆனால், பரசுராமன் அப்பாவிற்கு அருகிலேயே படுத்துக் கொண்டான். அப்பா உணவிட்ட கலத்திலிருந்து தானே எடுத்து உண்டான். அப்பா ஆற்றங்கரைக்குப் போக அவனும் போனான். அப்பாவின் துணிகளை துவைத்துக் கொடுத்தான். அப்பா சாப்பிடும் வரை கை கட்டி காத்திருந்தான். அந்த ஐந்து வயதில் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று உற்றுப் பார்த்து தானும் அவ்விதமே செய்யத் துவங்கினான். அம்மா என்கிற விஷயத்தை, அம்மா கொடுத்த சௌகரியத்தை, அவள் உணவு ஊட்டலை, அவள் அணைப்பை, அவள் கதகதப்பை, அவள் கொஞ்சலை, அவளோடு சாய்ந்து சாய்ந்து ஆடியதை சகலமும் மறந்து விட்டு விரைப்பாகி விட்டான்.

ரேணுகாவுக்கு இது வருத்தம் கொடுத்தது. ஆனால் ஒரு நல்ல பிள்ளை இப்படித்தான் இருக்க வேண்டும். பாடத்தில் கவனம் செலுத்தாமல் பாதியில் உதறி அம்மாவை வந்து 'கட்டிக் கொள்ளுகிற பிள்ளை அவ்வளவு வலுவானவன் இல்லை. இந்த உலகத்தை எதிர்கொள்ள, இந்த உலகத்தின் சூட்சுமங்களை முறியடித்து அதை நல்லதாக்க அவன் அதிகம் படிக்க வேண்டும். அதிகம் உழைக்க வேண்டும் என்று ரேணுகாவுக்குத் தெரிந்தது.

மூன்று நாள் கழித்து தகப்பனோடு வந்து உட்கார்ந்து, கலயத்தில் சோறு வைத்ததும் யாரும் ஊட்டாமல் தானே உண்டு கலயத்தை சுத்தம் செய்து தகப்பனார் கலயத்தையும் சுத்தம் செய்து கவிழ்த்து வைத்துவிட்டு அம்மாவுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டான்.

"என்ன படித்தாய்" என்று கேட்டதும் மடமடவென்று தான் படித்ததை அனைத்தையும் அம்மாவிடம் சொன்னான்.

இவன் சாதாரண பிள்ளை இல்லை என்று மறுபடியும் தெள்ளத் தெளிவாய் தெரிந்தது. இவன் படித்ததற்கு அப்பாலும் தெரிந்து வைத்திருக்கிறான் என்று புரிந்தது. அவர்களுடைய மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் பரசுராமனுடைய உடம்பிலும், முகத்திலும், மனதிலும் உறுதி ஜொலிப்பதை உணர முடிந்தது. இவன் வரம். இவன் முன்னோர்களின் மூலம் கிடைத்த பொக்கிஷம். இவன்

ஆசீர்வாதம் செய்யப்பட்ட குழந்தை. இவன் இந்த உலகத்தில் மிகப்பெரிய காரியங்கள் நிகழ்த்துவதற்காக பெரியோர்களால் தூண்டப்பட்ட வித்து என்பது புரிந்தது.

இவன் பிறப்பு ரகசியம் தெரிவிப்பட்டிருந்தாலும் அதை அவன் யாரோடும் பகிர்ந்து கொள்ளவில்லை. அந்தணனாகப் பிறந்தாலும் அவன் கோபமுள்ளவனாக, மிகுந்த கம்பீரமுடையவனாக, வேகமாய் காரியம் செய்பவனாக இருந்தான். விரைவாக நடந்தான். துணிவாக நின்றான். திறமையாக செயலாற்றினான்.

ஜமதக்கினி முனிவர் விதம் விதமாக அவன் மேனியை மெருகேற்றினார். நல்ல மழை அடிக்கும் போது "பரசுராமா" என்று கூப்பிடுவார். பரசுராமர் தூங்கிக் கொண்டிருந்தாலும் சட்டென்று எழுந்து அப்பாவுக்கு அருகே வந்து நிற்பான். வெளியே மழை பெய்கிறதய்யா என்று தந்தை சொல்வார். சொல்லுங்கள் அப்பா என்று மகன் கை கட்டி நிற்பான். "போய் மழையில் நில்" என்று அப்பா கட்டளையிடுவார். பிள்ளை எந்தப் பேச்சும் கேட்காமல் நேரே போய் கொட்டுகின்ற மழையில் நிற்கும். கடும் இருட்டில் கொட்டுகின்ற மழையில் அசையாமல் நிற்பான்.

ஒரு விளக்கேற்றி வீட்டு வாசலில் ரேணுகா வைப்பாள். அவன் விடியலில் எழுந்து வந்து அம்மாவை நமஸ்கரிப்பான்.

"அம்மா நீங்கள் விளக்கு வைத்தது எவ்வளவு சந்தோஷமாக இருந்தது தெரியுமா. என் உடம்பு குளிரால் நடுங்கியது. அந்த விளக்கிலிருந்து வரும் வெளிச்சத்தை தான் உஷ்ணமாக மாற்றிக் கொண்டு என் உடம்பு உஷ்ணத்தை பெருக்கிக் கொண்டேன். எனக்கு குளிரே தெரியவில்லை" என்று சந்தோஷத்துடன் சொல்வான். ரேணுகா அவன் தலையைத் தடவி நெற்றியில் முத்தமிடுவாள்.

எப்படி உன்னால் இருக்க முடிந்தது என்று வியப்போடு பார்ப்பாள்.

கடும் கோடையில் சுமையோடு அவனை வெகுதூரம் போய் வரச் செய்வார். அவனும் போய் வருவான். உடம்பு முழுவதும் வியர்வை பெருக கறுத்துப் போய் தோல் உரிய நிற்பான்.

நான் குளிப்பாட்டி விடுகிறேன் என்று ரேணுகா முன் வரும்போது மறுத்து விடுவான். அப்பா கொடுத்த

வேலையை முடித்து விட்டு ஓடிப்போய் நண்பர்களோடு ஆற்றில் நீச்சல் அடிப்பான். மூங்கிக் குளிப்பான். உடம்பை மூலிகைகள் போட்டு தேய்த்துக் கொண்டு வீட்டிற்கு வந்து உணவெடுத்துக் கொண்டு விறுக் கட்டையாய் விரைத்து நீட்டி படுத்துக் கொண்டு அயர்ந்து தூங்கிப் போவான். தூங்குகிற பிள்ளைக்கு அருகே போய் விசிறி எடுத்து மெல்ல ரேணுகா விசிறுவாள்.

எது குறித்தும் பயமில்லாமல், எது குறித்தும் தயக்கமில்லாமல், தகப்பனார் வாக்கையே தெய்வ வாக்காகக் கொண்டு வளருவது அவளுக்கு சந்தோஷமாக இருந்தது.

எனக்கும் உன்னைப் பார்த்து எதாவது கட்டளையிட வேண்டும். நீ அதை உடனே நிறைவேற்ற வேண்டும் என்ற ஆசையெல்லாம் உண்டு. ஆனால் என்ன கட்டளையிடுவது என்றுதான் தெரியவில்லை. மனதுக்குள் நினைத்துக் கொள்வாள்.

பத்து வயதில் நல்ல நாள், பார்த்து கையில் ங்கில்கள் கொடுத்தார்கள். வில்லை ஏந்தி, தகப்பனை வணங்கி, பிறகு தாயிடம் வந்து அந்த வில்லை அவளிடம் கொடுத்து அவள் பாதங்களில் நெற்றியை பதிய வைத்து "நான் நன்கு படிக்க வேண்டும் என்று ஆசீர்வாதம் செய்யம்மா" என்று சொன்னான்.

சரி என்று ரேணுகா சொன்னாள். அவள் தலையில் கை வைத்து "எல்லா வெற்றிகளும் உன்னை வந்து அடையட்டும்" என்று வாழ்த்தினாள். "தர்மத்தின் பாதுகாவலனாக நீ திகழ வேண்டும்" என்று சொன்னாள்.

அஸ்திரங்களைப் பற்றி முதல் பாடம் பரசுராமனுக்கு ஜமதக்கினி முனிவர் கற்றுத் தந்தபோது ரேணுகாவும் அருகில் இருந்தாள். அருகில் இருந்த தர்ப்பையை சிறுகத்தியால் வெட்டி பரப்பி இப்பொழுது இவை புற்கள். வெறும் புற்கள். இந்த புற்களை சரியான திக்கிலே வைத்து சரியானபடி மந்திரம் உச்சரித்து சரியானபடி வீசினால் இவை அஸ்திரங்களாகும். பெரிய இரும்பு உலக்கையை இந்த புற்கள் துண்டு துண்டாய் உடைக்கும். இதனுள் சக்தி ஏற்றுவதுதான் நம்முடைய வேலை. மெல்லிய பிரம்புகளை மூங்கில் கழிகளை துளையிட்டு அதற்குள் நெருப்பு அடைத்து காற்று விதம் விதமாக புகுந்து போகும் வண்ணம் செய்து மந்திர ஒலியை அந்த இடத்திலே பரவச் செய்து அந்த மந்திர ஒலி இதனுள் புகுந்து நெருப்பையும், காற்றையும் தூண்ட இது சீறிப் பாய்ந்து எதிரே இருக்கும்

னை முழுவதையும் துவம்சம் செய்யும்.

அந்தணர்களாகிய நமக்கு இந்த அஸ்திர வித்தை யும் தெரிந்திருக்க வேண்டும். நாம் பிரயோகப்படுத்த லை இது மற்றவருக்கு வழங்குவதற்காக நாம்தான் தயார் ய வேண்டும். யார் இதற்குத் தகுதியுடையவரோ, ருக்கு இதை அளிக்க வேண்டும். தவறான இடத்தில் பாவி மக்கள் மீது பிரயோகிக்க மாட்டேன் என்று தியும் வாங்கிக் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு த தர்ப்பைப் புல்லை நீவி நான் அந்த மரத்தில் தைக்கச் கிறேன் பார் என்று சொல்லி தர்ப்பைப் புல்லை வீச, மிகுந்த சீறலுடன் போய் மரத்தில் ஒரு சாண் ஆழம் த்தது. இதுவே ஒரு மனிதனுடைய நெஞ்சாக இருந்தால் ந்த சில விநாடிகளில் அவன் மரணமடைந்திருப்பான். ரும்புல் ஒருவனைக் கொல்ல போதும்.

ஒரு மனிதன் ஆயுதம் எடுத்து அலையவேண்டிய சியமில்லை. வழியில் கிடைக்கும் புற்களோ, கற்களோ, மோ ஏன் சில சமயம் வெறும் ஜலம் கூட யுதமாகலாம். கருவிகளில் எதுவும் இல்லை. விகளை கையாள்பவர் அந்த கருவிகளிடம் மந்திரம் றுவதில்தான் விஷயம் இருக்கிறது. அவன் ஸ்திரவித்தையை தெரிந்து கொள்வதும், விதம் விதமாக ற்சி செய்வதையும் ரேணுகா அருகே இருந்து த்தாள்.

"அஸ்திரங்களை விடுவது போல அஸ்திரங்களை ப்பது பற்றியும் சொல்லித் தருகிறேன். மந்திரத்தால் ன்னைச் சுற்றி ஒரு வெற்றிடம் ஏற்பட்டு விடலாம். இந்த வற்றிடம் ஏற்படுத்தி விட்டால் எந்த விஷயமும் இந்த வற்றிடத்தைத் தாண்டி இங்கு வராது. வெற்றிடத்தை டைவெளி விட்டு சரைக் கம்பிகள் போலும் செய்து டலாம். அப்போதும் பெரிய கதை போன்ற விஷயங்கள் ன்னைத் தாக்காது. நீ எதிராளியை பார்க்கவும் முடியும். ந்த ஆயுதமும் உன்னை தாக்கவும் தாக்காது. இந்த வற்றிடம் இல்லாத நடுவே நீ அம்பு செலுத்தும்படியாக று காற்றுள்ள இடத்தையும் நீ உருவாக்கிக் கொள்ளலாம். ற்றுள்ள இடத்தின் வழியாக நீ ஆயுதத்தைச் லுத்தலாம். பிறகு வெற்றிடத்தை உன் எதிரே நிறுத்திக் ாள்ளலாம். மிக அற்புதமாக தனி ஒருவனாக ஒரு ரும்படையை நீ எதிர்கொள்ள முடியும்.

பரசுராமர் சிறிது கூட சிந்தனை சிதறாமல் தகப்பன் ால்வதைக் கேட்டுக் கொண்டான். அப்பாவைத் தவிர

வேறு எவர் முகத்தையும் ஏறிட்டுப் பார்க்காமல் இருந்தான்
அவன் அஸ்திரம் கற்றுக் கொள்வதை தாயும், தாயிலுடைய
தோழிகளும் மற்ற மாணவர்களும் உற்றுப் பார்க்கிறார்கள்
என்பது பற்றி சிறிது கூட லட்சியம் செய்யாதிருந்தான். தன்
பாடம், தன் தகப்பன் தவிர வேறு எதிலும் அவனுக்குச்
சிந்தனையில்லை.

ஒரு ஆண் எவ்வளவு வேகமாக ஒரு
பெண்ணிடமிருந்து விலகுகிறான். ரேணுகாவுக்கு
கவலையாக இருந்தது. தன் மடியில் கொஞ்சி சீராடிய
பிள்ளை தன்னை நமஸ்கரிக்க மட்டுமே வந்து போகிறான்
என்பது சற்று ஆதங்கமாக இருக்கிறது.

இவ்வளவுதானா. உன்னை வளர்த்து ஆளாக்கி வில்
தூக்கவும், அம்பு தொடுக்கவும் வைத்துவிட்டேன். இனி
தகப்பன்தான் முக்கியமா. நான் இல்லையா. எப்பொழுதும்
அவர் முகத்தைத்தான் பார்த்துக் கொண்டிருப்பாயா.
என்னை திரும்பிக் கூட பார்க்க மாட்டாயா. நான் எப்படி
இருக்கிறேன் என்று விசாரிக்க மாட்டாயா. என்று
மனசுக்குள் பொருமினாள். அப்படியென்ன ஒரு தகப்பன்
என்று ஜமதக்கினி முனிவரை இளக்காரமாகவும் நோக்கத்
துவங்கினாள். இது எப்படியடி நியாயம் என்று
தோழிகளோடு பேசத் துவங்கினாள். தோழியும் வேறு
வழியில்லாமல் ஆமாம் நீங்கள் சொல்வதுதான் சரி என்று
ரேணுகாவுக்கு ஆதரவாகப் பேசினாள்.

"நாம் கஷ்டப்பட்டு பத்து மாதம் குழந்தை சுமந்து
அந்த சுமப்பதினால் ஏகப்பட்ட உபத்திரங்கள் பட்டு தூங்க
முடியாமல் அலைந்து வயிறு புரட்டி வாந்தி எடுத்து
மயக்கமாகி, தள்ளாடி பெருமூச்சு விட்டு இருமினால்
குழந்தைக்கு வலிக்குமே என்று இருமாமல் அடக்கி, நம்
ஆசைகளை ஒதுக்கி வைத்து விட்டு, குழந்தைக்கு என்ன
ஆகும், என்ன ஆகாது என்று பார்த்து உணவு எடுத்துக்
கொண்டு சகல நேரமும் அவனையே நினைத்துக்
கொண்டிருக்க அவன் ஒரு எல்லைக்குப் பிறகு வேறு
பக்கம் போவது ஆத்திரமாகத்தான் இருக்கிறது" என்று
வேலைக்காரி சரஸ்வதி சொன்னாள்.

"அதுமட்டுமல்ல, பிறந்த பிறகு எத்தனை இம்சை.
ஒவ்வொரு அசைவையும் கவனித்து முழு நேரமும் வேறு
எந்த வேலை செய்து கொண்டிருந்தாலும் இவன்
சிந்தனையோடு இருந்து இவன் பால் குடிக்கிறேன் என்று
உயிரை உறிஞ்சுவது போல நம் சத்தை உறிஞ்சி எடுத்து
அந்த ஒரு அவஸ்தையை அடுத்து நமது உடுப்புகளை

ாக்கி, நம் உறக்கத்தை அடிக்கடி கலைத்து, எத்தனை
ங்கள் கொடுத்திருக்கிறான். ஆனால் இவைகளை
ங்கள் என்று எண்ணுவதற்கு கூட முடியவில்லையே.
டி வளர்த்த குழந்தை பத்து வயதிற்குப் பிறகு தானும்,
தகப்பனும் மட்டுமே முக்கியமென்று வேறு ஒரு
த்திற்குப் போவது என்ன நியாயம். இது இயற்கை
ந்த சதியா அல்லது இந்த மனிதர்கள் வகுத்த திட்டமா.
நான் சாப்பிட சொல்லிக் கொடுக்கா விட்டால் நான்
குடிக்க சொல்லித் தராவிட்டால், நான் எப்படித்
துவது, எப்பொழுது கண் விழிப்பது என்று சொல்லித்
விட்டால் இவன் அஸ்திரப் பயிற்சியோ, ஆயுதப்
ற்சியோ கற்றுக் கொள்ள முடியுமா. முதன் முதலில்
வு உட்கொள்வது என்பதை நாம் சொல்லித்
வில்லையா. இந்த நன்றியை இவன் வைத்திருக்கிறானா.
தப் பிள்ளையும் தாயிடம் நன்றியோடு இல்லை
பதுதான் என் அபிப்ராயம் என்று ரேணுகா பொருமிச்
ால வேலைக்காரி சரஸ்வதி ஆமோதித்தாள்.

"ஆனால், அவனை இனிமேல் திசை திருப்ப
முமா."

"முடியாது. அவன் தந்தை பக்கம் திரும்பி
தையும், அவனும் வேறு பக்கம் நடந்து போய்க்
ண்டிருக்கிறார்கள். இந்த உலகத்தில் ஜெயிப்பது பற்றி
யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். தர்ம நியாயங்கள்
றியும், வேத விசாரங்கள் பற்றியும், வாழ்க்கை
ரம்பித்தது பற்றியும், எப்பொழுது மறையும் என்பது
றியும், பிரபஞ்சம் தோன்றியது பற்றியும், வளர்வது
றியும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்."

"இதெல்லாம் படிக்கிற அந்தப் பையனுக்கு
ண்கள் பற்றி ஏதேனும் சொல்லித் தருவாரா."

"மாட்டார் என்று தோன்றுகிறது. படித்த
ண்களுக்கு பெண்கள் மீது ஒரு அலட்சியம். வெறும்
ாகப் பொருள் என்பதாக ஒரு எண்ணம். வெறும்
ளவிக்காக நிறுத்திக்கொள்ளவே இவர்களுக்கு விருப்பம்.
வதம் சொல்கிறது என்பதாலேயே நம்மை அருகே
வத்து யாகம் செய்கிறார்கள். மற்றபடிக்கு நாம்
லங்காரப் பொருளே தவிர வேறு எதுவுமில்லை.
மதக்கினி முனிவரிடம் இதுபற்றி ரேணுகா பேச
யற்சித்தபொழுது அவர் விழி உயர்த்தி போதும் என்று
டக்கினார்.

"இதுபற்றி பேச வேண்டுமென்றால் சரியாகச்

சிந்திக்க வேண்டும். சரியாகச் சிந்திக்க வேண்டுமென்றால் நடுநிலையிலே இருக்க வேண்டும். நடுநிலையிலே இருக்க வேண்டுமென்றால் எது குறித்தும் ஆசையற்று வாழ வேண்டும். ஆசையோடு இருப்பவர்கள் நடுநிலையில் இருப்பவர்கள் அல்ல. நடுநிலையில் இல்லாதபொழுது எந்த விஷயத்தைப் பற்றியும் முழுதாக தெரிந்து கொள்ள முடியாது. முழுதாக தெரிந்து கொள்ளாத விஷயத்தைப் பற்றி நீ என்னோடு பேசுவதில் எந்தப் பயனும் இல்லை" என்று சொல்ல ரேணுகா வாயடைத்துப் போனாள்.

பதினாறு வயது வந்ததும் பரசுராமர் தந்தையை வணங்கி நின்றார்.

"நல்லது. இந்தநாள் ஒரு நல்ல நாள். எனவே நீ என்னையும், உன் தாயையும் இந்த ஆசிரமத்தையும் விட்டு இமயமலை பக்கம் போ. வனாந்தரங்களில் சஞ்சரித்து அங்குள்ள தாவரங்களைப் பற்றியும், விலங்குகளைப் பற்றியும் தெரிந்து கொள் நான் சொல்லிக் கொடுத்த வித்தைகளை தனியே பயிற்சி செய். நகரங்களுக்குப் போய் மக்களுடைய வாழ்க்கையை கவனி. அவர்களுடைய குணங்கள் மாறுவதை உற்றுப் பார். அரசர்களுடைய கொக்கரிப்பை, அந்தணர்களுடைய அலட்டலை, வைசியர்களுடைய தந்திரத்தை, சாதாரண மக்களின் கள்ளத்தனத்தை நன்கு பார்த்து அதில் நல்லவர்கள் இருக்கிறார்களா என்று தேடு. அவர்களை உற்சாகப்படுத்து.

எல்லா வர்ணத்திலும் நல்லவர்களும், கெட்டவர்களும் இருக்கிறார்கள். அதில் நல்லவர்களை உற்சாகப்படுத்த. அவர்களின் சிறப்பால் இன்னும் நல்லவர்கள் அதிகப்படுவார்கள். கெட்டவர்கள் அவர்களாலேயே விலக்கப்படுவார்கள். எனவே ஒரு அந்தணன் இடையறாது இதைச் செய்து கொண்டிருக்க வேண்டும்.

நாம் வெறும் அந்தணர்களாக இல்லாமல் இன்னும் ஒரு படி மேலே போய் முனிவராக, மந்திரங்களை சுவீகரிக்கின்ற ரிஷியாக வாழ்வதற்கு முயற்சிக்கிறோம். எனவே இந்த மனித குலத்தை வழி நடத்த வேண்டியது நம்முடைய கடமை. வழி நடத்துவதற்குப்பின் எந்த வழியில் இவர்களை நடத்துவது என்பதை உற்றுப் பார்த்து, நீயாக கற்றுக் கொள். இனி நான் சொல்லித் தரும் பாடம் முடிந்தது. ஒவ்வொரு முடிவும் இனி எடுக்க வேண்டியது நீயே. நீ மட்டுமே.

பரசுராமா அஸ்திர வித்தைகளில் மிகச் சிறந்தவனாக இருக்கிறாய். கர்வம் கொள்ளாதே. எல்லா விஷயமும் உனக்கு தெளிவுறத் தெரிந்திருக்கிறது. வெளியே அதை விரித்துச் சொல்லாதே. அலட்டல் காட்டாதே. அமைதியாக இரு. நல்லவர்கள் யார் என்று உற்றுப்பார். அவர்களை திசை திருப்ப நல்லவர்களைக் கொண்டாடு. முடிந்தபடிக்கு அந்தணனாகவே இருப்பதற்கு முயற்சி செய்" என்று சொல்ல. பரசுராமர் தகப்பன் கொடுத்த வில்லோடு ரேணுகாவை வந்து வணங்கினார்.

"விடை பெறுகிறேன் ஆசீர்வதிக்க வேண்டும்" என்றார்.

"எப்போது வருவாய் பரசுராமா" ரேணுகா கேட்க பரசுராமர் தலை நிமிர்த்தி, "தெரியாதம்மா எப்பொழுது தோன்றுகிறதோ அப்போது வருவேன்."

"இது என்ன பதில் பரசுராமா. நீ இன்று வருவாய், நாளை வருவாய் என்று ஒரு இலக்கு இருந்தால் அந்த நாளுக்காக நான் காத்திருப்பேனல்லவா."

"அம்மா, நீங்களும், நானும் மறுபடியும் நிச்சயம் சந்திப்போம். சந்திக்காமல் போக மாட்டோம். ஆனால் எப்பொழுது எந்தச் சூழ்நிலையில் என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை. சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. எனக்காக காத்திருக்காதீர்கள். தாயே, உங்கள் வேலை என்னை பெற்றதும் முடிந்து விட்டது. என் தகப்பனின் வேலை எனக்கு வித்தைகள் கற்றுக் கொடுத்ததும் முடிந்துவிட்டது. நீங்கள் ஏன் என்னை பிரிய மறுக்கிறீர்கள் என்று தெரியவில்லை. இதோ அப்பா மிக அழகாக உனக்கும், எனக்கும் எந்த உறவுமில்லை. நீ வெளிப்பார்வைக்கு மகன். ஆனால் உள்ளே உன்னுடைய விஷயங்களை நீயே நடத்திக் கொள்ள வேண்டும். நீயே உன் புகழுக்குக் காரணமாக வேண்டுமென்று என்னை அறுத்து விடுவது போல நீங்கள் ஏன் அறுக்கவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. அம்மா... எனக்குத் தோன்றியபோது வருகிறேன். நான் வந்தாலும் வராதுபோனாலும் எங்கு வாழ்ந்தாலும் இவரே எனக்குத் தந்தை. நீங்களே எனக்குத் தாய். எனவே நாம் சந்திப்பதும் சந்தித்து மறுபடி பேசுவதும் முக்கியமில்லை" என்று சொல்ல ரேணுகா நாணத்தால் தலை குனிந்தாள்.

ஜமதக்கினி முனிவர் வாய் விட்டுச் சிரித்தார். பிள்ளையை ஆசீர்வதித்தார்.

பிள்ளை வடக்கே போயிற்று.

ஒரு மனிதனின் சந்தோஷமான பருவம் வாலிபப் பருவம்தான். அந்த வாலிபப் பருவத்திலும் வீட்டைச் சாந்திராது வீட்டினுடைய சகல சுகங்களையும் அனுபவித்து உருவாகி, உரமேறி கையில் தனுசுடன், இடுப்பில் வாளுடன், புத்தியில் படிப்புடன், நெஞ்சில் நம்பிக்கையுடன் வெளியே கிளம்பும் நேரம்தான் சுகமானது. பாரசாமர் தனியே ஆசிரமம் விட்டு வடக்கு நோக்கி ஒவ்வொரு வனங்களாக தாண்டிப் போகும் பொழுது மிகுந்த சந்துஷ்டியோடும், காலத்தோடும் நடந்து போனார்.

எவ்வளவு அற்புதமான வாழ்க்கை எனக்கு கிடைத்திருக்கிறது. என் தகப்பன் எவ்வளவு புத்திசாலி. எத்தனை விஷயங்களை தெரிந்து வைத்திருக்கிறார். எவ்வளவு எளிமையாகக் கற்றுக் கொடுக்கிறார். கற்றுக் கொள்வது எப்படி என்பதை முதன்முதலில் கற்றுக் கொடுத்து விட்டு பிறகு எல்லா விஷயங்களையும் கற்றுக் கொடுக்கிற போது எவ்வளவு தெளிவாகப் புரிகிறது.

இந்த பிரபஞ்சத்தினுடைய மகிமையை எத்தனை எளிதாக எனக்கு விளக்கினார். நான் அடுத்தபடி செய்ய வேண்டிய காரியத்தை எத்தனை சுவையாகச் சொன்னார்.

ஆஹா.. இதற்கெல்லாம் மூல காரணம் தாயல்லவா. அம்மாவின் உபசரிப்பல்லவா. அவள் கொடுத்த உணவல்லவா. அவள் கொடுத்த ஆதரவல்லவா. பத்து வயது வரை பார்த்துப் பார்த்து வளர்த்து விட்டு தந்தையின் பெருமையைச் சொல்லி, தந்தை போன்ற பெரியோர்களின் கதையைச் சொல்லி, ஒரு நல்ல மாணவனாக கொண்டு போய் அப்பாவிடம் சேர்த்து அப்பா ஒரு அற்புதமான வாலிபனாக மாற்ற, இப்பொழுது வடக்கு நோக்கி போய்க் கொண்டிருக்கிறோம் என்று ஆனந்தத்தோடு நடந்தார்.

அங்கங்கே புற்களைப் பறித்து மந்திரம் ஏற்றி அம்பாக்கி மரங்கள் மீதும், மலைகள் மீதும் பிரயோகம் செய்து அதன் பலத்தைத் தெரிந்து கொண்டார். அது என்ன பாழ்படுத்துகிறது என்பதை புரிந்து கொண்டார். எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமல் இது என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அறிந்து கொண்டார்.

காடுகளிலிருந்து நகரங்களின் பக்கம் திரும்பினார். ஒரு அந்தணனாக தர்மசாலைகளின் பக்கம் போய் நின்று உணவு யாசித்து உண்டார்.

"கையில் வில் வைத்திருக்கிறீரே எதற்கு. அந்தணர் வில் வைத்திருப்பது தருமா" தர்மசாலையில் கேட்டார்கள்.

"உங்களைப் போன்ற நல்லவர்களுக்குத் தொந்தரவு ...தால் இந்த வில்லைக் காண்பித்து ...றுத்துவதற்குத்தான் வைத்திருக்கிறேனே தவிர மிகப் ...ரிய பிரயோஜனம் இதுவரை இந்த வில்லுக்கு ...டவில்லை" என்று பணிவோடு சொன்னார்.

"ஆமாம், ஆமாம் கையிலே வில் வைத்து ஒரு ...தணன் நடந்து போய்க் கொண்டிருக்கிறான் என்றால் ...ருடர்கள் பயப்படத்தான் செய்வார்கள். குறிப்பாய் ...வரசர்கள் சற்று பின் வாங்கத்தான் செய்வார்கள்."

"ஏன் இளவரசர்கள் ஏதேனும் அத்து ...கிறார்களா."

"அத்து மீறாத இளவரசன் எவரேனும் உண்டா" ...ரத்தில் இருந்த மற்றவர்கள் பேசினார்கள்.

"நீங்கள் சொல்வது புரியவில்லையே. நான் ...லிருந்து வருகிறேன். நகரம் பற்றி அதிகம் எனக்குத் ...ரியவில்லை. விரிவாகச் சொல்லுங்கள்" என்று சொல்ல ...வரசர்கள் செய்கிற அட்டூழியங்கள் பரசுராமருக்குத் ...ரியப்படுத்தப்பட்டன.

"ஒரு வைசியர் தன குடும்பத்தோடு புதிதாக ...ங்கல்லால் வீடு கட்டினார். வேலே மரங்களை அறுத்து ...லுவான உறுதியான கூரை போட்டார். ஓடுகள் வேய்ந்தார். ...டு தயாரான மறுநாள் இளவரசன் சிறிய படையோடு ...து, இந்த வீடு தனக்கு வேண்டும் என்று சொல்லி ஒரு ...று பொற்காசை கொடுத்து அவரை வெளியே ...த்தி விட்டான். அவர் மறுபடியும் குடிசையில் வந்து ...ழ்ந்து கொண்டிருக்கிறார். அந்த வீடு இப்பொழுது ...வரசனுக்குச் சொந்தமாகி விட்டது.

இளவரசன் முழு நேரமும் அங்கு இருப்பதில்லை. ...ா, போக குதாட, மது குடிக்க, பெண்களோடு சல்லாபிக்க ...ந்த வீட்டை மாற்றி வைத்து விட்டான். இப்பொழுது ...ருக்குள்ள வேலையாட்கள் அங்குள்ள பெண்களோடு ...லாபித்துக் கொண்டிருக்கிறார்கள். வருவோர், ...வோருக்கு அந்த வீட்டை வாடகைக்கு விட்டுக் ...ண்டிருக்கிறார்கள்.

ஒரு அந்தணரிடம் அந்த இளவரசன் தியானம் ...றுக் கொண்டான். மிகச் சிறப்பாக தியானம் செய்தான். ... தம்பிகளையும் அரசர் அனுப்புவதாக இருந்தது. ...வன் அந்தணரை அழைத்து அவர் நாவை அறுத்து ...ட்டான்.

எனக்கு சொல்லிக் கொடுத்ததுபோல வேறு

எல்லோருக்கும் சொல்லிக் கொடுக்கக் கூடாது. எ
தம்பிகளுக்கு தியானம் வரக்கூடாது. அவர்கள் சிற்றி
மன்னிரராய்த்தான் இருக்க வேண்டும். உங்களை வி
இந்த ஊரில் தியானம் சொல்லிக் கொடுக்க அடுத்
படியான ஆள் நான்தான், எனவே நீங்கள் சொல்லி
கொடுக்காமல் இருக்கவே உங்கள் நாக்கை அறுக்கிறே
என்று சொல்லி விட்டான்.

அந்தணர் தன் சிறப்பை இழந்து விட்டில் முடங்கி
கிடக்கிறார். அவருக்கு மாதாமாதம் நெல்லும், பணமு
போய்க் கொண்டிருக்கின்றன. ஆனாலும் அவருடை
ஒளி மங்கிவிட்டது.

இளவரசர்களால் மிகவும் கஷ்டப்படுகிறவர்க
ஆடற்பெண்கள்தான். தினசரி அந்த வீட்டில் ரகளை
பிரம்பால் அங்குள்ள "ஆண்களை அடிப்பதும்
பெண்களை இம்சிப்பதும் அவர்கள் அலறுவதும்
அவர்கள் அலறுவதை வேடிக்கை பார்ப்பதுமாகத்தா
நடந்து கொண்டிருக்கிறது. இது மாதிரி ப
கொடுமைகளய்யா. இவைகளை எல்லாம் பார்க்கு
பொழுது உங்களைப் போல் வில் எடுத்துக் கொண்டு
வித்தை கற்றுக் கொண்டு, தெருவில் இறங்கி விடலாம
என்று தோன்றுகிறது. வெறும் அந்தணனாக இருப்பதி
எந்தப் புண்ணியமும் இல்லை. அவர்கள் அடிக்க
அலறுகிறவர்களாய் இருப்பதில் எந்த மலர்ச்சியும் இல்லை
நமது வித்தை நம் எதிரேயே நம்மை கை விடுவதை
பார்க்கும்பொழுது குலத்தின் மீதும், குலத்தின் படிப்பி
மீதும் எனக்கு அவநம்பிக்கை ஏற்படுகிறது.

இந்த குலத்தோன் என்று சொல்வதை விட எனக்கு
எந்த குலமும் இல்லை, எந்த நெறிமுறைகளும் இல்லை
என்று துறவியாய் அலையலாம் என்று தோன்றுகிறது.

வீட்டுப் பெண்களை தூக்கிக்கொண்டு போய்
விடுகிறார்கள். சொத்துப் பத்துகளை பிடுங்கி
கொள்கிறார்கள். நம் இருப்பை கேலி செய்கிறார்க
என்கிற பொழுது துறவு தானே உயர்ந்த விஷயம்.
இன்னொருவர் நொந்தபடி சொன்னார்.

பரசுராமர் அந்த இடத்தை விட்டு கிளம்பினார்
வேறு தேசம் போனார்.

இளவரசர்களால் பெண்கள் அவமானப்பட அந்த
வீட்டு ஆண்கள் அந்த அவமானத்தைத் தடுக்க முடியாம
அரச குடும்பத்தினரை தண்டிக்க முடியாமல் தங்க
வீட்டுப் பெண்களை நீ ஏன் வெளியே வந்தாய் என்று,

ஏன் அழகாக இருக்கிறாய் என்று அவர்களின் அழகைச் சிதைத்தார்கள். அதிகம் உண்ணாதே என்று கட்டளையிட்டார்கள். விரதங்களும், நோன்புகளும் நோற்று மெலிந்து வாடி இருக்கும்படி வைத்துக் கொண்டார்கள். ஒரு சிறிய வீட்டுக்குள்ளேயே வாழ்க்கை முழுவதும் இருக்கும் படியாக நிர்பந்தித்தார்கள். இப்படி வைத்திருக்கிறீர்களே என்று பெண்கள் கேட்க படிப்பதினால்தானே கேள்வி கேட்கிறாய். படிக்க வேண்டாம். படித்தால் முகத்தில் நல்ல களை வந்து விடும். பயம் போய் விடும். பயம் போய் விட்டால் நீ முன்னும் பின்னும் அலையத் துவங்கி விடுவாய். நீ முன்னும் பின்னும் அலைந்தால் அது எனக்கு ஆபத்து என்று அவளை அடக்கி வைத்தார்கள்.

படிப்பில்லாதவர்களாய் மாற்றினார்கள். படிப்பில்லாமல் பயத்தோடு வாழும் குழந்தைகள் பெரியவர்களாகி பலவீனமான குழந்தைகள் பெற்றார்கள். ஞாபகசக்தி இல்லாத, நல்ல பேச்சுத்திறன் இல்லாத, எப்பொழுதும் மிரண்டு பார்க்கின்ற குழந்தைகள் தெருவில் அதிகமிருந்தார்கள். யார் வித்தியாசமாக தெருவில் நடந்து போனாலும் ஆட்டு மந்தைகள் போல பின் தொடர்ந்தார்கள். பயந்த பையன்களுக்கு நடுவே கெட்டிக்காரத்தனமாய் இருந்த பையன்கள் பொய்யாய் வேடம் போட்டார்கள். பெரிய வீரனைப் போல் நடந்து கொண்டார்கள் அல்லது வேதம் அறிந்தவனைப்போல கபடதாரியாய் அவர்கள் முன்னே நின்றார்கள். தேசமெங்கும் மக்களிடையே பொய் பரவியிருந்தது. பேசுபவர்களின் பொய்களை பொய்யர்கள் நம்பினார்கள். மிக உத்தமர்கள் என்று கொண்டாடினார்கள்.

அந்தணர்களிலும், க்ஷத்திரியர்களிலும் வைசியர்களிலும் இம்மாதிரி பயந்த பக்குவமில்லாத குழந்தைகள் அதிகம் பேர் இருந்தார்கள். தேசம் மொத்தமுமே வீணாய் நிற்பது தெள்ளத் தெளிவாக பரசுராமருக்குத் தெரிந்தது.

க்ஷீணமான குழந்தைகளாய் ஒழுக்கக் கேடாய்த்தான் வாழ முடியுமே தவிர ஒழுக்கத்தை உறுதியாக கைப்பற்ற முடியவில்லை. வைராக்கியம் இல்லை. வைராக்கியம் இல்லாததால் மனனம் செய்வதும், தெளிவாகப் புரிந்து கொள்வதும் பிரச்சினையாகி விட்டது. தெளிவான புரிதல் இல்லாததால், அதே சமயம் படிப்பில் நல்ல உயர்வு தேவைப்பட்டதால் ஆசிரியர்களை வேறு விதமாக

அணுகி, அவர்களுக்குப் பல்வேறு உதவிகள் செய்து அவர்களை சந்தோஷப்படுத்தி, நான் படிப்பில் தேறி விட்டதாக அவர்களை சொல்ல வைத்து. அப்படி தேறிய மாணவர்கள் பெரிய வேலையில் அமர்ந்து, அந்த வேலைகளையும் குட்டிச்சுவராய் அடித்திருந்தார்கள்.

நல்ல வைத்தியர்கள் இல்லை. உறுதியான கல்தச்சர்களும், கட்டிடக் கலைஞர்களும் இல்லை. நேர்மையான பண்டிதர்கள் இல்லை. சரியாக ஆருடம் சொல்லவும், நேரம் கணித்துக் கொடுக்கவும் ஆட்கள் இல்லை. அமைதியான அமைச்சர்கள் இல்லை. கெட்டிக்காரத்தனமான அதிகாரிகள் இல்லை. வீரமுள்ள காவல்காரர்கள் இல்லை. எல்லாரும் பல தலைமுறைகள் பெண்கள் பயந்ததால் படுமட்டமாகி, ஒரு குழப்பமாய் அந்த தேசம் இருந்தது. பரம்பரைபரம்பரையாய் மக்களை அழுத்தி நசுக்கியிருப்பதும் மிகுந்த பொய்கள் சொல்லி வாழுவதும் புரிந்தது.

வசிப்பவர்களில் நல்லவர்களைத் தேர்ந்தெடுத்து பரசுராமர் அவர்களை தனியே வனத்திற்குப் போய் நல்ல கட்டிடக் கலைஞர்களை, நல்ல ஜோசியர்களை, நல்ல கவிஞர்களை, நல்ல போர் வீரர்களை, நல்ல மருத்துவர்களை தயார் செய்தார். ஒரு வருடத்திற்குள் பல நூறு பேர்களுக்கு மந்திரங்கள் சொல்லிக் கொடுத்து வைராக்கியம் ஏற்படுத்தி, ஒழுக்கத்தில் சிறப்புகளைச் சொல்லி, மூச்சு உள்வாங்கி வெளிவிடுதலை கவனமாக்கி புத்திக்கூர்மையை அதிகரித்து, தன் மனோபலத்தால் அவர்களின் மனோபலத்தைத் தூண்டி விட்டு நகருக்கு அனுப்பினார்.

நகரம் சந்தோஷப்பட்டது. அவர் அனுப்பிய கவிஞர்களும், கதைக்காரர்களும், கட்டிடக் கலைஞர்களும், மருத்துவர்களும் மக்களிடையே போய் நல்ல செய்திகளை சொன்னார்கள். பொய்யர்களை இனம் காட்டினார்கள். உண்மையாய் இருப்பதின் நன்மையைச் சொன்னார்கள். வன்மையை உணர்த்தினார்கள். பலநூறு வருடங்கள் பொய்யில் வாழ்ந்திருந்த அந்த நகரம் நல்ல திசை நோக்கி திரும்பியது.

யார் உன் குரு. எங்கே இருக்கிறது அவரது இருப்பிடம். எவ்விதம் கற்றாய் இவ்வித விஷயங்களை அவரிடம் நானும் கற்றுக் கொள்ள வேண்டாமா. அந்த குருவை எனக்கும் அறிமுகப்படுத்து. அவர் பெயரை நானும் சொல்ல விரும்புகின்றேன். அவரை வணங்க விரும்புகின்றேன். அவர் படத்தை, அவர்

உருவச்சிலையை இங்கு வைத்து நாம் தினசரி கொண்டாடுவோம். இன்னும் நம் மீது அவர் கருணையை பொழியச் செய்வோம்.

இந்த ஊர் எவ்வளவு அற்புதமாக மாறத் துவங்கி விட்டது. பெண்கள் எவ்வளவு சந்தோஷமாக வெளியே வந்துவிட்டார்கள். இதற்குக் காரணம் பரசுராமரல்லவா. அந்த விஷ்ணுவின் அம்சமல்லவா. அவரை மறுபடியும் இங்கு அழைத்து வாருங்கள் என்று மாணவர்களை திருப்பிக்க கற்ற மாணவர்கள் மறுத்து விட்டார்கள்.

பரசுராமர் வேறு தேசம் போனார்.

அங்கு போயும் இந்த வேலைகளை செய்தார். அப்படிச் செய்கிறபொழுது அங்குள்ள பெண்களைப் பார்க்கிறபொழுது தன் தாயினுடைய கெட்டிக்காரத்தனமும், தந்தையினுடைய கம்பீரமும் அவருக்கு ஞாபகம் வந்தன. தன்னை இவ்விதம் பல ஊர்களுக்கு போகச் சொன்னதினுடைய காரணம் அவருக்குப் புரிந்து போயிற்று.

எங்கோ ஒரு வனாந்தரத்தில் நாற்பது போகருடன் கூடிய ஒரு ஆசிரமத்தில் அமர்ந்து பாரதகண்டம் முழுவதும் தன் கைகளைப் பரப்பி உற்சாகப் படுத்திக் கொண்டிருக்கின்ற ஜமதக்கினி முனிவரின் திறன் ஞாபகம் வந்தது. அவருக்குத் துணையாக இருக்கின்ற அம்மாவின் அன்பு நினைவுக்கு வந்தது.

அவர் இன்னும் பல தேசங்கள் சுற்றினார். பல பெண்களின் வாழ்க்கை மலர்வதற்காக ஆண்களை உற்சாகப்படுத்தினார். நேர்மை வழியில் திருப்பினார். உண்மையாக இருக்கவும், கடுமையாக உழைக்கவும் வைராக்கியத்தோடு வாழவும், வைராக்கியத்தோடு வாழ்கிறபோதே கனிவாக இருக்கவும் பல மாணவர்களுக்குக் கற்றுத் தந்தார். புதிய தலைமுறை பரசுராமரால் சீர்பட்டு எழுந்தது.

இமயமலை அடிவாரத்தில் தத்தாத்ரேயரைப் பார்த்து அவரோடு அமர்ந்து சாக்தம் கற்றுக் கொண்டார். சாக்தம் கற்றுக் கொள்ளும் பொழுது தாய் வழிபாடு எவ்வளவு முக்கியம் என்று அவருக்குப் புரிந்தது.

தாய் வழிபாடுதான் போகத்தையும்; போகத்தையும் கொடுக்கவல்லது. அதுதான் பரதகண்டத்திற்கு சிறப்பானது என்ற முடிவுக்கு வந்தார்.

மந்திரங்களை சொல்லித்தர சொல்லித்தர மாணவர்கள் பலமாகவும், முகம் பிரகாசமாகவும், கற்றுக்

கொள்ள ஆவல் அதிகரிப்பதும், தான் கற்று சிறந்ததை மற்றவருக்கு ஓடிப்போய்ச் சொல்வதும், அவர்களும் கற்றுக் கொள்வதும் இங்கு தொடர்ந்து நடைபெறுவதை அறிந்து, தத்தாத்ரேயர் கற்றுக் கொடுத்த சாந்த உபதேசத்தை மெல்ல மெல்ல அங்கங்கே முக்கியமானவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

அம்மாவைக் கொண்டாடு என்று வற்புறுத்தினார். அம்மா பயமின்றி இருந்தால்தான் நல்லது என்று மாணவர்களுக்கு மனதில் பதியும்படி விளக்கிச் சொன்னார். அம்மாவை போற்றுகின்ற மாணவர்கள் மனைவியையும் போற்றி வணங்கினார்கள்.

அரசர்கள் அத்துமீறும்போது எச்சரித்து திருத்தப்பட்டார்கள். அரசர்களுடைய ஆவேசம் மட்டுப்பட்டது. அரசர்களுக்கும் இந்த விஷயங்கள் சொல்லித் தரப்பட, அவர்களும் பெண்களை மரியாதையாக நடத்துகின்ற நிலைமைக்கு தள்ளப்பட்டார்கள். இவ்வாறு பல மாற்றங்களை ஏற்படுத்தி பரசுராமர் தன் தேசம் நோக்கி திரும்பினார்.

அந்த ரேணுகா விடியல் நேரத்தில் குளிக்கப் போனகையில் நீரில் சலசலப்பு அதிகமிருந்து முழங்கால் ஜலத்திலிருந்து முன்னேறுகையில் அங்கு ஒரு கந்தர்வன் தன் மனைவியோடு எதிர்க்கரையில் குளித்துக் கொண்டிருப்பதை பார்த்தாள்.

கந்தர்வனைப் பார்த்ததும் ஆச்சரியமாக இருந்தது. அந்த கந்தர்வன் இளமையாக கம்பீரமாக இருந்தான். அவன் மனைவி அவனுக்கருகே இருந்து தலையில் எண்ணெய் தடவி, முதுகுக்கு வெண்ணெய் தடவி, விரல்களை சுத்தம் செய்து, கால்களில் அழுக்கு எடுத்து, அவனை குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள். குடத்தில் நீர் எடுத்து அவன் தலையில் ஊற்றினாள். வாசனைப் பொடிகளை தடவினாள்.

கந்தர்வர்கள் பல ரூபம் எடுக்கக் கூடியவர்கள். மான்களாக, யானைகளாக, தாவரங்களாக, தேனீக்களாக உருவெடுத்து சுற்றுகிறவர்கள். இடையறாது ஆணும், பெண்ணுமாய் குதூகலித்திருப்பவர்கள். இந்த கந்தர்வர்கள் மானிடர்கள் ரூபம் எடுத்து சந்தோஷமாய் குளியல் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

கந்தர்வன் குளித்ததும் பாதியில் எழுந்து தன் மனைவியை அருகே உட்கார வைத்து, நீர் மொண்டு அவள் தலையில் ஊற்றி, அவளுக்கும் வாசனைப் பொடி

தடவினான். இரண்டுபேரும் ஒருவருக்கொருவர் வாசனைப் பொடி தடவிக் கொண்டு சிரித்து பேசிக் கொண்டிருந்ததை ரேணுகா தொலைவிலிருந்து பார்த்தாள்.

என்ன அற்புதம். எவ்வளவு அன்யோன்யம். எத்தனை அன்பு. இவனைப் பார்த்தால் பரசுராமனைப் போலவே இருக்கிறது. பரசுராமன் வடக்கே போய் ஆறு வருடங்கள் ஆகிவிட்டன. பதினாறு வயதில் போன பிள்ளை இப்பொழுது இருபத்திரண்டு வயதாக வளர்ந்திருப்பான். இன்னும் அகலமாயிருப்பான். இன்னும் உறுதியாகியிருப்பான். இன்னும் சிகை நீண்டு வளர்ந்திருக்கும். அந்த பரசுராமன் இப்படி ஒரு பெண்ணோடு குதூகலித்து குடித்தனம் நடத்துவதை பார்க்க வேண்டும். பார்த்துவிட்டுத்தான் இந்த உலகம் விட்டுப் போக வேண்டும். இந்த கந்தர்வனை விட பரசுராமன் இன்னும் அழகாக இருப்பான் என்று தோன்றுகிறது. இந்த கந்தர்வியை விட இன்னும் நளினமான, இன்னும் அழகான ஒரு பெண் பரசுராமனுக்குக் கிடைக்க வேண்டும். அவர்கள் இப்படி குளிப்பதையும், பேசுவதையும், சல்லாபிப்பதையும் பார்க்க வேண்டும் என்று ரேணுகா யோசனை செய்தாள்.

வெய்யில் மேலேறியது. ஜமதக்கினி முனிவர் ஆசிரமத்து பூஜைக்கு வேண்டிய நீரோடு திரும்ப வேண்டிய மனைவி இன்னும் ஆற்றங்கரையிலேயே இருப்பதை உணர்ந்தார். என்ன செய்கிறாள் என்று உற்றுப் பார்த்தபோது அவள் கந்தர்வனும், கந்தர்வியும் சல்லாபிப்பதை திகைத்து பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. இன்னும் ஆழ்ந்து நோக்கியபோது மகன் மீது உண்டான பாசத்தால் எல்லா இடங்களிலும் மகனைப் பார்க்கின்ற மனோநிலைக்கு தள்ளப்பட்டிருப்பது புரிந்தது.

உன்னுடைய வேலைகளை விட்டு விட்டு மகன் என்கிற விஷயத்தில் மாட்டிக் கொண்டு தவிக்கிறாய். மகன் என்று ஒருவன் பிறந்து விட்டால் புருஷன் அடுத்தபடியான விஷயம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை முழுவதும் புருஷன் மட்டுமே துணை. மகன் அல்ல. மகன் என்பவன் புருஷனின் ஒரு சிறிய பகுதி. அவ்வளவே. எவ்வளவு உயர்வாக மகன் இருந்தாலும், புருஷனை விட பிரபல்யமாக இருந்தாலும் புருஷனே ஒரு பெண்ணுக்கு தெய்வம் போன்றவன். அவனே குரு. அவனே பாதுகாப்பு. அவனே அவளுக்கு உரிமையானவன். புருஷனைப் புறக்கணித்து தெய்வத்தை வணங்கினாலும் அது தவறாகத்தான் இருக்கும்.

பிள்ளையை கொண்டாடுவது மிக மோசமான வழிகாட்டியாக இருக்கும். புருஷனைத் தவிர ஒரு பெண்மணி வேறு எவரையும் கொண்டாட விடக்கூடாது. மகனைக் கொண்டாடுவதில் தனக்கு உரிமை இருக்கிறது என்று ஒரு பெண் நினைத்துக் கொண்டிருந்தால் அவளை தண்டிக்க வேண்டியது புருஷனுடைய கடமை.

"ரேணுகா, இங்கு வா" என்று அழைத்தார். ரேணுகாவுக்கு தூக்கி வாரிப் போட்டது. நடு ஆற்றில் இருந்தவள், கந்தர்வர்களைப் பார்த்துக் கொண்டிருந்தவள் திரும்பி ஆசிரமம் நோக்கி வந்தாள். இடுப்பில் குடம் இருந்தது.

ஜமதக்கினி முனிவர் வாசலில் வந்து நின்ற ரேணுகாவை ஏறிட்டுப் பார்த்தார்.

ஜமதக்கினி முனிவரின் ஆசிரமத்தை நெருங்கிக் கொண்டிருந்த பரசுராமருக்கு துர்சகுனங்கள் தோன்றின.

ஏதேனும் ஆசிரமத்தில் கலவரங்கள் நிகழ்ந்திருக்குமோ. எவரேனும் தந்தைக்கு தீங்கிழைத்திருப்பார்களோ. எதனால் மனம் அமைதியின்றி தவிக்கிறது. எதனால் இடதுகண் துடிக்கிறது. எதனால் இடது புறத்தில் ஒரு 'அதிர்வு ஏற்படுகிறது. ஏன் பறவைகள் தரையில் இறங்கி உட்காருகின்றன. நரிகள் ஊளையிடுகின்றன. மனிதரத்தத்தை பார்க்கப் போகிறோம் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றனவே.

'மரத்தில் ஏறும் தவளை. மல்லாந்து கிடக்கும் ஓணான். காற்றடித்து மரத்திலுள்ள கூடுகளிலிருந்து கீழே விழுகின்ற பறவை முட்டை என்று எல்லா குறிகளும் துர்சகுனமாகவே இருக்கின்றனவே என்று கவலையோடு ஆசிரமத்தை நெருங்கினார்.

ஆசிரமத்துக்கு வெளியே உட்கார்ந்திருந்த அம்மாவைப் பார்த்ததும் திகைத்துப் போனார். விழுந்து நமஸ்கரித்தார்.

'என்ன ஆசிரமத்துக்கு வெளியே உட்கார்ந்திருக்கிறீர்களே' என்று விசாரிக்க எத்தனித்த போது அம்மா கை உயர்த்தினார். உள்ளே போய் அப்பாவைப் பார் என்று சைகையில் சொன்னார். அவர் தயங்க, மீண்டும் வற்புறுத்தினாள். அவர் வேகமாக அப்பாவைப் பார்க்க உள்ளே போனார்.

உள்ளே அப்பாவுக்கும் சகோதரர்களுக்கும் கடும் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. உள்ளே நுழைந்ததும் சகலரும் அவரைத் திரும்பிப் பார்த்தார்கள்.

தந்தை எழுந்து நின்றார். பெரிதாகச் சிரித்தார்.

"வா, பரசுராமா வா," என்று கை விரித்தார். பரசுராமனை ஆரத் தழுவிக் கொண்டார்.

"விஷ்ணுவைப் போல ஜொலிக்கிறாய் பரசுராமா. என்னிடம் பாடம் கேட்டும் உன் சகோதரர்களுக்கு அறிவில்லை. குருவிடம் நம்பிக்கையில்லை. குருவும், தந்தையுமாய் இருக்கின்ற என்னை எதிர்த்துப் பேசுகிறார்கள். நான் சொன்ன கட்டளையை நிறைவேற்ற மறுக்கிறார்கள். நீ என்ன செய்யப் போகிறாய் பரசுராமா" என்று கேட்க "உங்கள் கட்டளையைத் தவிர வேறு எதுவும் எனக்கு முக்கியமில்லை. வேறு எந்த சித்தாந்தமும் உண்மையில்லை. என்னை இந்த உயரத்திற்கு கொண்டு வந்து வைத்ததும், என்னை வழிப்படுத்தியதும் நீங்களே. உங்களுடைய அன்பு இல்லையெனில். ஆதரவு இல்லையெனில் என்னால் இத்தனை சீரும் சிறப்புமாக வளர்ந்திருக்க முடியாது.

நீங்கள் அறிந்த அத்தனை வித்தைகளையும் எனக்கு நீங்கள் கற்றுக் கொடுத்ததை நான் நன்கு அறிவேன். இதற்கு பிரதி உபகாரமாய் நான் என்னையே கொடுத்தாலும் தீராது. கார்த்த வீர்ய அர்ச்சுனன் போல வலிவுமிக்க அரசர்களை தனி ஒருவனாய் அடித்து வீழ்த்த முடியுமென்றால் அதற்கு நான் காரணமல்ல. நீங்கள் எனக்கு போதித்த வித்தைகளே காரணம்.

தந்தைதான் மிகப் பெரிய குரு. தந்தைதான் மிக முக்கியமான குரு. தந்தையின் ஆசீர்வாதம் இல்லையெனில் வேறு குரு வெகு நிச்சயமாய் அவருக்குக் கிடைக்கமாட்டார்.

இமயமலைச் சாரல்களில் என்னை யாத்திரை போகச் செய்து அங்கு நான் தத்தாத்ரேயரை சந்திக்க, அவர் மூலம் எனக்கு பல மந்திர உபதேசங்கள் நடந்தன. சாக்த வழிபாட்டை நான் குறைவற கற்றுக் கொண்டேன். இவ்வளவு பெரிய விஷயம் எனக்கு கிடைப்பதற்கும் நீங்களே காரணமாக இருந்திருக்கிறீர்கள். அதுவும் தவிர நீங்கள் கட்டளையிட்டு மறுப்பதற்கு எனக்கு ஒன்றுமில்லை. நீங்கள் எது செய்தாலும் நியாயமாகச் செய்வீர்கள். எது செய்தாலும் தெளிவாகச் செய்வீர்கள். நாம் அந்தணர்கள். எதற்காக நாம் சண்டையிட வேண்டும் என்று நீங்கள் தெளிவாகச் சொல்லி விட்டீர்கள். கார்த்த வீர்ய அர்ச்சுனனை ஜெயித்தது ஒரு பெரிய காரியமல்ல. என்று என் வேகத்தைக் குறைத்து என்னை

மென்மையாக்கி விட்டீர்கள். என்னை கர்வம் இல்லாதவனாக மாற்றினீர்கள்.

எனக்கு நீரே குரு. நீரே தந்தை. நீரே சகலமும். நான் உங்களையும் உங்கள் வாக்கையும் தெய்வத்தை விட அதிகமாக மதிக்கிறேன். இதில் நெல்முனையளவும் உங்களுக்கு சந்தேகம் வேண்டாம். என் சகோதரர்கள் எதனால் உங்களை மறுக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. உங்களுடைய குணத்தை, உங்கள் பலத்தை அவர்கள் முழுமையாக புரிந்திருக்க முடியாது. அவர்களுக்கு அதுபற்றி ஏதேனும் சந்தேகம் வந்திருக்கும். அதனாலேயே அவர்கள் உங்களை மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு அந்த சந்தேகங்கள் எதுவும் இல்லை.

உலகம் முழுவதும் யாத்திரை செய்து விட்டு வந்திருக்கிறேன். உங்களை விட ஞானமுள்ள, வலிவுள்ள ஒரு அந்தணரை நான் பார்க்கவில்லை. நீங்கள் பிரம்மத்தின் வடிவம் என்பது என்னுடைய அசைக்க முடியாத அபிப்ராயம். என்ன செய்ய வேண்டும் என்று கட்டளையிடுங்கள். நான் உடனே நிறைவேற்றி வைக்கிறேன்'' என்று பரசுராமர் கைகூப்பிச் சொல்ல மறுபடியும் ஜமதக்கினி முனிவர் ஆரத் தழுவிக் கொண்டார்.

"பரசுராமா, உன் தாய் தன்னுடைய கடமையிலிருந்து தவறி விட்டாள். எனக்குக் கொண்டு வந்து சேர்க்கவேண்டிய பூஜா ஜலத்தை, குறித்த நேரத்தில் கொண்டு வரத் தவறிவிட்டாள். எங்கோ, எவரையோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்து இங்கு நடக்க வேண்டிய தினசரி அனுஷ்டானங்களை மறந்து விட்டாள். தன்னுடைய புருஷன்-அவனுடைய கடமை என்று இருக்க வேண்டியவள், தான் கர்வப்படத் தகுந்தவள் என்று நினைத்து அவளுக்கு யோக்கியதை இல்லாத கர்வத்தை சுமந்துகொண்டு இங்கே வருவதற்கு தாமதித்து விட்டாள். இந்தக் குற்றம் மன்னிக்கப்பட முடியாது. பரசுராமா... போ, உன் தாயின் சிரத்தை கொய்து எறி. அவளைக் கொன்றுபோடு'' என்று கட்டளை யிட்டார்.

பரசுராமர் தந்தையை வணங்கினார். வாளை உருவினார். வெகு வேகமாக ஆசிரம வாசலுக்குப் போனார்.

தந்தைக்கும், மகனுக்கும் இடையே நடக்கின்ற பேச்சை வேலைக்காரி கேட்டுக் கொண்டிருந்தாள்.

நடுக்கிட்டாள். வாசலில் உள்ள ரேணுகாவிடம் இதைச் சொல்ல பரசுராமரை தாண்டிக் கொண்டு ஓடினாள். பரசுராமரை தாண்டிக் கொண்டு ஓடும்போது அவளை வெட்ட வேண்டாம் என்று மறுத்தாள். பரசுராமர் வேகமாக நடக்க இவள் ஓடிப்போய் ரேணுகாவின் முன் நின்று மறித்துக் கொண்டாள்.

"மிக நல்லவரும், உன்னைப் பற்றி மிக உயர்வாக நினைத்துக் கொண்டிருப்பவரும், தன் புருஷனை மதிப்பவரும், இந்த ஆசிரமத்து பொக்கிஷமான ரேணுகா தேவியை எப்படிக் கொல்ல மனம் வந்தது. அவள் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். அவள் உன் தாயல்லவா. தாயைக் கொல்வது பாபம் என்று சாத்திரங்கள் சொல்லவில்லையா, தயவு செய்து தந்தையின் கட்டளைதான் முக்கியமென்ற மூர்க்கத்தை விட்டு விடு. எது நியாயம், எது சாஸ்திரம் என்பதைப் பார். அந்தணர்கள், சொல்படி கேட்டுப் போகும் போர் வீரர்களாக இருக்கக்கூடாது. ஆராய்ந்து தெளிந்து செய்யும் நபர்களாகத்தான் இருக்க வேண்டும். நீ நடுநிலை வகிப்பவனாக இருந்தால்தான் அந்தணன். கட்டளையிடும் விஷயத்தை நிறைவேற்றுபவராக இருந்தால் க்ஷத்திரியர். நீ யாராக இருக்க விரும்புகிறாய். அந்தணனுக்குப் பிறந்து ஏன் க்ஷத்திரியனாக ஆடுகிறாய். நீ அந்தணனாக இரு'' என்று அவள் தனக்குத் தெரிந்த சாஸ்திரத்தை முன் வைக்க, அவர் அவளை பிடித்துத் தள்ளினார். தாயை வெட்ட கை ஓங்கினார். அந்த வேலைக்காரிக்கு பிடிக்கவில்லை. என்னை வெட்டி விட்டு உன் தாயை வெட்டு என்று குறுக்கே வந்து நின்றாள்.

பரசுராமர் வெட்டமாட்டார் என்கிற எண்ணத்தில் அவ்விதம் தடுத்தாள். ஆனால் பரசுராமர் சற்றும் யோசிக்காமல் வேலைக்காரியின் சிரத்தைக் கொய்தார். அடுத்த அடி எடுத்து வைத்து தாயின் சிரத்தையும் கொய்தார். உடல்கள் தள்ளாடின. தலைகள் உருண்டன. மூலைக்கொன்றாய் போய் விழுந்தன.

பரசுராமர் மீண்டும் தந்தையை நோக்கி வந்தார். வணங்கினார்.

"என்ன நடந்தது.''

பரசுராமர் விஷயத்தைச் சொன்னார்.

"அப்படியா. மிக்க சந்தோஷம். உன்னைப்போல ஒரு பிள்ளை பெற நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும். உனக்கென்ன வரம் வேண்டும் கேள். தருகிறேன்'' என்று

மகன் சிரசில் கை வைத்தார்.

"என் தாய் எனக்கு வேண்டும். கொல்லப்பட்ட இன்னொரு பெண்மணியும் பிழைத்தல் வேண்டும்" என்று வணங்கினார்.

சற்றும் தயங்காமல் பரசுராமர் இதைக் கேட்டது பார்த்து மூத்த பிள்ளைகளும் திரும்பினார்கள்.

"பரசுராமனுக்கு நான் யார் என்று தெரிந்திருக்கிறது நீங்கள் எதைத் தவறு என்று சொல்கிறீர்களோ அதை, நான் சொல்லச் செய்வேன். அதை சரியாகவும் செய்வேன் என்கிற நம்பிக்கை பரசுராமனுக்கு இருக்கிறது. உங்களுக்கில்லை. நான் இன்னும் உங்களுக்கு தந்தையாகவே இருக்கிறேனே தவிர என் பலம் என்ன என்று உங்களுக்குப் புரியவில்லை. பரசுராமன் புரிந்து வைத்திருக்கிறான்.

யார் குரு என்பதில் மயக்கமில்லாதவனும், அப்படித் தேர்ந்தெடுத்த குருவுக்கு நெல்முனையளவும் மாற்று சொல்லாமல் இருப்பவனும், அவர் கட்டளையை இடையறாது சிரமேற்கொண்டிருப்பவனுமே உயர்வாகத் தகுந்தவன். பரசுராமனுக்கு இணை இங்கு எவரும் இல்லை. பரசுராமா, நீ விரும்பிய வரத்தை நான் தருகிறேன்" என்று சொல்லி தன்னுடைய கமண்டல ஜலத்தை அவனிடம் கொடுத்து "இதைக்கொண்டுபோய் வெட்டுப்பட்ட இடத்தில் தெளித்து சிரசை உடம்போடு சேர்த்துவிட்டால் இருவரும் உயிர் பிழைப்பார்கள்." என்று சொல்ல, பரசுராமர் கமண்டலம் வாங்கிக்கொண்டு தாயை நோக்கி ஓடினார். இரண்டு தலைகளையும் எடுத்து உடல்களில் பொருத்தி வைத்தார். நீர் தெளித்தார். நகர்ந்தார். தாயும் வேலைக்காரியும் உயிர்பெற்று எழுந்தார்கள். ஆனால் ஒரு சிறிய மாற்றம் அங்கு நடந்திருந்தது. வேலைக்காரியின் தலையில் தாயிருந்தாள். வேலைக்காரியின் உடம்பில் தாயின் தலை இருந்தது.

இப்பொழுது யார் தாய். பரசுராமர் திகைத்தார். தாய் என்பவள் முகமா அல்லது உடம்பா. எந்த முலை வழியே பால்குடித்து வளர்ந்தேனோ அந்த உடம்பு தாயா. எது என்னைப் பார்த்து கனிவோடு பேசுகிறதோ அது தாயா. கனிவோடு பேசும் முகத்துக்குக் கீழே வேலைக்காரியின் உடம்பு இருக்கிறது. அணைத்து ஆதரவு கொடுத்த அம்மாவின் உடம்புக்கு மேலே வேலைக்காரியின் முகம் இருக்கிறது. இப்பொழுது யார் தாய். எது தாய் என்று குழம்ப, அருகே ஜமதக்கினி முனிவர் வந்தார்.

தாய் வழிபாடான சாக்தமே முக்கியம் என்று

நினைத்தாய் அல்லவா. தாய் வழிபாடே சிறந்தது என்று உனக்கு போதிக்கப்பட்டதல்லவா. இப்பொழுது யார் தாய் என்று ஏன் குழம்பி நிற்கிறாய். எதற்கு தாய் என்று உருவம் தேடுகிறாய். முகமா முலையா என்று ஏன் தடுமாறுகிறாய். தாய் என்பவள் உருவமல்ல. எந்திர ரூபம் அல்ல. மந்திர ரூபம் அல்ல. அது ஒரு தனித்த சக்தி. பராசக்தி என்று பெயர். அந்த சக்திக்கு இருதன்மை உடையது. அந்த பராசக்தி அசைந்து கொண்டு அசையும் போது ரூபங்கள் எடுக்கிறது. பராசக்தி அசைவில்லாத இடத்திலே இருக்கிறது. அந்த அசைவில்லாத சிவ ரூபத்திற்கு நடுவே இருக்கின்ற அந்த சக்தி அசைந்தால் உலகம் இயங்குகிறது. அந்த அசையும் ரூபமெடுக்கும் சக்தியைத் தாண்டி அசைவில்லா பரம்பொருளான சிவனை அடைவது பற்றி நீ யோசிக்க வேண்டும். நீ எடுத்துக்கொண்ட தாய்வழி மார்க்கம் சாக்த உபதேசம் சரியானது. ஆனால் அதைத் தாண்டியும் போகவேண்டும் என்று உணர்த்துவதற்காக இந்த விஷயம் நடந்தது.

இருவருமே உன் தாய்தான். உலகத்திலுள்ள அத்தனை பெண்களும் உன் தாய்தான். உலகத்திலுள்ள அசைகின்ற அத்தனை சக்திக்கும் நீ வணக்கம் சொல்ல வேண்டியதுதான். எனவே தாய் என்பவளை உருவமாகக் கொள்ளாமல் சக்தியாகக் கொண்டு சலனமற்ற இடத்திலே அமர்ந்திருக்கின்ற சக்தியை வழிபடக் கற்றுக்கொள். உலகத்தில் நடக்கின்ற ஒவ்வொரு காரியமும் நமக்குப் பாடம் சொல்லத்தான் இருக்கின்றன. உனக்கு நூல்களிலிருந்து பாடம் சொல்வதை விட, உட்காரவைத்து உபதேசம் செய்வதை விட, இதோ வாழ்க்கையில் நடக்கின்ற சம்பவங்கள் சில கற்றுக்கொடுத்திருக்கின்றன. அதைக் கற்றதை வைத்து உன்னுடைய வேலை என்னவோ அதைத் தெளிவாகச் செய்துவா. குழப்பமின்றி செய்துவா. சரி, தவறு என்ற எண்ணத்துக்கு இடமின்றி முழுவீச்சில் ஈடுபடு" என்று கட்டளையிட்டார்.

பரசுராமர் தன்னுடைய ஆயுதங்களோடு வனத்திற்குப்போய் தவம் செய்ய உட்கார்ந்தார். இதுபற்றி தீவிரமாய், இடையறாது யோசித்துக்கொண்டிருந்தார்.

இறந்துபோன கார்த்த வீர்ய அர்ச்சுனனின் மக்கள் பதவிக்கு வந்தார்கள். ஒருவர் அரசராக இல்லாமல் ஒரு குழுவாக அரசசபையை கவனித்து வந்தார்கள். கார்த்தவீர்ய அர்ச்சுனனைக் கொன்றதற்கு பழிவாங்க

வேண்டுமென்று ஆத்திரப்பட்டார்கள். ஒருவர் ஆத்திரத்தைவிட அடுத்தவர் ஆத்திரம் அதிகமாக இருந்ததால் ஆத்திரம் வகைதொகையின்றி வளர்ந்தது.

ஒருநாள் இரவோடு இரவாக ஜமதக்னி முனிவரின் ஆசிரமத்தை சூழ்ந்துகொண்டார்கள். உள்ளுக்குள்ளே நுழைந்தார்கள். அங்குள்ள அந்தணரை பேரையும் அடித்து இம்சை செய்து வெட்டி ஜமதக்கினி முனிவரை நெருங்கினார்கள். இழுத்து வெளியே கொண்டு வந்து கண் இமைக்கும் நேரத்தில் கண்டந்துண்டமாய் வெட்டிப் போட்டார்கள்.

ரேணுகாதேவி அலறினாள். ஆசிரமத்திலுள்ள எல்லாப் பெண்களும் அலறி அபயம் கேட்டார்கள். பரசுராமர் காதில் இந்த அபய ஒலி விழுந்தது. பரசுராமர் சீற்றத்துடன், ஆயுதங்களுடன் ஆசிரமம் நோக்கிப் போனார். அங்கு நடந்த கோரக்கொலைகளைக் கண்டு மனம் வெதும்பினார்.

இந்த அரசன் நல்லவன். அந்த அரசன் பொல்லாதவன். இந்த அரசன் பாதி நல்லவன். அந்த அரசன் பாதி பொல்லாதவன் என்ற கணக்கு இனி இல்லை. அரச என்கிற திமிர், க்ஷத்திரியம் என்கிற அகம்பாவம் முற்றிலும் அடக்கப்பட வேண்டும். முளைத்தெழாதபடி அடக்கப்பட வேண்டும். இந்த திமிரை, இந்த அலட்சியத்தை, இந்த துவேஷத்தை, இந்த அந்தணன் அழிப்பான். இது மனிதர்களை நோக்கி நடத்துகின்ற யுத்தமல்ல. ஒரு திமிர்த்தனமான அரக்கத்தனத்தை எதிர்த்து நடத்தும் யுத்தம். அந்த அரக்கத்தனம் மனித ரூபமாய் வெளியே வந்து கொண்டிருக்கிறது. அரசர்களாய் நடமாடிக்கொண்டிருக்கிறது. ஓர் பெருமை வாய்ந்த ஜபதபம் மிக்க அந்தணனையே இந்த அரக்கத்தனம் வெட்டிப்போட முடியுமென்றால் சாதாரண மக்களை, ஆடல்பாடல் மகளிரை எத்தனையெல்லாம் இம்சை செய்வார்கள். இந்த மக்கள் நன்கு வாழவேண்டுமெனில் இந்த ஊர் செழிப்பாக இருக்கவேண்டுமெனில், இங்கு தர்ம நியாயம் தழைத்தோங்க வேண்டுமெனில் இந்த க்ஷத்திரிய சுபாவம், இந்த அரசாங்கத் திமிர், இந்த அரசு ஆத்திரம் நிச்சயம் அடக்கப்பட வேண்டும்.

இவர்களுக்கு அருமையாய் உட்கார்ந்து கதை சொன்னால் புரியாது. நீதி நெறிகள் சொன்னால் நெஞ்சில் தைக்காது. இவர்களை அடித்தாலொழிய அடங்க மாட்டார்கள். அடிதடிக்கு மட்டும்தான் இவர்கள் மசிவார்கள். இவர்களுக்கு கொலைதான் முடிவு. இவர்களைக்

கொல்லுதல்தான் சிறப்பு என்று சொல்லி முழுவேகத்தோடு கார்த்த வீர்ய அர்ச்சுனன் நகரத்துக்குப் போய், அவன் பிள்ளைகளை அடித்து நொறுக்கி சாம்பலாக்கி நாலாபக்கமும் தூவினார். தொடர்ந்து பல்வேறு க்ஷேத்திரங்களுக்குப் போய், அங்குள்ள அரசர்களைக் கூப்பிட்டு இனி க்ஷத்திரிய வம்சமே பூமியில் இருக்கக்கூடாது. ஆயுதம் எடுத்த, தானே அரசன் என்று கொக்கரிக்கிற எந்த மனிதனும் இருக்கக்கூடாது என்று சொல்லி அவர்களை அடித்து நொறுக்கினார். சிறு குழந்தையையும் கூப்பிட்டு குத்திக் கொன்றார்.

பூமியில் எவர் மூலைமாகிலும் இந்த அரச விதைகள் வளருமாயின் சிறு இளவரசர்கள் இருந்தாலும் அங்கே போய், அந்த குழந்தையைப் பறித்து, நெஞ்சில் வாள்சொருகிக் கொன்றார்.

இங்கு நான் கொல்வது மனிதர்களையல்ல. நான் கொல்வது குழந்தைகளை அல்ல, வாலிபர்களை அல்ல. நான் கொல்வது க்ஷத்திரியத் திமிரை என்று தெளிவாக படையெடுத்தார். கோபம் அடங்காமல் பல்வேறு திக்கிலும் சுற்றி வந்தார். மறுபடியும் வனத்திற்கு தவம் செய்யப் போனார்.

மனம் வெறுமையில் ஆழ்ந்தது. எத்தனை முயன்றாலும் க்ஷத்திரியர்கள் எங்கோ, எவராலோ பாதுகாக்கப்பட்டு பத்திரமாக இருக்கப்படுவர் என்று புரிந்துகொண்டார்.

அயர்ந்துபோய் தவத்தில் அமர்ந்தார். தன் மனதை விசாரித்தார்.

இதற்குக் கவலை கொள்ளவோ, இப்படிப்பட்ட காரியம் செய்துவிட்டேனே என்று அயர்ந்து போகவோ அவசியமில்லை. பரசுராமா நீ எதையும் செய்யவில்லை. ஒரு விஷயம் மோசமானதாக உருவெடுக்க தவறாக வளர, இன்னொரு விஷயம் அந்த விஷயத்தைக் கண்டித்து கீழே அனுப்புகிறது. தர்மம் மறுபடியும் நிலை நாட்டப்படுகிறது.

அரக்கத்தனமான விஷயங்கள் அழிந்துபோக தர்மம் மறுபடியும் கிளரும். மோசமான அரசர்கள் உன்னைப்போன்ற தர்மம் தெரிந்த அந்தணர்களால் தண்டிக்கப்பட, அங்கு நல்ல அரசர்கள் தோன்றுவார்கள். அப்படி நல்ல அரசர்கள் தோன்றினால் பரசுராமா நீ என்ன செய்வாய் என்று மனம் கேட்டது.

பரசுராமர் விடைதெரியாமல் விழித்தார். க்ஷத்திரியனைக் கொல்ல வேண்டும் என்பது சபதமல்லவா.

தந்தையைக்கொன்ற திமிர்பிடித்த அந்த வம்சத்தை அழிக்கவேண்டும் என்பதுதான் தன்னுடைய செயலல்லவா. இதிலிருந்து எப்படி மாறுபாடு அடைவது. ஒரு க்ஷத்திரியனைப் பார்த்தால் சண்டைக்குப்போகாமல் நீ வாழ்வாங்கு வாழவேண்டும் என்று எப்படி வாழ்த்துவது என்று யோசித்தார்.

அந்த க்ஷத்திரியன் இந்த அந்தணனைவிட தர்மம் மிக்கவனாக இருந்தால், அந்தத் தர்மத்தின் முன்னே இந்தத் தர்மம் பணிந்துதானே ஆகவேண்டும். ஆக நான் என்பதும் அவன் என்பதும் இங்கு முக்கியமில்லை. தர்மத்தின் சொரூபம் எங்கு பெரிதாய் நிற்கிறதோ, அதற்குள் மற்றொரு தர்மம் அடங்கிவிட வேண்டியதுதான். எது வலுவுள்ளதோ அது வலுவில்லாததை அதிகச்சி இழுத்துக்கொள்ளும். பெரிய குமிழிக்கு அருகே சிறிய குமிழிபோக, அந்தச் சிறிய குமிழியை பெரிய குமிழி அணைத்துக்கொள்ளும். சிறிய குமிழி காணாமல் போகும். அதுபோலவே இங்கும் நடைபெறப்போகிறது. நல்ல அரசன் ஒருவன் தோன்றுவானானால் க்ஷத்திரிய வம்சம் மறுபடியும் சிறப்புறும். அப்படி சிறப்புற்ற ஒரு க்ஷத்திரிய வம்சத்திற்கு நான் தலைவணங்கித்தான் தீரவேண்டும். வேறு வழியில்லை என்று நினைத்தார்.

தொலைவே தூசி எழுந்து அடங்குவது தெரிந்தது. பெரிய சேனையொன்று கிளம்புவது தெரிந்தது. உற்று காதில் கவனிக்கையில் யானைகளும், குதிரைகளும், தேர்களும் போகும் சப்தம் கேட்டன.

அப்படியென்றால் அரசர்கள் போகிறார் களல்லவா என்று சொல்லி வில்லையும் வாளையும் எடுத்துக்கொண்டு அவர் அரசர்கள் போகின்ற அந்த ஊர்வலத்தை மறித்து நின்றார்.

"யார்" என்று கேட்டார். அதற்கு "இது தசரதருடைய படை. தசரதருடைய நான்கு மகன்களுக்கும் மிதிலாபுரியில் ஜனகருடைய சபையில் திருமணம் நடந்தது. ராமரும், சீதையும், லட்சுமணரும் அவர் மனைவி ஊர்மிளையும் அயோத்திக்கு திரும்பி கொண்டிருக்கிறார்கள். மற்றபடி எவருக்கும் எந்தக்கெடுதல் செய்வதற்காக இந்தப்படை நகரவில்லை. இது படையெடுப்பு அல்ல. கல்யாண ஊர்வலம்" என்று தூதுவர்கள் தெரிவித்தார்கள்.

"ஒரு அரசன் கும்பலாக நடந்தால் அது எந்தவிதமான ஊர்வலமாக இருக்கும் என்று எனக்கு

தெரியும். வழியிலுள்ள குடிமக்களை அந்த அரசப்படைகள் எப்படி தொந்தரவு செய்வார்கள் என்று தெரியும். அரசனுடைய அகங்காரம் அந்தப்படை மூலமாக வெளிப்படுத்தப்படும். எனவே அகங்காரம் கொண்டு குதிரைகளும், யானைகளுமாய், எவர் போகவும் விடமாட்டேன். எங்கே, எங்கே அந்த ராமன்" என்று கேட்க, வேறொருவர் வழிமறித்தார்.

"அவர் நேற்றுதான் திருமணமானவர். அவரை எதற்காக சண்டைக்கு அழைக்கிறீர்கள்."

"யார் அவனுக்குத் திருமணம் செய்தது"

"ஜனகர் திருமணம் செய்து வைத்தார்"

"ஜனகர் ஏதோ வில் வளைக்க வேண்டுமென்றல்லவா பந்தயம் வைத்திருந்தார்."

"ஆமாம், ஜனகர் வைத்திருந்த சிவதனுசை ராமர் வளைத்து உடைத்துவிட்டார். எனவே அவருக்கே சீதை நிச்சயம் செய்யப்பட்டாள். மற்ற அரசர்கள் தோற்றோடினார்கள்."

"ஆஹா... ஆஹா... எல்லா அரசர்களுக்கு முன்பும் தான் மிகப்பெரிய வீரன் என்று காட்டிக்கொள்ள ஒரு மனிதன் வந்துவிட்டானா. நல்லது. அந்த மனிதனை நான் பார்க்கவேண்டும். எல்லா க்ஷத்திரியர்களையும் விட மிக உயர்வான க்ஷத்திரியன் ஒருவன் தோன்றிவிட்டானா. அப்படியென்றால் அவனை போருக்கு அழைக்கவேண்டும். அடக்கமில்லாத க்ஷத்திரிய குலத்திலிருந்து இன்னொரு வித்து வளர்ந்திருக்கிறதென்றால் அது யார் என்று நான் பார்க்க வேண்டும். அதைக் கண்டித்தே தீரவேண்டும்." என்று சொல்லி, ராமனுக்கு எதிரே வந்து நின்றார்.

"நீதான் ராமன் என்பதா" என்று உரத்த குரலில் வினவினார்.

தசரதர் முன்னே வந்து பணிவோடு நிற்க, அவரை கைகளால் சைகை செய்து விலக்கினார். ராமரையே உற்றுப்பார்த்தார். உள்ளே மனம் சந்தோஷப்பட்டது.

என்ன அருமையான முகலட்சணங்கள். எத்தனை அருமையான அங்க லட்சணங்கள். எவ்வளவு நேரோட்டமான கண்கள். எத்தனை மிருதுவான உதடுகள். எத்தனை சாந்தமான முகம். அரச குடும்பத்தில் பிறந்து சீராட்டமாய் வளர்க்கப்பட்டு, நல்ல ஆசிரியர்களால் வித்தைகள் கற்பிக்கப்பட்டு, ரிஷிகளால் வழிநடத்தப்பட்டு, ஒரு அரசனுடைய மகளை திருமணம் செய்த பிறகும்

அந்த முகத்தில் நெஞ்சுறையையளவும் கர்வம் இல்லையே
எளிதாய் கைகூப்பி வணங்குகின்றானே. கோதண்டத்தை
நெஞ்சோடு வைத்துக்கொண்டு நிற்கின்றானே தவிர, அதை
நாண் பூட்டுகின்ற முயற்சியை. மனதால் கூட
செய்யவில்லையே. நான் வருகின்ற வேகத்தைப் பார்த்து
பதட்டமடையவில்லையே. இப்படி க்ஷத்திரியனை
பார்ப்பேனா. எல்லா க்ஷத்திரியர்களும் என் வருகையை
கண்டு பதட்டமாகி கோட்டைக்கதவைச் சாத்தி எக்காளம்
ஊதி என் கோபத்தைக் கிளறி என்னிடம் பலியாகிறார்கள்
ஆனால் இந்த இளைஞனோ கைகூப்பி என்னை
வணங்குகின்றான். தன்னுடைய கோதண்டத்தை
மார்போடு அணைத்துக்கொண்டு வாருங்கள் என்று
இனிமையான மொழி பேசுகிறான். ஆனால் இவ்விதம்
இவனிடம் இளகிவிடக்கூடாது என்று மனதை
சமாதானப்படுத்தி அவரை கூர்மையாகப் பார்க்க
ஆரம்பித்தார்.

"நீதான் ராமன் என்பவனோ" மறுபடியும் கேட்டார்.

"ஆமாம். தசரதனுடைய மூத்தமகன் ராமன் நான்.
என்னுடைய குரு வசிஷ்டர். விஸ்வாமித்திர முனிவர்
எங்களை காட்டிற்கு அழைத்துச்சென்று அவர் செய்யும்
யாகத்திற்கு உதவியாக காவலாக இருக்க நியமித்தார். பிறகு
மிதிலைக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரு தனுசை
உடைக்கும்படி நேரிட்டது. அதற்கு பரிசாக சீதை என்னும்
இந்த கன்னிகையை நான் திருமணம் செய்து கொண்டேன்.
தந்தையின் உத்தரவுப்படியும், ஆசிரியர்களின்
ஆணைப்படியும் இவை நடந்தன. நீங்கள் யார் என்று
எனக்குச் சொல்லவேண்டும்.

தூதுவர்கள் உங்களை பரசுராமர் என்று
சொல்கிறார்கள். க்ஷத்திரிய குலத்தை வேரறுக்கவந்த
அந்தணர் என்று பயத்தோடு தெரிவித்தார்கள்.
உங்களுடைய தேஜஸைப்பார்க்க சந்தோஷமாக
இருக்கிறது. வில்லும், வீரம்மிக்க உடம்பும், தெறிக்கின்ற
பார்வையும், சிவந்த கண்களும் குத்திட்டு நிற்கின்ற
ரோமங்களும், கோபமான முகமுமான ஒரு அந்தணனை
நான் இதுவரை சந்தித்ததே இல்லை.

அந்தணர்கள் அமைதியாகவும், இனிமையாகவும்
இருப்பார்கள் என்றுதான் எனக்குச்சொல்லித் தரப்பட்டது.
முதன்முதலாக ஆயுதங்களோடு, போர் குணத்தோடு, வீர
நடையோடு ஒரு அந்தணன் வருவதை பார்க்கிறேன்.
வியக்கிறேன். அந்தணரே... அந்தணரே... உங்களுக்கு
என்ன வேண்டும். எது சொன்னாலும் செய்ய

காத்திருக்கிறேன்" என்று கைகூப்பினார்.

"ஹா... நன்றாக இருக்கிறது ராமா. என்னை
அந்தணன் என்று சொல்லி பலமுறை அழைத்து. என்
குலத்தை எனக்கு நினைவுபடுத்தி தப்பித்துப்போகலாம்
என்று நினைக்கிறாயா. நான் அந்தணன்தான். எங்களுக்கு
சண்டை என்பது தேவையில்லாத விஷயம்தான். ஆனால்
க்ஷத்திரிய குலம் தலைதூக்கி ஆடுகிறபொழுது, க்ஷத்திரிய
குலம் முறைகேடாய் வளர்கிறபோது, அதை தலையில்
தட்டி காலில் மிதித்து கீழேபோட்டு நசுக்கி
வளரவொட்டாது செய்யக்கூடிய திறன் அந்தணனுக்கு
உண்டு.

க்ஷத்திரியன் நினைத்தால் அந்தணனாக முடியாது.
அந்தணர் நினைத்தால் க்ஷத்திரியனாக முடியும்."

"பரசுராமரே யாரும் யாராக வேண்டுமானாலும்
மாறலாம். உயர்வதும் தாழ்வதும் குலத்தினால் அல்ல.
ஒருவருடைய செய்கையினால் என்பது எப்பொழுதோ
வரையறுக்கப்பட்ட விஷயம். குலம் சில குணங்களை
கொண்டுவந்து தருமே தவிர, அதுவே முழுமையாகி
விடாது. ஒரு குலத்திற்கேற்ப அவன் செய்யும் செயல்தான்
அவனுக்கு ஒரு முகத்தையும், அடையாளத்தையும்,
மக்களிடையே நற்பெயரையும், கொடுக்கின்றன.

உங்களைக்கண்டு அரசர்களும், படைவீரர்களும்,
பொதுமக்களும், நடுங்குகிறார்கள். உங்கள் குலத்திற்கு
ஒப்பான சாந்த குணத்தை உதறிவிட்டு நீங்கள்
ரௌத்திரமாகி விட்டீர்கள். இது விநோதமாக இருக்கிறது.
பயமுறுத்துகிற அந்தணர் என்பது உலகத்திற்கு ஒவ்வாத
ஒரு விஷயமாக இருக்கிறது. தீயவர்களை தண்டிக்க யார்
வேண்டுமானாலும் கிளம்பலாம்.

கடவுள் எல்லா உருவமாகவும் இருக்கிறார்.
நல்லவராகவும் இருக்கிறார். தீயவராகவும் இருக்கிறார்.
அவரே அசுர குணத்தவராகவும் இருக்கிறார். அவரே
தேவ குணத்தவராகவும் இருக்கிறார். அவரே
மானிடராகவும் வந்து பிறக்கிறார். எனவே இது
அனைத்துமே ஈஸ்வர சங்கல்பமே தவிர, யாரோ தவறு
யாரோ சரி என்று நினைக்கவில்லை.

தவறு ஏற்படும் போது சரி செய்ய நீங்கள்
வந்திருக்கிறீர்கள். நீங்கள் தவறு இழைக்கிறபொழுது
யாராவது உங்களை வந்து சரிசெய்வார்கள் என்றுதான்
கருதுகிறேனே தவிர இங்கு நான், நீ, மற்றவர், க்ஷத்திரியர்,
அந்தணர் என்கிற பேச்சு இல்லை.

தர்மம் இடையறாது அவ்வப்போது தலைதூக்கி தன்னைச் சுற்றியுள்ள அதர்மத்தை விலக்கி தன்னை நிலைநிறுத்திக்கொள்கிறது. இது ஒரேயொரு சக்தி இடையறாது இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகிறது." "எல்லா தத்துவ ஞானத்தையும் கற்றறிந்துவிட்டதுபோல் பேசுகிறாய் இல்லையா"

பரசுராமர் முறைத்துப் பார்த்தார். உள்ளுக்குள்ளே குதூகலத்தில் பொங்கினார்.

ஆஹா... எவ்வளவு தெளிவு. இங்கு சக்தி மட்டுமே இயங்கிக்கொண்டிருக்கிறது. சலனமற்ற நிலையிலிருந்து சலனமாகி தன்னைத்தானே சரிசெய்து கொண்டிருக்கிறது என்பதை எத்தனை தெளிவாகப் புரிந்து கொண்டு எவ்வளவு எளிதான வாக்கியங்களில் எனக்கு பதில் சொல்லுகிறான். இங்கு எல்லாருமே கடவுள் ரூபம். பிரம்ம சொரூபம் என்பதை எத்தனை அழுத்தமாக புரிந்து வைத்திருக்கிறான். இது புரியாமல்தானே இந்த க்ஷத்திரியர்கள் ஆடுகிறார்கள்.

தான், தன் வம்சம், தன் உடம்பு, தன்னுடைய ராஜ்ஜியம் என்று பேதலித்துப்போய் அலைகிறார்கள். இதோ. இந்த ஞானவான் க்ஷத்திரியனாகப் பிறந்தாலும் எல்லாம் பிரம்ம மயம் என்று உணர்ந்து அதே விதமாக பேசமட்டும் செய்யாமல் நடந்துகொள்ளவும் முடிகிறது. இது எத்தனை அற்புதம். இதுவும் இறையருள் அல்லவா என்று சொல்லி உள்ளுக்குள் கைகுவித்தார்.

"நீ எதற்காக அரசவேஷம் பூண்டிருக்கிறாய் என்று தெரியவில்லை. நீ க்ஷத்திரியன் என்று சொல்லிக் கொண்டு தத்துவ ஞானம் பேசிக்கொண்டிருக்கிறாய். இது தவிர நீ செய்த காரியம் என்ன. எங்கோ ஒரு வனத்தில் ஒரு பெண்ணைக் கொன்றாயே தாடகையென்று. அவ்வளவுதானே. இதைத்தவிர வீரமான காரியம் நீ ஒன்றும் செய்துவிடவில்லையே" வார்த்தைகளால் ராமரை குத்தினார்.

ராமர் மெல்லப் புன்முறுவல் செய்தார்.

"எனக்கு கோபம் உண்டாக்க நினைக்கிறீர்கள் போலும். எனக்கு ஒரு பொழுதும் உங்கள் மீது கோபம் வராது. அந்தணர் என்போர் அறவோர். அவரை க்ஷத்திரியர்கள் எதிர்த்து வாதிடல் தகாது. அறவழி நிற்பவர்களை உணர்ந்து கேட்பதுதான் பொருத்தமான விஷயம். நீங்கள் சொல்வது உண்மை. நான் ஒரு பெண்ணைத்தான் இதுவரை கொன்றிருக்கிறேன். ஆனால்

நல்லவேளை நான் என் தாயைக் கொல்லவில்லை. நீங்கள் உங்கள் தாயைக் கொன்றீர்களாமே பரசுராமரே" என்று மென்மையாகக் கேட்டார். சுற்றியுள்ளோர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள். பரசுராமர் கோபம் கொண்டார். காலால் தரை உதைத்தார். இடமும், வலமும் அலைந்தார். வாளை உருவி நாலாபக்கமும் சுழன்று இனங்களை எட்டிப்போகச் செய்தார். நடு மத்தியில் நின்று கொண்டார். வில்லை எதிரே வைத்தார்.

"வெறும் பேச்சு எதற்கு ராமா. யார் யாரைக் கொன்றார்கள் என்ற கணக்கு பிற்பாடு தீர்த்துக்கொள்ளலாம். நீ என்னைக் கொல்ல முடியுமா. உனக்கு அந்த வலுவுண்டா. ஏதோ ஒரு மூங்கிலை வளைத்துவிட்டு சிவதனுசை வளைத்ததாக சொல்லிக்கொண்டு அலைகிறாயே இதோ விஷ்ணுவின் தனுசு இருக்கிறது. உன்னால் இதை எதுவும் செய்து விட முடியாது. தொடக்கூட முடியாது. வா போருக்கு வா."

"அந்தணரான உங்களோடு நான் போர் புரிவது என்பது இயலாத காரியம். நீங்கள் க்ஷத்திரியன் என்று சொல்லிவிட்டால் நான் ஒருவேளை உங்களோடு போர்புரியலாம். நல்லவர்களை, பெண்களில் அபலைகளை, யாசகம் கேட்பவர்களை, அபயம் கேட்பவர்களை, வலுவில்லாதர்களை, வீரம் இல்லாதவர்களை, அங்கஹீனர்களை க்ஷத்திரியனான அரசன் ஒருபோதும் துன்புறுத்தக்கூடாது.

எவ்வளவு கோபமூட்டினாலும் அவன் ஆயுதம் ஏந்தி அவர்களை தண்டித்து விடக்கூடாது. அவர்களுக்கு சமாதானம் ஏற்படும்படி பேசவேண்டுமேயொழிய சிறிய பிரம்படி போன்ற, சிறை தண்டனை போன்ற தண்டனைகள் கொடுத்துவிடலாமே தவிர உயிர்ச்சேதம் ஏற்படுத்தக் கூடாது. அந்தணரான உங்களை பிரம்பால் அடிப்பதும் தகாது. உங்களை நாடு கடத்தலாமேயொழிய வேறு எந்த தண்டனையும் தருவதற்கில்லை. உங்களோடு போர் செய்வதற்குமில்லை."

"ராமா...வலுவற்றவனே. என்ன பேசுகிறாய். உன் எதிரே ஒருவன் வில்லோடு நின்று வா என்று போருக்கு அழைக்கிறான். நீ எதற்கு சமாதான வசனங்களை பேசுகின்றாய். போருக்கு வா. எடு உன் வாளை. எடு உன் வில்லை. என்னை அடித்து துவம்சம் செய்துவிட்டு இந்த இடத்தை விட்டு தாண்டிப்போ" என்று உரக்கக்கூவ, தசரதரும் மற்றவர்களும் அவர் கோபத்தின் அக்னியைத் தாங்க முடியாமல் மூர்ச்சையானார்கள்.

ராமர் மறுபடியும் கைகூப்பினார்.

"நல்லது. அதுதான் உங்கள் விருப்பமென்றால் அதைச் செய்யவேண்டிய கட்டாயத்தில் நான் ஆட்படுகிறேன். ஆனால் இப்போதும் உங்களைக் கொல்வது என்பது ஒப்புமை இல்லாத காரியம். நான் வில் வளைத்து சரம் தொடுத்து உங்களை நோக்கி அல்லாமல் நீங்கள் சொல்கின்ற எந்த இலக்கு நோக்கியும் அடிக்கத் தயாராக இருக்கிறேன். அந்த இலக்கு அடிபடாமல் தவிர்க்க உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள். நீங்கள் சொன்ன இலக்கை அடித்து நொறுக்கிவிட்டால் நீங்கள் இறந்ததாகவே அர்த்தம்.

எனவே உங்களைக் கொல்ல மனமில்லாத எனக்கு நீங்கள் ஏதேனும் ஒரு இலக்கு காண்பியுங்கள். அந்த இலக்கை நான் நொறுக்குகிறேன். அந்த இலக்கு நொறுங்காமல் நீங்கள் யுத்தம் செய்து காப்பாற்றலாம். என்னை நேரே அடிக்கலாம். என் சிரத்தைக் கொய்யலாம். என் மார்பின் மீது அம்பு விடலாம். என்னை சல்லடைக் கண்ணாக துளைக்கலாம். தவறில்லை. ஆனால் என் பாணம் எதுவும் உங்கள் மீது செலுத்தப்படமாட்டாது. நீங்கள் சொல்கின்ற இலக்கை சிதறடிக்கும். இந்தப்போர் இந்த வகையாகத்தான் நடைபெறும். சொல்லுங்கள்" என்று கம்பீரமாக மொழிந்தார்.

உள்ளுக்குள் பரசுராமருக்கு தலைகால் புரியாத சந்தோஷம் ஏற்பட்டது.

இப்படி ஒரு க்ஷத்திரியன் வேண்டுமென்றுதான் காத்திருந்தேன். எத்தனை கோபம் ஏற்படுத்தினாலும் எத்தனை விதமாக ஆத்திரமூட்டினாலும் சிறிதளவும் அசைந்து கொடுக்காது, எது தர்மமோ அதை நெல்முனையளவும் பிசகாது, அந்த தர்மம் பாழ்படாத வண்ணம் வேறு ஒரு வகையைச் சொல்லி, அந்த வகையையும் கோபமின்றி விளக்கி, அந்த யுத்தத்தையும் விளையாட்டாய் தன்னுடைய தர்ம காரியமாய், தன் திறமைக்கு கொடுக்கப்பட்ட சோதனையாய் கோபமின்றி ஒருவனால் செய்ய முடிவதெனில் இவனைவிட உயர்ந்த க்ஷத்திரியன் உண்டோ. இவனை விட உயர்ந்த மனிதன் உண்டோ. ராமா... ராமா... என் ராமா.. நீ மனிதரில் பெரியவனய்யா. உன்னுடைய தோற்றத்திற்காகவே நான் காத்திருந்தேன்.

யாரை இங்கு அழிக்க வேண்டுமோ அவரை அழித்துவிட்டேன். யார் அழிவில் எது வளர வேண்டுமோ

அது வளர்ந்து விட்டது. இவரே என்னிடமிருக்கின்ற எல்லா சக்தியையும் உன்னிடம் தர விரும்புகின்றேன். இப்பொழுது அந்த சக்திகள் வேறொரு ரூபம் கொண்டு தென் திசையில் ஆட்டத்துவங்கியிருக்கின்றன. பல இடங்களில் இந்த அந்தி சக்திகளை அழித்துவிட்டேன். வடக்கே தெற்கே இந்த சக்திகள் இன்னும் ஆட்டம் போட்டவாறு இருக்கின்றன. அவைகளை அழிக்கின்ற பொறுப்பை நீ எடுத்துக்கொள். அதற்குண்டான சக்தி என்னிடமிருப்பதையும் நீ சுவீகரித்துக்கொள். இனி நான் சாதாரண மனிதனாக, எதுவும் இல்லாத அந்தணனாக போகவே விரும்புகின்றேன். நான் இதுவரை கற்ற சகல அஸ்திரங்களையும், வித்தைகளையும், போர்த் தந்திரங்களையும் இதோ என் தோளுக்கு அருகே நிறுத்தி வைக்கிறேன். அதற்கு குறியில்லை. அதை சுவீகரித்துக் கொள். அதை உன்னிடம் இழுத்துக்கொள். என்னை வெறுமே சாதாரண அந்தணனாக்கு இதோ.. இதோ எடுத்துக் கொள்.

அவர் இடதுபுறம் இருந்த அம்பறாத் தூணியை வலதுபுறம் மாற்றிக் கொண்டார். அம்பறாத் தூணியை குலுக்கி அம்புகளை மேலெழுப்பினார்.

ராமரைப் பார்த்தார்.

"உனக்கு இலக்கு வேண்டுமென்றுதானே கேட்கிறாய். இதோ என் வலதுபக்கம் அம்பறாத் தூணி மாறியிருக்கிறது. என்னுடைய அம்புகள் அனைத்தும் அந்த கூட்டைவிட்டு வெளியே நிற்கின்றன. உன்னால் முடியுமானால் இந்த அம்பறாத்தூணி மீது இலக்குவைத்து தொடு. அவைகளை எடுக்க முடியுமா என்று பார். அவைகளின் சக்தியை உன் அம்பு சுவீகரிக்குமா என்று கவனி. உன்னால் அவைகளை காண்கூட முடியாது. அந்த சக்திகள், உன் அம்பு குறிபார்க்கிறபொழுது நீ சிதறிப் போவாய்" என்று சீறலுடன் சொன்னார்.

ராமர் சரி என்று தலையசைத்தார். வில் நாணேற்றும் முன்பு பரசுராமரை வணங்கினார். துவண்ட தந்தையை நோக்கி கைகூப்பினார். ரிஷிகளை திரும்பி நமஸ்கரித்தார். நாணேற்றினார். சரம் தொடுத்தார். மனதில் பரம்பொருளை தியானித்தார். உள்ளுக்குள், யார் பரசுராமர் என்று தேடினார். ராமரின் மனதுக்குள் சிரிப்போடு இருக்கிற பரசுராமர் தோன்றிவிட்டார்.

'அடடா...இவ்வளவு சாந்தமாக இருக்கிறீர்களே. எதற்காக என் எதிரே இப்படி ஒரு கோர ரூபம் எடுத்து ஆடுகிறீர்கள். இவ்வளவு ஞானவானாக இருக்கிறீர்களே. இவ்வளவு சக்தியோடு உள்ள மகானாக திகழுகிறீர்களே.

எதற்கு என்னை வழிமறித்து ஒரு கொள்ளைக்காரனைப் போல் நிற்கிறீர்கள்' என்று பணிவோடு கேட்டார்.

'ராமா... என் அவதாரம் முடிந்து உன் அவதாரம் துவங்குகிறது. எனவே என்னிடம் மிஞ்சியிருக்கின்ற சக்திகளை நீ வாங்கிக்கொண்டு தொடர்ந்து அழிவு சக்திகளை நீக்குவதற்கு பயன்படுத்து' என்று உள்ளுக்குள் பரசுராமர் சொல்ல, ராமர் கண்திறந்து கணையை தனியாக பரசுராமரின் அம்பறாத் தூணிக்கு இலக்கு வைக்க, அங்குள்ள அத்தனை அஸ்திரங்களும் கண நேரத்தில காணாமல் போயின. அம்பறாத் தூணி அறுந்து கீழே விழுந்தது.

வில் நடுங்கத் துவங்கியது. பரசுராமர் கனம் குறைந்து தள்ளாடினார். வில்லை ஊன்றி நின்றார். மெல்ல நடந்துபோய் வில்லை ராமரிடம் கொடுத்தார். கைகூப்பினார்.

"என் வேலை முடிந்தது. நான் வருகிறேன்." என்று அவருக்கு மட்டும் கேட்பதாகச் சொன்னார்.

சகலரும் பயந்து என்ன நடக்கிறது என்று தெரியாமல் அரை மயக்கத்தில் இருக்க ராமரும், பரசுராமரும் மட்டும் ஒருவரையொருவர் தீர்க்கமாக பார்த்துக்கொண்டார்கள். ராமர் சரி என்று தலையசைக்க, மெல்ல பரசுராமர் திரும்பி புல்வெளிகளூடே நடக்கத் துவங்கினார்.

பரசுராமர் போன திக்கை ராமர் நமஸ்கரித்தார்.

புல்வெளிக்கு நடுவே போய் பரசுராமர் நின்றார். ஊர்வலம் தொடர்ந்து போவதைப் பார்த்தார். ஊர்வலம் போன தூசு அடங்கி தரையில் படிந்து விழுந்தது. அந்த தூசுகளை எடுத்து முகத்தில் தேய்த்துக்கொண்டார்.

ராமர் போன திசைநோக்கி விழுந்து வணங்கினார்.

உன் அவதாரம் சிறப்படையட்டும். எது மிகப்பெரிய சக்தியோ அது இன்னொரு சக்தியை இங்கு வணங்கிக் கொண்டிருக்கிறது. எது தர்மத்தை நிலைநாட்ட பூமிக்கு வந்திருக்கிறதோ அது தர்மத்தை நிலைநாட்டியதற்கு விடை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ராமா... நலமாக இரு. ராமா எல்லா சோதனைகளிலும் வெற்றி பெறு. ராமா தர்மம் நீ. நீதான் தர்மம்.

இந்த உலகில் தர்மத்தைத் தவிர வேறொன்று மில்லை. இந்த பிரபஞ்ச சக்தியுள் இங்கு உள்ள சக்தி ரூபம் தர்மம். அதர்மம் சக்தியாக இருப்பினும் தர்மத்தை

ஒருநாளும் அதனால் அழிக்கமுடியாது. அதர்மம் என்கிற சக்தி தர்ம சக்தியால் மறுபடி மறுபடி அழிக்கப்படும். இனி நான் வெறும் அந்தணன், ஆசாரியன். நான் வருகிறேன் என்று சொன்னார்.

ராமர் போனதும் மெல்ல தென்திசை நோக்கி நடந்தார்.

இந்தப்பக்கமெல்லாம் ராமர் வருவார். கவனமாக இருங்கள் என்று மரங்களுக்கும், மலைகளுக்கும், குளங்களுக்கும் நதி தீரங்களுக்கும் செய்தி சொன்னார்.

கேரளத்துக்குள் புகுந்தார்.

அந்த தேசத்திலுள்ள அந்தணர்கள் வேள்விகளிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாகத் திகழ்ந்தார்கள். அந்த க்ஷேத்திரத்திற்குள் வந்து நுழைந்து அங்குள்ள அந்தணர்களை அழைத்து தனக்கு புதிய வித்தை தெரியுமென்றும் அதற்கு சாக்த வழி என்று பெயரென்றும் அது தாய் வழிபாடு என்ற சக்தியின் வழிபாடு என்றும் அதை கற்றுக்கொள்ள முன்வருபவருக்கு கற்றுத்தருவதாக பிரியப்படுவதாகச் சொல்ல, ஒரு பெரிய குழு அவருக்கெதிரே வந்து அமர்ந்து கொண்டது.

சாக்த வழிபாடை கேரளத்து ஜனங்கள் ஆவலோடு கற்றுக்கொண்டார்கள். இன்றளவும் கேரளம் பரசுராமர் க்ஷேத்திரமாக இருக்கிறது. இன்றளவும் கேரளம் சாக்த வழிபாட்டில், சக்தி வழிபாட்டில் திளைத்திருக்கிறது.

வெளிப்பார்வைக்கு முரடாக மூர்க்கராகத் தோன்றினாலும் பரசுராமர் உத்தமன். தந்தை சொல் பிறழாத மகன். ஞானவான். தர்மத்தை நிலைநாட்ட தன்னை பலிகொடுத்த அந்தணன். சாக்த உபாசத்தை மிக வேகமாகப் பரப்பி, அதை நிலை நிறுத்திய உத்தமன்.

...சுபம்...

கதை, கவிதை மற்றும் கடிதப் போக்குவரத்து, டி.டி. அல்லது எம்.ஓ. இவைகளை SREE AISHWARYA PUBLICATION லேடீஸ் நாவல், 29, நைனான் தெரு, அபிராமபுரம், சென்னை-600 018. என்ற நிர்வாக அலுவலக முகவரிக்கே அனுப்பவேண்டும்.

போன் : 4614779 ஆசிரியர் : பொன்.சந்திரசேகர்

Owner & Published by M.P. Chandra Sekaran at 50/1, Pycrafts Road, 1st Street, Royapettah, Chennai -14 and Printed by M.P.Chandrasekaran at Wonder Printers, 14, Weavers Street, Triplicane, Chennai -5.

Editor: Pon. Chandrasekar